முகவுரை.

இதில் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் பிரமாணங்களாகக்காட்டியஸம்ஸ்கிருதவசநங்களுக்கும் தமிழ் வசநங்களுக்கும் அரும்பதங்களுக்கும் எளிதான தமிழ்நடையில் ஸாராஸ்வாதிநீ முதலான வ்யாச்யாநங்களை ஒத்து உரை எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அதிகாரத்திலும் முதலில் ஸம்ஸ்கிருத வசநங்களும் அதின்மேல் தமிழ் வசநங்களும் அதின்மேல் அரும்பதங்களும் மூலத்தில் எந்த வரிசையாய் வருகின்றனவோ அதே வரிசையாய் எழுதப்பட்டிருக்கின்றன. ஒரே பிரமாணம் மூலத்தில் இரண்டிடத்தில் இருந்தால் முதலில் வருகிற இடத்தில் அர்த்தம் எழுதப்பட்டிருக்கிறது. இரண்டாவது இடத்தில் இன்ன பக்கத்தில் இன்ன நம்பரைப் பார்க்க என்று குறித்திருக்கிறது. ஒரே வசநத்தில் ஒருபாகம் ஒரு இடத்திலும் இன்னொரு பாகம் இன்னமொரு இடத்திலும் இருந்தால், முதலில் வருகிற இடத்தில் வசநம் முழுவதிற்கும் அர்த்தம் எழுதியிருக்கிறது. இன்னமொரு பாகம் வருகிற இடத்தில் கீழே சொன்னபடி குறிப்பைப் பார்க்க. வசநம் முழுவதும் எழுதவில்லை. அவைகளை மூலத்திலும், ஸ்ரீரங்கம் ஆண்டவனால் அச்சிடப்பட்டிருக்கும் பிரமாணத்திரட்டிலும் பார்க்கலாம். முன்னாலே ஒரு விஷயஸூசிகையும் கடைசியில் ஸம்ஸ்கிருதவசநங்களுக்கு ஒரு அகராதியையும், தமிழ்வசநங்களுக்கு ஒரு அகராதியையும் சேர்த்திருக்கிறது. மூலத்தை ஸேவிக்கிறவர்கள் இந்தப் புஸ்தகத்தைப் பக்கத்தில் வைத்துக்கொண்டால் பிரமாணங்கள் வரும்போது அவைகளின் அர்த்தங்களை எளிதாகப் பார்க்கலாம்.

இது ஸ்ரீ-உ-ப-வே. சின்னமூ. ஸ்ரீநிவாஸபாட்டாசாரியருடன் சேர்ந்து அவர் உதவியின்பேரில் எழுதப்பட்டிருக்கிறது.

இதில் சேர்ந்திருக்கும் அகராதிகளை ஸ்ரீ-உப-வே ஸாரநாதா சாரியர் எழுதினார். இவர்கள் இருவரும், மகா-ா-ஸ்ரீ K. S. பாட்டராசாரியரும் Proof-ஐப் பார்த்தார்கள். ஒரு வரி வாசிக்கவும் ஒரு எழுத்தை எழுதவும் முடியாமல் இப்போதிருக்கிற எனக்கு இவர்கள் உதவி இல்லாவிட்டால் இந்த வேலையைச் செய்திருக்கமுடியாது. இதினால் அவர்களுக்கு என்னுடைய நன்றியை அறிவிக்கிறேன்.

திருக்குடந்தை,
பவ வருஷ புரட்
டாசி-மீ 24உ

வி. கே. ராமாநுஜதாஸன்.

விஷய ஸூசிகை.

	பக்கம்
குருபரம்பராஸாரம்	
ஸம்ஸ்கிருத வசநங்கள்	1
தமிழ் வசநங்கள்	4
அரும்பதங்கள்	4
உபோத்காதாதிகாரம்	
ஸம்ஸ்கிருத வசநங்கள்	4
தமிழ் வசநங்கள்	6
அரும்பதங்கள்	7
ஸாரநிஷ்கர்ஷாதிகாரம்	
ஸம்ஸ்கிருத வசநங்கள்	8
பிரதாநபிரதிதந்திராதிகாரம்	
ஸம்ஸ்கிருத வசநங்கள்	9
தமிழ் வசநங்கள்	10
அரும்பதங்கள்	10
அர்த்தபஞ்சகாதிகாரம்	
ஸம்ஸ்கிருத வசநங்கள்	10
தமிழ் வசநங்கள்	19
அரும்பதங்கள்	20
தத்துவத்ரயாதிகாரம்	
ஸம்ஸ்கிருத வசநங்கள்	21
தமிழ் வசநங்கள்	25
அரும்பதங்கள்	26
பரதேவதா பாரமார்த்தியாதிகாரம்	
ஸம்ஸ்கிருத வசநங்கள்	26
தமிழ் வசநங்கள்	36
அரும்பதங்கள்	38
முமுக்ஷுத்வாதிகாரம்	
ஸம்ஸ்கிருத வசநங்கள்	39
தமிழ் வசநங்கள்	42
அதிகாரிவிபாகாதிகாரம்	
ஸம்ஸ்கிருத வசநங்கள்	43
தமிழ் வசநங்கள்	46
அரும்பதங்கள்	47

	பக்கம்
உபாயவியாகாதிகாரம்	
ஸம்ஸ்கிருத வசநங்கள்	48
தமிழ் வசநங்கள்	49
அரும்பதங்கள்	49
பிரபத்தியோக்யாதிகாரம்	
ஸம்ஸ்கிருத வசநங்கள்	49
தமிழ் வசநங்கள்	50
பரிகரவியாகாதிகாரம்	
ஸம்ஸ்கிருத வசநங்கள்	50
அரும்பதங்கள்	54
ஸாங்கப்பிரபதநாதிகாரம்	
ஸம்ஸ்கிருத வசநங்கள்	55
அரும்பதங்கள்	56
கிருதகிருத்யாதிகாரம்	
ஸம்ஸ்கிருத வசநங்கள்	57
அரும்பதங்கள்	57
ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநாதிகாரம்	
ஸம்ஸ்கிருத வசநங்கள்	58
தமிழ் வசநங்கள்	60
அரும்பதங்கள்	60
உத்தரகிருத்யாதிகாரம்	
ஸம்ஸ்கிருத வசநங்கள்	61
தமிழ் வசநங்கள்	66
அரும்பதங்கள்	70
புருஷார்த்தகாஷ்டாதிகாரம்	
ஸம்ஸ்கிருத வசநங்கள்	71
தமிழ் வசநங்கள்	73
அரும்பதங்கள்	74
சாஸ்திரீயநியமநாதிகாரம்	
ஸம்ஸ்கிருத வசநங்கள்	74
அரும்பதங்கள்	76

பக்கம்

அபராதபரிஹாராதிகாரம்
ஸம்ஸ்கிருத வசநங்கள் 77
தமிழ் வசநங்கள் 82
அரும்பதங்கள் 82

ஸ்தாநவிசேஷாதிகாரம்
ஸம்ஸ்கிருத வசநங்கள் 83
தமிழ் வசநங்கள் 85

நிர்யாணாதிகாரம்
ஸம்ஸ்கிருத வசநங்கள் 85
தமிழ் வசநங்கள் 89
அரும்பதங்கள் 90

கதிசிந்தநாதிகாரம்
ஸம்ஸ்கிருத வசநங்கள் 90
தமிழ் வசநங்கள் 93
அரும்பதங்கள் 94

பரிபூர்ணபிரம்மாநுபவாதிகாரம்
ஸம்ஸ்கிருத வசநங்கள் 94
தமிழ் வசநங்கள் 99
அரும்பதங்கள் 99

ஸித்தோபாயசோதநாதிகாரம்
ஸம்ஸ்கிருத வசநங்கள் 100
தமிழ் வசநங்கள் 109
அரும்பதங்கள் 110

ஸாத்யோபாயசோதநாதிகாரம்
ஸம்ஸ்கிருத வசநங்கள் 111
தமிழ் வசநங்கள் 121
அரும்பதங்கள் 123

ப்ரபாவவ்யவஸ்தாதிகாரம்
ஸம்ஸ்கிருத வசநங்கள் 124
தமிழ் வசநங்கள் 133
அரும்பதங்கள் 134

பக்கம்

ப்ரபாவரக்ஷாதிகாரம்
- ஸம்ஸ்கிருத வசநங்கள் 134
- தமிழ் வசநங்கள் 141
- அரும்பதங்கள்

மூலமந்திராதிகாரம்
- ஸம்ஸ்கிருத வசநங்கள் 142
- தமிழ் வசநங்கள் 162
- அரும்பதங்கள் 164

த்வயாதிகாரம்
- ஸம்ஸ்கிருத வசநங்கள் 164
- தமிழ் வசநங்கள் 174
- அரும்பதங்கள் 176

சரமச்லோகாதிகாரம்
- ஸம்ஸ்கிருத வசநங்கள் 176
- தமிழ் வசநங்கள் 191
- அரும்பதங்கள் 193

ஆசார்யகிருத்யாதிகாரம்
- ஸம்ஸ்கிருத வசநங்கள் 194
- தமிழ் வசநங்கள் 199
- அரும்பதங்கள் 199

சிஷ்யகிருத்யாதிகாரம்
- ஸம்ஸ்கிருத வசநங்கள் 199
- தமிழ் வசநங்கள் 202
- அரும்பதங்கள் 202

நிகமநாதிகாரம்
- ஸம்ஸ்கிருத வசநங்கள் 203
- தமிழ் வசநங்கள் 206
- அரும்பதங்கள் 206

அநுபந்தம் 1 ஸம்ஸ்கிருத வசநங்களின் அகராதி 207

அநுபந்தம் 2 தமிழ் வசநங்களின் அகராதி 226

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
8	8	25	26
13	4	தமெஜவ	தமெஜவழ
,,	20	ஶுநஃஶஸ்ய	ஶுநஃஶம்ஸ்ய
20	3	ஆனந்தம்	ஆநந்தம்
21	தலைப்பு	அர்த்தபஞ்சகாதிகாரம்	தத்துவத்திரயசிந் [தநாதிகாரம்
25	25	ஆனந்தமாயுமிருக்கும்	ஆநந்தமாயுமிருக்கும்
29	தலைப்பு	அர்த்தபஞ்சகாதி [காரம்	பரதேவதாபாரமார் [த்தியாதிகாரம்
35	8	ஆராதனம்	ஆராதநம்
36	1	6-பக்கம்	6-வது பக்கம்
,,	24	வேளிப்படுக்கப்	வெளிப்படுத்தப்
41	27	அடங்	அடங்கி
45	27	முடியாது	முடியாதது
46	23	ஆனந்தத்தை	ஆநந்தத்தை
50	4	சாணமடைந்தான்	சரணமடைந்தான்
57	5	பிரகாரத்ததாலும்	பிரகாரத்தாலும்
62	31	ஈஹஜவி	ஈஹஜவி
68	14	அறிவேனெனும்	அறிவேனேனும்
70	1	நமோநாராயணு	நமோநாராயண
75	20	பொருந்தாது	பொருந்தாதது
79	23	பிடித்தவன்	படித்தவன்
82	5	சொல்லத்தகுக்கவன்	கொல்லத்தகுந்தவன்
86	1	ஜநார்த்தநன	ஜநார்த்தநன்
88	26	யவர்	அவர்
89	16	உன் திருமார்பித்து	உன் திருமார்வத்து
93	11	பிரம்மானந்தத்தை	பிரம்மாநந்தத்தை
94	3	68—789	69—78

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
95	17	அடைந்தோ	அடைந்தோர்
98	34	ஸய: ஷிஷெ	ஸய: ஷிஷெ
108	3	பிராட்டி, எம்பெரு [மானாகிய	பிராட்டி எம்பெரு [மானாகிய
,,	7	அளவிடமுடியாதல்ல [வா	அளவிடமுடியாத [தல்லவா
133	16	யதிகிம்விஷஸ	யதிகிம்விஸ
148	23, 28	ஜ்யாக்	ஜ்யாயாக்
,,	29	அஜ்யாக்	அஜ்யாயாக்
164	2	உபகாரனை	உபகாரகனை
165	16	ஸெநெநவத	ஸெநெநெநவத
170	3	கூப்பீடு	கூப்பாடு
172	1	ப்ருவஹாவெளவ	ப்ருவஹாவளவ
178	31	பக்தனுக்கும்	புத்தனுக்கும்
190	4	ஶாரவ:	ஶாஶவ:
198	2	தடுப்பது	தடுக்காமலிருப்பது
,,	3	கர்வப்படுவது	கர்வப்படுவது இல் [லாமை
201	23	92	62
203	1	764	766
205	27	இந்த	இருந்த
216	3	வரஶோகதி நாரா	வரஶாதுநிநாரா

"என்று திருமந்திரத்தைப் பாடும் எண்ணத்தையுடைய பக்தர்களுக்குள்"—என்று 163-வது பக்கம் 2-வது வரியைத் திருத்திக் கொள்ளவும்.



ஸ்ரீமதே [illegible] மஹாதேசிகாய நம: ||

ஸ்ரீமதே [illegible] மஹாதேசிகாய நம: ||

[illegible] ஸ்ரீமதே [illegible]

[illegible] மஹாதேசிகாய நம: ||

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ||

பிரமாணத் திரட்டு.

குரு பரம்பரா ஸாரம்.

ஸம்ஸ்கிருத வசநங்கள்.

1. பாபிஷ்ட:—

மிகுந்த பாபத்தையுடைய க்ஷத்திரபந்துவும், புண்ணியமுடைய புண்டரீகனும், ஆசாரியர்களையுடையவர்களாய் இருந்தபடியாலே மோக்ஷமடைந்தார்கள். ஆகையால் ஒருவன் ஆசாரியனையுடையவனாக இருக்கவேண்டியது. இங்கே பாபிஷ்ட: என்பதற்கு எதிர்த்தட்டாக புண்யக்ருத் என்று சொல்லியிருப்பதால் மிகுந்த புண்ணியம் பண்ணினவன் என்று அதற்குப் பொருள்.

2. தமிமம் ஸர்வஸம்பந்நம்.—(பாரதம்-ஸபாபர்வம் 41-21)

முதல் பூஜையைப்பெற்றுக்கொள்ள தகுதியைக்காட்டும் எல்லாகுணங்கள் நிறைந்தவனாயும், ஆசாரியனாயும் தகப்பனாயும், குருவாயும், பூஜிக்கத்தகுந்தவனாயுமிருக்கிற அந்த இவரை (கிருஷ்ணனை) நாங்கள் பூஜை செய்வதற்கு எல்லாரும் உத்திரவு கொடுக்க வேண்டியது. இங்கு ஆசாரியன் என்கிற சொல்லுக்கு பிரும்ம வித்யோபதேசம் பண்ணினவன் என்றும், குரு என்பதற்கு வேதத்தைச் சொல்லிக்கொடுத்தவன் என்றும் பொருள். (இது ராஜஸூயயாகம் செய்து முடிக்கும்போது கிருஷ்ணனுக்கு அக்ர பூஜை செய்யும்போது ஸஹதேவன் ஸபையோர்களைப் பார்த்துச் சொன்ன வார்த்தை.)

3. ஸோபூமி — (விஷ்ணுபுராணம். 5-1-14.)

எல்லா உலகங்களுக்கும் குருவான நாராயணன் எனக்கும் குரு. இது பூமியின் வசனம். இங்கே "நாராயணோ குரு:" என்றவிடத்தில் "அகுரு:" என்று பதத்தைப்பிரித்து—தனக்கு ஒரு குருவில்லாத நாராயணன் எல்லா லோகங்களுக்கும் எனக்கும்குரு - என்று ஸ்ரீ விஷ்ணு சித்தர் வியாக்கியானம் செய்திருக்கிறார்.

4. த்வமேவ (காந்தாரீ வாக்கியம்.)

தேவஸ்ரேஷ்டனே! தேவரீரே எனக்குத்தாய், தேவரீரே தகப்பன், தேவரீரே பந்து, தேவரீரே குரு, தேவரீரே வித்யை, தேவரீரே தநம், ஆகையாலே தேவரீரே எனக்கு எல்லாம்.

5. பிதாஸி. (ஆளவந்தார் ஸ்தோத்ரம்-60)

தேவரீர் உலகத்துக்குத் தகப்பன், தேவரீர் தாய், தேவரீர் பிரியமானபிள்ளை, தேவரீரே பிரியமான ஸ்நேஹிதன், தேவரீரே மித்திரன், தேவரீரே குருவாக இருக்கிறீர். தேவரீரே அடையவேண்டிய வஸ்துவும், அதற்கு உபாயமும். அடியேன் தேவரீருடையவன், தேவரீராலேபோஷிக்கத் தகுந்தவன், தேவரீருக்கு வேலை செய்யத் தகுந்தவன், தேவரீரையே உயர்ந்த பிரயோஜநமாக எண்ணுகிறவன். தேவரீரிடத்தில் பிரபத்திசெய்தவன். இப்படியிருக்க அடியேனும் தேவரீருக்கு பரம் (ரக்ஷிக்கவேண்டிய பொறுப்பு). இங்கே ஜகதாம் என்கிற சொல்லை முன் பாதியில் எல்லாச் சொற்களுடன் சேர்க்கவேண்டியது. மித்திரன்— ஸமான வயதான ஸ்நேஹிதன். ஸுஹ்ருத்— ஸமானவயதில்லாமல் க்ஷேமத்தை வேண்டுகிறவன்.

6. ஸ்வயமாகத — (பாரதம்-சாந்திபர்வம். 349-71)

தானே வந்த ஜ்ஞானத்தையுடையவர்கள், நிவிருத்தி தர்மத்தைச் செய்கிறவர்கள்.

7. க்ருஷ்ணத்வைபாயநம் (விஷ்ணுபுராணம். 3-4-5)

கிருஷ்ணத்வைபாயநர் என்ற பெயருடைய வியாஸரைப் பிரபுவான நாராயணனாக அறி. மைத்ரேயனே! இந்த பூமியில் அவரைத் தவிர வேறு எவன் மஹாபாரதத்தைச் செய்யக்கூடியவன்.

8. [illegible] (பாரதம்-ஆதிபர்வம் 114-40)

சுக்ர மஹர்ஷியின் (வியாஸரு)டைய பெருமையைச் சொல்லும் போது, அந்த ஜ்ஞானிகொண்டு ப்ரஹ்மா பேசினார்.

9. [illegible] (பாரதம்-சாந்திபர்வம் 359-68)

எல்லா பாஞ்சராத்திரங்களையும் நாராயணன் தானே சொன்னவன்.

10. [illegible] (பாரதம்-பீஷ்மபர்வம் 66-39-40)

வேதோக்த ஸம்ஸ்காரங்கள் செய்யப்பட்டு, தங்களுடைய தர்மங்களை எப்போதும் செய்துகொண்டிருக்கிற, பிராமணர்களாலும் க்ஷத்திரியர்களாலும், வைசியர்களாலும், சூத்திரர்களாலும், த்வாபரயுகத்தின் கடைசியிலும், கலியுகத்தின் ஆதியிலும் ஸங்கர்ஷணனாலே சொல்லப்பட்ட பாஞ்சராத்திர விதியினாலே (எம்பெருமான்) அர்ச்சனை செய்யத்தக்கவன். கைங்கரியம் செய்யத் தக்கவன்.

11. [illegible] (விஷ்ணுதர்மம். 108-50)

கலியுகத்தில் முன்னேயுண்டான அந்தந்த ஜீவன்களுக்குள் சேர்ந்து, பிரபுவான அச்யுதன் தனக்கு இஷ்டமானதைச் செய்கிறான்.

12. ஸாக்ஷாத் (ஜயாக்யஸம்ஹிதை)

நாராயணன் ஸாக்ஷாத் தானே மனித உருவமான உடம்பை எடுத்துக்கொண்டு, ஸம்ஸாரத்தில் மூழ்கியிருக்கிற ஜீவன்களை சாஸ்திரமாகிற கயிற்றாலே கருணையினால் தானே வெளியில் தூக்குகிறான்.

13. [illegible] (பாகவதம்- 11-5-38,39)

கலியுகத்தில் நாராயணனையே அடையவேண்டிய வஸ்துக்களில் மிகவுயர்ந்ததாக எண்ணுகிற மஹாபாகர்கள் அங்கு மிங்கும் பிறப்பார்கள்; தமிழ் தேசத்திலோ, தாம்ரபர்ணி, கிருதமாலை, பாலாறு, மிகுந்த பெருமையையுடைய காவேரி, மேற்கு ஸமுத்திரத்தில் விழுகிற நதி, இவைகளின் கரையில் அதிகமாகப் பிறப்பார்கள்.

14. ஸம்ஸாரஷு (கௌதம தர்மஸூத்திரம்-9-18)

பேசத்தகாதவர்களுடன் பேசும்படி நேர்ந்தால், புண்ணியம் செய்தவர்களை அதாவது ஆசாரியர்களை மனதால் தியானம் பண்ணவேண்டியது.

தமிழ் வசனங்கள்.

1. பீதகவாடை. (பெரியாழ்வார் திருமொழி—5-2-8)

பீதாம்பரத்தையுடையவனும் உபகாரம் செய்கிறவனுமான எம்பெருமான் ஜ்ஞாநத்தை உபதேசம் பண்ணுகிற குருவாக அவதாரஞ் செய்து. இங்கே 'பிரம' என்ற சொல்லுக்கு வேதமென்று பொருள். இங்கு அதினுடைய ஜ்ஞாநத்தைச் சொல்லுகிறது.

அரும்பதவுரை.

இதைக் கணிசித்து — இதை எண்ணி.
சேமிக்க — ரக்ஷிக்க.

ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம்.
உபோத்காதாதிகாரம்.

ஸம்ஸ்கிருத வசனங்கள்.

15. வைகுண்டே (லைங்கபுராணம்)

வைகுந்தமென்கிற உயர்ந்த உலகத்தில் லக்ஷ்மியோடு கூட உலகங்களுக்கு யஜமாநனான எம்பெருமான் இருக்கிறான்.

16. யாயோத்யா (ஸ்ரீ குணரத்ன கோசம்-23)

வைகுந்தமென்னும் உலகத்தின்மேல் அயோத்தியென்றும், ஒருவராலும் ஜயிக்கமுடியாததென்றும்சொல்லப்பட்ட யாதொரு பட்டணமிருக்கிறதோ.

17. நிவாஸஶய்யா (ஆளவந்தார் ஸ்தோத்திரம் 40)

அந்தந்த அவஸரங்களுக்குத் தகுந்தபடி தேவரீருக்குச் சேஷமாயிருக்கும்-இருப்பிடம், படுக்கை, ஸிம்மாஸநம், பாதுகை, பீதாம்பரம், தலையணை, குடை- இவை முதலிய வெவ்வேறு சரீரங்களாலே கைங்கரியம் செய்வதினால், ஜநங்களால் சேஷன் என்று சொல்லப்பட்ட (திருவனந்தாழ்வான்)

18. அநேகஜந்ம (விஷ்ணுபுராணம். 6-7-19)

அநேக ஆயிரம் ஜந்மங்கள் ஸம்ஸாரமாகிய மார்க்கத்தில் போய்க்கொண்டு மோஹத்தையும் சிரமத்தையும் அடைந்து, வாஸனையாகிய தூளிகளால் சக்தி குறைந்தவனாய் இந்தஜீவனிருக்கிறான். ஸம்ஸாரம் மார்க்கம்போல். அதில் நடக்கிறவனுக்கு பயக்கம் வந்து போகவேண்டிய இடத்திற்குப் போக முடியாதிருப்பது போல, தான் அடையவேண்டிய புருஷார்த்தத்தை அடையாதவனாய், அவன் போகவேண்டிய இடம் போகாமல் அலைந்துகொண்டிருப்பது போல், ஸம்ஸாரத்தின் கஷ்டம் நீங்கி ஸுகமாயிருப்பது இல்லாமல், அவனுக்குக் காலில் தூளி படிந்திருப்பதுபோல், இவனுக்கு துர்வாஸனைகள் உண்டாய், அவனுக்கு நடக்கும் சக்தி குறைவதுபோல், இவனுக்கு ஜ்ஞானத்திற்கு ஸங்கோசம் உண்டாயிருக்கிறதென்று கருத்து.

19. மாதாப்யேகா

எனக்கும் அந்தப் பக்ஷிக்கும் தாயார் ஒருத்தி; தகப்பன் ஒருத்தன்; நான் ருஷிகளாலே கொண்டுவரப்பட்டேன்; அது மாடு தின்பவர்களாலே கொண்டுபோகப்பட்டது. நான் ருஷிகளுடைய வார்த்தைகளைக் கேட்கிறேன்; அது மாடு தின்பவர்களின் வார்த்தையைக் கேட்கிறது. எங்களிருவருக்குமுள்ள வாசியானது உம்மாலும் நேராகப் பார்க்கப்பட்டது. தோஷங்களும் குணங்களும் சேர்க்கையினாலுண்டாகின்றன. (இது ஒரு கிளி ஒரு ருஷியின் பிள்ளையினிடம் சொன்ன வார்த்தை)

20. புமாந்ந (விஷ்ணுபுராணம் 2-13-98)

ஓ அரசனே! ஜீவன் தேவனன்று, மனிதனன்று, மிருகமன்று, மரமன்று. இந்த உடம்புகளின் ஆகாரங்களினால் ஏற்பட்ட இந்த வேறுபாடுகள் கர்மத்தினால் உண்டானவைகள்.

21. ஜாயமாநஸ்ய

ஈசுவரன் ஜீவன்கள் நன்றாயிருக்கவேண்டுமென்று எண்ணுவது, யாதிருச்சிகமாக ஏற்படும் புண்ணியம், எம்பெருமானுடைய கடாக்ஷம், அவனிடத்தில் இருந்த த்வேஷம் போவது, அவன் விஷயத்தில் முகங்கொடுப்பது, அதாவது அவன் விஷயமாகச் சொல்வதைக் கேட்க விரும்புவது, ஸத்துவகுணம் மேலிட்டவர்

களுடன் பேசுவது — ஆகிய இந்த ஆறும் ஒருவன் ஆசாரியர்களை அடைவதற்குக் காரணங்கள்.

22. நாயம்தேவ:

இவன் தேவனன்று, மனிதனன்று, மிருகமன்று, மரமன்று. ஜ்ஞாநத்தையும் ஆனந்தத்தையும் குணங்களாகவுடையவன் ஆத்மா. எல்லாருக்கும் ஆத்மாவான எம்பெருமானுக்குச் சேஷன்.

23. தாஸபூதா: (மந்திரராஜபதஸ்தோத்ரம்)

எல்லா ஆத்மாக்களும் ஸ்வபாவத்தினால் பரமாத்மாவான எம்பெருமானுக்கு வேலைக்காரர்கள். ஆகையாலே நானுமுனக்கு வேலைக்காரன். இப்படி நினைத்துக்கொண்டு நான் வணங்குகிறேன்.

24. தத்வேந (ஆளவந்தார் ஸ்தோத்ரம் 4)

எந்த உதாரகுணமுள்ளவர், அறிவுள்ள ஜீவன்கள், அறிவில்லாதவைகள், இவைகளையாளுகின்ற எம்பெருமான் அவர்களின் ஸ்வபாவங்கள், விஷயங்களினாலுண்டாகும் போகம், மோக்ஷ ஆனந்தம், இவைகளுக்கு உபாயங்கள், அவைகளை அடைவதற்குப்போகும் வழிகள் ஆகிய இவைகளை உள்ளபடி நன்றாகக்காட்டி, மிகுந்த உயர்ந்த ஸ்ரீ விஷ்ணுபுராணத்தைச் செய்தாரோ, அந்த முனிகளுக்குள் சிரேஷ்டரான பராசரருக்கு நமஸ்காரம்.

தமிழ் வசனங்கள்.

2. ஒண்டொடியாள். (திருவாய்மொழி—4-9-10.)

அழகான கைவளையையுடையபிராட்டியும், தேவரீரும் நின்று கொண்டிருக்க, அதாவது— உங்களைத்தவிர வேறு ஈசுவரனில்லையென்று சொல்லும்படி நீங்களிருவரும் நிற்க, கண்டசதிர்கண்டு- நித்தியஸூரிகளுடன் மற்ற எல்லா ஆத்மாக்களும் தேவரீரையநுபவித்துக் கைங்கரியம் செய்யும்படியான தேவரீரால் ஏற்படுத்தப்பட்ட புருஷார்த்தத்தை நான் பார்த்து,

3. சென்றால் (முதல் திருவந்தாதி—53.)

எம்பெருமான் எங்கேயாவது போனால், ஆதிசேஷன் குடையாக இருப்பன்; உட்கார்ந்தால் ஸிம்மாஸநமாக இருப்பன்.

4. பொங்கோதம். (நாச்சியார் திருமொழி—11-3)

உபோத்காதாதிகாரம்

பொங்குகிற ஸமுத்திரத்தாலே சூழப்பட்ட பூமியையும் வைகுந்தமென்கிற உலகத்தையும், அவைகளில் ஒன்றும் விட்டுப் போகாமல் ஆளுகிற ஆளுகையையுடைய.

அரும்பதவுரை.

வகுத்த — ஸ்வாமியாயிருக்கிற,

தெளிவிசும்பு — நிர்மலமான ஆகாசம், அதாவது - ஸத்துவம் என்கிற ஒரே குணமுள்ள திரவியம் நிறைந்திருக்கிற வைகுந்தம்.

வானிளஅரசு — வானத்தில்-வைகுந்தத்தில் எப்போதும் யௌவனமான ராஜா.

அடி — நிமித்த காரணம், மூலகாரணம்-அதற்கேயுள்ள காரணம்.

இட்டுப் பிறந்தமைத்து — ஸம்பந்தத்தாலே தகப்பன் சொத்துக்கு பாத்தியமுள்ள பிள்ளைபோல, எம்பெருமானுடைய ஸம்பந்தத்தாலே கைங்கரியம்செய்யபாத்தியமுள்ளவனாய்.

பாழ் — ஒன்றும் விளைய யோக்கியதையில்லாத.

தட்டி — கிடைக்கவேண்டியது கிடைக்காமல்.

தாவு — இளைப்பாறுகிற இடம்.

குறிச்சி — குடிசை.

புதியது உண்ணாதே — முதல்முதல் அனுபவமுமில்லாமல்.

விரகு — உபாயம்,

தன்னுருக்கொடுத்து — தன்னுடைய ஸ்வரூபத்தைக்கொடுத்து, இழந்து அதாவது அறியாமல்,

வந்து ஏறி — நடுவில் வந்து தன்னிடம் சேர்ந்திருப்பது.

அளவு உடைமை — அறிவுள்ளவனாயிருப்பது.

நொடித்து — சொல்லி, அதாவது பேசும்படி இடம் கிடைத்து.

உருவியந்த — உடம்பைக் காட்டிலும் வேறான.

வெளிச்சிறப்பு — அறிவினுடைய மேன்மை.

அடியுடைமை—(நன்மைக்கு) காரணத்தையுடையவனாயிருப்பது.

குடல் துவக்கு — பிறப்பாலே அதாவது ஸ்வபாவத்தாலே உண்டான ஸம்பந்தம்,

2-ஸார நிஷ்கர்ஷாதிகாரம்

ஸம்ஸ்கிருத வசனங்கள்.

25. [illegible] (நாரதியகல்பம் 1-9)

ஒருவன் அறியவேண்டியவைகளெல்லாம் மூலமந்திரத்திற்குள் இருக்கின்றன. அவைகளாவன நாலு வேதங்களும் அவைகளைக் காட்டிலும் வேறான சப்தராசிகளும்.

25. [illegible] (பாரதம்-உத்தியோகபர்வம் 68-5)

பிரகிருதியிலிருந்து உண்டான விஷயங்களை நான் அநுபவிக்கிறதில்லை. உனக்கு க்ஷேமமுண்டாகட்டும். வீணாக தர்மங்களை நான் செய்வதில்லை. எம்பெருமானிடத்திலும் ஆசாரியர்களிடத்திலும் பக்தியாலே சுத்தமான ஸ்வபாவத்தையடைந்து சாஸ்திரத்தினால் ஜநார்த்தநன் என்கிற எம்பெருமானை அறிகிறேன்.

27. [illegible] (ஸ்ரீ கீதை 16-24)

ஆகையால் இன்னது செய்யவேண்டியது இன்னது செய்யத்தகாதது என்கிற ஏற்பாட்டை அறிவதற்கு உனக்கு சாஸ்திரமே பிரமாணம். ஆகையால் இங்கிருக்கும்போது சாஸ்திரத்தினால் சொல்லப்பட்ட கர்மத்தை இருக்கிறபடி அறிந்துகொள்.

28. [illegible] (பாரதம்-சாந்திபர்வம், 276-2)

சப்தரூபமான பிரும்மத்தை அதாவது வேதத்தை அறிந்தவன், பரப்பிரும்மத்தினுடைய உபாஸநத்தை அடைகிறான்.

29. [illegible] (உத்தர கீதை 3-10)

அறியவேண்டிய விஷயங்கள் பஹுக்களாயும் அவைகள் இவ்வளவுதான் என்று நிச்சயிக்க முடியாதவைகளாயுமிருக்கின்றன. காலமோ கொஞ்சமாயிருக்கிறது. விக்கினங்களோ அநேகங்கள். ஆகையால் ஹம்ஸமானது ஜலத்துடன் சேர்ந்திருக்கும் பாலை ஜலத்திலிருந்து பிரித்து எடுப்பதுபோல் ஸாரமில்லாதவைகளுடன் சேர்ந்திருக்கிற மிகவும் ஸாரமானதையே ஒருவன் எடுத்துக் கொள்ள வேண்டியது.

30. [illegible] (பாரதம்-சாந்திபர்வம்—176-66.)

அநேகங்களாயும், ஒவ்வொன்றும் பெரியவைகளாயுமிருக்கிற சாஸ்திரங்களுக்குள்ளே ஸாரமானவைகள் வேதாந்தங்கள். புத்தியுள்ள மனிதன், அவைகளிலிருந்து மிகவும் ஸாரமானதை எடுத்துக்கொள்ளவேண்டியது. புஷ்பங்களிலிருந்து வண்டுகள் தேனையெடுத்துக்கொள்ளுவதுபோல.

3. பிரதாநபிரதிதந்திராதிகாரம்.

ஸம்ஸ்கிருத வசனங்கள்.

31\. ஐவாதக: (வைகுண்டஸ்தவம்—36.)

தேவரீருடைய ஸங்கல்பத்தினாலேயே எல்லா வஸ்துக்களுக்கும் இருப்பு உண்டாயிருக்கிறது. அவைகளில் சில தேவரீருக்கு எப்போதும் பிரியமாயிருக்கின்றன. ஆகையால் அவைகள் நித்தியங்கள். எப்போதும் தேவரீருக்கு உட்பட்டிருக்கிற ஸ்வபாவத்தையுடைய தேவரீருடைய நல்ல குணங்கள் இந்த விஷயத்தில் எங்களுக்கு உதாஹரணங்களாக இருக்கின்றன.

32\. ஜௌஸவம்ஞ்ரா (பாரதம்-ஆநுசாஸநிகபர்வம்-254-136)

ஸுவர்க்கம், சந்திரன் ஸூர்யன் நக்ஷத்திரங்கள் இவைகளுடன் கூடின ஆகாசம், திக்குகள், பூமி, பெரிய ஸமுத்திரங்கள் இவைகள் மஹாத்மாவான வாஸுதேவனுடைய வீரியத்தினால் தாங்கப்படுகின்றன.

33\. உபாஉதெ— (ஸ்ரீரங்கராஜஸ்தவம் உத்தரசதகம்—87)

ஒருவஸ்துவை வஸ்துவாக உண்டுபண்ணுவது, உண்டானதுமேலே நீடித்து இருக்கும்படி செய்வது, நியமநம் செய்வது ஆகிய இந்த வியாபாரம் முதலியவைகளினால் பிராட்டியோடு கூடிய எம்பெருமான் சேதநர்களையும் அசேதநங்களையும் தன் பிரயோஜநத்தை நினைத்து எடுத்துக்கொள்ளுகிறான் என்று உபநிஷத்துக்கள் சொல்லுகின்றன. ஆகையால் தேவரீர் ஜீவனுக்கு உபாயமாகவும், அடையவேண்டியவராகவுமிருப்பது தேவரீருடைய ஸ்வரூபத்தால் ஏற்பட்டது. புதிதாக உண்டானதன்று. ஸ்ரீரங்கநாதனே! ஆகையால் தேவரீரை என்னுடைய பிரயோஜநத்தை நினைக்காமல் உபாயமாக அடைந்தேன்.

34. அக்ரத: (ராமாயணம்—ஆரண்யகாண்டம்—11—1)

ராமன் முதலில் போனார். நல்ல இடுப்பையுடைய ஸீதை நடுவில் போனாள்; அவர்களுக்குப் பின்னால் லக்ஷ்மணன் கையில் வில்லை வைத்துக்கொண்டு அவர்களை அநுஸரித்துப்போனான்.

தமிழ் வசனங்கள்.

5. நானுன்னை (நான்முகன் திருவந்தாதி—7)

நாராயணனே! நான் ஆதாரமான உன்னை விட்டு இருக்கவில்லை. உனக்கு நிரூபகமாக இருக்கிற என்னை விட்டு நீ இருக்கவில்லை. நாமிருவரும் ஒருவரைவிட்டு ஒருவர் இருக்கமுடியாததை நீ தெரிந்துகொள். நிரூபகமென்றால் ஒன்றைக் காட்டுவதற்கு உபயோகப்படுகிற வஸ்து.

அரும்பதவுரை.

பேரணி — ராஜாவின் மூலபலம்.

4. அர்த்தபஞ்சகாதிகாரம்.

ஸம்ஸ்கிருத வசனங்கள்.

35. ப்ராப்யஸ்ய (ஹாரீதஸம்ஹிதை)

ஒருவன் அடையவேண்டிய பிரும்மத்தினுடைய ஸ்வரூபம், அவனை அடைகிற ஜீவனுடைய ஸ்வரூபம், அடைவதற்கு உபாயம், அதின்பலன், அப்படியே அடைவதற்கு விரோதியாயிருப்பது— ஆகிய இவைகளை இதிஹாஸங்கள் புராணங்கள் இவைகளோடு கூடிய எல்லா வேதங்களும் சொல்லுகின்றன.

[illegible] (4-பக்கம், 15-வது நம்பரைப் பார்க்க)

36. ஏஷ நாராயண: (ஹரிவம்ஶம்—113-62)

திருப்பாற்கடலை இருப்பிடமாகவுடைய லக்ஷ்மீபதியான இந்த நாராயணன், ஆதிசேஷனாகிய படுக்கையை விட்டு இம்மதுராபட்டணத்திற்கு வந்திருக்கிறார்.

37. ஸவாநு (ராமாயணம் யுத்தகாண்டம்—120-13)

தேவரீர் லக்ஷ்மீபதியாயும், சக்கிராயுதத்தைத் தரிக்கிறவராயும், உலகங்களுக்கு யஜமாநனுயுமிருக்கிற நாராயணனென்ற பெயரையுடைய தேவன்.

38. ஸ்ரீவத்ஸவக்ஷா: (ராமாயணம் யுத்தகாண்டம்—114-15)

ஸ்ரீவத்ஸம் என்கிற மருவைத் திருமார்பிலுடையவராயும், எப்போதும் லக்ஷ்மியுடன் கூடினவராயுமிருக்கிறவர்

39. விஷ்ணோ: ஸ்ரீ: (விஷ்ணுபுராணம்—1-8-17)

இந்த லக்ஷ்மியானவள் எப்போதுமிருக்கிருள். உலகங்களுக்குத் தாயார். ஒருபோதும் எம்பெருமானை விட்டு விலகுகிறதில்லை. ஓ பிராமணசிரேஷ்டனே! எப்படி எம்பெருமான் எல்லாவற்றிலுமிருக்கிருனே, அப்படியே இவளும்.

40. ஸீதாஸமக்ஷம் (ராமாயணம் ஆரண்யகாண்டம்—15-6)

அந்த ரகுவம்சத்தில் பிறந்த லக்ஷ்மணன் தமையனுடைய இரண்டு திருவடிகளையும் நன்ருகப் பிடித்துக்கொண்டு ஸீதையின் முன்னல் இந்தச் சொல்லை ராமனிடத்தில் சொன்னன்.

41. ஸீதாஸமக்ஷம் (ராமாயணம் அயோத்தியாகாண்டம் 31-2)

மிகுந்தயசஸ்ஸையுடைய லக்ஷ்மணன் ஸீதையையும், உயர்ந்த ஸங்கல்பத்தையுடைய ராமனையும் பார்த்துச்சொன்னன்.

42. சக்தா (ராமாயணம் ஸுந்தரகாண்டம்—58-87)

இவள் ராக்ஷஸிக்கூட்டத்தை ராமனிடத்திலிருந்து காப்பாற்றுவதற்குச் சக்தியையுடையவள்.

43. ஸரணம் (ராமாயணம் ஸுந்தரகாண்டம்—58-90)

உங்களுக்குச் சரணமாக ஆவேன். (இது ஸீதையின் வசநம்)

44. ஸவாநு (ராமாயணம் அயோத்தியாகாண்டம்-31-27)

தேவரீர் ஸீதையுடன்கூட மலைத்தாழ்வரைகளில் விளையாடப் போகிறீர். தேவரீர் விழித்துக்கொண்டிருந்தாலும் தூங்கினுலும் தேவரீருடைய எல்லா வேலைகளையும் நான் (லக்ஷ்மணன்) செய்யப் போகிறேன்.

45. தயாஸஹ (ஆளவந்தார் ஸ்தோத்ரம்—39)

ஆதிசேஷன்மேல் பிராட்டியுடன்கூட உட்கார்ந்திருக்கிற எம்பெருமானை.

46. காந்தஸ்தே (சதுச்லோகீ — 1)

உம்முடைய பிரியமான கணவன் புருஷோத்தமன் என்று பெயருள்ள எம்பெருமான்.

47. ஸ்வஸ்வாமிவாரண (ஆத்மஸித்தி)

தன்னுடைய (எம்பெருமானுடைய) கைங்கரியங்களை போகமாக எண்ணுகிற நித்தியஸூரிகளால் லக்ஷ்மியோடுகூட ஸந்தோஷப்படுத்தப்பட்ட எம்பெருமானிடத்தில்

48. ஸ்ரீமதே (வேதாந்தஸாரம்)

லக்ஷ்மியோடு கூடினவனும், கெட்டகுணமில்லாமலும் ஆநந்தத்திற்கு ஸமுத்திரமாயுமிருக்கிற விஷ்ணுவுக்கு நமஸ்காரம்.

49. ஸ்ரிய: காந்த: (வேதாந்ததீபம்)

லக்ஷ்மிக்குப் பிரியனை கணவனையும், அளவில்லாதவனையும், மேன்மையான குணங்களுடைய கூட்டங்களுக்கு ஒரே இடமான திருமேனியையுடையவனையுமிருக்கிற எம்பெருமான்.

50. ஸ்ரீநிவாஸே (ஸ்ரீபாஷியம்)

லக்ஷ்மிக்கு இருப்பிடமான பரபிரம்மத்தினிடத்தில்

51. ஸ்ரிய:பதி: (கீதாபாஷியம்)

லக்ஷ்மீபதியாயும், எல்லா கெட்டகுணங்களுக்கு விரோதியாயும் எல்லா நல்ல குணங்களுக்கும் ஒரே இடமாயும், இடத்தினுலும் காலத்தினுலும் வஸ்துவினுலும் அளவில்லாமல் ஜ்ஞாநமும் ஆநந்தமுமான ஸ்வரூபத்தை உடையவனுயு மிருக்கிற எம்பெருமான்.

52. ஸமஸ்தஹேய (விஷ்ணுபுராணம் — 1-22-53)

விஷ்ணுவென்று பெயரையுடைய மிகவும்உயர்ந்த எம்பெருமானுடைய ஸ்வரூபமானது ஒருவிதமான கெடுதலில்லாதது.

53. பர:பராணாம் (விஷ்ணுபுராணம் — 6-5-85)

உயர்ந்தவர்களையும் தாழ்ந்தவர்களையும் நியமநம் செய்கிற எந்த எம்பெருமானிடத்தில் க்லேசம் முதலானவைகள் ஒன்றுமில்லையோ, அவன் உயர்ந்தவர்களுக்கெல்லாம் உயர்ந்தவன். க்லேசமென்பது-அவித்யை, அஸ்மிதா (நான் ஒருவனுக்குமுட்படாதவன் என்கிற எண்ணம்) ஆசை, த்வேஷம், ஒன்றில் பிடிமானம்—ஆக ஐந்து.

54. ஒஃதயுக்தஃ (ராமாயணம் பாலகாண்டம்—1-7)

அந்த குணங்களோடு சேர்ந்த மனிதனைச் சொல்லுகிறேன் கேளும்.

55. தஒைவ (ராமாயணம் அயோத்தியாகாண்டம்—2-48)

இப்படி குணங்கள் நிறைந்த அந்த ராமனை

56. ஜெஜ்ஷ்ஃ (ராமாயணம் பாலகாண்டம்—1-20)

மிகவுமுயர்ந்த குணங்களோடு சேர்ந்த மூத்த பிள்ளையான ராமனை

57. வஸவஃஜெஷ் (ராமாயணம் அயோத்யாகாண்டம்-1-31)

இப்படி மிகவும் உயர்ந்த குணங்களோடு சேர்ந்தவனை

58. ஶஒெணஃ (ராமாயணம் அயோத்தியாகாண்டம்-2-47)

குணங்களாலே ராமன் விளங்கினார்.

59. தஒைவஃஶண (ராமாயணம் அயோத்யாகாண்டம்-1-34)

இப்படி குணங்கள் நிறைந்து ஒருவனாலும் ஜயிக்கமுடியாத பராக்கிரமமுள்ளவனுமான அந்த ராமனை

60. வெஹவஃ (ராமாயணம் அயோத்தியாகாண்டம்—2-26)

ஓ ராஜாவே! உம்முடைய பிள்ளைக்கு அநேக நல்ல குணங்கள் இருக்கின்றன.

61. ஶுநஸ்ரவஸ்ஷ (ராமாயணம் அயோத்யாகாண்டம்-33-12)

அடைந்தவர்களை ரக்ஷிக்கும் தன்மை, கருணை, வேதத்தின் அர்த்தத்தை அறிந்திருக்கை, தாழ்ந்தவர்களுடன் இடைவிடாமல் சேர்ந்திருக்கும் தன்மை, மனதை அடக்குவது, இந்திரியங்களை அடக்குவது ஆகிய இந்த ஆறு குணங்கள் புருஷச்ரேஷ்டனாகிய ராமனை அலங்கரிக்கின்றன.

62. விஷிதஃ (ராமாயணம் ஸுந்தரகாண்டம்—21-20)

தர்மம் தெரிந்த அந்த ராமன் சரணாகதி பண்ணினவர்களிடத்தில் ஆசையுள்ளவனென்று அறியப்பட்டவன் அன்றோ.

63. ஶரணஂ (ராமாயணம் யுத்தகாண்டம்—120-18)

உயர்ந்தவர்களான பெரிய ருஷிகள், தேவரீரை, ரக்ஷணத்துக்காக அடையத்தக்கவராயும் அடைந்தவர்களை ரக்ஷிக்கிறவராயும் சொல்லுகிறார்கள்.

64. **நிவாஸவ்ருக்ஷ:** (ராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம்-15-19)

ஸாதுக்களுக்கு இருப்பிடம். ஆபத்தை அடைந்தவர்கள் அடையவேண்டிய உயர்ந்த கதி.

65. **தெஜொ** (விஷ்ணுபுராணம்—6-5-85)

மிகவுமுயர்ந்த தேஜஸ்ஸு, பலம், ஐசுவரியம், ஜ்ஞாநம், வீரியம் சக்தி முதலான குணங்கள் எல்லாம் சேர்ந்து இருக்கும்படியான இடம்.

66. **ஸர்வாத்மநோ ஹி தா** (பிராம்மபுராணம்)

எல்லாத்துக்கும் ஆத்மாவாயிருக்கிற விஷ்ணுவினுடைய குணங்களை ருத்திரனையும் பார்வதியையுங்காட்டிலும் வேறு எவன் அறிவன்.

67. **யதா ரத்நாநி** (வாமநபுராணம்—74-40)

பிள்ளையே! எப்படி ஸமுத்திரத்தினுடைய ரத்நங்களைக் கணக்கிடமுடியாதோ, அப்படியே சக்கிராயுதமுடைய தேவனுடைய குணங்களையும் எண்ணமுடியாது.

68. **வர்ஷாயுதைஃ** (பாரதம் கர்ணபர்வம்—83-15)

எல்லா தேவர்களும் சேர்ந்து எவருடைய குணங்கள் அநேகம் பதினாயிரம் வர்ஷங்களிலும் சொல்லமுடியாதனவோ, பிரம்மாவின் ஆயுஸ்ஸும் கோடி வாய்களும், மிகவும் சுத்தமான மனதும் உள்ளவனாய் ஒருவன் எங்கேயாவது இருந்தால், அவன் உம்முடைய குணங்களுடைய பதினாயிரத்தில் ஒரு பாகத்தைச் சொல்லுவனோ, சொல்லமாட்டானே; அந்த தேவச்ரேஷ்டனே! தயை செய்யவேண்டும்.

69. **தவாநந்த**

கணக்கில்லாத குணங்களை உடையவனாயிருந்தபோதிலும், உமக்கு ஆறே குணங்கள் முக்கியமானவைகள். தேவரீர் உலகத்தை வயிற்றில் வைத்துக்கொண்டிருப்பதுபோல், மற்ற குணங்களை அவைகள் தங்களுக்குள்ளே அடக்கிக்கொண்டிருக்கின்றன.

70. **இஷுக்ஷயாந்**

பாணம் போடுகிறவர்கள் பாணங்கள் செலவாகிவிட்டபடியாலேயே திரும்பிவருகிறார்கள். ஆகாசத்தில் இடமில்லாமையா

லன்று. அப்படியே எம்பெருமானுடைய குணங்களைச் சொல்ல ஆரம்பித்தவர்கள், புத்திக்குறைவினால் நின்றுவிடுகிறார்கள். கோவிந்தனுடைய குணங்களைச் சொல்லிமுடிந்ததனால் அல்ல.

71. ஸதைகரூப (விஷ்ணுபுராணம்—1-2-1)

எப்பொழுதும் ஒரேவிதமான திருமேனியையுடையவனுக்கு

72. நித்யஸித்தே (பௌஷ்கரஸம்ஹிதை)

ஓ பௌஷ்கர! எப்போதுமிருக்கிற எம்பெருமானுடைய திருமேனிவிஷயத்திலும், அவன் எல்லாருக்கும் மேற்பட்டவன் என்கிற விஷயத்திலும் எவனுடைய மனதில் இவைகள் இப்படியே இருக்கின்றன என்கிற எண்ணமிருக்கிறதோ, அந்த எம்பெருமான் அவன்கிட்ட வருவன்.

73. ஸமஸ்தா: (விஷ்ணுபுராணம்—6-7-70)

ராஜாவே! இந்த எல்லா சக்திகளும் எந்த திருமேனியில் நிலையாயிருக்கின்றனவோ, அந்த ஹரியினுடைய திருமேனியானது உலகமாகிய உடம்பைக் காட்டிலும் வேறு. பிரகிருதியினால் செய்யப்பட்டதன்று. அது ஸ்வரூபத்தாலும் குணத்தாலும் மிகவும் பெரிது.

74. ஸமஸ்தகல்யாண (விஷ்ணுபுராணம்—6-5-84)

ஸ்வபாவத்தில் எல்லா நல்ல குணங்களையுடையவனும், தன்னுடைய சக்தியின் லேசத்தினால் உலகத்தை ஸ்ருஷ்டிக்கிறவனையும், தன் ஸங்கல்பத்தினால் எடுத்துக்கொள்ளப்பட்ட தன்னையடைந்தவர்களுக்குப் பிடித்த பெரிய திருமேனியையுடையவனையும் உலகம் முழுவதுக்கும் ஹிதம் செய்கிறவனும் எம்பெருமான் இருக்கிறான்.

75. ந பூதஸங்க (பாரதம் சாந்திபர்வம்—206-60)

அந்த பரமாத்மாவினுடைய திருமேனியானது ஐந்து பூதங்களுடைய சேர்க்கையாலுண்டானதன்று.

76. ந தஸ்ய ப்ராக்ருதா (வராஹபுராணம்—34-40)

மாம்ஸம், மேதஸ், எலும்பு இவைகளாலுண்டான பிரகிருதிகார்யமான உடம்பானது எம்பெருமானுக்கில்லை.

77. ஸசதுர்பாஹு: (பாரதம் மௌஸலபர்வம்—5-34)

அந்த திருமேனியானது நான்கு திருக்கைகளோடு கூடியது உயர்ந்தது, பரமபதத்தில் நிலையாயிருக்கிறது.

78. ருக்மாபம் (மநுஸ்மிருதி—12-122)

பரமபுருஷனை எல்லாரையும் நியமநம் பண்ணுகிறவனையும், ஸூக்ஷ்மமானவைகளைக் காட்டிலும் ஸூக்ஷ்மமாயிருப்பவனையும், தங்கம்போல் பிரகாசிக்கிறவனையும், ஸ்வப்நம் போன்ற யோகத்தினால் அடையத்தகுந்தவனையும், ஒருவன் அறியவேண்டியது.

79. ஏகஸ்தம் (கீதை—11-13)

அந்த திருமேனியில் ஒரு மூலையில் இருந்த உலகமுழுவதையும்.

80. பஶ்யாமி (கீதை—11-15)

ஓ தேவனே! தேவரீருடைய திருமேனியில் தேவர்களைப் பார்க்கிறேன்.

81. அஸ்த்ர (விஷ்ணுபுராணம்—1-22-76)

ஆயுதங்களுக்கும் நகைகளுக்குமிருப்பிடமான திருமேனியை எம்பெருமான் தூக்கிக்கொண்டிருக்கிறான்.

82. ஸபூஷணாஸ்த்ர (விஷ்ணுபுராணம்—1-22-66)

ஜீவன்களும் பிரகிருதியும் கூடிய இந்த எல்லா உலகமும் திருமேனியில் ஆயுதரூபமாகவும், நகைரூபமாகவும் எப்படி இருக்கின்றதோ.

83. தமஸ: (ராமாயணம் யுத்தகாண்டம்—114-15)

பிரகிருதியைக் காட்டிலும் மேலான இடத்திலிருக்கிறவனையும், சங்கத்தையும், சக்கிரத்தையும் கதையையும் தரித்துக்கொண்டிருப்பவனையும் போஷகனையுமிருக்கிற எம்பெருமான்.

84. விஷ்ணோரேதா: (விஷ்ணுபுராணம்—1-22-32)

மநு முதலானவர்கள், காலம், எல்லா ஜந்துக்கள் இவைகள் உலகத்தின் ஸ்திதிக்கு காரணமான விஷ்ணுவினுடையவிபூதிகள்.

85. மஹாவிபூதே (விஷ்ணுபுராணம்—5-1-50)

பெரிய விபூதியான நித்தியவிபூதியிலிருப்பையுடைய எம்பெருமானே!

86. நாந்தோஸ்தி (கீதை — 10-40)

என்னுடைய உயர்ந்த விபூதிகளுக்கு முடிவில்லை.

87. யதண்டம் (ஆளவந்தார் ஸ்தோத்திரம் 17)

பிருமமாண்டம், அதற்குள் இருக்குமவைகள், அதற்கு வெளியிலிருக்கிற ஒன்றுக்கொன்று பத்துமடங்கு பெரிதான ஏழு ஆவரணங்கள், ஸத்துவம் முதலான மூன்று குணங்கள். அவைகளையுடைய பிரகிருதி, கர்மத்திற்குட்பட்டஜீவன்கள், நித்தியவிபூதி, முக்தர்கள், நித்தியர்கள், திவ்யமங்கள விக்கிரஹம்- இவைகள் தேவரீருடைய விபூதிகள்.

88. ஜந்மாதி (பிரம்மஸூத்திரம் 1-1-2)

கண்ணால் பார்க்கப்படும் இந்த உலகத்தினுடைய பிறப்பு முதலானவைகள் எவனிடத்திலிருந்து உண்டாகின்றனவோ, அவன் பிரம்மம்.

89. க்ரீடா ஹரே: (பாரதம்-சாந்திபர்வம்—206-58)

இவையெல்லாம் எம்பெருமானுக்கு விளையாட்டுக்குக் கருவிகள்.

90. க்ரீடத: (விஷ்ணுபுராணம் 1-2-18)

விளையாடுகிற குழந்தையினுடைய சேஷ்டைகள் போலிருக்கிற எம்பெருமானுடைய சேஷ்டைகளைப் பார்.

91. பால: க்ரீடநகைரிவ (பாரதம்-ஸபாபர்வம் 40-78)

குழந்தை விளையாட்டுக்கருவிகளைக்கொண்டு விளையாடுவது போல்.

92. ஹரே விஹரஸி [விஷ்ணுதர்மம்]

கன்மமாகிய ஸூத்திரத்தினால் கட்டப்பட்டு மேலேபோயும் கீழே வந்துகொண்டுமிருக்கிற விளையாட்டுக்குவேண்டினபந்து போலேயிருக்கிற ஜந்துக்களைக்கொண்டு, ஓ எம்பெருமானே! நீ விளையாடுகிறாய்.

93. லோகவத்து (பிரம்ம ஸூத்திரம் 2-1-33)

உலகத்திலேபோலே, எம்பெருமான் உலகத்தை உண்டுபண்ணுவது முதலானவைகளைச் செய்வது விளையாட்டுக்காக மாத்திரம்.

94. ஸவயஸஊவ (ஸ்ரீகுணரத்னகோசம்—27)

ஒரே வயதுள்ள தோழன்மாரைப்போலவும் கொஞ்சமும் தோஷமில்லாமலும் எப்போதுமிப்படியிருக்கிற நித்தியஸூரிகள்.

95. ஊமூவகஷ்லூஈஷுவ (பெரியகத்தியம்)

எம்பெருமானுடைய ஸ்வரூபத்தைத் தெரியாதபடி பண்ணுகிறதும், ஒன்றை வேறொன்றாக எண்ணும்படி செய்கிறதும், தான் போகத்தைக் கொடுக்கக்கூடிய வஸ்து என்கிற எண்ணத்தை உண்டுபண்ணுவதுமான பிரகிருதி.

96. வாவம் ஷூஜூாஜ (பாரதம்-உத்யோகபர்வம்—35-73)

அடிக்கடி செய்யப்பட்ட பாபமானது அறிவை நாசஞ்செய்கிறது; அறிவையிழந்த மனிதன் மறுபடியும் பாபத்தையே செய்ய ஆரம்பிக்கிறான்.

97. க்ஷிவாசி (கீதை-16-19)

பாபிகளை அஸுரஸ்வபாவமுள்ளவர்கள்வயிற்றில் பிறக்கும்படி எப்போதும் செய்கிறேன்.

98. யக்ஷுரக்ஷாம்ஸி (கீதை 17-4)

ரஜோகுணம் மேலிட்டவர்கள் யக்ஷர்களையும் ராக்ஷஸர்களையும் ஆராதிக்கிறார்கள். அவர்களைக்காட்டிலும் வேறான தமோகுணம் மேலிட்டவர்கள் பூதங்களையும் பிரேதகணங்களையும் ஆராதிக்கிறார்கள்.

99. நேஹாஷிக்ரூசீ (கீதை. 2-40)

இந்தக் கர்மயோகத்தில் செய்த ஆரம்பமானது வீணாய்ப் போகிறதில்லை, அது முடியாததினால் தோஷமும் கிடையாது. இந்த தர்மத்தினுடைய கொஞ்சபாகமும் கூட பெரிதான ஸம்ஸாரபயத்திலிருந்து ஒருவனை ரக்ஷிக்கிறது.

100. தஸ்ரூவஸீ (ஸ்ரீபாஷ்யம்—1-4-1)

நமக்கு அநுக்கிரஹம் பண்ணும்படி எம்பெருமானைச் செய்வதற்கு ஸாதநம் அவனிடத்தில் பண்ணும் சரணாகதி.

தமிழ் வசனங்கள்.

6. நீயும் திருமகளும் (முதல் திருவந்தாதி—86)

நீயும் பிராட்டியும் மற்றெல்லாரைக் காட்டிலும் வேறாக இருந்துகொண்டு இடையர்களைக் கொல்லுவதற்காகப் பெய்த மழையை மலையை யெடுத்துத்தடுத்தாய்.

ஒண்டொடியாள் (6-வது பக்கம் 2-வது செ. பார்க்கவும்)

7. கோலத்திருமாமகள் (திருவாய்மொழி—6-9-3)

நீயும் ஈடுபடும்படியான அழகையுடைய லக்ஷ்மியோடு கூட உன்னை;

8. நின்றிருவருளும் (திருவாய்மொழி—9-2-1)

தேவரீருடைய கருணையையும், தாமரையிலிருக்கும் பிராட்டியின் கருணையையும் கொண்டு தேவரீருடையகோயிலைப்பெருக்கி, அதாவது—கைங்கரியம் செய்து,

9. உன் தாமரை (திருவாய்மொழி—9-2-3)

தேவரீருடைய தாமரைப்பூவிலிருக்கிற பிராட்டியும் தேவரீரும் மூன்று உலகங்களும் கைங்கரியம் செய்யும்படி இருந்தருள வேணும்.

10. அகலகில்லேன் (திருவாய்மொழி—6-10-10)

ஒரு க்ஷணமுங்கூட தேவரீரை விட்டுப் பிரிய சக்தியில்லையென்று தாமரைப்பூவிலிருக்கிற பிராட்டி வஸிக்கிற திருமார்பை உடையவனே.

11. உணர்முழுநலம் (திருவாய்மொழி—1-1-2)

முழுவதும் ஜ்ஞாநமாயும் ஆநந்தமாயுமிருக்கும் ஸ்வரூபத்தை உடையவன்.

12 நந்தாவிளக்கே (பெரிய திருமொழி—3-8-1)

நாசமில்லாததாயும், ஸ்வயம்பிரகாசமாயும், மூன்றுவித அளவில்லாததாயுமிருக்கிற ஸ்வரூபத்தை உடையவனே.

13. வல்வினையேனை (திருவாய்மொழி—8-1-8)

உன்னைவிட்டுப் பிரியும்படியான பலமான பாபங்களையுடைய என்னைப் பிளக்கிற குணங்களை உடையவனே.

14. உயர்வற (திருவாய்மொழி—1-1-1)

உயர்த்தி இவ்வளவென்று சொல்லமுடியாதபடி உயர்ந்த ஆனந்தம் முதலிய குணங்களையுடையவன்.

15. திண்ணம் (திருவாய்மொழி 5-1-5)

அனேகமான-செய்யப்பட்ட கர்மங்களாகிய பலமான கயிற்றால் திடமாயும் அழுந்தும்படியாயும் என்னை உடம்புடன் கட்டி, புண்ணைப்போல அருவருப்பான உடம்பை அதிலுள்ள தோஷங்கள் தெரியாதபடி தோலாலே மறைத்து, உன்னை விட்டு வேறான விஷயங்களில் நான் போகும்படி நீ என்னை வைத்தாய். திடமான என்பதால் இந்தக் கட்டை அவிழ்க்கமுடியாதென்றும், அழுந்த என்பதாலே என்னையும் உடம்பையும் பிரிக்கமுடியாதபடி கட்டி என்றும் சொல்லப்படுகிறது.

16. அந்நாள் (திருவாய்மொழி—3-2-1)

ஸிருஷ்டி பண்ணின அந்த காலத்தில் நீ எனக்குக்கொடுத்த உடம்பு எப்படியிருக்கிறதோ, அப்படி சுழல்வேன்.

17. ஆவி திகைக்க (திருவாய்மொழி—6-9-9)

என்னுடைய ஆத்மா பிரமிக்கும்படி ஐந்து இந்திரியங்கள் என்னை இழுத்து பாதிக்கும்படியான அல்பமான ஸுகங்கள் அனேகங்களைக்காட்டி பாபியான என்னை நீ வருத்தப்படுத்தலாமோ ?

அரும்பதவுரை.

தளம்—அஸ்திவாரம்.
பரக்க — விஸ்தாரமாக.
துவக்கி — சேர்த்து.
இழியாத — இறங்காத.
ஒக்க — ஸமமாக.
ஒழுகுசங்கிலி — விலங்கிடுவதற்காகப் பலரைக் கட்டும்படியான ஒரே சங்கிலி.
தலைசாய்ப்பித்து — பலனை அடைந்ததாய்ச் செய்து.
எடுத்துக் கைநீட்டின — தன் இளப்பத்தை நினைத்துக் கிட்டப் போகாமல் நின்று வேலை செய்கிற,

கண்ணோட்டம் — பார்வை, அதாவது போகத்தைக் கொடுக்கும் வஸ்துவாகப் பார்ப்பது.
கால் தாழ — சீக்கிரம் விட்டுப்போகாதபடி.
தூரவு தத்துவார் — கிணறு தாண்டுவார்.

5. தத்துவத்ரயசிந்தநாதிகாரம்.

ஸம்ஸ்கிருத வசனங்கள்.

101. அசேதநா (பரமஸம்ஹிதா. 2)

(பிரகிருதி) அறிவில்லாதது, அயலாருக்காகவேயிருப்பது, ஸ்வரூபத்தில் நாசமில்லாதது, ஆனால் எப்போதும் வேறுபட்டுக்கொண்டிருப்பது, ஸத்துவம் ரஜஸ்ஸு தமஸ்ஸு என்கிற மூன்று குணங்களையுடையது. கர்மங்களைச்செய்தவர்கள் அதன் பலனையநுபவிப்பதற்கு இருப்பிடமான உடம்பாயிருக்கிறது. இப்படி பிரகிருதியின் ஸ்வபாவம் சொல்லப்படுகிறது.

102. அநாதி: (விஷ்ணுபுராணம். 1_2-26)

ஓ பிராம்மணனே! காலத்துக்கு ஆரம்பம் கிடையாது, முடிவும் கிடையாது. 'பகவான்' என்கிற சொல்லாலே காலத்தைச் சரீரமாகவுடைய பகவான் என்று சொல்லப்படுகிறது. காலத்தை உடம்பாகவுடைய எம்பெருமானுக்கு ஆதியும் முடிவும் இல்லை என்று சொன்னபோதிலும்; இந்த சுலோகம் காலத்தைப்பற்றித் தான் சொல்லுகிறது.

103. கலாமுஹூர்த்தாதி (விஷ்ணுபுராணம் 4-1-84)

விநாடி, முகூர்த்தம் முதலானவைகளாக இருக்கும் காலமானது எந்த எம்பெருமானுடைய நித்தியவிபூதியில் வேறுபாடுகளை உண்டுபண்ணுகிறதில்லையோ.

104. ஜ்ஞாநாநந்தமயா: லோகா: (பாஞ்சராத்ரம்.)

முழுவதும் ஸ்வயம்பிரகாசமாயும், ஆநந்தமாயுமிருக்கிற உலகங்கள்.

105. காலம் ஸ பசதே (பாரதம், சாந்திபர்வம் 196-9)

அந்த நித்தியவிபூதியில் எம்பெருமான் காலத்திற்கு விகாடி காழிகை முதலான வேறுபாடுகளை உண்டுபண்ணுகிறான். ஆனால் இவ்விடத்தில்போல் காலமானது அவ்விடத்தில் வேறுபாடுகளை உண்டுபண்ணுவதில்லை.

ஸுசிரோஜ்ஜெவ: (5-வது பக்கம் 20-செ. பார்க்க)

நாயம் ஜெவ: (6-வது பக்கம் 22. செ. பார்க்க)

106. க்ஷர: ஸர்வாணி (கீதை 15-16)

க்ஷரமென்பது கர்மத்துக்குஉட்பட்டிருக்கிற எல்லா பிராணிகளும். அக்ஷரமென்பது கர்மஸம்பந்தம் போய் முன்போல் வேறுபாடில்லாமலிருக்கிற முக்தன்.

107. யதேகாந்திந: ஸதா (விஷ்ணுபுராணம் 1-6-39)

ஏகாந்திகளாய் எப்போதும் பிரும்மத்தைத் தியானம் பண்ணுகிற யோகிகள் எவர்களோ, அவர்கள் போகும் இடமானது நித்ய ஸூரிகள் பார்த்துக்கொண்டிருக்கிற மிகவும் உயர்ந்த இடம்.

108. ஸர்வஜ்ஞ: (விஷ்ணுபுராணம் 5-1-47)

எம்பெருமான் எல்லாவஸ்துக்களாகவும், ஜ்ஞானமென்கிறகுணமுள்ளவனாகவும், எல்லாவற்றையும் பார்க்கிறவனாகவும், எல்லா விதமான சக்தி, ஜ்ஞானம், பலம், ஐசுவர்யம் இவைகளையுடையவனாகவும், சிரமம் சோம்பல் பயம், கோபம், காமம் முதலானவைகள் ஒருபோதுமில்லாதவனாகவுமிருக்கிறான்.

109. யோ வேத்தி (நியாயதத்துவம்)

எந்த எம்பெருமான் ஒரேகாலத்தில் எல்லாவற்றையும் பிரத்யக்ஷத்தாலே எப்போதும் தன் ஸ்வபாவத்தாலேயறிகிறானே, அந்த எம்பெருமானை நமஸ்காரம் செய்து நியாயதத்துவம் என்கிற சாஸ்திரத்தைச் சொல்லுகிறேன்.

110. ஸ்வஸத்தாபாஸகம் (பாஞ்சராத்ரம்)

தான் இருப்பதாலேயே தோன்றுகிற, அதாவது ஸ்வயம்பிரகாசமான ஸத்துவமானது ரஜஸ்ஸுடனும் தமஸ்ஸுடனும் சேர்ந்த ஸத்துவத்தைக்காட்டிலும் வேறு. இங்கே ஸத்துவமென்பது அதையுடைய திரவியம்.

தமஸ: (16-வதுபார்க்கம் 83-செ. பார்க்க.)

111. ஸர்வாகாரம் (ஜிதந்தாஸ்தோத்திரம் 2-21)

பிரகிருதியைக்காட்டிலும் வேறாயும் நித்தியஸூரிகளால் கொண்டாடப்பட்டதாயுமிருக்கிறது நித்தியவிபூதி.

112. அநந்தஸ்ய, அநந்தஸ்ய (விஷ்ணுபுராணம் 2-7-25,26)

எந்த காரணத்தால் அநந்தமென்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட பிரகிருதிதத்துவத்திற்குக் காலத்தினால் முடிவில்லை. இவ்வளவு யோஜனையுள்ளதென்று சொல்லக்கூடிய அளவுமில்லை. ஆகையால் அதை அநந்தம்-முடிவில்லாதது என்றும், கணக்கிட முடியாத அளவுள்ளதென்றும் சாஸ்திரம் சொல்லுகிறது.

113. ஷாட்குண்யாத் (வரதராஜஸ்தவம் 16)

தேவரீருடைய முதலாவதான பரரூபமானது இந்த ஆறு குணங்களாலே பிரகாசித்தது. இரண்டிரண்டு குணங்களான மூன்றையுடையவனே! அவைகளில் மூன்று இரட்டைகளாலே பின்னுண்டான மூன்று வியூஹங்களும் விளங்கின.

114. ஷாட்குண்யாத் (ரங்கராஜஸ்தவம் உத்தரசதகம்-39)

ஓ ரங்கநாதனே! ஆறு குணங்களையுடையவனாய், பரன் என்று சொல்லப்படுகிற தேவரீர் முக்தர்களால் அநுபவிக்கப் படுகிறீர். அப்படியே மூன்றாகப் பிரிந்து, பலமென்கிற குணத்தோடு கூடிய ஜ்ஞானத்தையுடையவனான ஸங்கர்ஷணனாயிருந்து கொண்டு ஸம்ஹாரத்தைச் செய்கிறீர். சாஸ்திரத்தைப் பிரவசநம் செய்கிறீர். ஐசுவர்யம் வீர்யமென்கிற குணங்களையுடைய ப்ரத்யும்நனாயிருந்து உலகத்தையுண்டுபண்ணி தர்மத்தை நடத்துகிறீர். சக்தி தேஜஸ்ஸு என்கிற குணங்களையுடைய அநிருத்தனாயிருந்துகொண்டு ரக்ஷிக்கிறீர். தத்துவங்களை உபதேசம் செய்கிறீர்.

115. ஜாக்ரத் (ரங்கராஜஸ்தவம் உத்தரசதகம்-40)

ஓ ஸ்வாமியே! உம்மைத் தியானம் பண்ணுகிறவர்களில் சிலர் விழித்துக்கொண்டிருக்கிறவர்கள்போலவும், சிலர் ஸ்வப்நம் காண்கிறவர்கள் போலவும், வேறு சிலர் ஸ்வப்நமில்லாமல் தூங்குகிறவர்கள்போலவும், மற்றவர்கள் மூர்ச்சையடைந்தவர்கள் போலவும் இருக்கிறார்கள். அதாவது— முதல் வகுப்புக்கு இந்திரியங்கள் வேலை செய்கின்றன. இரண்டாவது வகுப்பில் அவைகள் வேலை செய்யாமல் மனதுமாத்திரம் வேலை செய்கிறது. மூன்

ருவது வகுப்பில் அதுவும் வேலை செய்கிறதில்லை. கடைசிவகுப்பில் உயிரோடிருப்பதற்கும் அடையாளமில்லை. அவர்களைப்போல் தேவரீர் நாலு ரூபமாயிருந்துகொண்டு ஒவ்வொரு ரூபத்திலும் வாஸுதேவர் முதலாக நாலாகப்பிரிந்து அந்தந்த ரூபங்களுக்குத் தகுந்த குணங்களையும் ஆயுதங்களையுமுடையவராய் உபாஸிக்கப் படுகிறீர்.

116. க்ருஷ்ணரூபாணி (பாஞ்சராத்ரம்)

கிருஷ்ணனாக அவதாரம் செய்த எம்பெருமானுடைய ரூபங்களுக்குக் கணக்கில்லை.

117. ஸித்தாக்ருத்யாத்மா (ஸாத்வதஸம்ஹிதை 6-22)

ஆச்ரிதனால் செய்யப்பட்ட பிம்பத்துக்கு என்ன ஆகாரம் இருக்கிறதோ, அதே ஆகாரமுள்ள திருமேனியுடன் அந்த பிம்பத்தில் வந்து, இது பிம்பம் இது திருமேனி என்று பிரிக்கமுடியாதபடி சேர்ந்திருக்கிறார்.

118. அஷ்டாங்கயோக (ஸ்ரீ ஸாத்வதஸம்ஹிதை 2-7-8)

அஷ்டாங்கயோகத்தைச் செய்து ஸித்தியடைந்து ஹிருதயத்தில் எம்பெருமானை ஆராதநம் பண்ண ஆசையுள்ள யோகிகளுக்கு ஹிருதயத்தில் ஒரே மூர்த்தியாயிருக்கிற எம்பெருமான் தியானத்திற்கு விஷயம். ஒரே மூர்த்தி என்பதற்கு நான்கு வியூஹங்களாகப் பிரியாமலிருக்கிற ரூபம் என்று பொருள்.

119. ஸுரூபாம் (விஷ்ணுதர்மம் 103-16)

தங்கம் வெள்ளி முதலானவைகளாலே நல்ல ரூபத்தை யுடையதாயும், தெளிவான முகத்தையும் கண்களையுமுடையதாயும் தனக்குப் பிரீதியையுண்டுபண்ணக்கூடியதாயும் உள்ள எம்பெருமானுடைய ஒரு பிம்பத்தைச் செய்து, அதை அர்ச்சித்து, வணங்கி, ஆராதநம் செய்து தியாநம் செய்யவேண்டும். இதனால் தோஷங்கள் போய் அவனுடைய பரரூபத்தில் போய்ச் சேருகிறான். "தாமேவ" என்பதற்கு பிம்பத்தில் வந்திருக்கிற ரூபமும் பரரூபமும் ஒன்று என்று கருத்து.

ஸித்தேத்யேவஷா (11வது பக்கம் 39-நெ. பார்க்க)

120. யஸ்யவஸ்யாஷ (ஸ்ரீ குணரத்னகோசம்-34)

யௌவநம் முதலிய குணங்கள் தேவரீருக்கும் எம்பெருமானுக்கும் ஸமமாயிருந்தாலும், ஒரு புருஷனிடத்திலிருக்கவேண்டிய- ஒருவனுக்குமுட்படாமை, சத்துருக்களையடக்குவது, உறுதியாயிருக்கும் தன்மை-முதலானவைகளை எம்பெருமானிடத்திலும், ஸ்திரீயினிடத்திலேயேயிருக்கக்கூடிய-மிருதுவாயிருப்பது, புருஷனுக்காகவே இருப்பது, கருணை, பொறுமை-முதலான குணங்களைத் தேவரீரிடத்திலும் வைத்துக்கொண்டு போகத்தை அநுபவிப்பதற்காக உங்களிருவருக்கும் பிரிவைச் செய்துகொண்டிருக்கிறீர்கள்.

121\. [illegible] (பாரதம்-ஸபாபர்வம்-39-2)

அந்த இடத்தில் சிலர் சின்ன விஷயங்களைப் பெரிய விஷயங்களாகத் தங்களது பாண்டித்தியத்தாலே ஸாதிக்கிறார்கள்.

122\. [illegible]

சாஸ்திர ஜ்ஞாநத்தை ஸம்பாதிப்பதில் மிகவும் கஷ்டமிருக்கிறது. அதனால் புத்திக்குக் கலக்கமுண்டாகும். ஆகையால் ஆசாரியனுடைய உபதேசத்தாலே எம்பெருமானைத் தெரிந்துகொண்டு சாஸ்திரஜ்ஞாநத்தை ஸம்பாதிப்பதற்கு வேண்டிய எல்லா வேலைகளினின்றும் ஒழியவேண்டியது.

தமிழ் வசனங்கள்.

நந்தாவிளக்கே (19-பக்கம் 12 பார்க்க)

உணர் முழுநலம் (19-பக்கம் 11 பார்க்க)

18\. சூழ்ந்து (திருவாய்மொழி—10-10-10)

எங்கும் நிறைந்து குணத்தாலே பெரிதான முக்தனைக்காட்டிலும், தன்னுடைய ஜ்ஞாநம் என்கிற குணத்தாலும், ஸ்வயம்பிரகாசமான ஸ்வரூபத்தாலும் பெரிதாயும் ஆனந்தமாயுமிருக்கும் எம்பெருமான்

19\. அமலன் —(அமலனாதிபிரான் — 1)

தோஷமில்லாதவன்

20\. இறைநிலை (திருவாய்மொழி —1-3-6)

ஈசுவரனாயிருக்கும் தத்துவத்தின் இருப்பை உள்ளபடி அறிவது முடியாதது.

அரும்பதவுரை.

மிறுக்கு — ஆயாஸம்—வருத்தம். பேரணி — மூலபலம்.
கூறு — பாகம். உவர் — மத்தியஸ்தர்,

6. பரதேவதாபாரமார்த்தியாதிகாரம்,

ஸம்ஸ்கிருத வசனங்கள்

123. ஆஹ-ூதஸம்ஹ்லவெ (பாரதம் சாந்திபர்வம் 210-24)

பஞ்சபூதங்கள் உள்பட பிரளயமுண்டாகி மஹத்தத்துவம் பிரகிருதியில் லயத்தையடையும்போது எல்லாருக்கும் ஆத்மாவான ஒருவனிருக்கிறான். அவனுக்கு உடம்பான மற்றவைகள் நாசமடைந்தபோதிலும், ஆத்மாவான அவனுக்கு நாசமில்லை. அவன் பிரபுவான நாராயணன்.

124. ஆஷெ்ா-நாரா (வராஹபுராணம் 25-6)

நாராயணனென்கிற தேவன் முதலிலிருந்தவன், அவனிடத்திலிருந்து பிரம்மாவும் அவனிடத்திலிருந்து ருத்திரனுமுண்டானார்கள்.

125. வரொ-நாரா (வராஹபுராணம் 90-3)

நாராயணன் எல்லாருக்கும் மேலான தேவன்; அவனிடமிருந்து நான்கு முகமுள்ள பிரம்மா உண்டானான்; ஓ பூதேவி! அவனிடமிருந்து ருத்திரன் உண்டானான்.

126. ததஸ்லைவெ (ராமாயணம் உத்தரகாண்டம் 101-26)

ஒருவராலும் ஜயிக்கமுடியாத தேவரீரும் அந்த எப்போதுமிருக்கிற ரூபத்திலிருந்து எல்லாப் பிராணிகளை இரக்ஷிப்பதற்காக த்ரிமூர்த்திகளின் நடுவிலிருக்கிற விஷ்ணு என்கிற ரூபத்தை எடுத்துக்கொண்டீர். இங்கே முன் சுலோகங்களில் சொன்னபடி பிறந்தான் என்று சொல்லாமையால் பிரம்மாவையும் ருத்திரனையும்போல் பிறக்கவில்லையென்றும், தானாகவே அவதாரம் செய்தானென்றும், 'ரக்ஷார்த்தம்' என்பதாலே கர்மபலனையநுபவிப்பதற்காக அவதாரம் செய்யவில்லையென்றும் காட்டப்படுகிறது. (இது பிரம்மாவின் வசநம்)

127. 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌹𑌿 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 (பாரதம் சாந்திபர்வம்—347-32)

எப்போதுமிருக்கிற புருஷனை அந்த வாஸுதேவனொருவனைத் தவிர, ஸ்தாவரமோ, ஜங்கமமோ உலகத்தில் நித்தியமான வஸ்து கிடையாது.

128. 𑌤𑌦𑍍𑌵𑌿𑌸𑍃𑌷𑍍𑌟𑌃 (மநுஸ்மிருதி—1-11)

அந்த நாராயணனாலே உண்டுபண்ணப்பட்ட அந்தப் புருஷன் உலகத்தில் பிரம்மாவென்று சொல்லப்படுகிறான்.

129. 𑌸𑌂𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯 (ராமாயணம் உத்தரகாண்டம்—104-14)

முன்னாலே நீரே உம்முடைய ஸங்கல்பத்தாலே உலகங்களை அழித்து பிரளயஸமுத்திரத்தில் படுத்துக்கொண்டிருந்து முதலில் என்னை உண்டுபண்ணினீர். (இது பிரம்மா எம்பெருமானைக் குறித்துச் சொன்னது.)

130. 𑌕 𑌇𑌤𑌿 (ஹரிவம்சம்—131-48)

'க' என்று பிரம்மாவின் பெயர், நான் எல்லா பிராணிகளுக்குமீசன்; அதாவது அவர்களை நியமநம் பண்ணுகிறவன்; நாங்களிருவரும் தேவரீருடைய திருமேனியிலுண்டானவர்கள். ஆகையால் தேவரீர் கேசவன் என்கிற பெயரையுடையவர். (இது ருத்திரன் வசநம்.)

131. 𑌅𑌹𑌂 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌜𑌃 (பாரதம் சாந்திபர்வம்—352-62)

ஒரு காரணமுண்டானபோது எம்பெருமான் ஸந்தோஷப்பட அந்த ஸந்தோஷத்திலிருந்து நான் உண்டானேன். அப்படியே அவன் ஒரு காரணத்தினால் கோபிக்க, நீ முன் ஸிருஷ்டியில் அந்த கோபத்தினாலுண்டானாய். (இது ருத்திரனைப் பார்த்து பிரும்மாவின் வசநம்).

132. 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌦𑍇𑌵𑌾𑌃

எல்லா தேவர்களும் வாஸுதேவனை ஆராதிக்கிறார்கள்; எல்லா தேவர்களும் வாஸுதேவனை வணங்குகிறார்கள்.

133. 𑌸𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑌾𑌃 (பாரதம் சாந்திபர்வம்—350-30)

பிரும்மாவுடனும் ருத்திரனுடனும் இந்திரனுடனும் கூடின தேவர்களும் பெரியருஷிகளும் தேவசிரேஷ்டனாய் ஹரியென்றும் நாராயணனென்றும் சொல்லப்பட்ட எம்பெருமானை அர்ச்சனை செய்கிறார்கள்.

134. விநயஜ: (பாரதம் சாந்திபர்வம்—210-33)

பிரம்மா ருத்திரன் முதலானவர்கள் எந்த பிரபுவான நாராயணனை எப்போதும் நினைத்துக்கொண்டிருந்தும், அவனிப்படி இருக்கிறானென்று நிச்சயத்தை அடையவில்லையோ, அந்த எம்பெருமானை நான் உபாயமாகப் பற்றினேன்.

135. பத்மநிதி: (ராமாயணம் உத்தரகாண்டம்—104-7,8)

தேவரீருடைய நாபியில் உண்டான ஸூரியன்போல் பிரகாசிக்கிற மேன்மையான தாமரைப்பூவில் என்னையுமுண்டுபண்ணி, பிரஜாபதி என்கிற அதிகாரி செய்யவேண்டிய எல்லா வேலைகளும் தேவரீரால் என்னிடம் வைக்கப்பட்டது. இப்படி உம்மால் வைக்கப்பட்ட பாரத்தையுடையவனான நான் உலகத்துக்கு யஜமானனான தேவரீரை தியானம் செய்கிறேன். (இது பிரும்மாவின் வசநம்)

136. யுககோடி [பாரதம் குண்டதரோபாக்கியாநம்]

சதுர்யுகத்தின் கோடியாயிரங்கள் எம்பெருமானை ஆராதித்து பிரம்மா மறுபடியும் மூன்று உலகங்களை ஸிருஷ்டிக்கிற அதிகாரத்தை அடைந்தானென்று கேட்டிருக்கிறோம்.

137. விஶ்வரூப: (பாரதம் சாந்திபர்வம்—8-37)

விச்வரூபன் மஹாதேவன் என்று சொல்லப்படுகிற ருத்திரன் ஸர்வமேதம் என்று சொல்லப்பட்ட ஒரு பெரிய யஜ்ஞத்தில் எல்லா பூதங்களையும் தன்னையும் மனதாலே தானே ஹோமம் பண்ணினான்.

138. மஹாதேவ: (பாரதம் சாந்திபர்வம்—20-12)

மஹாத்மாவான மஹாதேவன் என்று சொல்லப்பட்ட ருத்திரன் ஸர்வமேதம் என்கிற யஜ்ஞத்தில் தன்னை ஹோமம்செய்து தேவர்களுக்குள் சிரேஷ்டனாக ஆனான். எல்லா லோகங்களையும் தன்னுடைய ஜ்ஞானத்தாலே வியாபித்து எட்டு விதமான ரூபத்தைத் தரித்து காந்தியையுடையவனாய் யானைத்தோலை வஸ்திரமாகவுடையவனாய் கீர்த்தியினால் விளங்குகிறான்.

139. யோ மே யதா (பாரதம் சாந்திபர்வம்—349-61)

இந்தப் பெரிய யஜ்ஞத்தில் எவன் எனக்கு பாகத்தை, கொடுக்கவேண்டிய விதிப்படி கொடுத்தானோ, அவன் யஜ்ஞ

பாகத்தைப் பெறுவதற்குத் தகுந்தவனென்று வேதத்திலும் ஆபஸ்தம்பர் முதலானவர்கள் செய்த ஸூத்திரத்திலும் நான் ஏற்பாடு செய்திருக்கிறேன்.

140. ஸ ஹாக்ஷாஃ (விஷ்ணுபுராணம்—5-30-17)

பிரம்மா முதலான எல்லா தேவர்களும் மனிதர்களும் மிருகங்களும் எம்பெருமானுடைய மாயையாகிய பெரிய சுழலிலிருக்கிற மோஹமாகிய அந்தகாரத்தினால் சூழப்பட்டிருக்கிறார்கள். இங்கு மாயையென்பது பிரகிருதி.

141. ஸூஹா விஶ்வஸ்ருஜஃ (மநுஸ்மிருதி—12-50)

முன் ஜன்மத்தில் ஸத்துவகுணம் மேலிட்டு உயர்ந்த புண்ணியங்களைச் செய்தவர்களால், பிரம்மா, ஒன்பது பிரஜாபதிகள், தர்மம், மஹத், பிரகிருதி (இவைகளுடைய அபிமானிதேவதைகள்)— இவ்விதமான பிறப்புக்கள் அடையப்படுகின்றன.

142. ஸனெதள ஆள (பாரதம் சாந்திபர்வம்—350-19)

எம்பெருமானுடைய பிரஸாதத்தாலும், கோபத்தினாலும் உண்டான தேவசிரேஷ்டர்களான பிரம்மா ருத்திரன் என்கிற இவ்விருவர்களும் அவனாலே காட்டப்பட்ட வழியாக, அதாவது அதற்கு வேண்டிய அவனால்கொடுக்கப்பட்ட அறிவைக்கொண்டு ஸிருஷ்டியையும் ஸம்ஹாரத்தையும் செய்கிறார்கள் என்று சொல்லப்படுகிறார்கள்.

143. ஹிரண்ய ...ஃ, ...ஃ (விஷ்ணுபுராணம்—6-7-56,77)

பகவானாகிய பிரம்மா, இந்திரன், பிரஜாபதிகள்............... தேவர்கள் முதலான இவர்களெல்லாரும் கர்மத்தினாலுண்டானவர்கள். ஆகையாலே அவர்கள் அசுத்தர்கள்.

144. ஆஸ்ர ஹ்மஸ தவ (விஷ்ணுதர்மம்—104-23)

பிரம்மா முதலாக சின்ன புழுக்கள் வரையிலுள்ள உலகத்திலிருக்கிற எல்லா பிராணிகளும் கர்மத்தினாலுண்டான ஸம்ஸாரத்திற்கு உட்பட்டவர்கள்.

145. கர்மணாம் (ஸ்ரீ பாகவதம்—11-19-18)

கர்மபலன்களை அநுபவிப்பதற்காகப் பிறந்தவர்களாகிய பிரம்மா முதலானவர்கள் அமங்களமென்று எண்ணி, அவர்கள்

அடையத்தகுந்தவர்கள் என்கிற ஆசை போயிருக்கிறவனுக்கு வாஸுதேவன் மிகவும் உயர்ந்ததான அடையவேண்டிய வஸ்து. அமங்களமென்பதற்கு அவர்களை தியாகம் பண்ணுகிறவனுடைய பாபத்தைப் போக்கச் சக்தியில்லாதவர்களென்று கருத்து.

146. ருத்ரம் ஸுரா (பாரதம் ஆச்வமேதிகபர்வம்-118-37,38)

தேவர்கள் ருத்திரனை அடைந்திருக்கிறார்கள்; ருத்திரன் பிரம்மாவை அடைந்திருக்கிறான்; பிரம்மா என்னை யடைந்திருக்கிறான். ஓ ராஜாவே! நான் ஒருவனையும் அடையவில்லை. என்னால் அடையவேண்டியவன் ஒருவனுமில்லை. எல்லாருக்கும் நான் அடையவேண்டிய இடம்.

147. ப்ரஹ்மா த³க்ஷா (விஷ்ணுபுராணம்—1-22-39)

பிரம்மாவும், தக்ஷன்முதலான ஒன்பதுபிரஜாபதிகளும், காலமும், அப்படியே எல்லா ஜந்துக்களும், எம்பெருமானுடைய விபூதிகளாய்க்கொண்டு உலகத்தையுண்டுபண்ணுவதற்குக் காரணமாயிருக்கிறார்கள்.

148. ருத்ர: (விஷ்ணுபுராணம்—1-22-33)

ருத்திரனும், காலன், யமன் முதலானவர்களும், எல்லா ஜந்துக்களும் நான்கு விதமான பிரளயத்துக்குக் காரணங்களாயும் எம்பெருமானுடைய விபூதிகளாயுமிருக்கிறார்கள்.

149. தவாந்தராத்மா (பாரதம்-சாந்திபர்வம்—361-4)

உனக்கும் எனக்கும் தேஹி என்கிற பெயரையுடைய மற்ற எல்லாருக்கும் ஆத்மாவான இந்த பகவான் எல்லாரும் செய்வதைப் பார்த்துக்கொண்டிருக்கிறான்; ஒருவனாலும் ஒரு காலத்திலும் அவன் பார்க்கப்படுகிறதில்லை. தேஹீ என்கிற சொல்லுக்கு உடம்பையுடைய பிராணியென்று பொருள். (இது பிரம்மா ருத்திரனைப் பார்த்துச் சொன்னது)

த்ராஸமேதா: (6-வது பக்கம் 23-வதைப் பார்க்க)

150. ந பரம் (பாரதம் பீஷ்மபர்வம்—67-2)

ஓ புருஷச்ரேஷ்டனே! புண்டரீகாக்ஷனை அதாவது எம்பெருமானைக் காட்டிலும் உயர்ந்தவன் ஒருவனுமில்லை.

151. பரம் ஹி (பாரதம் பீஷ்மபர்வம்—67-17)

புண்டரீகாக்ஷனைக் காட்டிலும் உயர்ந்தது முன்னாலே இருந்ததில்லை. பின்னாலே உண்டாகப்போகிறதில்லை.

152. ந விசேஷ:

ஓ ராஜச்ரேஷ்டனே ? விஷ்ணுவைக் காட்டிலும் உயர்ந்த தேவனில்லை.

153. ந வாஸுதேவாத்

வாஸுதேவனைக்காட்டிலும் உயர்ந்த மங்களமானது இல்லை. வாஸுதேவனைக்காட்டிலும் உயர்ந்த சுத்தி பண்ணுவது அதாவது பாபத்தைப் போக்கடிப்பது இல்லை. வாஸுதேவனைக் காட்டிலும் உயர்ந்த தேவதை இல்லை. வாஸுதேவனையடைந்து ஒருவனும் வருத்தப்படுகிறதில்லை. மங்களம்-நன்மையைக்கொடுப்பது.

154. நதஸ்ய லோகேஷு

மூன்று உலகங்களிலும் அவனுக்கு (எம்பெருமானுக்கு) ஸமானமானவன் உண்டானதில்லை, உண்டாகப்போகிறதில்லை.

155. ந கேசவாத் (நாரதீயபுராணம்—18.33)

கேசவனைக் காட்டிலும் உயர்ந்த தைவமில்லை.

156. ராஜாதிராஜ: (பாரதம்-ஆச்வமேதிகபர்வம்—43.13)

எம்பெருமான், எல்லோருக்கும் ராஜாக்களான பிரம்மா முதலானவர்களுக்கும் மேற்பட்ட ராஜா. அவன் விஷ்ணு; அவன் பிரம்மம்; அவன் உயர்ந்தவன், ஆதலால் அவனை நாம் ஈசுவரனென்று அறிகிறோம். அவன் தான் தகப்பன், அவன் தான் பிரஜாபதி.

157. ஜாயமாநம் (பாரதம் சாந்திபர்வம்—358.73.77)

எந்த ஜீவனை பிறக்கிறகாலத்தில் மதுஸூதநன் என்று சொல்லப்பட்ட எம்பெருமான் பார்க்கிறானோ; அவன் ஸத்துவ குணம் மேலிட்டவன் என்று அறியத்தகுந்தவன். அவன் மோக்ஷமாகிய பிரயோஜநம் கிடைப்பதற்கு வேண்டியதை எண்ணுவன். எவனைப் பிறக்கிற ஸமயத்தில் பிரம்மா, ருத்திரன் இவர்கள் பார்க்கிறார்களோ, அவனுடைய மனது ரஜோகுணத்திலும், தமோகுணத்திலும் மூழ்கியிருக்கும்.

158. ஸம்ஸாரார்ணவ (விஷ்ணுதர்மம்—1-59)

ஸம்ஸாரமாகிய ஸமுத்திரத்தில்மூழ்கி விஷயங்களால் சூழப்பட்ட மனதையுடையவர்களுக்கு, ஓடமாகிய விஷ்ணு தவிர, மிகவுமுயர்ந்த அடையவேண்டிய வஸ்து வேறொன்றுமில்லை.

159. வை ஹாணா (பாரதம் சாந்திபர்வம்—350-36)

பிரம்மாவையும், ருத்திரனையும், வேறு எந்த தேவர்கள் சொல்லப்படுகிறார்களோ அவர்களையும் நல்ல அறிவையுடைய வர்கள் ஸேவிக்கிறதில்லை. ஏனென்றால்— அவர்கள் கொடுக்கும் பலன் அளவுள்ளது.

160. ஹரிரேகஃ (ஹரிவம்சம்—132-8,14)

ஸத்துவகுணம் மேலிட்ட உங்களாலே ஹரி (எம்பெருமான்) ஒருவனே எப்போதும் தியானம் பண்ணத் தகுந்தவன். ஓ பிராமணர்களே! அவன் எப்போதும் உபாஸிக்கத் தகுந்தவன். அவனை நினைப்பதற்கு நான் காரணம்.

161. ஸூர்யே ஸப்தவ...

ஸூரியனிடத்தில் எந்த மனிதன் ஏழு ஜன்மங்கள் பக்திபண்ணுகிறானோ, அவனுடைய பிரஸாதத்தால் அவனுக்கு ருத்திரனிடத்தில் பக்தியுண்டாகிறது. எவன் ருத்திரனிடத்தில் ஏழு ஜன்மங்கள் பக்தி பண்ணுகிறானோ, அவனுடைய அநுக்கிரஹத்தால் அவனுக்கு வாஸுதேவனிடத்தில் பக்தியுண்டாகிறது. எவன் வாஸுதேவனிடத்தில் ஏழு ஜன்மங்கள் பக்தி பண்ணுகிறானோ, அவன் வாஸுதேவனுடைய அநுக்ரஹத்தாலே அவனிடம் போய்ச் சேருகிறான்.

162. யே து ஸாமாந்யபாவேந

எவர்கள் புருஷோத்தமனான எம்பெருமானை மற்றவர்களுடன் ஸமமாக எண்ணுகிறார்களோ, அவர்களைப் பாஷண்டிகள் என்று அறியவேண்டியது. அவர்கள் எல்லாக் கர்மங்களிலிருந்து விலக்கப்பட்டவர்.

163. த்வம் ஹி ருத்ர (வராஹபுராணம்—10-36)

பெரிய கைகளையுடைய ருத்திரனே! நீ ஜனங்களுக்கு மோஹமுண்டாகும்படியான சாஸ்திரங்களைச் செய், கொஞ்ச வருத்தத்தைக் காண்பித்து, அதனால் பலம் சீக்கிரம் கிடைக்குமென்று காட்டு.

164. ப்ரஹ்மா ஸ்வயம்பூஃ (ராமாயணம்-ஸுந்தரகாண்டம் 51-45)

ராமனாலே சண்டையில் கொல்லும்படி உத்தேசிக்கப்பட்டவனை, தானேயுண்டானவனையும், நாலு முகத்தையுடையவனையு

மிருக்கிற பிரம்மாவாலும் இரக்ஷிக்கமுடியாது; மூன்று கண்களை யுடையவனும், மூன்று பட்டணங்களை நாசம் பண்ணினவனுமு மிருக்கிற ருத்திரனும் முடியாது;மஹேந்திரனென்று பெயருள் ளவனும் தேவர்களுக்கு யஜமானனுமுள்ள இந்திரனும் முடி யாது.

165. ஸக்ருதேவ (ராமாயணம்-யுத்தகாண்டம் 18-33)

ஒரே தடவை பிரபத்தி பண்ணி, நான் உனக்காக இருக் கிறேனென்று யாசிக்கிறவனுக்கு எல்லா பூதங்களிலிருந்து பய மில்லாமையைக் கொடுக்கிறேன். இது என்னுடைய விரதம்.

166. காங்க்ஷந்த: (ஸ்ரீ கீதை 4-12)

கர்மங்களின் பலன்கள் கிடைக்கவேண்டுமென்று ஆசைப் படுகிறவர்கள்இங்கே தேவதைகளாக எவர்கள்தோன்றுகிறார்களோ அவர்களையே ஆராதிக்கிறார்கள். ஏனென்றால்— கர்மத்தினுடைய பலனானது மனுஷ்யலோகத்தில் சீக்கிரம் உண்டாகிறது.

167. லபதே ச (ஸ்ரீ கீதை 7-22)

வேறு தேவதையின் ஆராதனத்தாலே பலன்களை அடைகி றான். அவைகளும் என்னாலேயே கொடுக்கப்பட்டவைகள்.

168. ஏஷலோக (பாரதம் சாந்திபர்வம் 349-76-77)

இந்த பிரம்மா உங்களுக்கு தாயாகவும், தகப்பனாகவும், பிதாமஹனாகவுமிருக்கிறான். என்னால் உத்திரவு பண்ணப்பட் டவனாய் எல்லாருக்கும் வேண்டிய வரங்களைக் கொடுக்கிறவனாக ஆவான். அவனுடைய முகத்திலிருந்து அவனுக்குப் பின்னாலே உண்டான ருத்திரன் அவனால் உத்திரவுபண்ணப்பட்டவனாய் எல் லாருக்கும் வேண்டிய வரன்களைக் கொடுக்கிறவனாக ஆவன். (இது தேவர்களைக் குறித்து எம்பெருமான் சொன்னது).

யஸ்யாஸ்ய (32-வது பக்கம் 159-வது நெ. பார்க்க.)

169 ஸாத்த்விகேஷு (மாத்ஸ்யபுராணம் 290-16)

ஸத்துவகுணம் அதிகமாயிருக்கிற கல்பங்களில் எம்பெரு மானுடைய பெருமை அதிகமென்று சொல்லப்படுகிறது. இங் கே கல்பமென்பது பிரம்மாவின் ஒரு பகல். எந்தக் கல்பத்தில் அவனுக்கு ஸத்துவகுணம் மேலிடுகிறதோ, அதில் அவன் செ ய்த புராணங்களுக்கு தோஷமில்லாமையால் அவைகளில் சொல்

லும் எம்பெருமானுடைய பெருமை உண்மையானதென்று ஏற்படுகிறது. அவைகளிலேயே யோகஞ்செய்துமுடித்தவர்கள் மிகவுமுயர்ந்த கதியை அடையப்போகிறார்கள்.

யஹ்மகோடி (28-வது பக்கம் 136-நெ. பார்க்க).

170. வஹூநாம் (கீதை-7-19.)

அனேக புண்ணிய ஜந்மங்களின் கடைசியில் ஒருவன் ஜ்ஞாநியாகி என்னைப் பஜிக்கிறான். இங்கே ஜ்ஞாநீ என்பவன் எம்பெருமானுடன் கூட எப்போதும் இருக்கவேண்டுமென்று ஆசைப்பட்டு அவனையே அடையவேண்டியதாக எண்ணி அவனிடத்திலேயே பக்தியுள்ளவன்.

171. யெ ஜந்மகோடி (பௌஷ்கர ஸம்ஹிதை)

எவர்கள் அனேக கோடி ஜந்மங்களில் எம்பெருமானிடத்தில் ஐசுவரியம்முதலானதை அடைந்தார்களோ, அவர்கள் கடைசியில் அவனை அடைவதற்கு ஸாதநமான பக்தியையோ, பிரபத்தியையோ செய்வார்கள்.

172. ஜந்மாந்தர (பாஞ்சராத்திரம்)

அனேகமாயிரம் ஜந்மங்களில் தபஸினாலும், தியானத்தாலும் ஸமாதியாலும் எவர்களுக்குப் பாபங்கள் போய்விடுகின்றனவோ, அவர்களுக்குக் கிருஷ்ணனிடத்தில் பக்தியுண்டாகிறது. இங்கே பக்தியென்பது 170-வது நம்பரில் ஜ்ஞாநிக்குச் சொன்ன பக்தி.

173. தேஷாமஹம் (கீதை 12-7)

ஓ அர்ஜுனனே! என்னிடத்திலேயே மனதை வைத்தவர்களுக்கு யமன்போலிருக்கிற ஸம்ஸாரமாகிய ஸமுத்திரத்திலிருந்து சீக்கிரம் தூக்குகிறவனாக ஆவேன்.

174. ஸ்வாதந்த்ர்யம் (வைகுண்டஸ்தவம் 55)

எம்பெருமான் ஈசுவரனாயிருப்பதாலே அவன் ஸ்வாதந்திரியமானது "ஏன் இதைச் செய்தாய், ஏன் இதைச் செய்யவில்லை" என்று ஒருவனாலும் கேட்கத் தகுந்ததன்று என்று சொல்லுகிறார்கள்.

175. வுத்திவைஷம்ய

நல்ல அறிவுள்ளவர்கள் தவிர மற்றவர்களாலே வேறு தேவதைகள் ஸேவிக்கத் தகுந்தவர்கள்.

176. येऽप्यन्यदेवता (கீதை 9-23)

ஓ குந்தியின் பிள்ளேயே! எவர்கள் வேறு தேவதைகளிடத்தில் பக்தியுள்ளவர்களாய் சிரத்தையுடன் அவர்களேயாராதிக்கிறார்களோ, அவர்களும் என்னேயே ஆராதிக்கிறார்கள். ஆனால் சாஸ்திரம் சொன்ன விதிப்படி அவர்கள் ஆராதநம் செய்யவில்லை. சாஸ்திரமானது அந்த தேவதைகள் எம்பெருமானுக்கு உடம்புகளென்றும் அவன் அவர்களுக்கு ஆத்மாவென்றும், இதையறிந்து ஆராதனம் செய்ய வேண்டுமென்றும் சொல்லுகிறது.

177. आर्तः (கீதை 7-16)

ஸுக்ருதம்பண்ணின நானுவிதமான ஜநங்கள் என்னேப் பஜிக்கிறார்கள். அவர்கள்—ஐசுவரியத்தையிழந்து அது மறுபடியும் கிடைக்க வேண்டுமென்று வருத்தப்படுகிறவன், ஆத்மஸ்வரூபத்தைப் பார்த்து அநுபவிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறவன், புதிதாய் ஐசுவரியத்தை வேண்டுகிறவன், ஜ்ஞாநீ - என்று. இங்கு ஜ்ஞாநீ என்பதற்கு 170-வதில் சொன்னது பொருள்.

178. श्रीरारोग्य (விஷ்ணுதர்மம் 74-43)

எம்பெருமான் மோக்ஷத்தைக் கொடுக்கிறவனுயிருந்தாலும், தன்னேத் தியானம் பண்ணுகிறவர்களுக்கு, உடம்பில் ரோகமில்லாமையையும், பணத்தையும், போகங்களேயும் ஆநுஷங்கிகமாக எப்போதும் கொடுக்கிறான். ஆநுஷங்கிகம் - என்பது ஒருவனல் கேட்காமலே முக்கியமான பலனுடன் சேர்த்துக்கொடுக்கப்பட்ட பலன்.

179. आविशन्ति

எந்த காமபோகங்கள் முன்னுலே ஆசைப்பட்டும் அடையமுடியாமலிருந்தனவோ, அவைகள், ஜலப்ரவாஹங்கள் ஸமுத்திரத்தில் தானுகப்போய் விழுவதுபோல தானுகவே (நம்முடைய ப்ரயத்நமில்லாமலே) இப்போது அவைகளே வேண்டாத நம்மிடம் வருகின்றன.

180. देवता (விஷ்ணுபுராணம் 1-1-26)

நீ பரதேவதையினிருப்பை உள்ளபடி அறிவாய்.

181. वक्ष्यति (விஷ்ணுபுராணம் 1-1-28)

உனக்குப் புலஸ்தியராலே எது சொல்லப்பட்டதோ, அது கட்டாயம் வரும்.

ததைவ ஶ்லோக: (௫-பக்கம் 24-வது ஶ்லோ. பார்க்க)

182. தேவதிர்யங்மநுஷ்யேஷு (விஷ்ணுபுராணம் 1-8-35)

ஓ மைத்திரேயனே! தேவர்கள் மிருகங்கள் மனிதர்கள், ஆகிய இவர்களில் ஆண்பிள்ளைகள் பகவான். பெண் பிள்ளைகள் லக்ஷ்மீ. இவ்விருவரைக் காட்டிலும் வேறான ஒன்றுமில்லை. ஆண்களை எம்பெருமானாகவும், பெண்களை லக்ஷ்மியாகவும்சொன்னதின் கருத்து—அவர்கள் எம்பெருமானுக்கும் லக்ஷ்மீக்கும் பிரகாரம்—என்று.

தமிழ் வசனங்கள்.

21. உன்னித்து (திருவாய்மொழி -- 4-6-10)

நினைத்தும் எம்பெருமானைத் தவிர வேறு ஒரு தெய்வத்தை ஸேவிக்கமாட்டாள். இதனால் எப்படி வேறு தெய்வத்தை ஸேவிக்கமாட்டாளோ, அப்படியே அவனை ஸ்வப்நத்திலும் நினைக்கவும் மாட்டாளென்று கருத்து.

22. நின்னையே (பெருமாள் திருமொழி—5-9)

தேவரீரே வேண்டுமென்று ஆசைப்பட்டு நீண்ட செல்வத்தை வேண்டாதவர்களுக்கு தானாகவே அவர்களிடம் வரவேண்டுமென்று ஆசைப்பட்டு வருகிற செல்வம்போல். இங்கே நீண்ட செல்வமாவது— பிரம்மா முதலானவர்களுடைய ஐசுவரியம். கடைசியில் "செல்வம்" என்பதற்கு இந்த உலகத்தில் ஐசுவரியமென்று பொருள்.

23. எம்பெருமானுண்டு (பெரிய திருமொழி—11-6-2)

எம்பெருமானாலே பிரளயகாலத்தில் சாப்பிடப்பட்டு, வயிற்றில் வைத்துக்கொண்டிருந்து, பிறகு ஸிருஷ்டிகாலத்தில் அவனாலுமிழப்பட்ட அதாவது வேளிப்படுத்தப்பட்ட எச்சில் தேவர்களில்லாதவர்கள் எவராவது உண்டோ? இங்கு எச்சில் என்பதாலே அந்த தேவதைகள் உபாஸிக்கத் தகுந்தவர்கள் அன்று என்றும், பிரம்மாவும் ருத்திரனும் இப்படிப்பட்டவர்களேயென்றும் வேறு அல்லவென்றும் சொல்லப்படுகிறது.

24. நான்முகனை (நான்முகன் திருவந்தாதி 1)

நாராயணன் நான்குமுகமுள்ள பிரம்மாவை உண்டு பண்ணி னார். அந்த பிரம்மாவும் ருத்திரனை எம்பெருமான் ஸிருஷ்டிப்ப தற்கு த்வாரமாய்க்கொண்டு அவனைத்தானே உண்டுபண்ணினான்.

25. மேவித்தொழும் (திருவாய்மொழி 10-10-3)

எல்லாரும் சேர்ந்து (எம்பெருமானை) ஸேவிக்கிற பிரம்மா ருத்திரன், இந்திரன் முதலானவர்கள் உண்டாவதற்குக் காரண மான நாபீகமலத்துக்கும் கிழங்குபோல் காரணமான எம்பெரு மானே!

26. திர்த்தன் (திருவாய்மொழி 2-8-6)

பரிசுத்தியைச் செய்கிற எம்பெருமானுடைய உலகத்தை மூன்றடியால்அளந்த அழகான திருவடியின் மேலே பூமாலையைச் சேர்த்து, பிறகு அதைச் சிவன் தலையின் மேலே பார்த்து அர் ஜுனன் எம்பெருமானைப் பரதேவதை என்று ஸந்தேஹமில்லா மல் நிச்சயித்தான். அந்தப் பசுமையான துளஸியையுடைய எம்பெருமானுடைய பெருமை......

27. வானவர் (திருவாய்மொழி 3-6-4)

தேவர்களை ஆளுகிற இந்திரனும், நான்குமுகமுடைய பிரம்மா வும், தலையில் ஜடையை உடையவனும்; தன்னை ஈசுவரனென் கிற அபிமானமுடையவனுமுள்ள ருத்திரனும் எம்பெருமானு டைய திருவடித்தாமரைகளை நன்றாய் நினைத்து, அவனை ஸ்தோத் திரம் பண்ணிக்கொண்டு திரிவார்கள்.

28. பேச நின்ற (திருவாய்மொழி 4-10-4)

ஸர்வேசுவரன் என்று சில ஜனங்கள் சொல்லும்படி அதிக சக்தியுள்ள சிவனுக்கும் பிரம்மாவுக்கும் மற்றவர்களுக்கும் எம் பெருமானே யஜமானன்.

29. ஒற்றைவிடை (பெரியாழ்வார் திருமொழி 4-10-4)

விலக்ஷணமான காளைமாட்டை வாஹனமாகவுடைய ருத்திர னும் பிரம்மாவும் உன்னை அறியமுடியாதபடியான பெருமையை உடையவனே! (இது எம்பெருமானைப் பற்றிச் சொன்னது)

30. எருத்துக்கொடி (பெரியாழ்வார் திருமொழி 5-3-6)

காளைமாட்டை த்வஜமாக உடைய ருத்திரன், பிரம்மா, இந்திரன், வேறு தேவதைகள் ஆகிய இவர்களில் எவரும் இந்த ஸம்ஸாரம் என்கிற வியாதியைத் தீர்க்கும் மருந்தை அறிகிறவர்களில்லை.

31.— கண்ணன் (திருவாய்மொழி—2–2–1)

கண்ணனாகிய ரக்ஷகனல்லாமல் வேறு ஒரு ரக்ஷகனில்லை.

32. களைவாய் (திருவாய்மொழி— 5-8-8)

துன்பத்தைத் தேவரீர் போக்கவேண்டும்; அப்படிச் செய்யாவிட்டால், என்னை ரக்ஷிக்கிறவர் ஒருவரு மில்லை.

33. ஆவிக்கு (திருவாய்மொழி—10-10-3)

தேவரீரைத் தவிர ஆத்மாவான எனக்கு ரக்ஷகனாக பிடித்து கொள்ளக் தகுந்தவன் ஒருவனு மிருப்பதாக அறியவில்லை.

34. தருதுயரம் (பெருமாள் திருமொழி 5-1)

தேவரீர் கருமத்துக்குப்பலனாகக் கொடுக்கும் துன்பத்தைத் தடுக்கா விட்டால்.

35. மற்றுமோர் (பெரிய திருமொழி 8-10-3)

தேவரீரைத் தவிர வேறு உபாஸிக்கத் தகுந்த தைவமிருக்கிறதென்று எண்ணுகிறவர்களுடன் நான் சேரமாட்டேன். நான் ஆசைப்பட்டு ஒப்புக்கொண்டதும் தேவரீருடைய பக்தர்களுக்கு அடிமையாயிருப்பது.

36. முகிலுருவம் (திருநெடுந்தாண்டகம் 2)

மேகத்துக்குள்ள நீலரூபமே என் ஸ்வாமியினுடைய ரூபம்.

37. மூலமாகிய (பெரியாழ்வார் திருமொழி 4-5-4)

வேதத்துக்கு மூலமான பிரணவம் என்கிற ஒரு எழுத்தை மூன்று மாத்திரையோடு தனக்குள்ளே அதாவது— வேறொருவரும் கேட்க முடியாதபடி சொல்லி, ஸமுத்திரம்போன்ற வர்ணத்தையுடைய எம்பெருமானை ஆசையுடன் தியானம் செய்தால்.

ஒண்டொடியாள் (6-வது பக்கம் 2-வது செ. பார்க்க.)

அரும்பதவுரை.

விடுதீட்டு— ஒருவன் தனக்குள்ள பாத்தியத்தை விடுகிற தஸ்தாவேஜி

ஏவல் தேவை— யஜமாநனால் ஏவப்பட்டு அவன் வேண்டு கிற வேலைக்காரனால் செய்யப்பட்ட வேலைகள்

கருவிலே — கர்ப்பமாயிருக்கும்போது.

திரு— பாக்கியம்.

கடுக — சீக்கிரம்

குறி— எல்லை

பற்றாசு — பிடிப்பு

உண்டறுக்க— சாப்பிட்டு ஜரிக்க

ஒக்கப்பரிமாறுகிற—லக்ஷ்மியோடு கூடவிருந்து ரக்ஷிக்கிற

7. முமுக்ஷுத்வாதிகாரம்.

ஸம்ஸ்கிருத வசனங்கள்.

183. தஸ்மிந் ப்ரஸந்நே (விஷ்ணுபுராணம் 1-17-91)

அந்த எம்பெருமான் பிரஸந்நன் ஆனால், இங்கு அடைய முடியாதது எது ? தர்மம், அர்த்தம், காமம் இவைகளால் ஆக வேண்டியதில்லை. அவைகள் மிகவும் அல்பங்கள்.

184. அந்தவத்து (கீதை 7-23)

சின்ன புத்தியுடைய அவர்கள் அடையும் அந்த பலன் முடிவையுடையது.

185. அநித்யம் (கீதை 9-33)

நச்வரமாயும் ஸுகமில்லாமலுமிருக்கிற இந்த உலகத்தை அடைந்திருக்கிற நீ, என்னைப் பஜி.

186. மஹாபலாந் (விஷ்ணுபுராணம் 4-24-142,143)

மிகுந்த பலத்தையும் மிகுந்த வீர்யத்தையும், அளவில்லாத தனக் குவியலையும் உடையவர்களாயிருந்து நீண்ட காலத்தில் தங்களுடைய கதைகளை மாத்திரம் மீத்தி வைத்துப்போன ராஜாக்களைக் கேட்டு, நல்ல அறிவை ஸம்பாதித்தவன் பிள்ளை பெண்டாட்டி முதலானவைகளிலும் வீடு நிலம் முதலானவைகளிலும், பணம் முதலானவைகளிலும் என்னது என்கிற எண்ணத்தை வைத்துக் கொள்ளமாட்டான்.

187. ஸகலம் து:கமயம் (விஷ்ணுபுராணம் 1-17-69)

உலகம் முழுவதும் துக்கம் நிறைந்தது.

188. [illegible] (விஷ்ணுபுராணம் 6-5-50)

ஸ்வர்க்கத்திலிருக்கிறவனுக்கும் புண்ணியம் குறைந்து அதிலிருந்து கீழே விழுவோமென்கிற பயத்தாலே ஸுகம் கிடையாது.

189. ராஜ்ய (விஷ்ணுபுராணம் 6-7-7)

அறிவில்லாமல் என்னதென்கிற எண்ணத்தாலே பிடிக்கப் பட்ட மனதையுடையவர்களாய், உடம்பே ஆத்மா என்கிற எண்ணமாகிய மிருந்த குடிபிறைலே மயங்கினவர்கள் ராஜ்ய விஷயத்தில் ஆசைப்படுகிறார்கள். என்னைப் போன்றவர்கள் அப்படி ஆசைப்படுகிறதில்லை. (காண்டிக்யர் சொல்லியது)

190. [illegible] (இதிஹாஸ ஸமுச்சயம் 4-49)

ஓ ருஷியே! பிரம்மாவின் உலகங்கள் உள்பட எல்லாவற்றி லும் இந்த அல்பமாயிருப்பது முதலான தோஷங்கள் இருக்கின் றன. ஆகையாலேயே புத்திமான்கள் ஸ்வர்க்கத்தையடைவதை ஆசைப்படுகிறதில்லை.

191. ப்ரஹ்மண: (பாரதம் ஆரண்யபர்வம் 262-37,38,39)

பிரம்மாவினுடைய இருப்பிடத்துக்கு மேலே விஷ்ணுவி னுடைய அந்தப் பரமபதமிருக்கிறது. அது சுத்தமாயும், எப் போதுமிருப்பதாயும் ஸ்வயம்பிரகாசமாயும் இருக்கிறது. பரப் பிரம்மத்தை அடைவதற்கு இடமாயிருப்பதாலே அதுவும் பரப் பிரம்மம் என்று சொல்லப்படுகிறது. அறிவில்லாதவர்களாயும் விஷயங்களில் மனதைச் செலுத்துகிறவர்களாயும், டம்பம், லோ பம், கொழுப்பு, கோபம் த்ரோஹம் மோஹம் இவைகளால் பிடிக்கப்பட்டவர்களாயுமிருக்கிற மனிதர்கள் அந்த இடத்திற்கு போவதில்லை. அஹங்காரமும், மமகாரமும் இல்லாமல் ஸுக துக்கங்களைப் பொறுத்துக்கொண்டு இந்திரியங்களை அடக்கிக் கொண்டு எம்பெருமானுடைய தியானத்தைப் பிரீதியுடன் செய்து கொண்டிருக்கிற ஸாதுக்களே அவ்விடத்திற்குப் போகி றார்கள்.

192. [illegible] (பாரதம் சாந்திபர்வம் 196-4)

ஓ ராஜாவே! அழகாயும் இஷ்டப்படி போகக்கூடியதாயும் இருக்கிற விமானங்களும், அப்படியே ஸபைகளும் பலவிதமான உத்யானங்களும் தெளிந்த ஜலத்தையுடைய தாமரையோடைகளும் (பரமபதத்தில் இருக்கின்றன.)

193. [illegible] (பாரதம் சாந்திபர்வம் 196-6)

ஓ குழந்தாய்! பரமாத்மாவான எம்பெருமானுடைய இடத்தைப் பார்க்கும்போது இந்த ஸ்வர்க்கம் முதலான ஸ்தானங்கள் நரகங்கள்.

194. [illegible] (பார்ஹஸ்பத்யஸ்மிருதி)

எவன் பரமாத்மாவாகிய எம்பெருமானிடத்தில் ஆசையுள்ளவனும், அவனைத் தவிர வேறு விஷயங்களில் ஆசையில்லாதவனுமிருக்கிறானோ, அவன் எல்லா ஆசைகளால் விடப்பட்டவனும், பிக்ஷையைச் சாப்பிட்டுக்கொண்டு இருக்கத் தகுந்தவன்.

195. [illegible] (பாரதம் சாந்திபர்வம் 219-4-2)

பிரவிருத்தி தர்மங்களைப் பிரம்மா சொன்னான். நிவிருத்தி தர்மங்களை நாராயணன் என்கிற ருஷி சொன்னார். ஒரு பலனை வேண்டிச் செய்யும் கர்மங்களுக்குப் பிரவிருத்தி தர்மங்களென்றும், மோக்ஷத்தை ஆசைப்பட்டுச் செய்யும் கர்மங்களுக்கு நிவிருத்தி தர்மங்களென்றும் பெயர்.

196. [illegible] (பாரதம் ஸபாபர்வம் 5-116)

சாஸ்திரத்தைக் கேட்பதினாலே உண்டான ஜ்ஞானத்துக்கு பலன் ஆத்ம குணங்களும் நல்லொழுக்கமும்.

197. [illegible] (இதிஹாஸ ஸமுச்சயம் 12-37)

புத்திமான்களால் மனதை அடக்குவதற்காக எல்லா சாஸ்திரங்களும் சொல்லப்பட்டன. ஆகையால் எவன் மனது அடங்கியிருக்கிறதோ அவன் எல்லா சாஸ்திரங்களையும் அறிந்தவன்.

198. [illegible]

நாயின் வாலானது மறைக்க வேண்டிய இடத்தை மறைக்கிறதில்லை, ஈயையும் கொசுக்களையும் ஓட்டுகிறதில்லை, அது

போல தர்மம் செய்வதையுண்டு பண்ணாத நல்ல அறிவு பிரயோஜனம் இல்லாதது. இந்த சுலோகத்தில் ‘ தத் ’ என்கிற சொல்லை வருவித்துக் கொள்ள வேண்டியது.

199. வயஸ: (மனுஸ்மிருதி 4-I. 8)

வயது, செய்யும் வேலை, அதின் பிரயோஜனம், சாஸ்திர ஜ்ஞானம், நல்ல பிறப்பு, இவைகளுக்கு ஒத்திருக்கிற வேஷம், பேச்சு, செயல் இவைகளையுடையவனாக ஒருவன் இங்கேயிருக்க வேண்டியது. வேஷம் முதலான மூன்றையும் வயது முதலான ஒவ்வொன்றிலும் சேர்க்கவேண்டியது.

200. த்வ ஸஹ: (ஸாரதீபிகையில் உதாஹரிக்கப்பட்டது)

எவன் ஸுகம் துக்கம் முதலான எல்லா இரட்டைகளையும் பொறுத்துக்கொண்டு, ஒன்றிலும் பற்றில்லாதவனாய், எல்லா பிராணிகளுக்கும் ஹிதத்தையே செய்துகொண்டிருக்கிறானோ, அவனைப் பிராம்மணனென்று தேவர்கள் அறிகிறார்கள்.

201. யந்நாம (விஷ்ணுதர்மம் 43-28)

எந்த எம்பெருமானுடைய திருநாமத்தைச்சொன்னபோது அஸுரர்கள்ஓடிப்போகிறார்களோ,தேவர்கள் வணங்குகிறார்களோ, ராக்ஷஸர்கள் நாசத்தையடைகிறார்களோ, விரோதிகள் ஓடிப்போகிறார்களோ, அந்த எம்பெருமான் மங்களத்தைக் கொடுக்கட்டும்.

தமிழ் வசனங்கள்.

38. அற்பசாரங்கள் (திருவாய்மொழி—3-2-6)

கொஞ்சமான ஸாரத்தையுடைய விஷயங்களையநுபவித்து அவைகளின் தோஷங்களைக் கண்டு அவைகளில் வெறுப்புண்டாகி அவைகளை விட்டுவிட்டேன்

39. கண்டுகேட்டு (திருவாய்மொழி—4-9-10)

கண்ணாலே பார்த்து, காதாலே கேட்டு, த்வக்காலே தொட்டு, மூக்காலே மோந்து, நாக்காலே சாப்பிட்டு இப்படி உழலுகிற ஐந்து இந்திரியங்களால் வரும் ஸுகமும், இந்திரியங்களாலறிய முடியாததும், அவைகளாலுண்டாகும் ஸுகம்போல் அளவுள்ளதாய் இல்லாமலிருக்கிற ஆத்மாவின் அநுபவத்தினாலுண்டாகும்

சின்ன ஸூகமும். உழலுகிற என்பதற்கு மிகுந்த துன்பத்தை அநுபவிக்கும்போதும் விஷயங்களை விடாமல் அவைகளிலேயே சுற்றிக்கொண்டிருக்கிற என்பது பொருள். சின்ன ஸூகம் என்பதற்கு எம்பெருமானுடைய ஸூகத்தைக் காட்டிலும் சின்னது என்று பொருள்.

8. அதிகாரிவிபாகாதிகாரம்.

ஸம்ஸ்கிருத வசனங்கள்.

202. யேந கேநாபி (சரணாகதி கத்யம்)

எப்படியாவது த்வயமந்திரத்தைச்சொல்லுகிறவனை நீ. இங்கு "எப்படி" என்பதற்கு உடனே மோக்ஷம் வேண்டுமென்றாவது. அல்லது இந்த தேஹம் முடிந்தவுடனாவது என்றும், வேண்டியவனாயிருந்தாவது, சக்துநவாயிருந்தாவதென்றும், மந்திரத்தின் அர்த்தத்தை நன்றாய்த் தெரிந்தாவது, பொதுவாய் அதின் அர்த்தத்தை அறிந்தாவதென்றும் பொருள்.

203. பாபீயஸோऽபி (அதிமாநுஷஸ்தவம் 61)

மிகுந்த பாபியாயிருந்தாலும் சரணாகதியைச் சொல்லுகிற சொல்லைச்சொல்லுகிற என்னை உபேக்ஷிப்பது ஈசுவரனாயிருக்கும் தேவரீருக்குத்தகுந்ததன்று. தேவரீருடைய ஜ்ஞானம் சக்தி கருணை இவைகளிருக்கும்போது என்னுடைய பாபமானது பலனைக் கொடுக்கத் தகுந்ததன்று.

204. ஶரணவரண (வரதராஜஸ்தவம்-84)

சரணாகதியைச் சொல்லுகிற எந்தச்சொல் என்னால் சொல்லப்பட்டதோ, அது புத்தி பூர்வகமாகச் சொல்லப்படவில்லை. இதைக்கொண்டே தயை செய்வதற்கு நான் விஷயமாவேனானால், அப்போது நான் பிழைத்திருப்பேன்.

205. ப்ருவத் (வரதராஜஸ்தவம் 92)

பக்தியினால் அடையமுடியாத அப்படிப்பட்ட உன்னைப் பிரபத்தியைச்சொல்லுகிற சொல்லாலேயே பார்ப்பதற்கு ஆசைப்படுகிறேன்.

206. கவஸாஃ (ஸ்ரீரங்கராஜஸ்தவம் 2-102)

தார்மிகர்களான ஆசாரியர்களாலே நான் தேவரீருடைய பரமாகச்செய்யப்பட்டேன். சரணம் என்கிற சொல்லையும் சொன்னேன். இந்த இரண்டையும் தேவரீர் ஸாக்ஷியாகவைத்துக் கொண்டு ஓ ரங்கநாதனே! என்னைத் தேவரீருடைய பரமாக செய்துகொள்ள வேண்டும்.

207. வாதூஃ (சாண்டில்ய ஸ்மிருதி 3-75)

பிள்ளையென்றாவது, வேலைக்காரனென்றாவது, ஒருவனுடைய பரத்தை எம்பெருமானிடம் கொடுக்க வேண்டியது.

208. வஸிஷ்ஸ்வதி (சாண்டில்ய ஸ்மிருதி 1-95)

எம்பெருமானை ஸேவிக்கிறவனிடத்தில் உண்டாகும் அவன் பிரஸாதமானது இவ்வளவென்று ஸம்சயமுண்டாகலாம். அவன் பக்தனுடைய வேலையில் ஆசையையுடையவர்கள் விஷயத்தில் அவனுடைய பிரஸாதத்திற்கு அளவுண்டோ இல்லையோவென்று ஸந்தேஹப்படவேண்டாம். அதாவது— அளவில்லையென்றும் பிரஸாதம் அதிகமாயிருக்குமென்றும் கருத்து.

209. கூரெஸாரடீநஸ (நியாஸதிலகம் 21)

ஓ ரங்கநாதனே! எப்படி பொட்டையன் கண்ணுள்ளவனைப் பிடித்துக்கொண்டு போகிறானோ, எப்படி நொண்டி ஓடத்திற்குள் வைக்கப்பட்டு ஓடக்காரனால் கொண்டுபோகப்படுகிறானோ, எப்படி ராஜாவின் வேலைக்காரனின் பிள்ளை முதலானவர்கள் ராஜாவை அறியாதபோதிலும் எல்லா போகங்களையும் அநுபவிக்கிறார்களோ, அப்படியே இரக்கமுள்ள என் ஆசாரியன் உன்னை அடைவதற்காக தகுந்த வேலையைச் செய்கிறான்.

210. வஹாசீஜநாஷ்யூஃ (பாரத்வாஜ ஸ்மிருதியென்று முன்னோர்கள்)

மிருகமோ, மனிதனோ, பக்ஷியோ எவர்கள் ஒரு விஷ்ணு பக்தனை இவன் நம்முடையவன் என்று அவன் எண்ணும்படியடைகிறார்களோ, அப்படிஅடைவதினாலேயே அவர்கள்அந்த விஷ்ணுவினுடைய மிகவுமுயர்ந்த ஸ்தானத்தை அடைவார்கள்.

211. தெவயம் (ராமாயணம் ஆரண்யகாண்டம் 1-20)

ராஜாவே! உம்முடைய தேசத்திலிருக்கிற நாங்கள் உம்மாலே ரக்ஷிக்கத் தகுந்தவர்கள், பட்டிணத்திலோ, காட்டிலோ எங்கேயிருந்தாலும் நீர்தான் ராஜா.

212. ஸ்நேஹோமே (ராமாயணம் உத்தரகாண்டம் 40-15)

ஓ ராஜனே! மிகவும் அதிகமான என்னுடைய ஸ்நேஹமானது உம்மிடத்தில் எப்போதும் ஸ்திரமாயிருக்கிறது. ஏ வீரனே! அப்படியே என்னுடைய பக்தியும் உம்மிடத்தில் எப்போதுமிருக்கிறது. மனது வேறு ஓரிடத்தில் போகிறதில்லை. ஸ்நேஹமென்பது ஸமானமானவர்களிடத்தில் பிரீதி; பக்தி என்பது மேல்பட்டவர்களிடம் பிரீதி. "ராஜன்" என்ற சொல்லாலே மனதை இழுக்கும்படியான வாத்ஸல்லியம் முதலான குணங்களும், 'வீர' என்கிற சொல்லாலே அவன் பெருமையைக் காட்டுகிற குணங்களும் சொல்லப்பட்டன. 'த்வயி' என்பதாலே எம்பெருமானுடைய ராமனாய் அவதரித்த ரூபமும், "[illegible]" என்பதாலே வைகுந்தத்திலிருக்கும் பரரூபமும் சொல்லப்பட்டன. ராமனுடைய அழகாலும் குணங்களாலும் ஹனுமாருடைய மனதானது அவனை விட்டுப் பரரூபத்தையும் நினைக்கிறதில்லை என்று கருத்து.

213. வரம் வரய (விஷ்ணுபுராணம் 1-12-76)

ஆகையினால் உனக்குப் பிடித்த வரனை நீ கேள். நான் கண்ணில் பட்டபோது மனிதர்களுக்கு எல்லாம் உண்டாகும். (இது துருவனைப்பார்த்து எம்பெருமான் சொன்னது.)

214. கிம்வா ஸவ (விஷ்ணுபுராணம் 1-12-79)

எல்லாவுலகங்களையும் படைத்தவனே! தேவரீர் பிரஸந்நமானபோது கிடைக்க முடியாது எது? (இது துருவன் சொன்ன வார்த்தை)

தஸ்மிந் ப்ரஸந்நே (39-வது பக்கம் 183-நெ. பார்க்க.)

215. கிம்தொகை (விஷ்ணுதர்மம் 43-46)

ஓ தால்பியனே! எம்பெருமானிடத்திலேயே படிந்திருக்கிற மனதையுடையவருக்கு இந்த லோகத்திலோ, மேல் லோகத்திலோ, அடையக் கூடாதது எது?

216. உபபத்தே: (ப்ரம்மஸூத்திரம் 3-2-37)

பலனானது அவனிடத்திலிருந்தே (எம்பெருமானிடமிருந்தே) வருகிறது, அது யுக்திக்குப் பொருந்தியிருக்கிறது.

[illegible] (35-வது பக்கம் 177-ரெ. பார்க்க)

217. தாவதார்த்தி: (விஷ்ணுபுராணம் 1-9-73)

எதுவரையில் எல்லாப் பாபங்களையும் போக்குகிற உம்மிடத்தில் பிரபத்தி பண்ணுகிறதில்லையோ, அது வரையில்தான் ஐசுவரியத்தை இழந்து மறுபடியும் அது கிடைக்க வேணுமென்கிற வருத்தம்; அது வரையில் தான் ஐசுவரியம் கிடைக்கவேணுமென்கிற ஆசை; அது வரையில்தான் உடம்பைக் காட்டிலும் வேறான ஆத்மாவைப் பார்த்து அனுபவிக்காமலிருப்பது; அது வரையில் தான் ஸம்ஸாரத்தினுடைய துக்கம்.

218. [illegible] (லக்ஷ்மீதந்திரம் 17-62)

நிவிருத்தி தர்மங்களான கர்மயோகத்தையே செய்துகொண்டு ஜ்ஞானயோகத்தையும் பக்தியோகத்தையும்செய்கிறவர்கள் பிரபந்நனுடைய கோடியில் ஒரு பாகத்துக்குக்கூடத் தகுந்தவர்களன்று. “[illegible]”என்கிறசொல் மற்ற இரண்டு சொற்களோடும் சேர்க்க வேண்டியது. இங்கே சுத்தியாவது மோக்ஷம் தவிர வேறு பலனில் ஆசையில்லாமை.

219. ஸ்வாதந்த்ர்யம் (விஷ்ணுதத்துவம்)

பரமபுருஷனை எம்பெருமானுக்கு உட்பட்டிருப்பதை அறிந்து நினைத்துக்கொண்டு, கர்மபந்தத்தைப் போக்கி, ஒப்பில்லாத ஸ்வாதந்திரியத்தை அடைந்து அந்த எம்பெருமானுடன் கூடவே ஆனந்தத்தை அநுபவிக்கிறான். இங்கே ஸ்வாதந்திரியம் என்பது கர்மத்துக்கு உட்படாதிருப்பது.

தமிழ் வசனங்கள்.

40. கொள்ளக்குறைவிலன் (திருவாய்மொழி—3-9-5)

எம்பெருமானிடத்தில் நாம் ஒன்றைப்பெற்றுக்கொண்டால் அதனால் அவன் பரிபூர்ணனாயிருப்பதற்குக் குறையில்லை. நாம் கேட்டதையெல்லாம் கொடுப்பன்.

41. நற்பால் (திருவாய்மொழி—7-5-1)

நல்ல இடத்தையுடைய அயோத்தியில் வாழும் ஸ்தாவரத்தையும் ஜங்கமத்தையும் நல்ல ஸ்வபாவத்தையுடையனவாகச் செய்தான். நல்ல ஸ்வபாவமாவது— ராமனுடன் சேர்ந்திருந்தால் ஸந்தோஷமும், அவனை விட்டுப் பிரிந்தால் துக்கமும் உண்டாகும்படியான ஸ்வபாவம்.

42. வன்மை (பெரியாழ்வார் திருமொழி—5-1-3)

தேவரீருடைய கோயில் இருக்குமிடத்தில் வஸிக்கும் வைஷ்ணவனாயிருக்கும் பலமே அவன் மோக்ஷமடைவதற்கு வேண்டிய பலம்.

43. இங்கே திரிந்தேற்கு (திருவாய்மொழி—8-10-4)

தேவரீருக்கு கைங்கரியம் பண்ணும்படி அநுக்கிரஹிக்கப்பட்டு இங்கே திரிகிற நமக்கு உண்டாகும் குற்றமென்ன?

44. இச்சுவை (திருமாலை—2)

தேவரீரது திருநாமங்களைச் சொல்லுகிற ரஸத்தைத் தவிர பரமபதத்திற்குப் போய் அதையாளும்படியான ரஸம் கிடைத்தாலும் அதை வேண்டேன். இங்கே 'இந்திர'னென்கிற சொல்லுக்கு மிகுந்த ஐசுவரியமுடையவனென்று பொருளாய் அந்த ஐசுவரியம் எம்பெருமானிடத்திலேயே பூர்ணமாயிருப்பதாலே இந்திரலோகமென்பதற்குப் பரமபதமென்று பொருள்.

45. ஏரார் முயல் (சிறிய திருமடல்)

போக்கியதை நிறைந்த முயல் மாம்ஸத்தை விட்டு குணம் இல்லாத காக்கையின் மாம்ஸத்தைத் தேடுவேனோ? இங்கே முயல் என்பது அர்ச்சாவதாரத்தையும், காக்கையென்பது எம்பெருமானுடைய பரரூபத்தையும் சொல்லுகின்றன. இதினாலே பரரூபத்தைக் காட்டிலும் அர்ச்சாவதாரமானது திருமங்கையாழ்வாருக்கு மிகவும் போக்கியமாயிருந்தது என்று காட்டப்படுகிறது.

அரும்பதவுரை.

பற்றுச் — பிடிப்பு. உண்டறுக்க — சாப்பிட்டு ஜரிக்க.

9- உபாயவிபாகாதிகாரம்.

ஸம்ஸ்கிருத வசனங்கள்.

220. ஆநுகூல்யஸ்ய ஸங்கல்பம் (ஸாத்வத ஸம்ஹிதை)

மோக்ஷத்திற்காக சாஸ்திரம் சொன்ன உபாயங்களைச் செய்தால் கட்டாயம் மோக்ஷம் கிடைக்கும் என்கிற நம்பிக்கை உண்டாவதற்காக சாஸ்திரம் எட்டு ஐசுவரியங்களுக்கு 'உபாயங்களைச் சொல்லுகின்றன.

சதுர்விதாஹ (35-வது பக்கம் 177-வதைப் பார்க்க)

221. தேஷாம் ஜ்ஞாநீ (கீதை 7-17)

அவர்களுக்குள் ஜ்ஞாநீ என்பவன் சிறந்தவன். ஏனென்றால் எப்போதும் எம்பெருமானுடன் கூடவிருக்கவேணுமென்று ஆசைப்பட்டு அவனொருவனிடத்திலேயே பக்தியுள்ளவனாயிருக்கிறான். மற்றவர்களுக்குத் தங்களுக்கு வேண்டிய பலன்களிலும் அதைக் கொடுக்கும் எம்பெருமானிடத்திலும் பக்தியிருப்பதால் அவர்கள் ஏகாந்திகள் அன்று.

222. சதுர்விதா மம (பாரதம் சாந்திபர்வம் 350-33-35)

நாலுவகைப்பட்டவர்கள் என்னுடைய ஜனங்கள். அவர்கள் பக்தர்களென்றே சொல்லப்படுகிறார்கள். அவர்களுக்குள் ஏகாந்திகள் சிறந்தவர்கள். ஏனென்றால்— அவர்கள் வேறு தேவதைகளிடம் போகிறவர்களன்று. பலன்களில் ஆசையில்லாமல் கர்மங்களைச் செய்கிற அவர்களுக்கு நானே அடைய வேண்டியவன். பாக்கியிருக்கிற மூன்றுவிதமான பக்தர்கள் பலன்களில் ஆசையுள்ளவர்கள். அவர்களெல்லாருக்கும் கிடைக்கும் பலன் முடிவுள்ளது. நல்ல அறிவுள்ள ஏகாந்தியானவன் மோக்ஷத்தை அடைகிறான்.

பூர்ணஜ்ஞாநைக (8-வது பக்கம் 26-நெ. பார்க்க)

223. யோகேஸ்வர (கீதை 11-4)

ஆகையாலே ஜ்ஞானம் முதலான குணங்களுக்கு இருப்பிடமான எம்பெருமானே! ஒன்றும் விட்டுப்போகாமல் தேவரீரை எனக்குக் காட்டவேண்டும்.

224. நாநா (பிரம்மஸூத்திரம் 3-3-56)

பிருமவித்யைகள் வெவ்வேறு. அவைகளின் பெயர் முதலானவைகள் வெவ்வேறாயிருப்பதால்.

225. விகல்ப: (பிரம்மஸூத்திரம் 3-3-57)

பலனில் பேதமில்லாமையால் அவைகளில் வேண்டியதைச் செய்யலாம்.

தமிழ் வசனங்கள்.

46. காணுமாறு (திருவாய்மொழி—8-1-1)
நான் தேவரீரைக் காணும்படி கிருபை செய்யவேணும்.
47. ஒருநாள் காணவாராய் (திருவாய்மொழி—6-9-4)
ஒருநாள் நான் பார்க்கும்படி வரவேணும்.

அரும்பதவுரை.

நேரில் — செய்யவேண்டியதாக சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட ஒரு வேலையின் ஸ்தானத்தில்
கிழிச்சிரை — ஒரு விலையுள்ள வஸ்துவை முடிந்துவைத்திருக்கிற துணி.
அறுதி— எல்லை
அவா—கடுமையான ஆசை.
அளவு— ஸாமர்த்தியத்தின் அளவு.

10. பிரபத்தியோக்கியாதிகாரம்.

ஸம்ஸ்கிருத வசனங்கள்.

வைஷ்ணவ (32-வது பக்கம் 159-ந. பார்க்க)

226. யதாவாயோ: (பாரதம் ஆரண்ணியபர்வம் 30-29)

ஓ பாரதனே! எப்படி பலமான காற்றின் வசத்தில் புல்லின் நுனிகள் இருக்கின்றனவோ, அப்படியே எல்லாப் பிராணிகளும் உலகத்தை உண்டுபண்ணுகிற எம்பெருமானுடைய வசத்தில் இருக்கின்றன.

227. ஸவிக்ராவ (ராமாயணம் ஸுந்தரகாண்டம் 38-33)

அந்த காகாஸுரன் தகப்பனாலும், தேவர்களாலும், மஹ ருஷிகளாலும் விடப்பட்டு மூன்று உலகங்களிலும் ஓடித் திரிந்து அந்த ராமனையே சரணமடைந்தான்.

228. அஹமஸ்மி (அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை 37-30)

நான் அபராதங்களுக்கு இருப்பிடமாகவும், என்னை ரக்ஷித்துக்கொள்ள உபாயமில்லாதவனாகவும், உன்னைத் தவிர வேறு அடையவேண்டிய வஸ்து இல்லாதவனாகவும் இருக்கிறேன்.

229. அகிஞ்சந: (ஆளவந்தார் ஸ்தோத்திரம் 22)

சரண்யனே! உன்னைத் தவிர வேறு உபாயமும் வேறு அடைய வேண்டிய வஸ்துவுமில்லாத நான் தேவரீருடைய திருவடிகளை உபாயமாக அடைகிறேன்.

230. அநாமத (ஸ்ரீ ரங்க கத்யம்)

வரப்போகிற முடிவில்லாத காலத்தைப் பார்த்தும் ஸம்ஸாரத்தைத் தாண்டுவதற்கு உபாயத்தைப் பார்க்காதவனாய்.

231. தத்ராவெய (வைகுண்டகத்யம்)

அவனை அடைவதற்கு அவனுடைய இரண்டு திருவடித் தாமரைகளில் பிரபத்தி செய்வதைத் தவிர வேறு உபாயம் எனக்குக் கல்பங்களின் ஆயிரம் கோடி சென்றாலும் இல்லையென்று எண்ணிக்கொண்டிருக்கிற நான்.

தமிழ் வசனங்கள்.

48. புகலொன்று (திருவாய்மொழி—6-10-10)

வேறு உபாயமும் வேறு ரக்ஷகனுமில்லாத நான்.

---

11. பரிகரவிபாகாதிகாரம்.

ஸம்ஸ்கிருத வசநங்கள்.

232. ஆநுகூல்யஸ்ய (அஹிர்புத்ந்யஸம்ஹிதை 37_18)

அநுகூலனாயிருக்கிறேனென்கிற எண்ணமும், பிரதிகூலமாயிருப்பதை விடுவதும், ரக்ஷிப்பனென்கிற நம்பிக்கையும், ரக்ஷிக்க

வேண்டுமென்று கேட்பதும், தன் ஸ்வரூபத்தைக் கொடுப்பதும், கார்பண்யமும் என்று சரணாகதி ஆறுவிதம்.

233. [illegible] (லக்ஷ்மீதந்திரம் 17.74)

ஐந்து அங்கங்களோடு கூடிய ஸமர்ப்பணம் என்று வேறு பெயரையுடைய நியாஸமே ஸந்நியாஸமென்றும், தியாகமென்றும், சரணாகதியென்றும் சொல்லப்படுகிறது.

234. [illegible] (அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை—52-14)

பரமபுருஷனை எம்பெருமானை உத்தேசித்து நான் பண்ணுகிற பிரபத்தியானது எனக்கு ஸ்திரமான பலன்; இதைக் காட்டிலும் வேறான பலன் எனக்கு வேண்டியதில்லையென்பது சிறந்த அங்கமாகச் சொல்லப்பட்டது. பலத்திலாசையானது அந்த அங்கத்திற்கு விரோதி.

235. [illegible] (லக்ஷ்மீதந்திரம்—17-76)

அநுகூலனாயிருப்பேன் என்கிற எண்ணத்தாலும் பிரதிகூலனாயிருப்பதை விடுவதாலும் எம்பெருமானுடைய ஆஜ்ஞையை மீறாமலிருப்பது கிடைக்கும்.

236. [illegible] [லக்ஷ்மீதந்திரம்17-77]

கார்ப்பண்யத்தால் வேறு உபாயங்களைத் தேடாமை சொல்லப்பட்டது. ரக்ஷிப்பன் என்கிற நம்பிக்கையினால் தனக்கு வேண்டிய பலனுக்கு எம்பெருமானை உபாயமாக வரிப்பது பலிக்கும்.

237. [illegible] (லக்ஷ்மீதந்திரம்—17-72)

ரக்ஷிக்கவேண்டுமென்று கேட்காவிட்டால் ரக்ஷிக்கக்கூடாது.

238. [illegible] (லக்ஷ்மீதந்திரம்—17-78)

தன் அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதுதான் கோப்த்ருத்வ வரணம்.

239. [illegible] (ராமாயணம் ஸுந்தர காண்டம்—27-41)

உங்களுடைய பிரதிகூலவாக்கியங்களை நிறுத்திவிடுங்கள். ஸமாதானவார்த்தைகளையே சொல்லுங்கள்.

240. ராகவாத் (ராமாயணம் ஸுந்தரகாண்டம்—27-43)

ராமனிடத்திலிருந்து ராக்ஷஸர்களுக்குக் கடுமையான பயம் கிட்ட வந்திருக்கிறது.

241. அலமேஷா (ராமாயணம் ஸுந்தரகாண்டம்—27-44)

ஓ ராக்ஷஸிகளே! பெரிய பயத்திலிருந்து (ராகவனிடமிருந்து) நம்மைக் காப்பாற்ற இவள் ஸமர்த்தையானவள்.

242. அலமேஷாபரி (ராமாயணம் ஸுந்தரகாண்டம்—58-91)

ராகவனிடமிருந்து ராக்ஷஸிகளின் கூட்டத்தை ரக்ஷிப்பதற்கு இவள் ஸமர்த்தையானவள்.

243. அபியாசாமி [ராமாயணம் ஸுந்தரகாண்டம்—27-41,43]

ஸீதையை நாம் பிரார்த்திப்போம்; இதுதான் எனக்குப் பிடித்திருக்கிறது; உங்களால் பயப்படுத்தப்பட்டவளாயிருந்த போதிலும் அவளைப் பிரார்த்தியுங்கள். ஓ ராக்ஷஸிகளே! அவள் ரக்ஷிப்பளோ என்று நீங்கள் கேட்கவேண்டாம். அந்தப் பேச்சு வீண்பேச்சு.

244. ப்ரணிபாத (ராமாயணம் ஸுந்தரகாண்டம்—27-43)

ஜநகராஜன் திருமகளான ஸீதை நீங்கள் செய்த பிரபத்தியினாலே உங்களிடத்தில் பிரஸாதத்தைச் செய்கிறவளாயிருக்கிறாளன்றோ?

245. பவேயம் (ராமாயணம் ஸுந்தரகாண்டம்—58.89)

உங்களுக்கு நான் உபாயமாயிருப்பேன்.

246. மாதர்மைதிலி (ஸ்ரீ குணரத்னகோசம்—50)

அம்மா ஸீதையே! குற்றம் செய்துகொண்டேயிருக்கிற ராக்ஷஸிகளை ஹநுமானிடத்திலிருந்து ரக்ஷித்த உன்னால், ராமனுடைய கோஷ்டியானது மிகவும் சின்னதாகப் பண்ணப்பட்டது. ராமன் காகத்தையும் விபீஷணனையும் ரக்ஷியென்று கேட்டபிறகு ரக்ஷித்தான். நீயோ அவர்கள் கேட்காதபோதிலும் அபராதம் செய்துகொண்டிருக்கையிலே ரக்ஷித்தாய்.

247. ப்ரதீயதாம் (ராமாயணம் யுத்தகாண்டம்—9.22)

ஸீதை ராகவனிடத்தில் கொடுக்கப்படட்டும்.

248. ஸீதாம்வ (ராமாயணம் யுத்தகாண்டம்—15-14)

ஓ ராஜாவே! ஸீதாதேவியை ராமனிடத்தில் கொடுத்து விட்டு சோகமில்லாமல் இங்கே இருப்போம்.

249. குலாந்த (ராமாயணம் யுத்தகாண்டம்—16-15)

குலத்தைக் கெடுக்கிறவனே! உன்னைச் சுடவேண்டும்.

250. த்யக்த்வா (ராமாயணம் யுத்தகாண்டம்—17-14)

பிள்ளைகளையும் பெண்டாட்டிகளையும் விட்டு ராகவனைச் சரணமடைந்தேன்.

251. பரித்யக்தா (ராமாயணம் யுத்தகாண்டம்—19-5)

லங்கையும் ஸ்நேஹிதர்களும் தனங்களும் என்னாலே விடப் பட்டன.

252. அநுஜ: (ராமாயணம் யுத்தகாண்டம்—19-4)

நான் ராவணன் தம்பி; அவனால் அவமானப்படுத்தப்பட் டேன்; எல்லாப் பிராணிகளுக்கும் சரண்ணியனான தேவரீரை உபாயமாக அடைந்தேன்.

253. ஸர்வலோக (ராமாயணம் யுத்தகாண்டம்—17-15)

எல்லா உலகங்களுக்கும் சரண்ணியனும், மஹாத்மாவாயு மிருக்கிற ராகவனிடத்தில் கிட்டே வந்திருக்கிற விபீஷணனாகிய என்னைச் சீக்கிரம் ஸமர்ப்பியுங்கள். இப்படி அர்த்தம் பண்ணு வதற்கு காரணம் மூலத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

254. விபீஷண: (ராமாயணம் யுத்தகாண்டம்—19-1)

விபீஷணன் பெரிய அறிவையுடையவன்.

ராவணம் ஶரணம் (53-வது பக்கம் 250-ந. பார்க்க)

நிவேதயத (53-வது பக்கம் 253-ந. பார்க்க)

255. யமஸ்ஸர்வி (ஆளவந்தார் ஸ்தோத்திரம்—47)

சுத்தியும், விநயமும், தயையும் லஜ்ஜையுமில்லாத என்னைச் சுடவேணும். ஏனென்றால் பரமபுருஷனே! மனது போகிறபடி நடக்கிற நான் யோகிச்ரேஷ்டர்களான பிரம்மா ருத்திரன் ஸநகர் முதலானவர்களாலே தியானம் பண்ணுவதற்கு மிகவும் தூரத்தி லிருக்கிற உன்னுடைய வேலைக்காரனாயிருப்பதையாசைப்படு கிறேன்.

256. ஶ்வநாஶீவ (பாத்மஸம்ஹிதை சர்யாபாதம்—12-83)

எம்பெருமானுக்கு நிவேதனம் பண்ணினதைச் சாப்பிடுவது சுத்தி செய்வதாயும் விரதத்திற்கும் உபவாஸத்திற்கும் ஸமமாயுமிருக்கிறது. புரோடாசம் நாய்க்குத் தகாததாயிருப்பது போல் நிவேதநம் பண்ணப்பட்டது நீசர்களுக்குக் கொடுக்கத் தகாதது. புரோடாசமென்பது தேவதைக்குக் கொடுப்பதற்காக ஸித்தம் பண்ணப்பட்ட ஒரு ஹவிஸ்ஸு.

ஸஹ ஶேஷி (50-வது பக்கம் 228-வது ஶ்லோ. பார்க்க)

257. த்வமேவ (அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை—37-31)

"தேவரீரே எனக்கு உபாயமாக இரும்" என்று பிரார்த்திப்பதான எண்ணம் சரணாகதியென்று சொல்லப்படுகிறது. அது இந்த தேவனிடத்தில் (எம்பெருமானிடத்தில்) செய்யப்படட்டும்.

258. உபாயே (அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை— 7-29)

இந்த சரணம் என்கிற சொல்லானது உபாயத்தையும் வீட்டையும் ரக்ஷகனையும் சொல்லுகிறது. இங்கே உபாயமென்கிற அர்த்தத்தையே சொல்லுகிறது.

ரக்ஷிஷ்யதீதி (50-வது பக்கம் 232-வது ஶ்லோ. பார்க்க)

259. ஸர்வஜ்ஞ: (லக்ஷ்மீதந்த்ரம்—17-78)

எல்லாரையும் நியமநம் பண்ணுகிற எம்பெருமான் எல்லாம் தெரிந்தவனும் எப்போதும் கருணையுள்ளவனும் இருந்த போதிலும் ஸம்ஸார தந்திரத்தை நடத்துகிறவனாகையால் ரக்ஷிக்க வேண்டுமென்கிற பிரார்த்தனையை எதிர்பார்க்கிறான்.

அரும்பதவுரை.

அணியிடாத-ஸங்கேதகப்படாத.
பற்றுசு — வியாஜம், பிடிப்பு.
கட்டளை — பிரகாரம், விதம்.
பொதிந்து — உள்ளே வைத்துக்கொண்டு.
சீற்றம்—கோபம்.
கண்ணோட்டம் — அபிமாநம்.
தாழாதே — தாமதமில்லாமல்.
தண்ணியர் — தாழ்ந்தவர்.

12. ஸாங்கப்பிரபதநாதிகாரம்.

ஸம்ஸ்கிருத வசநங்கள்.

260. ஹுாத்ராநடூ (ஸாத்பகிதந்திரம்)

இந்த மந்திரத்தினலேயே ஒருவன் தன்னை என்னிடத்தில் ஸமர்ப்பிக்கவேண்டியது. செய்யவேண்டியதை என்னிடத்தில் கொடுத்தவன் கிருதகிருத்யனாக ஆவான். கிருதகிருத்யனென்பதற்குச் செய்யவேண்டியதைச் செய்தவன் என்று பொருள்.

261. ஆத்மாவிவாயம்நஃஃ (பாரதம் சாந்திபர்வம்—25-19)

என்னுடைய ஆத்மாவும் எனக்குச்சொந்தமன்று. ஸொந்தமில்லாததை ஸொந்தமாக எண்ணினல், பூமி முழுவதையும் என்னதென்று சொல்லலாம். எப்படி என் ஆத்மா எனக்கு ஸொந்தமன்றோ, அப்படியே மற்றவர்களுக்கும் ஸொந்தமன்று. இப்படித் தெரிந்த ஒருவன் தான் தனக்கு ஸொந்தமென்று மயங்குவதில்லை.

262. ஹுயம்ஃஜ (பாரதம் சாந்திபர்வம்—294-19)

உடம்போடிருக்கிறவன் தான் மண்கட்டி போலவும் ஒருவனுக்கு உட்பட்டவனும் தன்னை ரக்ஷிக்கச் சக்தியில்லாதவனுமிருக்கிறான். அவன் மற்றவரை ரக்ஷிப்பதற்கு எப்படிக் காரணமாயிருக்கக்கூடும் ?

263. ஆத்மாராஜ்யூ (பாரதம் சாந்திபர்வம்—343-24)

ஆத்மா, ராஜ்யம், தநம்-பெண்டாட்டி, வாஹநங்கள் இவைகளெல்லாம் எம்பெருமானுக்காகவேயிருக்கின்றன— என்று அந்த உபரிசரவஸுவினல் எப்போதும் பார்க்கப்படுகை.

264. ஆத்மாத்மீய (லக்ஷ்மீ தந்திரம்—17-79)

ஆத்மாவினுடையவும், ஆத்மாவைச் சேர்ந்தவைகளுடையவும் ரக்ஷணபரத்தைக் கொடுப்பதை ஆத்மாவைக் கொடுப்பதென்று சொல்லப்படுகிறது.

265. நஹி பாலந (விஷ்ணுபுராணம்—1-22-21)

எல்லாரையும் நியமநம் பண்ணுகிற எம்பெருமானைத் தவிர வேறு ஒருவனுக்கும் ரக்ஷிக்கும் ஸாமர்த்தியமில்லை.

266. தேந ஸம்ரக்ஷ்ய (லக்ஷ்மீ தந்த்ரம்—17-73)

அவனாலே ரக்ஷிக்கப்படுகிறவனுக்கு ரக்ஷணபலத்தில் ஸம்பந்தமில்லாமையும், அதை எம்பெருமானிடத்தில் கொடுப்பதையும் ஆத்மநிக்ஷேபமென்று சொல்லுகிறது.

267. வபுராதிஷு (ஆளவந்தார் ஸ்தோத்ரம்—52)

உடம்பு முதலானவைகளில் நான் எப்படியோயிருக்கிறேன், என்னுடைய குணங்கள் விஷயத்திலும் எப்படியிருந்தாலுமிருக்கட்டும். இதனால் நான் செய்யப்போகிற வேலைக்கு விரோதமில்லாமையாலே தேவரீருக்குச் சேஷன் என்று அறிந்த நான் தேவரீருடைய இரண்டு திருவடித்தாமரைகளில் இப்போதே என்னால் கொடுக்கப்படுகிறேன்.

268. மம நாத (ஆளவந்தார் ஸ்தோத்ரம்—53)

ஓ நாதனே! மாதவனே! எனக்கு எது இருக்கிறதோ, அதுவும் நானும் இவைகளெல்லாம் உம்முடைய எப்போதும் உள்ள ஸொத்து என்று நன்றாய் அறிந்த நான் தேவரீருக்கு எதை ஸமர்ப்பிக்கிறேன். என்னதாக ஒன்றுமில்லாமையால் எனக்கு ஸமர்ப்பிக்க ஒன்றுமில்லை. தேவரீரதைத் தேவரீரிடம் கொடுக்கிறேன்.

ஸஹவை (2_வது பக்கம் 5_வது ஶ்லோ. பார்க்க)

ஸ்வேந (55-வது பக்கம் 260_ஶ்லோ. பார்க்க)

269. ஸ்வாமி மஹ்யம் (லக்ஷ்மீ தந்த்ரம்—50-215)

ஸம்ஸாரஸமுத்திரத்தில் தள்ளும்படியான பாபங்களிலிருந்து விலகினேன், அப்படியிருந்தாலும் மறுபடியும் பாபத்தில் பிரவிருத்தியுண்டாகிறது. அதுவும் தேவரீரை நினைப்பதால் போகிறது.

அரும்பதவுரை.

குழமணன் — தாம்பிரம் முதலானவைகளாலே செய்யப்பட்ட பொம்மை.

கிழிச்சீரை (உபாயவிபாகாதிகாரத்தில் 49-வது பக்கம் பார்க்க.)

13. கிருதகிருத்தியாதிகாரம்.

ஸம்ஸ்கிருத வசனங்கள்.

270. தேவர்ஷி (பாகவதம்—11-5-41)

எவன் சரண்ணியனும் லோகங்களுக்குக் குருவாயுமிருக்கிற நாராயணனை ஸர்வப் பிரகாரத்தாலும் சரணமாக அடைகிறானோ, அவன் தேவர்களுக்கும் ருஷிகளுக்கும் பூதங்களான ஆத்மாக்களுக்கும், மனிதர்களுக்கும், பிதிருக்களுக்கும்; வேலைக்காரனன்று; அவன் கடனாளியுமன்று.

271. யே யஜந்தி (பாரதம் சாந்திபர்-355-4) (தக்ஷஸ்மிருதி)

எவர்கள் பித்ருக்களையும் தேவர்களையும் பிராம்மணர்களையும் அக்கினியையும் ஆராதிக்கிறார்களோ, அவர்கள் எல்லா பிராணிகளுக்கும் ஆத்மாவான எம்பெருமானையே ஆராதிக்கிறார்கள்.

272. ஸாக்ஷாதபி (பிரம்மஸூத்திரம்—1-2-29)

அக்கி முதலான சொற்கள் நேராகவும் எம்பெருமானைச் சொல்லுகிறபடியால் விரோதமில்லையென்று ஜைமினியின் அபிப்பிராயம்,

273. அதஸ்த்வம் (சரணாகதிகத்யம்)

ஆகையாலே நீ என்னை உள்ளபடி அறிவதிலும் பார்ப்பதிலும் அடைவதிலும் ஸந்தேஹமில்லாமல் ஸுகமாயிரு.

அரும்பதவுரை.

கடை — வாஸலை.

காம்பு — ஒரு பூவின் கிட்டேயிருக்கும் காம்புபோலே முக்கியமான உபாயத்திற்கு உதவி செய்கிற வேறு உபாயம்

எழுதாமறை — எழுதப்படாத வேதம். ஒருவனால் செய்யப்பட்டதாயிருந்தால் எழுதப்பட்டிருக்கும்

அடிமை திட்டு — அடிமைச் சீட்டு.

பொலிசை — விருத்தி, அதாவது வட்டி.

தனிச்சீட்டு — கடன் சீட்டு.

நெகிழ்ச்சி — நம்பிக்கைக் குறைவு.

14. ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநாதிகாரம்.

ஸம்ஸ்கிருத வசனங்கள்.

274. ஶஷ்யோ நஷ்ய (பாரதம் ஆச்வமேதிக பர்வம் 110_64)

ஒருவன் ஒருவனை வைதால் வைகிறவன் புண்ணியம் வையப்பட்டவனையடைகிறது. வையப்பட்டவனுடைய பாபமானது வைகிறவனையடைகிறது.

275. வைஜ்ஞொவராணி (விஷ்ணுபுராணம் 1-17-82)

பிராணிகள் விரோதமுள்ளவர்களாய் ஒருவனிடத்தில் த்வேஷம் பண்ணினால், மிகுந்த மோஹத்தினால் இவர்கள் சூழப்பட்டிருக்கிறார்களேயென்று விவேகமுள்ளவன் அவர்களைப்பற்றி இரக்கப்படவேண்டியது.

276. ஆத்மத்ரோஹம் (ஆயுர்வேதம்)

தனக்கே த்ரோஹம் பண்ணிக்கொண்டு சாஸ்திரமரியாதையை மீறி நல்ல மார்க்கத்தை விட்டிருக்கிற மூடனைப்பற்றி ஒருவன் மிகவும் இரக்கப்படவேண்டியது. ஏனென்றால் அவன் நரகமாகிய நெருப்பை வளர்க்கிற விறகு போலிருக்கிறான்.

277. யஜிதம் (ஜிதந்தாஸ்தோத்ரம் 1_18)

மிகவும் கெட்ட புத்தியையுடைய நான் எங்கே? எனக்கு ஹிதமானதைப் பார்ப்பது எங்கே? ஆகையினால் தேவர்களை நியமனம் பண்ணுகிறவனே! எனக்கு எது ஹிதமோ அதைச் செய் என்று உத்திரவு பண்ணு. மாதவனே!

278. ஷூாயெண (இதிஹாஸஸமுச்சயம் 7_38)

ஜநங்கள் செய்யவேண்டியதைச் செய்யாததினாலே அனேகமாய் யமனைக்கண்டு பயப்படுகிறார்கள். செய்யவேண்டியதைச் செய்தவர்கள் பிரியமான விருந்தாளியைப்போல் யமன் வருவதை ஸந்தோஷமாய் எதிர்பார்க்கிறார்கள். இங்கே இரண்டாவது வாக்கியத்தில் யமன் என்பது மரணம்.

279. ஶஜம் வா (ராமாயணம் அயோத்யாகாண்டம் 60_20)

நல்ல முகத்தையுடைய ஸீதை, ராமனுடைய புஜத்தைப் பிடித்துக்கொண்டிருப்பதனாலே யானையையோ, ஸிம்மத்தையோ, புலியையோ கண்டு பயத்தையடைகிறதில்லை.

280. அஸந்தேஶாத் (ராமாயணம் ஸுந்தரகாண்டம் 22-20)

சாம்பலாகப்பண்ணத்தக்கத் தகுதியுள்ள பத்துத் தலையுடையவனே! ராமனுடைய உத்திரவில்லாமையாலும் பதிவிரதையாயிருப்பதாகிய தபஸ்ஸை ரக்ஷிக்கவேண்டியதாலும் என்னுடைய தேஜஸ்ஸாலே உன்னைச் சாம்பலாகப் பண்ணவில்லை.

281. ஶரௌகை: (ராமாயணம் ஸுந்தரகாண்டம் 39-30)

சத்துருபலத்தை நாசப் பண்ணுகிற காகுத்ஸ்தன் லங்கையைப் பாணங்களாலே நிறைத்து என்னை அழைத்துக்கொண்டு போனால் அது அவனுக்குத் தகுந்ததாக ஆகும்.

282. உத்பத்திஸ்திதிநாஶாநாம்

பிறப்பு, இருப்பு, சாவு இவைகளில் இருப்பைப்பற்றி உனக்கு ஏன் விசாரம் உண்டாகிறது. எப்படி பிறப்பும் சாவும் உண்டாகின்றனவோ, அப்படியே இருப்பும் உண்டாகும்.

283. உபவிஷ்டம் நரம் (பாரதம் சாந்திபர்வம் 339-15)

ஒரு வேலையும் செய்யாமல் உட்கார்ந்துகொண்டிருக்கிற ஒருவனிடம் லக்ஷ்மீ தானாய் வருகிறாள். வேறொருவன் பிரயத்நம் செய்தும் சாப்பாட்டை அடைகிறதில்லை. இது அவன் முன் செய்த கருமத்துக்குத் தகுந்தபடி ஆகிறது.

284. உத்பதது

ஆகாசத்தில் கிளம்பிப்போனாலும், ரஸாதலமென்கிற கீழ் உலகத்தில் பிரவேசித்தாலும், பூமி முழுவதும் ஓடித்திரிந்தாலும் முன்ஜன்மத்தில் ஒருவன் கொடுத்துவைக்காதது அவனிடம் வருகிறதில்லை.

285. யத்கிஞ்சித் (பாரதம் சாந்திபர்வம் 359-56)

உலகத்தில் எந்த வேலை செய்யப்படுகிறதோ, அதெல்லாம் என்னுடைய வேலை. என்னைத் தவிர மற்றவன் ஒன்றையெண்ணுகிறான். நான் என்னிஷ்டத்தைச் செய்கிறேன்.

286. அப்ரயத்நாகதா: (பாரதம் சாந்திபர்வம் 301-35)

கிருஹஸ்தர்களாலே தங்கள் பிரயத்நமில்லாமல் வருகிற எல்லா விஷயங்களையும் எப்போதும் பெற்றுக்கொள்ளவேண்டியது. தங்களுடைய தர்மங்களைப் பிரயத்நம் செய்தாவது செய்யவேண்டியது என்று என் அபிப்பிராயம்.

287. நாஹாரம்

நல்ல அறிவுள்ளவன் தன் ஆஹாரத்தைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். தர்மத்தையே நினைக்கவேண்டியது. மனிதர்களுக்கு ஆஹாரமோ அவர்களுடைய பிறப்புடன்கூட உண்டாகிறது.

288. ந ஸஞ்சிவதி தமஃ (பாரதம் சாந்திபர்வம் 177-24)

என் பிரயத்நமில்லாமல் வருகிற தர்மத்துக்கும் பொருந்தின போகத்தை நான் தடுக்கிறதில்லை, வருத்தப்பட்டு கிடைக்க வேண்டிய போகத்தை நான் தேடுகிறதுமில்லை.

289. தயோரேகதரஃ (பாரதம் சாந்திபர்வம் 175-5)

ஸுகதுக்கங்களாகிய இவைகளில் ஒன்று வரும்போது ஸுகத்தைக் கண்டு ஸந்தோஷப்படக்கூடாது, துக்கத்தைக் கண்டு வருத்தப்படக்கூடாது.

290. அஹமாத்மா

நான் ஆத்மா, உடம்பன்று; எம்பெருமானுக்குச் சேஷன்; எனக்குச் சொந்தமானதொன்றும் கிடையாது; அவனுக்குக்கைங்கரியம் செய்யவேண்டுமென்கிற ஆசையினாலே அவனையே சரணமாக அடைந்திருக்கிறேன்.

291. நைஷா (ராமாயணம் ஸுந்தரகாண்டம் 16-25)

அசோகவநத்திலிருக்கிற இந்த ஸீதை ராக்ஷஸிகளைப் பார்க்கிறதில்லை. புஷ்பங்களும் பழங்களும் நிறைந்த இந்த மரங்களையும் பார்க்கிறதில்லை ஒன்றிலேயே(ராமனிடத்திலேயே)மனதை வைத்தவளாய் நிச்சயமாக ராமனையே பார்த்துக்கொண்டிருக்கிறாள்.

தமிழ் வசனங்கள்.

49. உளதென்று. (இரண்டாம் திருவந்தாதி—45)

எம்பெருமான் திருவடிகளை நினைத்துக்கொண்டிருப்பவன் செல்வம் தனக்கிருக்கிறதென்று கர்வப்படான். இருந்தது போய் விட்டாலும் அவன் மனது கொஞ்சமும் தளராது.

அரும்பதவுரை.

சிகை — குடுமி, இங்கே சிகையறுகையாவது — பிராரப்த கர்மத்தில் ஒரு பாகம் போவது.

தஞ்சம் — ரக்ஷகன். தனிசு — கடன்.

15. உத்தரகிருத்தியாதிகாரம்.

ஸம்ஸ்கிருத வசனங்கள்.

292. [illegible]

பிரம்மாவினுடையவும், பசுபதியென்கிற ருத்திரனுடையவும் ஐசுவரியத்தை நான் ஆசைப்படமாட்டேன், யமுனைக்கரையில் கதம்பமரமாகவாவது குத்தமரமாகவாவது இருக்க ஆசைப்படுகிறேன். அந்த இடமானது கிருஷ்ணனாய் அவதாரம் பண்ணின எம்பெருமானுடைய திருவடிகளால் பரிசுத்தம் பண்ணப்பட்டது. அந்த இரண்டு மரங்களும் அந்த அவதாரத்தில் அவனுக்குப் பிடித்தவைகளாயிருந்தன.

293. [illegible] (ராமாயணம் அயோத்தியாகாண்டம் 31-22)

அடியேனை வேலைக்காரனாகச் செய்யவேணும். அப்படி என்னைச்செய்வதில் தகுதிக்குறைவு ஒன்றுமில்லை. தேவரீருக்குச் சேஷனான எனக்குக் கிடைக்கவேண்டிய கைங்கரியமான பிரயோஜநம் கிடைக்கும், தேவரீரையடைந்தவனை ரக்ஷிப்பதாகிய பிரயோஜநமும் தேவரீருக்குக் கிடைக்கும்.

[illegible] (11-வது பக்கம் 44-வதைப் பார்க்க)

294. [illegible] (ராமாயணம் ஆரண்யகாண்டம் 15-7)

காகுத்ஸ்தனே! தேவரீர் நூறு வருஷமிருந்தாலும் தேவரீருக்கு உட்பட்டவனாகவே இருப்பேன். தேவரீரே அழகான இடத்தில் இதைச் செய் என்று எனக்கு உத்திரவு பண்ணவேணும்.

295. [illegible] (ஜிதந்தாஸ்தோத்திரம் 1-13)

எல்லா ஜந்மங்களிலும் எம்பெருமானுக்கு வேலைக்காரனாய் இருப்பதையே நான் ஆசைப்படுகிறேன்.

296. [illegible] (வங்கிபுரத்து நம்பிகாரிகை)

ஒவ்வொரு நாளையும் ஐந்து பாகங்களாகப் பிரித்து அவைகளில் செய்யவேண்டிய கைங்கரியங்களை எப்போதும் செய்து கொண்டு, என் சக்திக்குத் தகுந்தபடி என்னாலேயே ஸம்பாதிக்கப்பட்ட நல்லவைகளான சந்தநம் புஷ்பம் முதலானவைகளாலே

எம்பெருமானைப் பக்தியுடன் ஆராதநம் பண்ணிக்கொண்டு நாள்களைப் போக்குவேன்.

297. [Grantha verse]

எம்பெருமானுடைய திருவடிகளில் பக்தியும் ஞானமும் தவிர, வேறு பலனை ஒருவேளையும் ஒருவன் அவனிடம் கேட்கக் கூடாது, கேட்பதால் நிச்சயமாய்க் கெட்டுப்போவன்.

298. [Grantha verse] [கீதை 4-34]

குருவை வணங்கி கேட்டு அவனுக்கு வேலை செய்து அந்த ஆத்மஸ்வரூபத்தை அறிந்துகொள். ஜ்ஞாநிகளாகவும் தத்துவத்தைப் பார்க்கிறவர்களாகவுமுள்ள ஆசாரியர்கள் உனக்கு ஆத்ம விஷயமான ஜ்ஞாநத்தை உபதேசம் பண்ணுவார்கள். இங்கே [Grantha] என்கிற சொல்லுக்கு கேட்கவேண்டியதை நேரே கேட்கக்கூடாதென்றும், அதைச் சேர்ந்ததொன்றைத் தெரிவித்தால் சிஷ்யனுக்கு வேண்டியதை ஆசாரியன் அறிந்து உபதேசிப்பன் என்றும் கருத்து.

299. [Grantha verse] [மாளவிகாக்நிமித்திரிய நாடகம்]

ஒருவன் மந்தனாயிருந்தபோதிலும் அறிவுள்ளவனுடன் சேர்ந்திருப்பதாலே தன் குறைவு நீங்கி அறிவுள்ளவனாக ஆகிறான். கலக்கத்தைப் போக்குகிற தேத்தாங்கொட்டையைத் தேய்ப்பதாலே கலங்கின ஜலம் தெளிவையடைகிறது. அதுபோல.

300. [Grantha verse] [ஸ்ரீ ஸாத்வதஸம்ஹிதை]

எவனுக்கு தத்துவவிஷயமான புத்தியானது எம்பெருமானுடைய அநுபவம் வரையில் போகும்படி நிலைநிற்கிறதோ, அவனுடைய கடாக்ஷத்துக்கு விஷயமான எல்லாரும் எல்லா பாபங்களாலும் விடப்படுகிறார்கள்.

301. [Grantha verse] [கீதை 2-46]

எல்லாருக்காகவும் எல்லாப்பிரயோஜநங்களுக்காகவும் நிறைந்திருக்கிற ஒருகுளத்திலே ஒருவனுக்கு எவ்வளவு பிரயோஜநமோ அவ்வளவே அவன் எடுத்துக்கொள்ளவேண்டியது.

[Grantha verse] [50-வது பக்கம் 228-நெ. பார்க்க]

302. [illegible] (ஆளவந்தார் ஸ்தோத்திரம் 22)

கர்மத்தை இடைவிடாது செய்வதை, அதாவது கர்மயோகத்தை நான் செய்யவில்லை, ஆத்மஸ்வரூபத்தையும் நான் அறியவில்லை, அதாவது ஜ்ஞாநயோகத்தையும் செய்யவில்லை. தேவரீருடைய திருவடித்தாமரைகளில் பக்தியுள்ளவனுமன்று. அதாவது பக்தியோகத்தையும் செய்யவில்லை. (229-வதையும் பார்க்க)

303. [illegible] (போதாயநஸூத்திரம் 14-10)

ஒருவன் முன்னால் எப்படியிருந்தாலும், கடைசி வயதில் நல்ல ஒழுக்கமுள்ளவனாயிருந்தால் அதுவே அவனுக்கு நல்லதைக் கொடுக்கும். முன்செய்த கெட்டகர்மங்கள் கெடுதலைச்செய்யாது.

304. [illegible] (ஸாத்வதஸம்ஹிதை 16.23,24)

ஒருவன் முன்னாலே கெட்டவொழுக்கமுள்ளவனாயும், எதையும் சாப்பிடுகிறவனாயும், நன்றி கெட்டவனாயும், சாஸ்திரத்தில் நம்பிக்கையில்லாதவனாயும் இருந்தபோதிலும், உலகத்துக்குக் காரணமான தேவனாகிய எம்பெருமானைச் சிரத்தையுடன் சரணமாக அடைந்தால் அவன் மஹிமையினாலே அந்த மனிதனைத் தோஷமில்லாதவனாக அறி.

305. [illegible] (வைகுண்டஸ்தவம்—61)

எந்த பாபமானது பிரம்மாவினுடைய பதினாயிரம் கல்பங்கள் அநுபவித்தாலும் மாளாதோ, அப்பேர்ப்பட்ட பாபத்தை ஒரு பிராணி அரை க்ஷணத்தில் செய்கிறான். இப்படி எல்லாப் பிறப்புகளிலும் எப்போதும் அபராதம் பண்ணிக்கொண்டிருக்கிறவனை பாபம் பண்ணுகிற எண்ணத்தை விடுவதினால்மாத்திரம் தேவரீர் பொறுத்துக்கொள்ளுகிறீர். இதென்ன ஆச்சரியம்!

306. [illegible] (வங்கிபுரத்து நம்பிகாரிகை—31)

சென்ற ஜந்மங்கள் சென்றதே. அதற்குப் பதில் என்ன செய்யமுடியும்? ஜலம் ஓடிக்கொண்டிருக்கையிலேயே புத்திமானாலே அதற்கு அணைபோடக் கோலவேண்டியது.

[illegible] (15-வது பக்கம் 72-நெ. பார்க்க)

307. [illegible] (பௌஷ்கரஸம்ஹிதை)

எப்படி ஸமுத்திரஜலமானது மேகங்களாலே குடித்து உமிழப்படுகையாலே எல்லாருக்கும் அநுபவிக்கத்தகுந்ததாகச் செய்யப்படுகிறதோ, அப்படியே பக்தர்களாலே பிரதிஷ்டை செய்யப்பட்ட எம்பெருமான் எல்லா மனிதர்களுக்கும் கைங்கரியங்கள் செய்து அநுபவிக்கத் தகுந்தவனாக ஆகிறான்.

308. [illegible] (விஷ்வக்ஸேநஸம்ஹிதை)

மந்திரங்களிலும், விக்ரஹங்களிலும் எல்லாருக்கும் மேற்பட்ட ஜ்ஞாநம் முதலான ஆறு குணங்கள் நிலையாயிருக்கின்றன. அதாவது— மந்திரங்களால் அவைகள் சொல்லப்படுகின்றன. விக்கிரஹங்களில் கிருபையினால் எழுந்தருளியிருப்பதால் அவனிடத்தில் அவைகள் இருக்கின்றன.

309. [illegible] (சாண்டில்யஸ்மிருதி—2-89)

அர்ச்சையாய் எழுந்தருளியிருக்கிற எம்பெருமானைப் புருஷோத்தமனென்று எண்ணி திருவடி பீடம்முதல் திருமுடிவரையில் பார்க்கிறவனுக்கு ஐந்து மஹாபாதகங்கள் சீக்கிரம் நசிக்கின்றன. உபபாதகங்கள் நசிக்கின்றன என்பது சொல்லவேண்டுமோ?

310. [illegible] (பௌஷ்கரஸம்ஹிதை)

புத்திமயக்கமுள்ள மனிதர்கள் தற்செயலாய் அர்ச்சையாய் எழுந்தருளியிருக்கிற எம்பெருமானைப் பார்க்கும்படி நேர்ந்தால் அவர்களுடைய துவாஸனை முதலானவைகள் போய்விடும். அவைகளில் துவாஸனை- உடம்பே ஆத்மா என்கிற எண்ணத்தாலே உண்டான வாஸனை. குபுத்தியென்பது அதினாலேயுண்டான பிரத்தியக்ஷப்பிரமம். குதர்க்கநிசயம்-ஸரியான யுக்திகளாயில்லாமல் நல்ல யுக்திகளைப்போலே தோன்றுகிறவைகளின் கூட்டம். குஹேது— இதினாலே உண்டான கெட்ட அநுமதி. குபாவம்- சொற்களுக்கு எப்படிப் பொருள் கிடைக்குமோ அதை விட்டு வேறாகப் பொருள் கொள்வது. நாஸ்திகத்வம்— இதினாலுண்டான சாஸ்திரத்தில் சொல்லுமவைகளை இல்லையென்று சொல்வது.

311. [illegible] (கீதை—4-11)

எவர்கள் என்னை எப்படிப் பார்க்கவேணுமென்று ஆசைப்பட்டு அடைகிறார்களோ, அப்படியே அவர்களுக்கு என்னைக் காட்டுகிறேன்.

312. ஸதீவஷி்ய, ஷூா ஜிகெவ ந(சாண்டில்யஸ்மிருதி-4-37_38)

ஒரு பதிவ்ரதை தனக்குப் பிரியமான புருஷனையும், தாயார் பால் குடிக்கும் குழந்தையையும், சிஷ்யன் ஆசாரியனையும், ஒரு ஸ்நேஹிதன் மற்றொரு ஸ்நேஹிதனையும் போல எம்பெருமானுக்குப் பிரீதியுடன் உபசாரம் செய்யவேண்டியது. லக்ஷ்மீபதியான எம்பெருமானை யஜமானனாகவும், வேண்டியவனாகவும், ஆசாரியனாகவும், தகப்பனாகவும், தாயாகவும்எப்போதும் எண்ணவேண்டியது.

313. யமூா யாவா நழ் (சாண்டில்யஸ்மிருதி—4-31)

சிறு பிள்ளையான ராஜாவையும், மதம் பிடித்தயானையையும், எப்படி ஒருவன் பயத்துடன் உபசரிக்கிறானோ, அப்படியே எம் பெருமானுக்கும் பயத்துடன் உபசாரம் செய்யவேண்டியது. வீட்டிற்கு வந்த பிரியமான விருந்தாளியை எப்படி ஆராதிப்பனோ, அப்படியே எம்பெருமானையும் அவனுடைய ஸௌலப்ய குணத்தை நினைத்து பக்தியுடன் ஆராதிக்கவேண்டியது.

314. யமூாவ வா ஞுழ்

எப்படி ஒருவன் பிரியமான குழந்தையைக் கொண்டாடுவனோ, அப்படியே எம்பெருமானையும் கொண்டாடவேண்டியது.

315. கஷாஷி(ராமாயணம் அயோத்தியாகாண்டம்—115_27)

பாதுகை ராஜ்யம் ஆளும் பொழுது, எந்த வேலை செய்ய வேண்டியதாக ஏற்படுகிறதோ, மிகுந்த விலையுள்ள எந்த காணிக்கை வருகிறதோ, அவைகளைப் பாதுகைகளிடத்தில் முதலில் தெரியப்படுத்தி பிறகு பரதன் எப்படி செய்யவேண்டியதோ, அப்படிச் செய்தான்.

வாவிஷஃ (1-வது பக்கம்1-ரெ. பார்க்க)

316. விஷஷ்

விஷத்திற்கும் விஷயங்களுக்கும் வேறுபாடு மிகவும் அதிகம். எப்படியென்றால்—விஷம் சாப்பிட்டவனைக் கொல்லும். விஷயங்கள் நினைப்பதாலேயே கெடுதியைச் செய்யும்.

317. ஸமெஷவ வக்ஷா (சரணாகதிகத்யம்)

த்வய மந்திரத்தை அர்த்தத்தைநினைப்பதுடன்எப்போதும் சொல்லுகிறவனாய்.

தமிழ் வசனங்கள்.

50. வாசித்தும் (நான்முகன் திருவந்தாதி — 63)

எம்பெருமானுடைய குணங்களைச் சொல்லுகிற புஸ்தகங்களை வாசித்தும், அவைகளை ஒருவன் படிப்பதைக் கேட்டும், வணங்கியும் அதையே எப்போதும் செய்துகொண்டும் அவனை ஆராதித்தும் என்னுடைய காலத்தை வீணாக்காமல் செய்தேன்.

51. சீர்கலந்த (பெரிய திருவந்தாதி — 86)

எம்பெருமானுடைய நல்ல குணங்களைக் காட்டுகிற ஸூக்திகளை நினைத்துக்கொண்டு ஆத்மாவைச் சூழ்ந்துகொண்டிருக்கிற கர்மங்களினாலுண்டான ஸமுத்திரம்போல் ஆழமான துக்கத்தை ஜநங்கள் போக்கவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், இந்த ஸம்ஸாரத்திலிருக்கும்போது எதை நினைத்துக்கொண்டு அந்த துக்கத்தைப் போக்குவார்கள்?

52. ஒழிவில் (திருவாய்மொழி—3-3-1)

இடைவிடாத காலமெல்லாம் எம்பெருமானுடன் எல்லாவிடங்களிலுமிருந்து எல்லா அவஸ்தைகளிலும் குற்றமில்லாத கைங்கரியத்தை நாம் செய்யவேண்டியது. இங்கு குற்றமாவது- இதை நான் செய்கிறேன், எனக்காகச் செய்கிறேன் என்கிற எண்ணம்.

53. பொங்கேழ் (திருவாய்மொழி - 8-10-4)

வரவர விருத்தியாகும்படியான எம்பெருமானுடைய நல்ல குணங்களைச் சொல்லுகிற பாசுரங்கள் என் வாயிலும், கண் முதலான இந்திரியங்களையிழுக்கும்படியான அவனுடைய திருமேனியானது என் மனதிலும், அதற்குத் தகுந்த புஷ்பங்கள் என் கையிலும் இருந்து எப்போதும் என் காலத்தைப் போக்கும்படி அவன் கிருபை செய்தால், இங்கேயிருக்கிற நமக்கு என்ன குற்றமுண்டாகும்.

54. நாடாத (திருவாய்மொழி—1-4-9)

வருத்தப்பட்டு ஸம்பாதிக்கவேண்டிய புஷ்பங்களை ஸம்பாதித்து எம்பெருமான் திருவடிகளில் ஸமர்ப்பிப்பதற்காகப் பிறந்தநான்.

55. வடிவிணை (திருவாய்மொழி—9-2-10)

அழகில் ஒப்பில்லாத பிராட்டியும் அவளைக் காட்டிலும் வேறான பூமியும் பிடிக்கும் மிருதுவான எம்பெருமானுடைய திருவடிகளைக்கொடுமையான பாபமுள்ள நானும் பிடிக்க.

56. தனக்கேயாக (திருவாய்மொழி—2-9-4)

தன் ஸந்தோஷத்திற்காகவே எம்பெருமான் என்னை அடிமை கொள்வதாகிய இதுவே நான் வேண்டுகிற பிரயோஜநம்.

57. உனக்கே (திருப்பாவை—29)

எம்பெருமானே ! தேவரீருக்கே நாங்கள் கைங்கரியங்கள் செய்வோம்.

58. பள்ளிகொள்ளும் (நாச்சியார் திருமொழி—41)

எம்பெருமான் திருக்கண் வளர்கிற இடத்தில் அவன் திருவடிகளைப் பிடிக்கும்படி க்ருபை செய்தால்,

59. எண்ணக்கண்ட (பெரியாழ்வார் திருமொழி—4-4-3)

எம்பெருமானுடைய திருநாமங்களைச் சொல்லும்போது அவைகளையெண்ணுகிற விரல்கள்.

60. உண்ணாநாள் (பெரியாழ்வார் திருமொழி—5-1-6)

நான் சாப்பிடாத நாள் பட்டினியாயிருக்கிற நாளன்று, நமோநாராயணாவென்று இடைவிடாமல் நான் நினைக்காத நாளும், மூன்று வேதங்களாகிய அப்போதே மலர்ந்த புஷ்பங்களைக் கொண்டு தேவரீருடைய திருவடிகளைக் கிட்டாத நாளும் வருமாகில் அந்த நாள்கள்தான் எனக்குப் பட்டினிநாளாகும்.

61. நாக்கு நின்னை (பெரியாழ்வார் திருமொழி—5-1-1)

நாக்கு தேவரீரைத் தவிர வேறொருவரையும் ஸ்தோத்ரம் பண்ணாது. இதனாலே தேவரீருக்கு என்ன குறைவு வருமோ என்று பயப்படுகிறேன். ஆனால் ஸ்தோத்திரம் பண்ணுவதை நிறுத்திவிடலாமேயென்றால் அந்த நாக்கு என் வசமாயில்லை.

62. வாயவனை (முதல் திருவந்தாதி—11)

வாய் எம்பெருமானைத் தவிர வேறொருவனையும் ஸ்தோத்திரம் பண்ணுகிறதில்லை.

63. தோள் அவனை (முதல் திருவந்தாதி—63)

தோளானது எம்பெருமானைத் தவிர வேறொருவரையும் வணங்காது.

64. நயவேன் (முதல் திருவந்தாதி—64)

எம்பெருமானுடைய பொருளான ஆத்மாவாகிய வஸ்துவை என்னுடையதென்று நான் எண்ணமாட்டேன். அப்படி எண்ணுகிற தாழ்ந்தவர்களோடு நான் சேரமாட்டேன்.

65. நிரந்தரம் (திருச்சந்தவிருத்தம்—101)

நான் இடைவிடாமல் தேவரீரைத் தியானம் பண்ணும்படி தேவரீர் ஸங்கல்பிக்கவேண்டும்.

பீதகவாடை (4-வது பக்கம் 1-வது நெம்பரைப் பார்க்க)

66. நன்மை தீமை (பெரியாழ்வார் திருமொழி—5-1-3)

இது நல்லது, இது கெட்டதென்று எனக்கு ஒன்றும் தெரியாது.

67. அறிவேனேலும் (பெரிய திருவந்தாதி—3)

நன்மை தீமைகளை அறிந்திருந்தாலும் நல்லதை ஸம்பாதிக்கவும், கெட்டதை விலக்கவும் என்னாலே முடியாது.

68. நோற்ற (திருவாய்மொழி—5-7-1)

நல்ல அநுஷ்டானமில்லாதவன்; ஸூக்ஷ்மமான அறிவுமில்லாதவன். அதாவது கர்மயோகமும்,ஜ்ஞானயோகமுமில்லாதவன்.

69. என்னான் (திருவாய்மொழி—5-8-3)

நான் எதைச் செய்வேன்.

களைவாய் (38-வது பக்கம் 32-வது நெம்பரைப் பார்க்க)
புகல் ஒன்று (50-வது பக்கம் 48-வது நெம்பரைப் பார்க்க)
ஆவிக்கு (38-வதுபக்கம் 33-வது நெம்பரைப் பார்க்க)

70. கறவைகள் (திருப்பாவை—28)

பசுமாடுகள் பின்னால் போய்.

71. குளித்து (திருமாலை—25)

ஸ்நாநம் செய்து மூன்று அக்கினிகளைப் பூஜை செய்யும் அடையாளத்தையுடைய பிராமணன் செய்யவேண்டிய வேலையை நான் விட்டுவிட்டேன்.

72. குலங்களாய (திருச்சந்தவிருத்தம்—90)

தர்மத்தைச் செய்வதற்குத் தகுந்த நான்கு ஜாதியில் பிறந்தவனாக இல்லை.

73. பொய்நின்ற (திருவிருத்தம்—1)

நசுவரமான உடம்பில் இருக்கிற நான் என்கிற எண்ணமும், அதினாலுண்டான கெட்ட ஆசாரமும், அதினாலேயுண்டான அழுக்கையுடைய உடம்பும் இப்படியிருக்கிற ஸம்ஸாரியின் ஸ்வபாவத்தை மறுபடியடையாதபடி ஆத்மாக்களை ரக்ஷிப்பதற்காக எங்தெந்த ஜாதியாய் நீ பிறந்தாய். நித்யஸூரிகளின் தலைவனே! அடியேன் செய்யும் விண்ணப்பத்தைக் கேட்டருளவேணும்.

74. மாளுமோர் (திருவாய்மொழி—1-3-8)

இறந்துபோகிற காலத்திலாகிலும் எம்பெருமானிடத்தில் பிரபத்தி செய்தா இறப்பது நல்லது.

75. கண்டகண்கள் (அமலனாதிபிரான்—10)

எம்பெருமானைக் கண்டகண்கள் மற்றொன்றைக்காணாது.

76. எம்மீசர் (திருவிருத்தம்—54)

என்னுடைய யஜமானனும் நித்யஸூரிகளுக்கு உபகாரம் செய்கிறவனுமிருக்கிற எம்பெருமானுடைய குற்றமில்லாத திருவடித்தாமரைகளின் கீழ் எம்மைச் சேர்த்த ஆசாரியர்கள்.

77. வில்லிபுதுவை (நாய்ச்சியார் திருமொழி—10-10)

ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதாரம் செய்த ஆத்மகுணம் நிறைந்த விஷ்ணுசித்தரென்கிற பெரியாழ்வார் தாம் ஆராதிக்கும் எம்பெருமானை தம்மாலே முடிந்த வழியாலே வருவித்தால் அதை நான் பார்ப்பேன்.

78. இருளகற்று (பெரியாழ்வார் திருமொழி—4-9-3)

இருட்டைப் போக்குகிற உஷ்ணமான கிரணங்களையுடைய ஸூரியனுடைய மண்டலத்தின் நடுவாலே வைகுந்தத்தில் ஏற்றி, திரும்பி வராதபடி ஏறுவதற்குக் காரணமாயிருந்த ஏணியை எடுத்துவிட்டு,

79. போயினால், வாயினால் [பரிபூர்ண]
(பெரியாழ்வார் திருமொழி—4-5-2)

வாயாலே "நமோநாராயணா" வென்று மூலமந்திரத்தைச் சொல்லித் தலைமேலே கைகளைக் கூப்பிக்கொண்டு அதாவது பிரபத்தி செய்து வைகுந்தம் போனால், பிறகு இந்த ஸம்ஸாரமண்டலத்துக்குப் போய் திரும்பி வருகிறேனென்று ஜாமீன் கொடுத்தாலும் ஒருபோதும் இங்கே திரும்பிவர விடமாட்டான்.

80. வண்புகழ் (திருவாய்மொழி—1-2-10)

மேன்மையான புகழையுடைய நாராயணனுடைய திருடமான திருவடிகள் 'திண்' என்கிற சொல்லாலே அதை யடைந்தவர்களை ஒருபோதும் விட்டுவிடுகிறதில்லையென்று காட்டப்படுகிறது.

81. சன்மசன்மாந்தரம் (திருவாய்மொழி—3-7-7)

எம்பெருமான் தன்னையடைந்தவர்களுக்கு மறுபிறப்பு வராதபடி பண்ணி, அவர்களை வைகுந்தத்திற்குக் கொண்டுபோய், அவர்களுக்கு ஸ்வபாவமாயுண்டான ஸ்வரூபத்தை வெளிப்படுத்தி, தன்னுடைய திருவடிகளின்கீழ் அவைகளிலுள்ள கோடுகள்போல் பிரியாதபடி வைத்துக்கொள்ளும் அப்பன்.

82. தன் தாளிணைகீழ் (திருவாய்மொழி—7-5-10)

எம்பெருமான் தன்னுடைய திருவடிகளின் கீழே சேர்த்து இங்கே திரும்பி வாராதபடி அவன் செய்யும் க்ஷேமம்.

பண்டை நாளாலே (19-வது பக்கம் 8-வது வரி பார்க்க)

முன்காலத்தில் அதாவது ஸஹஜமாயிருக்கிற கிருபையினாலே.

ஆவி திகைக்க (20-வது பக்கம் 17-வது வரி பார்க்க)

83. செய்யாதன செய்யோம் (திருப்பாவை—2)

செய்யக்கூடாதவைகளைச் செய்யமாட்டோம்.

அரும்பதவுரை.

திருவிடையாட்டம் — எம்பெருமானுடைய ஆராதநத்திற்கு வேண்டிய தானியத்தை உண்டுபண்ணக்கூடிய எம்பெருமானுடைய வயல்.

கவடு — கிளை.

எதிர்சூழல்புக்கு — எதிரே வந்து வளைப்பதில் புகுந்து.

வெளிச்சிறப்பு — அறிவின் மேன்மை.

வரையிடுதல் — அளவுபடுகை, அதாவது குறைந்துபோதல்.

16. புருஷார்த்தகாஷ்டாதிகாரம்.

ஸம்ஸ்கிருத வசநங்கள்.

318. [illegible] (வேதார்த்தஸங்கிரஹம்)

மற்ரொருவனிடத்தில் உண்டாகும் ஓர் அதிசயத்தையுண்டு பண்ணவேண்டுமென்கிற எண்ணத்தாலே அங்கீகரிக்கப்படுவது எவனுடைய ஸ்வரூபமோ அவன் சேஷன், மற்ரொருவன் சேஷி.

319. [illegible] (பாரதம் சாந்திபர்வம் 199-25)

எப்படி மீனானது பிரவாஹத்திலேயே போகிறதோ அப்படியே ஒருவன் முன்செய்த கர்மத்தையே செய்கிறான். எல்லாரையும் உடம்பாகவுடைய மிகவுமுயர்ந்த எம்பெருமான் அந்த கர்மம் நல்லதாயிருந்தால் ஸந்தோஷப்படுகிறான். அது கெட்டதாயிருந்தால் ஸந்தோஷப்படுகிறதில்லை.

320. [illegible] (கீதை 7-18)

அவர்களெல்லாரும் உதாரர்கள். ஆனால் அவர்களுள் ஜ்ஞாநி என்பவன் என்னுடைய ஆத்மா. இது என்னுடைய அபிப்ராயம்.

321. [illegible] (ஆளவந்தார் ஸ்தோத்திரம் 46)

எப்பொழுதும் தேவரீருக்கே வேலைக்காரனாயிருந்து, தேவரீரே எனக்கு யஜமாநன் என்று நினைத்துக்கொண்டு எப்போது தேவரீரை ஸந்தோஷப்படுத்தப்போகிறேன்.

322. [illegible] (பாத்மோத்தரம் 29-81)

எல்லா ஆராதநங்களிலும் விஷ்ணுவின் ஆராதநம் சிறந்தது. அதைக்காட்டிலும் வேறான விஷ்ணுபக்தனுடைய ஆராதநமானது எல்லா ஆராதநங்களிலும் மிகவும் சிறந்ததென்று சொல்லப்படுகிறது.

323. [illegible] (பாரதம் ஆச்வமேதிகபர்வம் 116-23)

என் பக்தனிடத்தில் பக்தியுள்ளவர்களிடத்தில் எனக்கு அதிக ப்ரீதியிருக்கிறது. ஆகையால் அவர்களை விசேஷமாக ஒருவன் பூஜிக்கவேண்டியது.

324. [illegible] (காருடபுராணம் 219-6-9)

என் பக்தர்களான ஜநங்களிடத்தில் அவர்களுடைய தோஷங்களைக் கவனிக்காதபடி செய்யும் பிரீதி, எனக்கு ஒருவன் பூஜை செய்வதைக் கண்டு ஸந்தோஷப்படுவது, என் கதையைக் கேட்பதில் பிரீதி, அதைக் கேட்கும்போது குரலிலும் கண்களிலும் உடம்பிலும் வேறுபாடுண்டாவது; தானும் ஆராதநம் செய்ய முயற்சி செய்வது, என் விஷயங்களில் டம்பமில்லாமை, என்னை எப்போதும் நினைத்துக்கொண்டிருப்பது, என்னிடத்தில் ஒரு பலனையும் கேட்காதிருப்பது—இப்படி எட்டு விதமான பக்தியானது எந்த மிலேச்சனிடத்திலும் இருக்கிறதோ, அவன் ஜ்ஞாநமுடையவனாயும் பக்தி பண்ணுகிறவனாயுமிருக்கிற பிராம்ணசிரேஷ்டன், அவன் ஸந்யாஸி, அவனே பண்டிதன், அவனுக்கு ஜ்ஞாநத்தையுபதேசம் பண்ணலாம். அவனிடமிருந்து ஜ்ஞாநத்தைப் பெறலாம். என்னைப்போல அவனும் பூஜிக்கத் தகுந்தவன்.

325. [grantha] (பாரதம் ஆச்வமேதிகபர்வம் 104_91)

வேறு தேவதைகளிடத்தில் பக்தியில்லாதவர்களாய், என்னிடத்தில் பக்தியுள்ள ஜநங்களிடத்தில் பிரீதியுள்ளவர்களாய், என்னையே உபாயமாகப் பற்றினவர்கள் என் பக்தர்களென்று சொல்லப்படுகிறார்கள்.

326. [grantha] (பாரதம் சாந்திபர்வம்46-130)

அந்த அளவில்லாத தேஜஸ்ஸையுடைய யஜ்ஞவராஹரூபமான விஷ்ணுவுக்கு எவர்கள் நமஸ்காரம் செய்கிறார்களோ, அவர்களுக்கும் அநேக நமஸ்காரம் பண்ணுகிறேன்.

327. [grantha] (காருடபுராணம்)

உலகத்தில் எம்பெருமானை ஆச்ரயித்திருக்கிறவனை அடைவதாலும், அவனிடத்தில் பக்தியுள்ளவன் எவனோ; அவனிடத்தில் எவன் பக்தியுள்ளவனோ, அவனிடத்தில் எவன் பக்தியுள்ளவனோ, அவனுக்கு வேலை செய்வதாலும் மனிதர்கள் எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுபடுகிறார்கள்.

[grantha] (57-வது பக்கம் 271_ெந. பார்க்க.)

328. [grantha] [கீதை 7-17]

ஜ்ஞாநிக்கு நான் வேண்டியவன், எவ்வளவு வேண்டியவன் என்பதை எல்லாம் தெரிந்த என்னாலும் சொல்ல முடியாது. அந்த ஜ்ஞானியும் அப்படியே எனக்கு வேண்டியவன். (இங்கே ஜ்ஞாநீ என்பதின் பொருளை (221-வதில் பார்க்க.)

ஜ்ஞாநீத்வாத்மைவ (71-வது பக்கம் 320-தை. பார்க்க)

329. நாரதோஹம் (இதிஹாஸ ஸமுச்சயம்—31-54)

நாரதனாகிய நான் உன்னைப் பார்க்க வேணுமென்கிற ஆசையினால் இங்கே வந்திருக்கிறேன். ஓ பிராம்மணனே! என்னைப் போன்றவர்களுக்கு எம்பெருமானிடத்தில் பக்தியுள்ளவர்கள் எப்போதும் யஜமானர்கள்.

330. அஹமஸ்யாவரோ ப்ராதா [ராமாயணம் கிஷ்கிந்தா—4-12]

நான் அவனுடைய (ராமனுடைய) தம்பி, அவனுடைய குணங்களாலே அவனுக்கு வேலைக்காரனாக ஆகியிருக்கிறேன்.

331. ஸதாரப்ருத்ய [பௌஷ்கரஸம்ஹிதை]

தர்மபத்நீகள் புருஷனுக்கும், அவனுடைய வேலைக்காரர்களுக்கும் புருஷன் முன்னிலையிலோ, இல்லாத சமயத்திலோ, கௌரவம் பண்ணுவது குற்றமன்று.

332. ஆப்தஃ [பௌஷ்கரஸம்ஹிதை]

எம்பெருமானுடைய பரிகரமானது ஆப்தனென்றும், ஆப்தனல்லாதவனென்றும் இருவகைப்படும். அவர்களில் ஆப்தனென்பவர் நித்தியரும் முக்தரும் பாகவதர்களும். அவர்களுக்கு வந்தனம் செய்யலாம். ஆநாப்தன் கர்மத்துக்குட்பட்ட பிரம்மா முதலான தேவர்கள். அவர்களை முமுக்ஷுவானவன் வந்தநம் செய்யக்கூடாது.

333. மிதஸ்ஸேஷிபாவம் (வைகுண்டஸ்தவம் 77)

ஒருவருக்கொருவர் சேஷனாயிருப்பதை எப்போதும் ஆசைப்படுகிற நித்யஸூரிகளுடன் எப்போது நான் சேருவேன்.

தமிழ் வசனங்கள்.

84. அடியார்க்கு (அமலனாதிபிரான்—1)

தன்னுடைய தாஸர்களுக்கு என்னைத் தாஸனாகப்பண்ணின விமலன்.

மற்றுமோர் (38-வது பக்கம் 35-ந. பார்க்க)

85. பேசுவார் (பெரியாழ்வார் திருமொழி—4-4-10)

எம்பெருமானுடைய திருநாமங்களைச் சொல்லுகிற பாகவதர்களுக்குத் தாஸர்களாயிருக்கிறவர்கள் நம்மை விற்கும்படியான பாத்தியமுடையவர்கள்.

அரும்பதவுரை.

குமர் இராத — வீணாகப் போகாதபடி (குமர்—கலியாணம் செய்யப்படாமலேயேயிருக்கிற ஒரு பெண்)

தூறு — செடி.

---

17. சாஸ்திரீய நியமநாதிகாரம்.

ஸம்ஸ்கிருத வசனங்கள்.

334. [illegible] (சாண்டில்யஸ்மிருதி 3-18)

வ்யபிசாரீ, நபும்ஸகன், பதிதன், விரோதி—இவர்களிடமிருந்து இவர்கள் தானாகக் கொடுத்தாலும் ஆபத்தில்கூட ஸ்வல்பமான பதார்த்தத்தையும் ஒருபோதும் வாங்கக்கூடாது.

335. [illegible] (விஷ்ணுதர்மம் 76-22)

அயலாருடைய தோஷத்தைப் பார்ப்பதில் பிறவிக்குருடர்களாகவும், அயலாருடைய பெண்டாட்டி விஷயத்தில் நபும்ஸகர்களாகவும், பிறரை வைகிற விஷயத்தில் ஊமைபோலவும் எவர்களிருக்கிறார்களோ அவர்கள் எனக்கு மிகவும் வேண்டியவர்கள்.

336. [illegible] (சாண்டில்யஸ்மிருதி 4-86)

வீட்டுக்காரன் தன் பிள்ளையினிடம் எவன் ஆதரம் செய்கிறதில்லையோ, அவன் தன்னிடத்தில் ஆதரவுள்ளவனானாலும் அவனிடத்தில் பிரீதிபண்ணுகிறதில்லை, கோபமுமுண்டாகும். அப்படியே எம்பெருமான் தன்னுடைய நல்ல பக்தனை எவன் கௌரவப்படுத்துகிறதில்லையோ, அவன் தன்னை ஆராதிக்கிறவனாயினும், அந்த மனிதனிடத்தில் பிரீதி பண்ணுகிறதில்லை. கோபமுமுண்டாகிறது.

337. யெ [illegible] (பாரதம் சாந்திபர்வம்—336-36)

எவர்கள் மஹாத்மாவான கேசவனை நினைக்காதபடி பண்ணுகிற (அவனிடத்தில்) த்வேஷமுள்ளவர்களோ, அவர்களுக்கும் அவர்களுடன் சேர்ந்தவர்களுக்கும் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்வதால் ஒரு பலனும் கிடைக்காது. இங்கே அவர்களுடன் சேர்க்கையாவது அவர்களுடன் சேரும்படியான ஆதரம் செய்கிறது.

338. மூடைஃ (சாண்டில்யஸ்மிருதி—1-121)

அறிவில்லாதவர்களாயும், பாபம் செய்வதில் பிரீதியுள்ளவர்களாயும், க்ரூரர்களாயும், எம்பெருமானுடைய சாஸ்திரங்களைத் தூஷிக்கிறவர்களாயுமிருக்கிறவர்களுடன் சேரக்கூடாது. அவர்களுடன் சேர்ந்தால் பக்தியானது நிச்சயமாய்ப் போய்விடும்.

339. [illegible]

உலகத்திலிருக்கிறவர்களே! இதுமுதல் உங்கள் கோஷ்டி வேறு. எங்கள் கோஷ்டி வேறு. நீங்கள் பணத்தையும் போகத்தையும் தேடுகிறீர்கள். நாங்களோ நாராயணனையே தேடுகிறோம். உங்களுக்கும் எங்களுக்கும் ஒருவரோடொருவர் சேர்க்கையில்லை. நாங்கள் எம்பெருமானுக்கு வேலைக்காரர்கள். நீங்கள் கண் முதலிய இந்திரியங்களுக்கு வேலைக்காரர்கள்.

340. அஶாஸ்த்ர (கீதார்த்தஸங்கிரஹம் 21)

சாஸ்திரத்துக்குப் பொருந்தாது எல்லாம் அஸுரஸ்வபாவமுள்ளது.

341. ஆஜ்ஞாச்சேதீ (விஷ்ணுதர்மம்—6-31)

வேதமும் ஸ்மிருதிகளும் என்னுடைய ஆஜ்ஞைகள், வேறு ஒருவனுடைய ஆஜ்ஞைகளல்ல; எவன் அதை மீறி நடக்கிறானோ, அப்படி மீறி நடக்கிறவன் எனக்குத் துரோஹம் செய்கிறான்; அவன் என் பக்தனாயிருந்தாலும் அவனை விஷ்ணுபக்தனென்று சொல்லக்கூடாது.

342. நிஜகர்மாதி (கீதார்த்தஸங்கிரஹம்—31)

தன்னுடைய வர்ணத்துக்கும் ஆசிரமத்துக்கும் பொருந்தின கர்மங்கள் முதல் பக்தியோகம் வரையிலுள்ள எல்லாவற்றையும் பிரீதியினாலே ஏவப்பட்டவனாய் ஒருவன் செய்யவேண்டியது.

அவைகளில் உபாயமென்கிற எண்ணத்தை விட்டு உபாயமாயி ருப்பதை எம்பெருமானிடத்தில் பயமில்லாமல் வைக்கவேண்டும். அதாவது எம்பெருமானே உபாயமென்று எண்ணவேண்டியது.

343. அவிப்லவாய (லக்ஷ்மீதந்திரம்—17-93-94)

தர்மங்களுக்குக் கெடுதியுண்டாகாமைக்காகவும், குலத்தை ரக்ஷிப்பதற்காகவும், ஒரு நல்ல வழியில் தான் இருந்து நல்ல அறிவில்லாத உலகத்தாரை அதில் நிறுத்துவதற்காகவும் எம் பெருமானுல் ஏற்படுத்தப்பட்ட சாஸ்திரமரியாதை நிலைநிற்பதற் காகவும், என்னுடைய பிரீதிக்காகவும், தேவர்களுக்கு எல்லாம் மேற்பட்டு சார்ங்கமென்னும் ஆயுதத்தையுடைய எம்பெருமானு டைய பிரீதிக்காகவும் புத்திமானுன பிரபந்நன் வேதத்திஞல் ஏற் பட்ட ஆசாரத்தை மனதாலும் மீறக்கூடாது. (இது லக்ஷ்மீயின் வசநம்.)

344. யதாஹி (லக்ஷ்மீதந்திரம்—17-95-96-97)

ராஜாவினுல் ஏற்படுத்தப்பட்டு உலகத்திற்கு உபயோகமுள் ளதாயும் மனதுக்குப்பிடித்ததாயும் அநேகதான்யங்களை விருத்தி செய்வதாயுமிருக்கிற ஒரு ஆற்றை ராஜாவுக்கு வேண்டியவன் தனக்கு அது வேண்டியதில்லையென்று தண்ணீர் ஓடிப்போகும் படி அதின் கரையை வெட்டிவிட்டால், அவனை ராஜா சூலத்தில் ஏற்றிவைப்பன். அதுபோல வேதத்தாலே ஏற்பட்ட மரியாதை யை மீறி நடக்கிற மனிதன் எனக்கு வேண்டியவனுயிருந்தபோதி லும் என் உத்தரவை மீறி நடப்பதால் என்னுல் தண்டிக்கத் தகுந்தவன்,

345. ஸுஹ்ருதம் (கீதை—5-29)

எல்லா பிராணிகளுடைய க்ஷேமத்தை எண்ணுகிற என்னை

ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் (71-வது பக்கம் 321-நெ. பார்க்க)

அரும்பதவுரை.

வெறுவி — பயந்து.

18. அபராதபரிஹாராதிகாரம்.

ஸம்ஸ்கிருத வசனங்கள்.

346. [illegible] (லக்ஷ்மீதந்திரம்—17-91,92)

அபராதமுண்டானால் உடனே பிராயச்சித்தத்தைச் செய்ய வேண்டியது. செய்யவேண்டிய பிராயச்சித்தமும் மறுபடியும் பிரபத்தி பண்ணுவதுதான். மோக்ஷத்திற்காக பிரபத்தி பண்ணினபிறகு கர்மயோகம் முதலானவைகளை அதற்கு உபாயமாகச் செய்தால் அதுவும் அபராதம். அது போவதற்காக மறுபடியும் பிரபத்தி செய்யவேண்டியது.

347. [illegible] (வங்கிபுரத்து நம்பிகாரிகை)

ஒருவன் அபராதம் என்று தெரிந்து அதைச் செய்தாலும் அபராதம் என்று தெரியாமல் அதைச் செய்தாலும் "அதைப் பொறுத்துக்கொள்ள வேணும்" என்று பிரார்த்திப்பது ஒன்றே அதற்குச் செய்யவேண்டிய பிராயச்சித்தம்.

348. [illegible] (ராமாயணம் ஸுந்தரகாண்டம்—21-20,21)

(முதல் பாதிக்கு 13-வது பக்கம் 62-நெ. பார்க்க) பிழைத்திருப்பதற்கு உனக்கு ஆசையிருந்தால் அவனுடன் உனக்கு ஸ்நேஹமுண்டாகட்டும். பிரபத்தி பண்ணுகிறவர்களிடத்தில் பிரீதியுள்ள அந்த ராமனிடத்தில் பிரபத்தி பண்ணி அவன் அநுக்கிரஹத்தை உண்டுபண்ணி சுத்தமான மனதுடன் என்னை அவனிடத்தில் திரும்பிப் போகும்படி நீ செய்யவேண்டியது. (இது ராவணனைக் குறித்து ஸீதை சொன்ன வசநம்)

349. [illegible] (விஷ்ணுபுராணம்—3-7-14)

யமன், கையில் கயிற்றை வைத்துக்கொண்டிருக்கிற தன் வேலைக்காரனைப் பார்த்து, அவன் காதின்கிட்டே சொல்லுகிறான்—மதுஸூதநன் என்று சொல்லப்பட்ட எம்பெருமானிடத்தில் பிரபத்தி பண்ணினவர்களிடம் நீ போகாதே. மற்ற மனிதர்கள் விஷயத்தில் எனக்கு அதிகாரமுண்டு. விஷ்ணுபக்தர்களிடத்தில் அது இல்லை—என்று. "[illegible]" என்பதற்கு இது ரஹஸ்யமான அர்த்தமென்றும், அதை வெளிப்படையாகச் சொன்னால் எல்லாரும் பிரபத்திசெய்து அதனால் தன் அதிகாரம் குறைந்துவிடுமென்றும் கருத்து.

350. கமலநயந (விஷ்ணுபுராணம்—3-7-33)

தாமரைக்கண்ணனே! வாஸுதேவ! விஷ்ணுவே! பூமியைத் தூக்குகிறவனே! அச்யுதனே! சங்கத்தையும் சக்கிரத்தையும் கையிலுடையவனே! எனக்குத் தேவரீர் உபாயமாக இருக்கவேண்டுமென்று எவர்கள் சொல்லுகிறார்களோ, அவர்கள் பாபமில்லாதவர்கள். அவர்கள் கிட்டப்போகாதே. தூரத்திலேயே இரு. (இது யமன் வசனம்)

351. தேவம் (வாமநபுராணம்—94-43)

சார்ங்கத்தைத் தரிக்கிற தேவனான விஷ்ணுவை எவர்கள் மிகவும் உயர்ந்த புருஷார்த்தம் என்றுநினைத்து பிரபத்திபண்ணுகிறார்களோ அவர்கள் யமலோகத்திற்குப் போகிறதில்லை. அவர்களுக்கு நரகமிருப்பிடமன்று.

ஸக்ருதேவ (11-வது பக்கம் 43-நெ. பார்க்க)

352. ராக்ஷஸீநாம் (ராமாயணம் யுத்தகாண்டம்—116-40)

ராவணனுடைய வேலைக்காரிகளின் குற்றங்களை அவர்கள் கஷ்டத்தைப் பார்த்து ஸஹிக்கமுடியாத நான் பொறுத்துக்கொள்ளுகிறேன்.

353. பாபாநாம் (ராமாயணம் யுத்தகாண்டம்—116-44)

உன் அபிப்ராயத்தினாலே பாபம் பண்ணினவர்களென்றும், ஆணையினால் கொல்லத்தகுந்தவர்களென்றும், என் அபிப்பிராயத்தினாலே பாபம் பண்ணாதவர்களென்றும் எண்ணப்பட்டவர்கள் விஷயத்தில் பெரியவரான உம்மாலே கருணை செய்யவேண்டியது. குற்றம் பண்ணாதவன் ஒருவனுமில்லை.

354. யஸ்மிந்

எந்த குலத்தில் பிறந்து எங்கே வஸித்தாலும் எப்போதும் எம்பெருமானிடத்தில் பிரீதியுள்ளவர்கள் யமனுடைய லோகத்திற்குப் போகிறதில்லை.

355. க்ருதே பாபே (விஷ்ணுபுராணம்—2-6-40)

ஒருவன் பாபம் செய்தபோது, எவனுக்கு அநுதாபம் பிறக்கிறதோ, அவனுக்கு எம்பெருமானை நினைப்பதே பிராயச்சித்தம்.

356. ஸாங்க்ய ஸாதந ஸாத்

உபாயபக்தி அதாவது பக்தி, பிராரப்தபாபம் தவிர மற்ற பாபங்களைப் போக்கக்கூடியது. ஸாத்யபக்தி (பிரபத்தி) யானது பக்தியைக் காட்டிலும் சிறந்ததாயிருந்து பிராரப்தத்தையுங்கூட போக்கும்.

357. ஜந்மாந்தரக்ருதம்

வேறு ஜந்மத்தில் செய்த பாபமானது வியாதியாக வந்து பாதிக்கிறது. மருந்து, தானம், ஜபம், ஹோமம் எம்பெருமானுக்கு அர்ச்சனை பண்ணுவது ஆகிய இவைகளால் அது போய் விடும்.

358. தாஸஸ்ஸகா (ஆளவந்தார் ஸ்தோத்ரம்—41)

எந்த கருடன் வேலைக்காரன், தோழன், வாஹநம், ஆஸநம், த்வஜம், மேல்கட்டு, விசிறி இப்படியிருக்கிறானோ,

359. ஏவம் முக்தி (பிரம்மஸூத்ரம்—3-4-50)

எப்படி வேறு பலன்கள் உடனே வருமென்கிற ஏற்பாடில்லையோ, அப்படியே மோக்ஷமென்கிற பலனும் உபாஸனை பண்ணினவுடன் வருமென்று ஏற்பாடில்லை. பாகவதர் விஷயத்தில் அபசாரமுண்டானால் அது தீருகிறவரையில் அந்த பலன் தடைபட்டிருக்கும்.

360. அநுஜ்ஞா (பிரம்மஸூத்ரம்—2-3-47)

ஒருவனைத்தொடலாமென்கிற உத்தரவும் ஒருவனை தொடக்கூடாதென்கிற நிஷேதமும் அவர்களுக்கு உடம்போடு உண்டான ஸம்பந்தத்தாலே வருகின்றன. அக்கினி முதலியவைகளுக்குப் போல. வேதம் பிடித்தவன் வீட்டின் நெருப்பை எடுத்துக் கொள்ளுகிறோம், சுடுகாட்டு நெருப்பை விலக்குகிறோம். அது போல. ஆத்மா சுத்தமாயிருந்தாலும் அசுத்தமான உடம்பிலிருந்தால் அவனைத் தொடக்கூடாது,

361. ஸாதுரேவ (கீதை—9-30)

ஒருவன் மிகவும் கெட்ட ஆசாரமுள்ளவனாயிருந்தாலும் அவன் என்னை வேறு பிரயோஜநத்தை வேண்டாமல் பஜித்தால், அவன் ஸாதுவாகவேயிருக்கிறான். அவன் பஹுமாநம் செய்யத் தகுந்தவன். ஏனென்றால் அவன் தீர்மானம் நல்லதாயிருக்கிறது.

362. ஸ்ருதஸம்ஹாஷிதஃ (இதிஹாஸ ஸமுச்சயம்—31-55)

பிராம்மணனே ! எம்பெருமானிடத்தில் பக்தியுள்ள சண்டாளனைத் தற்செயலாய் நினைத்தாலும், அவனுடன் பேசினாலும் அவனைக் கௌரவப்படுத்தினாலும் இப்படிச் செய்கிறவனை அவன் சுத்தம் பண்ணுகிறான்.

363. யஸ்ய ஶூத்³ரம் (இதிஹாஸ ஸமுச்சயம்—27-26)

எம்பெருமானிடத்தில் பக்தியுள்ள சூத்திரனையோ, வேடனையோ, நாய் மாம்ஸம் தின்கிறவனையோ, எவன் அந்தந்த ஜாதியாரோடு ஸமமாக எண்ணுகிறானோ, அவன் நரகத்துக்குப் போகிறான்.

364. தஸ்மாத் (இதிஹாஸ ஸமுச்சயம்—27-27)

ஆதலால் எம்பெருமானுடைய அநுக்கிரஹமுண்டாவதற்காக விஷ்ணுபக்தர்களை ஸந்தோஷப்படுத்தவேண்டியது. இதனாலேயே எம்பெருமான் அநுக்கிரஹம் செய்ய ஸித்தனாக ஆகிறான். இதில் ஸம்சயமில்லை.

365. தவேத்யுக்தி

இந்தவஸ்து (மனிதன்) எம்பெருமானுடையது என்கிற புத்தியையுண்டாக்குவதாலே, அந்த எண்ணமே நமஸ்காரம் முதலானது உண்டாகாமல் போனபோதிலும் உபகாரம் செய்யும்.

366. ஸர்வம் (பாரதம் சாந்திபர்வம்—79-22)

கோணலான எல்லாம் ஸம்ஸாரத்துக்குக் காரணம், ருஜுவானது ஸம்ஸாரம் போய் எம்பெருமானையடைவதற்குக் காரணம். இங்கே கோணலென்பது உடம்பை ஆத்மாவென்றும், உடம்பைச் சேர்ந்தவைகளைத் தன்னுடையதென்றும் எண்ணுவது. ருஜுவானது என்பது உடம்பைக்காட்டிலும் ஆத்மா வேறு என்றும், அவன் எம்பெருமானுக்காகவே இருக்கிறவனென்றும், அவனுக்குட்பட்டவனென்றும் எண்ணுவது. இதுதான் ஒருவன் அறிய வேண்டிய விஷயம். வேறு வார்த்தைகள் எதைச் செய்யும் ?

367. க்ருதாபராத⁴ஸ்ய (ராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம்-32-11)

அபராதம் பண்ணின உனக்கு கைகளைக் கூப்பிக்கொண்டு லக்ஷ்மணனை மன்னிப்புக் கேட்பதைக் காட்டிலும் வேறு பரிஹாரமான வேலையை நான் பார்க்கவில்லை,

368. யதி³ கிஞ்சித் (ராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம்—36-11)

நம்பிக்கையினாலோ, ப்ரீதியினாலோ, ஏதாவது மீறி நடப்பது இருந்ததேயானாலும், வேலைக்காரனாகிய என்னுடைய குற்றமானது பொறுத்துக்கொள்ளத்தக்கது. குற்றம் பண்ணாதவன் ஒருவனுமில்லை.

369. [illegible] (ராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம்—36-28)

துக்கத்தினால் வருத்தப்பட்டுக்கொண்டிருந்த ராமனுடைய சொல்லைக் கேட்டு நான் என்ன கடுமையான சொல்லைச் சொன்னேனோ, அதை நீ பொறுத்துக்கொள்ளவேண்டியது.

370. [illegible] (பாரதம் சாந்திபர்வம்-352-64)

ருத்திரன் யஜமானனாகிய தேவனான நாராயணனைக் கோபம் போய் அநுக்கிரஹம் பண்ணும்படி செய்தான். உலகத்தையுண்டு பண்ணினவனையும் மிகவும் சிறந்தவனையும் கேட்டதைக் கொடுப்பவனையுமிருக்கிற எம்பெருமானிடத்தில் பிரபத்தியும் பண்ணினான்.

371. [illegible] (பாரதம் சாந்திபர்வம்—352-65)

அப்போது கேட்டதைக் கொடுக்கிற எம்பெருமான் இந்திரியங்களை அடக்கிக்கொண்டிருக்கிறவனாகையாலே கோபத்தை ஜயித்து ருத்திரனுடன் சேர்ந்து ப்ரீதியுள்ளவனாய் ஆனான்.

372. [illegible] (லிங்கபுராணம்)

ஒரு பாகவதனாலே சொல்லப்பட்ட கடுமையான சொற்களைக் கேட்டு, எவன் அவனை நமஸ்காரம் செய்து குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லுகிறானோ, அவன் விஷ்ணுபக்தன்.

373. [illegible] (விஷ்ணுதர்மம்—52-20)

எவர்கள் பிரம்மவித்துக்களான பாகவதர்களோ, நான் அவர்கள்தான். இதில் ஸம்சயமில்லை, ராஜாவே ! அவர்களைப் பூஜிக்கும்போதும், நான் கிரமப்படி பூஜை செய்யப்படுகிறேன். அவர்களுக்கு ஸந்தோஷமுண்டாகும்பொழுது எனக்கும் ஸந்தோஷமுண்டாகிறது. எவன் அவர்களிடம் த்வேஷம் பண்ணுகிறானோ அவனிடத்தில் எனக்கும் த்வேஷம்.

374. [illegible] (இதிஹாஸ ஸமுச்சயம்—30-100)

எவன் ஒரு பிராம்மணன் தன்னையடித்தாலும், சபித்தாலும் கடுமையான சொல்லைச் சொன்னாலும், எப்படி நான் நமஸ்காரம் செய்தேனோ, அப்படி நமஸ்காரம் செய்யவில்லையோ, அவன் பாபம் செய்கிறவன். பிராம்மணனுடைய கோபமாகிய காட்டுத் தீயினால் கொளுத்தப்பட்டவன், சொல்லத்தகுந்தவன், தண்டிக்கத்தகுந்தவன், அவன் என்னுடையவனன்று. இது எம்பெருமான் வார்த்தை. எவர் பரதேவதையென்று அறிவதற்காக பிருகு என்கிற ருஷி எம்பெருமானுடைய மார்பில் உதைத்தபொழுது அவன் உடனே எழுந்திருந்து அவருக்கு நமஸ்காரம்செய்து மன்னிப்புக்கேட்டுக்கொண்டான். இந்த விஷயம் இங்கே 'யமாஹம்' என்பதால் சொல்லப்படுகிறது.

375. விஷ்ணும் க்ராந்தம் (பாரதம் ஆநுசாஸநிகபர்வம்—16-2)

உலகத்தையளந்த விஷ்ணுவென்றும் வாஸுதேவனென்றும் சொல்லப்பட்ட எம்பெருமானை நன்றாய் எவன் அறிகிறானோ அவன் உண்மையைத் தெரிந்தவனாய் பிராம்மணனாக ஆகிறான்.

தமிழ் வசனங்கள்.

86. அளிய நம் (திருமாலை—37)

இவன் நம்முடைய பிரீதிக்கு விஷயமான சிறுபிள்ளையென்று என்னுடைய ஸ்வாமியான ரங்கநாதன் சொல்லவில்லை. ஐயோ நான் செய்த பாபங்களின் கடுமையான தன்மை.

அரும்பதவுரை.

காணன் — ஒரு கண்ணில்லாதவன்.
கஞ்சன் — ஒரு காலில்லாதவன்.
சிகையறுக்கும் — தூக்கிக்கொண்டிருக்கிற சுமையை எடுத்துவிடும்.
அடையாளக்காரன் — குடை சாமரம் முதலானவைகளைப் பிடிக்கும் வேலைக்காரன்.
நலிய — வருத்தப்படுத்த.
ஈர்த்தவாய் — வெட்டுப்பட்டுப் பிரிந்திருக்கிற இடம்.

19. ஸ்தாநவிசேஷாதிகாரம்.

ஸம்ஸ்கிருத வசனங்கள்.

376. [illegible] (விஷ்வக்ஸேந ஸம்ஹிதை)

ஏகாந்தி (வேறு தேவர்களைப் பார்க்காதவன்) தன்னைச் சொல்லிக்கொள்ளும்போது விஷ்ணுவைச் சேர்ந்தவன் என்று சொல்லிக்கொள்ளவேண்டும். ஒருபோதும் கிராமத்தினால், அல்லது குலத்தினால் தன்னைச் சொல்லிக்கொள்ளக்கூடாது. ஏனென்றால் அவனுக்கு எல்லாம் பகவானே.

377. [illegible] (விஷ்ணுபுராணம்—6-1-50)

ஓ மைத்ரேயனே! கலியுகத்தில் வேதத்திற்கு விருத்தமானவைகளாலே கெட்டுப்போன மனதையுடைய ஜநங்கள் எல்லாவற்றையுமுண்டுபண்ணி, உலகத்துக்கு யஜமாநனை எம்பெருமானை ஆராதிக்கமாட்டார்கள்.

[illegible] (3-வது பக்கம் 13-நெ. பார்க்க)

378. [illegible] (பாகவதம்—11-5-40)

ஓ ராஜாவே! எந்த மனிதர்கள் அந்த நதிகளின் ஜலத்தைக் குடிக்கிறார்களோ, அவர்கள் சுத்தமான மனதையுடையவர்களாய் வாஸுதேவன் என்று சொல்லப்பட்ட எம்பெருமானிடத்தில் பஹுவாய் பக்தியுள்ளவர்களாக ஆவார்கள்.

379. [illegible] (பாரதம்-சாந்திபர்வம்—349-85)

ஓ பகவானே! தர்மமானது ஒரே காலுள்ளதாயிருந்து எங்கேயாவது போக யத்தனிக்கும்போது (கலியுகத்தில்) நாங்கள் எப்படியிருக்கவேண்டியது? இதை எங்களுக்குச் சொல்லவேண்டும்.

380. [illegible] (பாரதம் சாந்திபர்வம்—349-86,87)

எந்த இடத்தில் நல்லொழுக்கமுள்ள சமம் முதலான குணங்களையுடைய குருக்கள் வஸிக்கிறார்களோ, எந்த இடத்தில் தர்மமானது குறையவில்லையோ, அந்த இடத்தில் நீங்கள் இருக்கவேண்டியது. எந்தவிடத்தில் வேதங்கள், யஜ்ஞங்கள், தபஸ்ஸு ஸத்யம், இந்திரியங்களை யடக்குவது, தர்மத்துடன் ஹிம்ஸை செய்வது இவைகள் வழங்குகின்றனவோ, தேவசிரேஷ்டர்களே!

அந்த இடமானது நீங்கள் ஸேவிக்கத்தகுந்த இடம். அதர்ம மானது உங்களைக் காலாலே தொடாது. அதாவது அதர்மம் கால் வைக்கவுமிடமிருக்காது.

381. யாவஹ்ஹரீர (சரணாகதிகத்யம்)

உடம்பு கீழே விழுகிறவரையில் ஸ்ரீரங்கமாகிய இவ்விடத்தி லேயே ஸுகமாக இரு.

382. யத்ர நாராயணஃ (பாரதம் ஆரண்யபர்வம்–88–27,28)

எங்கே எல்லாருக்கும் ஆத்மாவாய் எப்போதுமிருக்கும் தேவனை நாராயணன் இருக்கிறானோ, அந்த இடமானது புண் ணியமானது; அதுவே மிகவுமுயர்ந்தது; அதுவே புண்ணிய தீர்த்தம்; அதுவே தபஸ்ஸு செய்யத்தகுந்த இடம்; அந்த இடத்திலேயே தேவருஷிகளும் ஸித்தர்களும் தபஸ்ஸு செய்கிற எல்லார்களுமிருக்கிறார்கள்.

383. மேருஃ (பாரதம்–பீஷ்மபர்வம்—12–8,9)

ராஜாவே! எல்லா தாதுக்களையுமுடைய சிறந்த கோமந்த மென்கிற மலையிருக்கிறது. அதில் தாமரைக்கண்ணனும் லக்ஷ்மீ பதியாய் யஜமானனுமிருக்கிற நாராயணன் மோக்ஷத்தையடைய வேண்டுமென்று ஆசையுள்ளவர்களாலே ஸ்தோத்திரம் பண்ணப் பட்டவராய் எப்போதும் எழுந்தருளியிருக்கிறார்.

384. ஸுஸமஃ (ராமாயணம் அயோத்யாகாண்டம்—98–12)

பர்வதத்துக்கு ராஜாவான ஹிமவத்மலைக்கு ஸமமான சித்திர கூடம் என்கிற இந்த மலையானது மிகுந்த பெருமையையுடை யது. ஏனென்றால் எதில் குபேரன் நந்தநவநத்திலிருப்பதுபோல ககுத்ஸ்தவம்சத்தில் அவதரித்த ஸ்ரீராமன் வஸிக்கிறாரோ?

385. துஷ்டேந்த்ரிய (ஸாத்வதஸம்ஹிதை—7–120)

துஷ்டமான இந்திரியங்களுக்கு உட்பட்டிருப்பதாலே மனி தர்களுடைய எந்த மனதானது கல்மஷங்களினாலே சூழப்பட்டி ருக்கிறதோ, அந்த மனதானது ஈடைசி காலத்தில் நாராயணன் எழுந்தருளியிருக்கிறவிடத்தில் வஸிப்பதால் நல்ல சுத்தியை யடைகிறது. இங்கே கல்மஷமாவது– சாஸ்திரத்திற்கு விரோத மில்லாமல் விஷயங்களில் மனது படிந்திருப்பது. நல்ல சுத்தி யாவது எம்பெருமானைப் பார்ப்பது.

386. [illegible]

ஒருவன் தேவாலயமிருக்கும் ஊரில் தன்னால் முடிந்த ஏதாவது ஒரு கைங்கரியத்தைச்செய்துகொண்டு வஸிக்கவேண்டியது. இது முடியாவிட்டால் செய்யக்கூடாதென்று சொன்னவைகளைச் செய்யாமலாவது வஸிக்கவேண்டும்.

387. [illegible] (இதிஹாஸஸமுச்சயம்—27_18)

எந்த இடத்தில் ஒரு மனிதன் இந்திரியவர்க்கத்தையடக்கிக் கொண்டு வஸிக்கிறானோ அந்த இடத்தில் குருக்ஷேத்திரம் நைமிசம் புஷ்கரம் ஆகிய புண்ணியஸ்தலங்களிருக்கின்றன.

388. [illegible] (வராஹபுராணம்)

எப்போது ஜ்ஞானமுண்டாகிறதோ, அதேகாலத்தில் இந்த மந்திரத்தைச்சொல்லி ப்ரபத்திபண்ணினவன் புண்ணியதீர்த்தத்திலேயோ, நாய் மாமிஸம் சாப்பிடுகிறவன் வீட்டிலேயோ நினைவு போய், மரணமடைந்தாலும் மோக்ஷத்தையடைகிறான்.

தமிழ் வசனங்கள்.

87. கருந்தட (பெரியாழ்வார் திருமொழி—4-4-7)

மிகவும் கருப்பான மேகம்போல் வர்ணமுடைய எம்பெருமானை ரக்ஷகனாக எண்ணி கையைக்கூப்பி வணங்குகிற பக்தர் இருந்த ஊரில் இருக்கும் மனிதர், அந்த ஊரிலிருப்பதற்கு என்ன தபஸ்ஸு செய்தார்களோ.

---

20. நிர்யாணாதிகாரம்.

ஸம்ஸ்கிருத வசனங்கள்.

389. [illegible] (ஜிதந்தாஸ்தோத்ரம்)

எல்லா உபாயங்களையும், ஆத்மாவைய நுபவிப்பதுள்பட எல்லா ஆசைகளையும் நன்றாக விட்டுவிட்டு ஓ பிரபுவே! உலகத்தையளந்த தேவரீருடைய திருவடிகளை உபாயமாகஅடைந்தேன்.

390. [illegible] (விஷ்ணுதர்மம்—3-24)

பக்தியினாலே விலைக்கு வாங்கப்பட்ட ஜநார்த்தநன் என்கிற எம்பெருமானுடைய கையே பிரபந்நனுக்கு அவலம்பநம்(பிடிப்பு) ஆக இருக்கிறது.

ராஜாதிராஜ: (31-வது பக்கம் 56-வெ. பார்க்க)

391. கவாயாவிரத: (லக்ஷ்மீதந்திரம்—17-102)

என்னைச் சரணமாகப் பற்றினபிற்பாடு அடிக்கடி பாபங்கள் பண்ணி, அவைகளுக்குப் பிராயச்சித்தம் பண்ணுதவன், அநுபவத்தினால் அந்த பாபங்களையெல்லாம் போக்கி தாமதித்து என்னை வந்து அடைகிறான்.

392. யாவிதெதாவி (விஷ்ணுதர்மம்)

பக்தர்களாலே வேண்டிக்கொள்ளப்பட்டாலும் எம்பெருமான் அவர்களுக்கு ஹிதமில்லாததைப் பண்ணும்படி ஒரு போதும் செய்கிறதில்லை. நெருப்பில் விழப்போகிற குழந்தையைத் தாயார் விலக்குகிறதில்லையோ ?

393. யஸ்யாநுக்ரஹம் (பாகவதம்)

எவனுக்கு அநுக்கிரஹம் பண்ணவேண்டுமென்று நான் எண்ணுகிறேனோ அவனுடைய தநத்தை நான் அபஹரித்துவிடுகிறேன். அப்போது பந்துக்கள் அவனை விட்டுவிடுகிறார்கள். அதனால் அவன் எப்போதும் துக்கமுள்ளவனாக ஆகிறான். அந்த துக்கத்தினால் மிகவும் வருத்தப்பட்டவன் என்னை விடாவிட்டால், எந்த அநுக்கிரஹமானது தேவர்களாலும் அடையமுடியாதோ, அந்த அநுக்கிரஹத்தை அவன் விஷயத்தில் செய்கிறேன்.

394. கமெஶாவாய (லக்ஷ்மீதந்திரம்—17-103)

வேறு பிரயோஜநத்தை அடைவதற்கு ஸாதநமான காமிய கர்மங்களில் ஆசையுள்ளவன் துக்கக்கலப்பில்லாத போகங்களை அநுபவித்து கடைசியில் வைராக்கியத்தையடைந்து எம்பெருமானுடைய ஸ்தாநத்தையடைகிறான்.

395. தத:யிமகெ (பிரம்மஸூத்திரம்—4-1-13)

பக்தியோகம் உண்டானபோது அதைச் செய்கிறவனுடைய முன்பாபங்களுக்கு நாசமும், பின் செய்யும் பாபங்கள் ஒட்டாமையும் உண்டாகிறது. அப்படியே வேதத்தில் சொல்லியிருப்பதால்.

396. ப்ரியேஷு (மநுஸ்மிருதி — 6-79)

முக்தியையடையப்போகிறவன் தன்னுடைய புண்ணியங்களைத் தனக்கு வேண்டியவர்களிடத்திலும், பாபங்களை வேண்டாதவர்களிடத்திலும் விட்டுவிட்டு, பக்தியோகத்தினாலே எப்போதுமிருக்கிற பிரும்மத்தையடைகிறான். 'ஸமேத்தி' என்பதற்கு லயத்தையடைகிறானென்று பொருளாய் எம்பெருமானுக்கு ஸமமான போகத்தையடைகிறானென்று கருத்து.

397. திவாச (பாரதம் ஆநுசாஸநிகபர்வம் — 242-31)

பகலும் சுக்கிலபக்ஷமும் உத்தராயணமும் இறந்துபோகிறவர்களுக்கு நல்ல காலங்கள்.

398. நிசிநேதி (பிரும்மஸூத்திரம் — 4-2-18)

ராத்திரியில் மரணமடைந்தவனுக்கு மோக்ஷம் கிடையாது என்று சொல்லுகிற பக்ஷங்கூடாது. ஏனென்றால் கர்மத்தினுடைய ஸம்பந்தம் உடம்பு இருக்கிறவரையில்தான் இருக்க வேண்டியதாகையால்.

399. அதஸ்சாயநேபி (பிரம்மஸூத்திரம் — 4-2-19)

இதே காரணத்தாலே தக்ஷிணாயநத்தில் மரணம் அடைந்தவனுக்கு மோக்ஷமில்லையென்கிற பக்ஷமும் கூடாது.

400. அநந்தா: (யாக்ஞவல்க்யஸ்மிருதி — 4-66 + 69)

எந்த ஜீவன் விளக்குப்போலே ஹிருதயத்திலிருக்கிறானோ, அவனுக்கு நாடிகள் கணக்கில்லாமலிருக்கின்றன. அந்த நாடிகள், வெளுப்பாயும் கறுப்பாயும், ஊதாநிறமாயும் நீலமாயும் பொன்வர்ணமாயும் மஞ்சள் நிறமாயும் சிவப்பாயும் இப்படி பல வர்ணங்களாயிருக்கும். அவைகளின் நடுவில் ஒரு நாடி மேலே போகிறது. அதன் வழியாகப் போகிற ஜீவன் ஸூர்யமண்டலத்தைப் பிளந்துகொண்டு பிரம்மாவின் உலகத்தைத் தாண்டி உயர்ந்த கதியை யடைகிறான். வேறு நூறு நாடிகள் மேலே போகின்றன. அவைகளின் வழியாக வெளிக்கிளம்புகிறவன் தேவசரீரங்களையும் தேவ உலகங்களையும் அடைகிறான். கீழே சில நாடிகள் போகின்றன. அவைகள் குறைந்த பிரகாசமுடையவைகள், அவைகளின் வழியாய் வெளிக்கிளம்புகிறவன் இந்த உலகத்தில் கர்மத்தின் பலன்களை அநுபவிப்பதற்காகத் தன் வச

மில்லாமல் ஸம்ஸாரியாகப் பிறக்கிறான். விளக்குப்போல் ஹிருதயத்திலிருக்கிற ஜீவனுக்கு நாடிகள் கிரணங்கள்போல்இருப்பதால் அவைகளை ரச்மிகள் என்று சொல்லியிருக்கிறது.

நஷ்டஸ்ம்ருதி: (85-வது பக்கம் 388_செ. பார்க்க)

401. ஸ்திதே மநஸி (வராஹசரமச்லோகம்)

மனது நல்ல நிலையிலும், உடம்பு சிதிலமாகாமலும், தாதுக்கள் ஸமமாயும் இருக்கும்போது எந்த மனிதன் உலகங்களை உடம்பாக உடையவனாய் கர்மத்தினால் பிறப்பில்லாதவனாயுமிருக்கிற என்னை நினைக்கிறானோ, அவன் இறந்து போகிறவனாய் கட்டைப் போலவும் கல்லைப் போலவுமிருக்கும்போது என் பக்தனை நான் நினைத்துஅவனை உயர்ந்த கதியையடையும்படி செய்கிறேன்.

402. ஶரீர (சரணாகதிகத்யம்)

உடம்பு கீழே விழுகிற ஸமயத்திலே என்னுடைய தயையினாலேயே மிகவும் நல்ல அறிவையுடையவனாய் என்னையே பார்த்துக்கொண்டு, முன் உண்டாயிருந்த ஸம்ஸ்காரங்களும் ஆசைகளும் தன்னை விட்டுப் போகாமல்.

403. யம்யம் வாபி (கீதை—8-6)

ஒருவன் எந்தஎந்த விஷயத்தை நினைத்துக்கொண்டு கடைசியில் உடம்பை விட்டுவிடுகிறானோ அந்தந்தவிஷயத்தையே அவன் அடைகிறான்.

404. யம் யோமிந: (பாரதம் சாந்திபர்வம்—46-143)

யோகம் செய்கிறவர்கள் பிராணன் உடம்பை விட்டுப் போகும் காலத்தில் பிரயத்தினப்பட்டு எந்த பகவானை மனதில் இருக்கும்படி செய்கிறார்களோ, அந்த பகவானையே முன்னாலே பார்த்துக் கொண்டு பீஷ்மர் பிராணனை விட்டார். உபாஸனையின் பலனை யவர் அடைந்தவரன்றோ.

ஜாயமாநம் (88வது பக்கம் 401_செ. பார்க்க)

405. ஹ்ருத்ஸ்த: ஸ்ம்ருதி: (கீதை—15-15)

எல்லாருடைய ஹ்ருதயத்திலும் நானிருக்கிறேன். என்னிடத்திலிருந்துதான் அறிவும், போன ஸங்கதியை நினைப்பதும், மறப்பதுமுண்டாகின்றன.

தமிழ் வசனங்கள்.

88. கடைத்தலை (திருமாலை—38)

கடைவாசலில் அதாவது தூரத்திலிருந்து வாழும் சோம்பே றிகளைக் கண்டு நீ ஸந்தோஷப்படுகிறாய். இங்கே தூரத்திலிருப்பதாவது கர்மயோகம் ஜ்ஞாநயோகம் பக்தியோகம் ஆகிய இவைகளில் ஒன்றையும் செய்யாதிருப்பது. சோம்பேறி என்பது அகிஞ்சநனான பிரபந்நன்.

89, விண்ணுலகம் (திருவாய்மொழி—10-6-3)

முக்தியடையப்போகிறவனுக்கு பரமபதத்தைக் கொடுக்கிறவனாய் தான் அவஸரப்படுகிறவனாய்.

90. இருள்தருமா (திருவாய்மொழி—10-6-1)

இனிமேல் அஜ்ஞாநத்தைக் கொடுக்கிற இந்த உலகத்தில் பிறப்பதை நான் வேண்டுவதில்லை. 'இனிமேல்' என்பதற்கு எம்பெருமானுடைய கடாக்ஷத்தாலே தத்வஜ்ஞாநம் பிறந்தபின்பு என்று பொருள்.

91. மாயம், உன் திருமார்பிந்து (திருவாய்மொழி 10-10-2)

முன்போல் வஞ்சனையைச் செய்யவேண்டாம். தேவரீருடைய மார்பில் மாலை போல் அலங்காரமாக இருக்கிற நல்ல குணங்கள் நிறைந்த வாஸனையை வீசும் அழகான மயிர்முடியையுடைய பிராட்டியின் பேரில் ஆணை. தேவரீர் பேரில் ஆணை.

92. சரணமாகும் (திருவாய்மொழி 9-10-5)

தன்னிடத்தில் பிரபத்திபண்ணினவர்களுக்கு மரணம் வந்த போது வைகுந்தத்தைக் கொடுக்கும் உபகாரகனான எம்பெருமான்

93. போயபிழையும் (திருப்பாவை—5)

முன் செய்த பாபங்களும் பிரபத்திக்கு மேலுண்டாகும் பாபங்களும் நெருப்பில் போட்ட பஞ்சு போல் இருந்தவிடம் தெரியாமல் போய்விடும்.

94. நமன் (பெரியாழ்வார் திருமொழி—5-4-3)

யமன் போலே ஸம்ஸாரத்தில் விழும்படி பண்ணி அழுக்கு கிற உலகத்தில் பிரஸித்தமான பாபங்களெல்லாம் சப்தம் செய்

யாமல் அதாவது மூச்சுவிடாமல் முக்தியடைகிறவனை விட்டுப் போய் செடிகளில் போய்ச் சேர்ந்தன. இங்கே செடிகள் என்பது அநேக பாபங்கள் நிறைந்திருக்கிறபடியால் செடிகள் போலிருக்கிற சத்துருக்கள்.

95. துப்புடையாரை (பெரியாழ்வார் திருமொழி 4-10-1) இந்திரியங்களுக்கு சக்தி குறைந்துபோகும் ஆபத் காலத்திலே துணையாக இருக்க வேணும் என்று எண்ணி, ஸாமர்த்திய முடைய தேவரீரை அடைவது, தேவரீர் திருவுள்ளப்படிக்குள்ள அதிகாரிகளுக்கு நான் ஒப்பில்லாதவனாயினும் தேவரீர் கஜேந்திராழ்வானை கிருபைசெய்து ரக்ஷித்தபடியாலே தேவரீரைச் சரணமடைந்தேன். இளைப்பு - அதாவது மரணகாலம் வந்து என்னை வருத்தப்படுத்தும்போது தேவரீரை நான் நினைக்கமுடியாது. ஆகையால் அப்போது ஆகவேண்டிய வேலைக்கு இப்போதே விண்ணப்பஞ் செய்துகொண்டேன். ஸ்ரீரங்கத்தில் ஆதிசேஷன் மேல் பள்ளிகொண்டிருக்கும் எம்பெருமானை.

அரும்பதவுரை.

உண்டதுருக்காட்டாதே — சாப்பிட்டது அடையாளம் தெரியாதே. போக்கினது இன்னதென்று வெளிப்படுத்தாமல்.
வயிறுதாரியாய் — வயிற்றை நிரப்புகிறவன்.
அசல் பிளந்து ஏறிடுகிற — முன்னிடத்திலிருந்து ஒன்றைப் பிளந்து வேறிடத்தில் வைப்பது.

---

21. கதிசிந்தநாதிகாரம்.

ஸம்ஸ்கிருத வசனங்கள்.

ஶரணம் ஸுராதி³ | (87-வது பக்கம் 400-வது நெ. பார்க்க)

406. லோகம் வைகுண்ட² (ஜிதந்தா ஸ்தோத்ரம்—2-18-20)

வைகுண்டமென்கிற பெயரையுடைய உலகத்தைக் கண்ணாலே எப்போது பார்க்கப்போகிறேன். அது எப்படியிருக்கிறதென்றால்— அது நன்றாய் பிரகாசிக்கிறது ; ஜ்ஞானம் முதலான ஆறு குணங்களையுடைய எம்பெருமானுடன் சேர்ந்திருக்கிறது ; அவ

னிடத்தில் பக்தியில்லாதவர்களால் அடையமுடியாதது; ஸத்துவம் முதலான மூன்றுகுணங்களால் விடப்பட்டது. நித்தியஸூரிகளாலும் முன்னால் ஒவ்வொருநாளையும் ஐந்துபாகம் பண்ணி அதற்குத்தகுந்த கைங்கரியங்களைப் பண்ணிக்கொண்டிருந்து பிறகு அவர்களைப் போலான முக்தர்களாலும் நிறைந்திருக்கிறது; ஆஸ்தான மண்டபங்களோடும், உப்பரிகைகளோடும் சேர்ந்தது. காடுகளாலும் உத்யானங்களாலும் அழகாய், நடவாபிகள், கிணறுகள், குளங்கள், மரக்கூட்டங்கள் இவைகளினால் அலங்கரிக்கப்பட்டதாயிருக்கிறது; பிருகிருதியின் காரியமான துக்கம் முதலானது இல்லாதது; நித்திய ஸூரிகளால் ஸேவிக்கத் தகுந்தது; பதினாயிரம் ஸூரியன்கள் சேர்ந்ததுபோல் பிரகாசிக்கிறது. ரஜஸ்ஸோடும் தமஸ்ஸோடும் கலக்காத ஸத்துவகுணமுள்ளது.

407. [illegible] (பாரதம் சாந்திபர்வம் 312-30,38,39)

இந்த பிரகிருதியினால் அதற்கு உட்பட்டவனாய் செய்யப்பட்டு வீணாய்ப்போன இந்த காலத்தை அது எவ்வளவு என்று நான் அறியவில்லை. உயர்ந்த தேவசரீரத்தையும், நடுத்தரமான மனித சரீரத்தையும், தாழ்ந்த நரகானுபவத்துக்கு வேண்டிய சரீரத்தையும் உடைய இந்த பிரகிருதியில் நான் எப்படியிருப்பேன். இதை விட்டு தூரம் போய் ஒருவிதக் குறைவுமில்லாத எம்பெருமானை அடைவேன். அவனுடன் ஒற்றுமையையடையப் போகிறேன். அறிவில்லாத இந்தபிரகிருதியுடன் ஒற்றுமை எனக்கு வேண்டாம். அவனுடன் ஒன்றாயிருப்பது எனக்குத் தகுந்தது. இத்துடன் ஒன்றாயிருப்பது தகுந்ததன்று. பிரகிருதியுடன் ஒன்றாயிருப்பதாவது உடம்பையே ஆத்மாவாக எண்ணுவது.

408. [illegible] (ஜிதந்தா ஸ்தோத்ரம்—2-21½)

விளையாடும் உத்யானங்களில் பிராட்டியுடன் விளையாடிக்கொண்டும் மேகம்போல் நீலவர்ணமாயும் விசாலமான கண்ணையுடைய கேசவனை கண்ணாலே எப்போது பார்ப்பேன்.

409. மேகஶ்யாமம் (ராமாயணம் அயோத்தியா 83-8-9)

மேகம்போல நீலவர்ணமாயும், நீண்ட கைகளையுடையவனையும், நிலையான ஸத்துவகுணமுள்ளவனையும், தன்னை அடைந்தவர்களை ரக்ஷிப்பதில் உறுதியான ஸங்கல்பமுள்ளவனையும் உலகத்திலுள்ள துக்கத்தைப் போக்குகிறவனையுமான ராமனை எப்போது

பார்ப்போம். உதயமாகிற ஸூரியன் எல்லா உலகத்தினுடைய இருட்டைப்போக்குவதுபோல், நம்மால் பார்க்கப்பட்டவுடனே நம்முடைய துக்கத்தை ராகவன் போக்குவன்.

ஸவயஸ ஐவ (18வது பக்கம் 94வது நெ. பார்க்க)

410. ஸக்ஷஃவெஷஷி. (பாரதம் சாந்திபர்வம். 307-77)

சுத்தஸ்வரூபமான ஸத்வகுணமானது அநிருத்த ரூபனை நாராயணனை அடையும்படி செய்கிறது. அந்த சுத்தஸ்வரூபனாய் அநிருத்தரூபனான பிரபு பரமாத்மாவான பரவாஸுதேவனிடம் தானே கொண்டுபோகிறான்.

411. யெதஊஷெஹுஸநாः (பாரதம் சாந்தி 354, 13-20)

ஓ பிராம்மண சிரேஷ்டனே! எவர்கள் இந்த உலகத்தில் புண்ணிய பாபங்களால் விடப்பட்டு, ஸம்ஸாரமாகிட அக்னிக்கு விறகுபோலிருக்கும் கர்மங்களில்லாதவர்களாய், தங்களுக்கு நல்லதான விஷ்ணுலோகத்துக்குப் போகிறவழியில் போகிறவர்களாயிருக்கிறார்களோ, அவர்களுக்கு எல்லாஉலகத்துக்கும்இருட்டைப் போக்கும்ஸூரியன் த்வாரமாகச்சொல்லப்படுகிறான். அவன் அநேகங் கிரணங்களையும் மிகுந்த தேஜஸ்ஸையுமுடையவன். அவனால் இந்த உலகமானது தரிக்கப்படுகிறது. ஸூரியனாலே கொளுத்தப்பட்ட பிராகிருதசரீரம்முழுவதும்போனவர்களாய் சரீரமில்லாமையால்ஒருவனாலும் ஒருபோதும் பார்க்கப்படாதவர்களாய்பரமாணு அளவுள்ள ஆத்மஸ்வரூபமுள்ளவர்களாய் அந்த அநிருத்தன் என்கிற தேவனிடம் போகிறார்கள். அந்த அநிருத்தனுடைய உடம்பிலிருந்து அதிலிருந்து விடுபட்டு மனது மாத்திரம் மீதியுள்ளவர்களாய் பிரத்யும்நனிடம்போகிறார்கள். பிரத்யும்நனிடமிருந்துவிடப்பட்டுஜீவன்களுக்குஅபிமானியானஸங்கர்ஷணனையடைகிறார்கள். அவர்களோடு கூட ஆத்மகுணங்கள் நிறைந்தவர்களாய் ஜ்ஞாநயோகம் கர்மயோகம் செய்கிறவர்களும் ஸங்கர்ஷணனிடம் போகிறார்கள். பிறகு மூன்று குணங்களாலே விடப்பட்டவர்களாய் அந்தர்யாமியாயும் ஸ்வரூபத்தில் இளப்பமான குணங்களில்லாதவனுயுமிருக்கிற பரமாத்மாவை சீக்கிரம் அடைகிறார்கள். அவன் எல்லாருக்கும் இருப்பிடமாயும் அந்தர்யாமியாயுமிருக்கிற வாஸுதேவன் நியமங்களோடு சேர்ந்தவர்களாயும் வேறு விஷயங்களிலிருந்து திரும்பின இந்திரியங்களையுடையவர்களாயும், ஒரேவிடத் ·

தில் வைக்கப்பட்ட மனத்தையுடையவர்களாயும் அவனையே பிர யோஜனமாக எண்ணுகிறவர்களாயுமிருக்கிற அவர்கள் வாஸுதேவ னிடம் போகிறார்கள். இந்த விஷயத்தை உண்மையென்று அறி.

412. ஶ்வேதத்வீபம் (ஜயத்ஸம்ஹிதை)

இங்கிருந்து ச்வேதத்வீபத்திற்குப்போய் உலகத்தை ரூப மாகத் தரித்திருக்கிற எம்பெருமானையடைந்து, அங்கிருந்து திருப்பாற்கடலிலிருக்கும் அநிருத்தனையடைந்து அங்கிருந்து எல்லாருக்குமீசுவரர்களான பிரம்மா முதலானவர்களுக்குமீசுவர னான பிரத்யும்நனையடைந்து, அங்கிருந்து எப்போதுமிருக்கும் மேன்மையான பகவானான ஸங்கர்ஷணனையடைகிறார்கள். எப் போதும் பிரம்மானந்தத்தை யாசைப்பட்டு பரமைகாந்திகளாய் ஐந்து காலங்களில் எம்பெருமானுக்குப் பூஜை செய்யும் மனிதர் களாய் ஸித்தியடைகிறவர்களுக்கு இது வேறொரு மார்க்கம்.

413. விபவாவ்யூஹ நாஜ (ஶ்ரீபாஷ்யம் 2-2-41)

எம்பெருமானுடைய விபவரூபத்தைவிட்டு வியூஹ ரூபத் தையடைந்து, அதைவிட்டு பரப்ரம்மத்தையடைகிறார்கள் என்று சொல்லுகின்றன.

414. ஸமீபம் (ராமாயணம் ஸுந்தரகாண்டம்—19-7)

தன்னையடைந்தவர்களை ரக்ஷிக்கும் ஸ்வபாவமான தன்னு டைய ஸ்வரூபத்தையறிந்த ராஜச்ரேஷ்டனான ராமனுடைய ஸமீ பத்தை இப்போதே அவன் ஸமீபம் போகவேண்டுமென்கிற எண்ணமாகிற குதிரைகள் கட்டின மனோரதங்களாகிற ரதங்க ளாலே போகிறவள் போலிருக்கிறாள் பிராட்டி.

தமிழ் வசனங்கள்.

96. மன்னுங்கடுங் (பெரிய திருமடல்)

ஸ்திரமாயிருக்கும் உஷ்ணமான கிரணங்களையுடைய ஸூரி யனுடைய மண்டலத்தில் நல்ல நடுவில் சிறந்த துவாரத்தின் வழி யாய் போய்.

97. தேரார் (சிறிய திருமடல்)

தேரில் நிறைந்திருக்கிற நிறைந்த கிரணங்களையுடையஸூரி யனுடைய மண்டலத்தில்ஓட்டையையுண்டுபண்ணி அதில்புகுந்து

98. சண்டமண்ட (திருச்சந்தவிருத்தம்—67)
க்ரூரனை ஸூர்யனுடைய மண்டலத்தின் நடுவில் போய்.
இருளகற்று (68-பக்கம் 789 செ. பார்க்க)
99. அமரரோடு (திருவாய்மொழி—1-3-11)
ஆதிவாஹிகர்களான அமரர்களுடன் உயர்ந்த இடமான வைகுந்தத்தைச் சேர்ந்து நம்முடைய ஸம்ஸாரமாகிற அழகான அதாவது மிகவும் க்ரூரமான ஜபிலேப் போக்குவர்.
100. குடியடியார் (திருவாய்மொழி—10-9-8)
கோவிந்தனுக்கு அதாவது எம்பெருமானுக்கு இவர் தலைமுறை தலைமுறையாக வேலைக்காரர்கள் என்று கிரீடங்களையுடைய நித்யஸூரிகள் வரிசைவரிசையாக எதிர்கொண்டுவர, த்வஜத்தை அலங்காரமாகவுடைய உயரமான மதில்களையுடைய கோபுரத்தின் கிட்டப்போகும்படி செய்து.

அரும்பதவுரை.

ஓலக்கம் — ஸபை. புரை — பேதம்.
பரிமாறி — கூடி ஸம்ச்லேஷம் பண்ணி.

22. பரிபூர்ண பிரம்மாநுபவாதிகாரம்.

ஸம்ஸ்கிருத வசனங்கள்.

415. நிரஸ்தாதிசய (விஷ்ணுபுராணம் 6-5-59)
எம்பெருமானையடைவதானது ஸம்ஸாரமாகிய வியாதிக்கு மருந்து. அது எப்படியிருக்கிறதென்றால் ஸுகமாகவேயிருக்கிறது; வேறு ஸுகத்தை அநுபவிக்கத் தகாதவனாய்ப் பண்ணுகிறது. இதற்கு மேற்பட்ட வேறு ஸுகமில்லாதபடி உயர்ந்திருக்கிறது. அதில் துக்கக் கலப்பில்லை. அதற்கு முடிவுமில்லை.
416. யஸ்த்வயா (ராமாயணம் அயோத்தியாகாண்டம்—30-18)
தேவரீருடன் சேர்ந்திருப்பதே எனக்கு மோக்ஷம்; தேவரீரை விட்டிருப்பது எனக்கு நரகம் என்று தேவரீரிடத்தில் எனக்கு இருக்கிற மிகுந்த பிரீதியையறிந்து ஓ ராமனே! என்னோடு காட்டுக்குப் போ.

417. 𑌨𑌹𑌿 𑌮𑍇 (ராமாயணம் ஸுந்தரகாண்டம்—26-5)

மஹாரதனை ராமனில்லாமல் ராக்ஷஸிகளின் நடுவில் வஸிக்கிற எனக்குப்பிழைத்திருப்பதால் என்ன பிரயோஜநம் ? பணம் காசு ளாலே என்ன பிரயோஜநம்? நகைகளால்தான் என்னபிரயோஜநம்? எந்த வீரன் தன்னையும் தன் ரதத்தையும் குதிரைகளையும் ஸாரதியையும் ரக்ஷித்துக்கொள்ள ஸமர்த்தனோ, அவன் மஹாரதன்.

418. [illegible] (அஹிர்புத்ந்யஸம்ஹிதை—37-26)

எந்தவிடத்திலிருந்து எம்பெருமானை உபாஸனம் பண்ணினவன் திரும்பி வருகிறதில்லையோ, அந்த உயர்ந்த இடமானது அவனால் அடையப்படுகிறது.

419. 𑌮𑌾𑌮𑍁𑌪𑍇𑌤𑍍𑌯 (கீதை—8-15-16)

மஹாத்மாக்கள் மிகவுமுயர்ந்த ஸித்தியையடைந்தவர்களாய் என்னிடம் வந்து, துக்கத்துக்கு இருப்பிடமாயும் நிலையில்லாததாயுமிருக்கிற மறுஜந்மத்தை அடைகிறதில்லை. அர்ஜுநனே ! பிரம்மாவினுடைய இடம் உள்பட எல்லா உலகங்களும் போய் திரும்பிவரத்தகுந்தவைகள். குந்தியின் பிள்ளையே ! என்னை அடைந்தோர் மறுபிறப்பை அடைகிறதில்லை.

420. 𑌯𑌦𑌾 𑌸 𑌕𑍇𑌵𑌲𑍀 (பாரதம் சாந்திபர்வம்—323-81)

எப்போது எந்த முமுக்ஷுவானவன் பிரகிருதிஸம்பந்தம் போய் இருபத்தாறுவதான தத்துவமான எம்பெருமானைப் பார்க்கிறானோ, அப்போது எல்லாவிதமான ஸித்தியையடைந்தபடியால் அவன் மறுபடியும் பிறக்கிறதில்லை.

421. 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌗𑌤𑍍𑌵𑌾 (விஷ்ணுபுராணம்—1-6-40)

சந்திரனாகவும் ஸூரியனாகவும் மற்ற கிரஹங்களாகவுமிருக்கிற ஜீவன்கள் தங்கள் அதிகாரம் முடிந்தவுடன் பிரளயகாலத்தில் நாசத்தையடைந்து மறுபடியும் ஸம்ஸாரத்திற்குத் திரும்பிவருகிறார்கள். பன்னிரண்டெழுத்துள்ள மந்திரத்தினால் எம்பெருமானைத் தியாநம் பண்ணி வைகுந்தத்திற்குப் போனவர்கள் இது வரையில் திரும்பிவரவில்லை. சந்திரன் முதலானவர்களைச்சொன்னது பிரும்மா முதலான அதிகாரிகளும் இப்படியே திரும்பிவர வேண்டியதென்பதைக் காட்டுகிறது.

422. [Grantha] (விஷ்ணு தர்மம் 10-2-29)

தர்மவியாதர் முதலான மற்றவர்கள் அருவருக்கக்கூடிய தாழ்ந்த ஜாதியிலிருந்தபோதிலும் முன்ஜந்மத்தில் பக்தியோகம் செய்த பழக்கத்தால் மறுபடியும் அதை ஆரம்பித்து இந்த ஜந்மத்தில் அதை முடித்து ஸித்தியையடைந்தார்கள் ச்ரமணியைப் போல.

423. [Grantha] (ஸ்ரீபாகவதம் என்று முன்னோர்கள்)

சிலர் விஷ்ணுவின் உலகங்களில் வஸிக்கிறார்கள். இது ஸாலோக்கியம். சிலர் அவன் ஸமீபத்தையடைகிறார்கள், இது ஸாமீப்பியம். வேறு சிலர் அவனுடைய ரூபத்துக்கு ஸமமான ரூபத்தையடைகிறார்கள், இது ஸாரூப்பியம். இன்னும் சிலர் ஸாயுஜ்யத்தையடைகிறார்கள். அதுதான் மோக்ஷமென்று சொல்லப்படுகிறது. ஸாயுஜ்யமென்பது எம்பெருமானுடைய போகத்துக்கு ஸமமான போகத்தையநுபவிப்பது.

424. [Grantha] (2-வது ஜிதந்தா—36)

நீண்ட திருக்கைகளையுடையவனே! ஸாலோக்கியம் ஸாரூப்யம் என்கிற மோக்ஷத்தை ஒருபோதும் வேண்டேன். நான் வேண்டுவது தேவரீருடைய ஸாயுஜ்யத்தை. ஆச்ரிதர்களை ரக்ஷிப்பதாகிய நல்ல ஸங்கல்பத்தையுடையவனே!

425. [Grantha] (பிரம்மஸூத்திரம்—4-4-17)

முக்தன் எம்பெருமானுக்கு மிகவும் உயர்ந்த ஒற்றுமையை அடைகிறான் என்பது உலகத்தையுண்டுபண்ணி ரக்ஷிப்பது முதலான வியாபாரங்களைத் தவிர மற்ற விஷயங்களில்.

426. [Grantha] (பிரம்மஸூத்திரம்—4-4-21)

பரிபூர்ணமான பிரம்மாநுபவத்தில் மாத்திரம் ஒற்றுமையைக் காட்டுகிற அடையாளங்களாலே, உலகவியாபாரம் முக்தனுக்கில்லை.

427. [Grantha] (சாகடாயநன்)

ஸாயுஜ்யமென்பது எம்பெருமானுடைய ஆநந்தாநுபவத்துக்கு ஸமமான ஆநந்தாநுபவத்தை அடைவதென்று பிரம்மவாதிகள் சொல்லுகிறார்கள்.

428. மம ஸாத⁴ர்ம்யமாக³தா: (கீதை—14-2)

இந்த உபாஸனமான ஞானத்தையடைந்து என்னுடன் ஒற்றுமையைப் பெற்றவர்கள் ஸ்ருஷ்டிகாலத்தில் பிறக்கிறதில்லை. பிரளயகாலத்தில் வருந்தப்படுகிறதுமில்லை.

429. பரேண (பாரதம் சாந்திபர்வம்—313-26-31)

முக்தன், பரனுடன் அதாவது மிகவுயர்ந்தவனான எம்பெருமானுடன் சேர்ந்து, அவனுடைய தர்மங்களைப்போன்ற தர்மங்களை உடையவனாக ஆகிறான். எப்படியென்றால் அவித்யை முதலான குற்றங்களில்லாத எம்பெருமானுடன் சேர்ந்து தானும் அந்த குற்றங்களுமில்லாதவனாய், எல்லாம்தெரிந்த அவனுடன் சேர்ந்து தானும் ஸர்வஜ்ஞனாய், கர்மபந்தமில்லாத அவனுடன் சேர்ந்து தானும் அதுபோனவனாய், பரதசிரேஷ்டனே! துக்கத்தின் சேர்க்கையில்லாத அவனுடன் சேர்ந்து தானும் துக்கம் நீங்கினவனாய், ஆநந்தத்தையுடைய அவனுடன் சேர்ந்து தானும் ஆநந்தமுடையவனாய், கர்மத்தினால் ஏவப்படாமல் தன் ஸங்கல்பத்தாலேயே கர்மங்களைச் செய்கிற அவனுடன் சேர்ந்து தானுமப்படியே ஸங்கல்பத்தினாலே வேலை செய்கிறவனாய், அளவில்லாத காந்தியையுடையவனாய், ஸத்துவம் முதலான குணங்களில்லாத அவனுடன் சேர்ந்து தானும் அந்த குணங்கள் போனவனாய், பிரகிருதியிலிருந்து உண்டான உடம்பும் இந்திரியங்களுமில்லாத அவனுடன் சேர்ந்து தானும் அவைகளால் விடப்பட்டவனாய், கர்மத்துக்குஉட்படாமல் ஸ்வதந்திரன் என்றுசொல்லப்பட்ட அவனுடன் சேர்ந்து தானும் அவ்விதமான ஸ்வதந்திரனாயும் ஆகிறான். மஹாராஜனே! இப்படி தத்துவமானது எப்படியிருக்கிறதோ, அதை உள்ளபடி உனக்கு நான் சொன்னேன். இந்த அர்த்தத்தை அஸூயையில்லாமல் நீ ஏற்றுக்கொண்டு, எப்போதும் இருக்கிற உலகத்துக்குக் காரணமான ஒருவிதமான தோஷமில்லாத பிரும்மத்தை (உபாஸி)

430. ராமஸுக்³ரீவயோ: (ராமாயணம்-ஸுந்தர—35-51)

ஓ தேவியே! ராமனுக்கும் ஸுக்ரீவனுக்கும் ஐக்கியமிப்படியுண்டாயிற்று.

431. யதா²தா³தே (பாரதம் சாந்திபர்வம்—323-77-80)

எப்போது எந்த பிராமணன் தான் எம்பெருமானைக் காட்டிலும் வேறு, அவன் என்னைக் காட்டிலும் வேறு என்று பார்க்கி

றனோ, அவன் பந்தம் போய் இருபத்தாறாவதான தத்துவமான எம்பெருமானைப் பார்த்துக்கொண்டேயிருப்பன். ஓ ராஜாவே! அந்த எம்பெருமான் வேறு; இருபத்தைந்தாவது தத்துவமான ஜீவன் வேறு. அவனிடத்தில் எம்பெருமானிருப்பதாலே அவர்கள் இருவரும் ஒன்றென்று ஸாதுக்கள் சொல்லுகிறார்கள். ஓ ராஜாவே! அந்த எம்பெருமான் ஜீவர்களைக் காட்டிலும் வேறு, பஞ்சவிம்சகனான ஜீவன் மற்ற இருபத்துநான்கு தத்துவங்களைக் காட்டிலும வேறுபட்டவன். ஆகையால் பஞ்சவிம்சகனை அந்த எம்பெருமானுடன் ஒன்றாக அவர்கள் எண்ணுகிறதில்லை. காச்யபனே! பிறப்பு மரணம் ஜரை முதலானவைகளிடத்தில் பயந்து கர்மயோகஞ்செய்து, அதனால் சுத்தமான மனதைப்பெற்று, ஜ்ஞாநயோகம் செய்து, எம்பெருமானைப் பரமப்ராப்யமாக எண்ணி அவனை உபாஸிக்கிறார்கள்.

432. உத்தமः (கீதை—15-17)

புருஷோத்தமன் பத்தனையும் முக்தனையும் காட்டிலும் வேறு. அவன் பரமாத்மா என்று சொல்லப்படுகிறான். எந்தக் காரணத்தாலே அவன் மூன்று லோகங்களுக்குள்ளே ஆத்மாவாக நுழைந்து அவைகளைத் தாங்கிக்கொண்டு நியமநம் செய்து தான் ஒருவிதக் குறைவில்லாமலிருக்கிறானோ, அந்தக் காரணத்தாலே. இங்கே லோகங்களென்பது அறிவில்லாத வஸ்துக்களும், அவைகளுடன் சேர்ந்திருக்கிற ஜீவன்களும், அவைகளின்று விடுபட்ட ஜீவன்களும்.

433. தத்யः ஸாக்ஷீ (பாரதம் சாந்திபர்வம்—361-14-15)

ஜீவனிடத்தில் அந்தர்யாமியாக எந்த பரமாத்மா இருக்கிறானோ, அவன் எப்போதுமிருக்கிறவன். ஸத்துவம் முதலான மூன்று குணமில்லாதவன். அவனை நாராயணனென்று அறிய வேண்டியது. அவன் எல்லாருக்கும் ஆத்மா. அவனையே புருஷனென்று வேதம் சொல்லுகிறது. அவனிடத்தில் கர்மங்களின் பலன்கள் தாமரையின் இலையில் ஜலம்போல ஒட்டுகிறதில்லை. எம்பெருமானைக் காட்டிலும் எந்த ஜீவன் தாழ்ந்தவனோ, அவன் கர்மத்தைச் செய்கிறவனாய் அதனால் பந்தத்தையும், எம்பெருமானைத் தியாநம் பண்ணுவதால் மோக்ஷத்தையும் அடைகிறான்.

434. சுயःஷிணை (ஜயாக்யஸம்ஹிதை என்பர்கள்)

எப்படி இரும்பு உருண்டையில் நெருப்பு வேறாயிருந்த போதிலும் அதைக் காட்டிலும் வேறென்று தெரியாதபடி ஒன்றாயிருக்கிறதோ, அப்படியே தேவனான எம்பெருமான் இந்த உலகத்தை வியாபித்துக்கொண்டு அதை விட்டுப் பிரிக்கமுடியாத படி இருக்கிறான்.

435. ந ஸம்பதா (பரமஸம்ஹிதை என்பர்கள்)

ஸம்பத்துக்களை ஒருவனிடம் சேர்ப்பதற்கும், விபத்துக்களை அவனிடமிருந்து பிரிப்பதற்கும் தகுந்தவன் புருஷோத்தமனைக் காட்டிலும் வேறு ஒருவனுமில்லை.

436. ஸாயுஜ்ய (பரமஸம்ஹிதை என்பர்கள்)

மிகுந்த ஆவலுடன் பக்தியோகம் செய்கிறவர்களும், உயர்ந்த தபஸாகச் சொல்லப்பட்ட பிரபத்தியைச் செய்தவர்களும் ஸாயுஜ்யத்தையடைந்து எப்போதும் எனக்கு கைங்கரியம் பண்ணிக் கொண்டிருப்பார்கள். ஸம்ஸாரத்துக்கு வருவதாகிய உபத்திரவம் அவர்களுக்குக் கிடையாது.

ஸவைஶ்வர்யஃ (72வது பக்கம் 328-ெந. பார்க்க)

437. அநாவ்ருத்திஃ (பிரம்மஸூத்திரம்—4-4-22)

மோக்ஷத்தையடைந்தவன் திரும்பி ஸம்ஸாரத்திற்கு வருகிறதில்லை. இப்படியே வேதம் சொல்லுகிறபடியாலே.

தமிழ் வசனங்கள்.

101. அணைத்து (திருவாய்மொழி—6-7-12)

எல்லா உலகத்துக்கும் ஸ்வாமியாய் தாமரைக் கண்ணனை எம்பெருமானைக் கொஞ்சங்கூட விடமாட்டாள்.

உணர்முழுநலம் (19-வது பக்கம் 11-ெந. பார்க்க)

வாயினால் (69-வது பக்கம் 79-ெந. பார்க்க)

அரும்பதவுரை.

திடர் — மேடு.

23. ஸித்தோபாயசோதநாதிகாரம்.

ஸம்ஸ்க்ருத வசனங்கள்.

438. ஸவெஷுஷாடெவே (பாரதம் ஆரண்யபர்வம்—192-56)

லக்ஷ்மீபதியான எம்பெருமான் எல்லா உலகங்களுக்கும் தகப்பனாகவும் தாயாகவும் இருக்கிறான். புருஷச்ரேஷ்டர்களே! ரக்ஷகனான அந்தப் புருஷனை உபாயமாக எண்ணி சரணாகதி பண்ணுங்கள்.

439. ஆஷ—்ழ (மநுஸ்மிருதி—12.106)

வேதங்களாலும் ஸ்மிருதிகளாலும் சொல்லப்பட்ட தர்மத்தை வேதத்துக்கு விரோதமில்லாத தர்க்கத்தினாலே எவன் அறிகிறானோ, அவனே தர்மம் தெரிந்தவன். அப்படிச் செய்யாதவன் தர்மம் தெரிந்தவனன்று.

440. கா ணா ஊ (அத்ரிஸ்மிருதி)

வைசேஷிகன் என்கிற தர்க்கமதஸ்தர்கள், பௌத்தர்கள், வேதத்துக்கு விருத்தமானதைச் சொல்லுமவர்கள் ஆகிய இவர்களால் வேதம் சொல்லுகிற தர்மங்கள் மறைந்துபோகும்படி செய்யப்பட்டன.

441. ஊத்தஸ) ஹரணெ_ந (சாண்டில்யஸ்மிருதி)

கொடுப்பதாகச் சொன்னதைக் கொடாததாலும், கொடுத்ததை அபஹரிப்பதாலும் பிறந்ததுமுதல் செய்யப்பட்ட தானங்களெல்லாம் நாசமடைகின்றன. இது உண்மையே.

442. பாஷண்டி_நஃ (வி-பு-3-18-101) (மநுஸ்மிருதி—4-30)

பாஷண்டிகள் (வேதத்துக்கு விருத்தமான விஷயத்தைச் சொல்லி விருத்தமான அவைகளைச் செய்பவர்கள்) சாஸ்திரம் நிஷேதிக்கிற கர்மங்களைச் செய்பவர்கள், பூனைபோலிருப்பவர்கள் அதாவது வஞ்சகர்கள், நாஸ்திகர்கள், ஹைதுகர்கள் அதாவது பிரமாணத்தை ஒப்புக்கொள்ளாமல் யுக்தியைக்கொண்டே ஸாதிக்கிறவர்கள், கொக்கைப்போலிருப்பவர்கள் அதாவது— கிட்ட இருப்பவர்களை ஹிம்ஸிப்பவர்கள், இவர்களை வாயாலே கூடக் கௌரவம் செய்யக்கூடாது.

443. [illegible] (யாக்ஞவல்க்யஸ்மிருதி—1-130)

பசியால் வருத்தப்படுகிறவன், ராஜாவினிடத்திலும், சிஷ்யனிடத்திலும், தன்னால் யாகம்செய்விக்கப்பட்டவர்களிடத்திலும் தனத்தைப் பெற இச்சைப்படலாம். நான்குபேர் கொண்டாடுவதற்காகத் தர்மத்தையநுஷ்டிப்பவர்கள், ஹைதுகர்கள், பாஷண்டிகள் கொக்குபோலிருப்பர்வகள் இவர்களிடமிருந்து வாங்கக் கூடாது.

444. [illegible]

ஸத்துக்களுடன் கூட ஒருவனிருக்கவேண்டியது, அவர்களுடன் சேரவேண்டியது. விவாதம் செய்தாலும் ஸ்நேஹஞ்செய்தாலும் அவர்களுடன் அவைகளைச் செய்யவேண்டியது. அஸத்துக்களுடன் இவைகளிலொன்றையும் செய்யக்கூடாது. இங்கே ஸத்து என்பவன் தைவத்தின் ஞானமுள்ளவன். அதில்லாதவன் அஸத்து.

445. [illegible] (பாரதம் ஆரண்யபர்வம்)

துர்ஜநனுடைய சேர்க்கையை விட்டுவிடு; ஸாதுக்களோடு சேர்ந்திருப்பதை அடை; புண்ணியத்தைப் பகலிலும் இரவிலும் செய். தானும் தன்னைச் சேர்ந்தவர்களும் நித்தியம் அன்று என்கிற விஷயத்தை எப்போதும் நினைத்துக்கொண்டிரு.

446. [illegible]

அக்நிஜ்வாலையாகிய கூட்டுக்குள்ளிருப்பது கொஞ்சம் நல்லது. எம்பெருமானுடைய நினைவிற்கு முகங்கொடாதவர்களுடன்கூட இருப்பதாகிய வதம் கொஞ்சமும் நல்லதன்று.

447. [illegible] (கீதை—7.15)

கெட்ட கர்மங்களைச் செய்பவர்கள் அவைகளின் தாரதம்மியத்துக்குத் தகுந்தபடி என்னிடத்தில் பிரபத்தி பண்ணி என்னை பஜிக்கிறதில்லை அவர்களாவன— மூடர்கள்- என்னுடைய ஜ்ஞானமில்லாதவர்கள், நராதமர்கள்— அதாவது என்னுடைய ஜ்ஞாநமிருந்தும் என்னிடம் வருவதற்கு முயற்சி செய்யாதவர்கள், கெட்ட யுக்திகளாலே உண்டான ஜ்ஞாநம் போனவர்கள், என்னிடத்தில் த்வேஷம் பண்ணுமவர்கள்.

[illegible] (48-வது பக்கம் 222-ல். பார்க்க)

448. [illegible] (இதிஹாஸஸமுச்சயம்—33-105)

சாஸ்திரம் ஒன்ருயிருந்தால் ஸந்தேஹமில்லாமல் ஜ்ஞாநமுண்டாகும். இந்த உலகத்தில் சாஸ்திரங்கள் அநேகங்களாயிருப்பதால் உண்மையான ஜ்ஞாநம் ஸம்பாதிப்பது மிகவும் வருத்தம்.

449. [illegible] (பாரதம் சாந்திபர்வம்—359-71)

ஸந்தேஹமில்லாத எல்லாரிடத்திலும் எம்பெருமான் எப்போதுமிருக்கிருன். யுக்திகளைக்கொண்டு ஸந்தேஹப்படுகிறவர்களிடத்தில் லக்ஷ்மீபதி இருக்கிறதில்லை.

450. [illegible] (பாரதம் ஆநுசாஸநிகர்பர்வம்-254-135)

புண்யம் செய்து புருஷோத்தமனிடத்தில் பக்தியுள்ளவர்களுக்கு கோபமும், த்வேஷமும், லோபமும், கெட்ட புத்தியும் வாராது.

451. [illegible] (விஷ்ணுதர்மம்—2-25)

கோவிந்தனிடத்தில் பக்தியைச் செய்கிற மனிதர்களுக்கு ஸம்ஸாரக்குறைவு உண்டாகுமோ என்று பயந்து, தேவர்கள் விரோதஞ்செய்கிருர்கள். இப்படி கேட்கப்படுகிறது.

452. [illegible] (விஷ்ணுதர்மம்—74-94)

மனிதர்களுடைய ஸத்யம் (உண்மை பேசுவது) நூறு விக்கிநங்களாலும், தபஸ் ஆயிரம் விக்கிநங்களாலும், கோவிந்தனிடத்தில் பக்தி பதிஞயிரம் விக்கிநங்களாலும் தடுக்கப்படுகிறது.

453. [illegible] (ராமாயணம் அயோத்தியா—2-40)

மனிதர்களுடைய துக்கங்களில் ஸ்ரீராமன் மிகவும் துக்கமுள்ளவனுக ஆகிருன். அவர்களுக்கு ஸந்தோஷம் வரும் எல்லாக் காலங்களிலும் தகப்பன்போல் ஸந்தோஷப்படுகிருன்.

454. காலஸ்யஹி (பாரதம் உத்யோகபர்வம்— 67-13-15)

காலத்தையும் மிருத்யுவையும் அசைவுள்ள பிராணிகளையும், ஸ்தாவரமான பிராணிகளையும்,எம்பெருமான் ஒருவனே நியமனம் பண்ணுகிருன். உனக்கு இதை உண்மையாகச் சொல்லுகிறேன். பிரபுவாயும் ஆச்சரியமான ஜ்ஞாநசக்தியையுடையவனுயும் எல்லா உலகங்களையும் நியமநம் பண்ணுகிறவனுயிருந்தபோதிலும் துர்பலனை குடியானவன்போல் கர்மங்களைச் செய்ய ஆரம்பிக்

கிறுன். இதனால் உலகங்களை வஞ்சனை செய்கிறுன். எவர்கள் அவனைச் சரணமாக அடைகிறுர்களோ, அவர்கள் மோஹத்தை அடைகிறதில்லை. இங்கே கர்மங்களென்பது தூதுபோவது வண்டியோட்டுவது முதலானவைகள்.

455. க்ருஷ்ணா (பாரதம் மௌஸலபர்வம்—9-34)

நீண்ட கண்களையுடைய ஸ்ரீகிருஷ்ணன் பூமியின் பாரத்தை இறக்கி, உலகம் முழுவதும் மோஹத்தையடையும்படி செய்து, மிகவுமுயர்ந்த தன் இடத்துக்குப் போய்விட்டான்.

456. மநுஷ்ய (விஷ்ணுபுராணம்—5-22-18)

இவ்விதமாக மனித உடம்பையுடையவர்களுடைய செய்கைகளை அநுஸரிக்கிறுன். உலகத்துக்கு யஜமாநனை அவனுடைய விளையாட்டானது அவனுடையஸங்கல்பத்தாலேயே உண்டாகிறது

உபாஸ்தே (9-வது பக்கம் 33-ந. பார்க்க)

457. க்ருஷ்ண (பாரதம் ஆரண்யபர்வம்—71-123)

எந்த பிராமணர்கள் வேதத்தின் முன் பாகத்தை அறிகிறுர்களோ, எந்த ஜநங்கள் பரமாத்மாவிஷயமான அதின் மேல்பாகத்தின் அர்த்தத்தை அறிந்திருக்கிறுர்களோ, அவர்கள் மஹாத்மாவான கிருஷ்ணனை எப்போதுமிருக்கிற தர்மமாக (உபாயமாக)ச் சொல்லுகிறுர்கள்.

உபாதவை (9-வது பக்கம் 31-ந. பார்க்க)

458. யோ கர்ப (விஷ்ணுதர்மமென்பர்)

எந்த ப்ரபு தாயார் கர்ப்பத்திலிருக்கும்போதுகூட பிழைக்கும் உபாயத்தைச் செய்தானே, பிறந்தபிறகு மேல் பிழைக்கும் உபாயத்தைச் செய்யும் விஷயத்தில் அவன் தூங்குகிறுனே, அல்லது இறந்துவிட்டானே ?

ஸ்வயம் (55-வது பக்கம் 262-ந. பார்க்க)

459. அஜ்ஞோ ஜந்து (பாரதம் சாந்திபர்வம் 12-36)

இந்த ஜீவன் அறிவில்லாதவனும் தன் ஸுகதுக்கங்கள் விஷயத்தில் சக்தியில்லாதவனுமிருக்கிறுன். எல்லாரையும் நியமநம் பண்ணுகிற எம்பெருமானுல் ஏவப்பட்டவனாய் சுவர்க்கத்திற்கோ நரகத்திற்கோ போகிறுன்.

460. 𑌅𑌨𑌾𑌦𑍇𑌶𑍍𑌯𑌃 (பாரதம் ஸபாபர்வம்—40-78)

எம்பெருமான் பரிபூர்ணனாயிருக்கிறான். ஒருவனும் அவனை இதைச் செய் என்று ஏவமுடியாது. எங்கே போகவேண்டு மென்று எண்ணுகிறானோ, அங்கே போகச் சக்தியுள்ளவன். எல்லாரையும் தன் வசத்தில் வைத்துக்கொள்ளுகிறவன். குழந்தை விளையாட்டுஸாமான்களைக்கொண்டு விளையாடுவதுபோல் பிராணிகளைக்கொண்டு விளையாடி லீலை என்கிற ரஸத்தையநுபவிக்கிறான்.

461. 𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌦𑌣𑍍𑌡𑌾𑌃 (ராமாயணம் ஆரண்யகாண்டம்—1-21)

தபஸ்ஸு செய்கிற நாங்கள் தண்டிப்பதை விட்டிருப்பவர்களாயும், கோபத்தை ஜயித்தவர்களாயும் இந்திரியங்களையடக்கினவர்களாயும் கர்ப்பம்போலிருப்பவர்களாயுமிருப்பதால் தேவரீரால் ரக்ஷிக்கத் தகுந்தவர்கள். (இது ஸ்ரீராமனைப் பார்த்து தண்டகாரண்யத்திலிருக்கும் ருஷிகள் சொன்னது)

462. 𑌯𑍇 𑌨𑌾𑌥𑌵𑌨𑍍𑌤𑌃 (பாரதம் ஆரண்யபர்வம்—161-2)

உலகத்தில் எவர்களுக்கு நாதன் (ஸ்வாமி) இருக்கிறானோ, அவர்கள் தங்கள் வேலையைத் தாங்கள் ஆரம்பிப்பதில்லை. ஓ பலராமனே! அவர்களுடைய வேலைகளில் அவர்கள் ஸ்வாமியே முயற்சி செய்கிறான். எப்படி யயாதி விஷயத்தில் சிபி முதலானவர்கள் அவன் வேலையைத் தாங்கள் செய்தார்களோ, அதுபோல.

463. 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌸𑌹 (லக்ஷ்மீதந்திரம்—28-14)

எம்பெருமான் கருணையே வடிவுகொண்டிருக்கிற லக்ஷ்மீ தேவியுடன் கூடவேயிருந்து ரக்ஷிக்கிறானென்று எல்லா ஸித்தாந்தங்களிலும் வேதாந்தத்திலும் சொல்லியிருக்கிறது. இங்கே ஸித்தாந்தங்களென்பது நான்கு விதமான பாஞ்சராத்திரஸித்தாந்தங்கள்.

464. 𑌹𑍍𑌲𑌾𑌦𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑍇 (ஸ்ரீகுணரத்நகோசம்—28)

சந்திரனைப்போலே ஸந்தோஷத்தையுண்டாக்கும் முகத்தையுடைய லக்ஷ்மியே! தேவரீரையும் எம்பெருமானையும் பிரித்துப் பார்க்கும் காலத்தில் எம்பெருமானுடைய ஸ்வரூபமும், ஸர்வேசுவரனாயிருப்பதும், தேவரீருடன் சேர்ந்திருந்து அதினாலுண்டாகும் ஒரு ஏற்றத்தாலே உண்டாயிருக்கின்றன. ஆகையினால் தேவரீருடைய நாயகன் 'இப்படியிருக்கிறான்' என்று சொல்லுகிற

அம்சமாய் தேவரீர் இருக்கிறீர். இப்படி தேவரீரும் எம்பெருமானும் சேர்ந்திருப்பதாலே வேதமும் தேவரீரைத் தனியாகச் சொல்லவில்லை. குறிப்பு — ஒரு வஸ்துவைப் பார்க்கும்போது இது இப்படியிருக்கிறதென்று அறிகிறோம். இதில் 'இது' என்கிற அம்சம் அந்த வஸ்துவின் ஸ்வரூபம். 'இப்படியிருக்கிறது' என்கிற அம்சம் அந்த ஸ்வரூபத்தை ஒருவன் அறிந்து பேசும்படி செய்கிறது. அதில்லாவிட்டால் ஸ்வரூபமே தோன்றுது. ரோஜாப்பூவைப் பார்க்கும்போது அது சிவப்பாயிருக்கிறது என்று அறிகிறோம். அந்த சிவப்பு வர்ணத்தை விட்டு அந்தப் பூவைப் பார்க்கமுடியாது. இங்கு இது என்கிற அம்சம் எம்பெருமான். இப்படியிருக்கிறுனென்று காட்டுகிற அம்சம் பிராட்டி, இந்த இரண்டு அம்சமும் சேர்ந்தேயிருக்கும்; ஒன்றை விட்டு ஒன்று இருக்காது.

உபயோரேஷா (52-வது பக்கம் 241, 242-ெந. பார்க்க)

465. ஸம்ஸாரார்ணவ (காச்யபஸ்மிருதி)

ஆசைப்பட்ட எல்லா பலன்களைக் கொடுக்கிறவளாயும் ஸம்ஸாரமாகிய ஸமுத்திரத்திலிருந்து கரையேற்றுகிறவளாயும் சீக்கிரம் அநுக்ரஹத்தைச் செய்கிறவளாயும் ஸந்தோஷத்தையுண்டு பண்ணுகிறவளாயும், ரக்ஷிக்கிறவளாயுமிருக்கிற தேவியான லக்ஷ்மியை நினைத்துக்கொண்டிருக்கவேண்டியது.

466. வாசஸ்ஸ்வரூ (சௌநகஸம்ஹிதா)

சொற்களின் கருத்துக்கு விஷயமான எம்பெருமானை அடையவேணுமென்று பிரார்த்திக்கிறவன் கட்டாயமாய் லக்ஷ்மியினிடத்திலும் பிரபத்தி செய்யவேண்டியது. எம்பெருமானிடத்தில் மாத்திரம் பிரபத்தி பண்ணிணுல் போதாது.

467. ஆத்மவித்யா (விஷ்ணுபுராணம்—1-9-20)

ஓ தேவியே! ஆத்மஜ்ஞாநத்தைக் கொடுக்கிறவளாயும், மோக்ஷமாகிய பலத்தைக் கொடுப்பதை ஸ்வபாவமாகவுடையவளாயுமிருக்கிறுய்.

468. யாமாஶ்ரித்ய (ஸ்ரீ ஸாத்வதஸம்ஹிதை—12.84)

எம்பெருமானுடைய ரூபத்தைத் தியாநம் பண்ணிக்கொண்டிருக்கிறவர்கள், எந்த லக்ஷ்மியைப் பிடித்துக்கொண்டு அதா

வது பிரபத்தி பண்ணி, கரையேறமுடியாத இந்த முக்குணங்களால் ஏற்பட்ட ஸம்ஸார ஸமுத்திரத்தை ஸுகமாய் சீக்கிரத்தில் அதாவது வேறு உபாயம் செய்யாமல் தாண்டுகிறார்களோ.

469. ஜகஜஸமஸேஷூ (ஆளவந்தார் ஸ்தோத்ரம்—37)

உலகம் முழுவதும் எந்த லக்ஷ்மீயினுடைய கடாக்ஷத்தை ஆதாரமாகவுடையதோ. இங்கே ஆதாரத்தைச் சொன்னதாலே அத்துடன் சேர்த்து வேதம் சொல்லுகிற ஜகத்காரணமாயிருப்பது முதலானவைகளும் சொல்லப்பட்டன.

470. ஶ்ரேயொ நஹி (சதுச்ஶ்லோகீ—3)

தாமரைக்கண்ணனை எம்பெருமான் மனதுக்குப் பிடித்த பத்தினியான லக்ஷ்மியினுடைய அநுக்ரஹமில்லாமல், ஸம்ஸாரத்தில் ஒருவன் ஆசைப்படக்கூடிய உயர்ந்த அநுபவமும், ஆத்மாவினுடைய அநுபவமும், எம்பெருமானுடைய அநுபவமும், நமக்கு உண்டாகிறதில்லை.

471. ஶெஷஶெஷாஶநாதி (வைகுண்டகத்யம்)

ஆதிசேஷன், விஷ்வக்ஸேநர் (பகவானுக்கு நிவேதநம் பண்ணி மிகுந்ததைச்சாப்பிடுகிறவன்) முதலான எல்லா பரிஜநங்களையும் எம்பெருமானுக்கு அந்தந்த அவஸ்தைகளில் செய்ய வேண்டிய கைங்கரியங்களைச் செய்யும்படி நியமநம் செய்கிற லக்ஷ்மியோடு கூட இருக்கிற.

472. ஸுஷதி ஶ்ரீஃ (ஸ்ரீஸ்தவம்—1)

எல்லாவுலகங்களையுமுண்டுபண்ணுவது, நாசஞ்செய்வது, ரக்ஷிப்பது ஆகிய வேலைகளையும், ஸ்வர்க்கம், நரகம், மோக்ஷம் ஆகிய பலன்களைக்கொடுப்பதும் ஆகிய இவைகளையெல்லாம் எந்த லக்ஷ்மியுடைய முகத்தைப் பார்த்து, அவளுடைய ஸங்கல்பத்தை துணையாகக்கொண்டு எம்பெருமான் செய்கிறானோ, அந்த லக்ஷ்மீ க்ஷேமத்தைக் கொடுக்கவேணும். இரண்டுபேரும் ஒரே வேலையைச் செய்து ஒரே விதமான ஸந்தோஷத்தையடைகிறவர்களாகையாலே, இப்படி அவளுடைய ஸங்கல்பத்தைக் கவனிக்காமல் ஜகத்வியாபாரமான விளையாட்டை அவன் செய்தால் அது ரஸத்தைக் கொடுக்காது. இங்கே இங்கித என்கிற சொல்லானது அதற்குக் காரணமான ஸங்கல்பத்தைச் சொல்லுகிறது.

473. ஒெவி ஊடூஊஙிசா (ஸ்ரீஸ்தவம்—8)

ஓ தேவி ! உம்முடைய பெருமையின் எல்லையானது எம்பெருமானும் உம்மாலுங்கூட அறியப்படவில்லை. இப்படியிருந்தபோதிலும் நீங்களிருவரும் எல்லாம் தெரிந்தவர்கள் என்பது போகவில்லை. எது இல்லவேயில்லையோ, அதையறியாமையானது எல்லாம் அறிந்தவனாயிருப்பதற்கு ஒத்திருக்கிறதென்று பெரியோர்கள் அறிகிறார்கள். ஆகாசத்தாமரையென்று ஒன்றில்லாமலிருக்க அதிருப்பதாக எண்ணுகிறவன் பிராந்தன் என்று சொல்லப்படுகிறான்.

474. ஒெஊஷ்ய—ழ் (ஸ்ரீகுணரத்நகோசம்—58)

அம்மா! அஞ்ஜலியாகிய பாரத்தைத்தூக்குகிற ஒருவனுக்கு, ஐசுவரியத்தையும், ஆத்மாநுபவத்தையும் பரமபதத்தையும் கொடுத்தும், இவனுக்குத் தகுந்ததொன்றையும் செய்யவில்லை என்று நீ லஜ்ஜைப்படுகிறாய். இதென்ன ஔதார்யம்! சொல்லு.

475. ஷு தஃஸ்ரீஃ (ஸ்ரீகுணரத்நகோசம்—31)

ஏ லக்ஷ்மியே! நீ உன்னிச்சையாலேயே எம்பெருமானுடைய ஸொத்தாக இருக்கிறாய். அவனுடைய ஏற்றம் உன்னாலே உண்டு பண்ணப்பட்டதாயிருந்தபோதிலும், சொன்ன காரணத்தால் அவனுடைய பெருமையானது இன்னொருவனுடைய அதீநமாக இருக்கவில்லை. ஒரு ரத்நமானது தன்னுடைய காந்தியாலே உயர்ந்த விலையுள்ளதாக ஆகிறது. அப்படியிருந்தபோதிலும், அது குணமில்லாததாக ஆகிறதில்லை; அதற்கு ஸ்வபாவத்தினாலேற்பட்ட பெருமை குறைகிறதில்லை. அதற்குப் பெருமை வேறொன்றால் உண்டுபண்ணப்பட்டதல்ல.

476. ஊநந்ர (ராமாயணம் ஸுந்தரகாண்டம்—21-15)

ஐசுவரியத்தாலும் எனக்கு ஆசையுண்டுபண்ணுவது முடியாது. எப்படி ஸூரியனை விட்டு அவன் பிரபை பிரிந்திருக்க மாட்டாதோ, அப்படியே ராகவனை விட்டு நான் பிரிந்திருக்க முடியாது.

477. ஊநந்ரயீநகஊ்ரணூ (லக்ஷ்மீகல்யாணம்)

ஒருவனாலும் கொடுக்கப்படாமல் தமக்கே ஸ்வபாவத்தினாலுள்ள கல்யாணகுணங்களையுடையவர்களாயும், மற்றவர்களுக்கு

நல்ல குணங்களுண்டாவதற்குக் காரணர்களாயும், உலகத்துக்குக் காரணமானவர்களாயும் தங்களுக்கு ஸமானமில்லாதவர்களாயும் இருக்கிற பிராட்டி, எம்பெருமானாகிய இருவர்களையும் நாங்கள் வந்தநஞ் செய்கிறோம்.

478. [Grantha] (ராமாயணம் ஆரண்யகாண்டம்—37-18)

ஜநகராஜன் திருமகளான அந்த ஸீதை எவனுடையவளோ, அந்த ராமனாகிய தேஜஸ்ஸானது அளவிடமுடியாதல்லவா ? காட்டில் ராமனுடைய வில்லினால் ரக்ஷிக்கப்பட்டிருக்கிற அவளை அபஹரிக்க நீ ஸமர்த்தனன்று.

479. [Grantha] (ஆளவந்தார் ஸ்தோத்திரம்—38)

உலகத்தைச் சரீரமாகக் கொண்ட தேவரீரால் எப்போதும் அநுபவிக்கப்பட்டிருந்தபோதிலும் ஒவ்வொரு நாளும் புதிது போல் ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறவளும், குணங்கள், ரூபங்கள், விளையாட்டு, தன்னையடைந்தவர்களை ரக்ஷிக்கிற வியாபாரங்கள் இவைகளால் தேவரீருக்குத் தகுந்தவளாயுமிருக்கிற தேவரீருடைய லக்ஷ்மியுடன்கூட.

480. ஶ்ரிய:ஶ்ரீ: (ஸ்ரீகுணரத்நகோசம்—9)

லக்ஷ்மீக்கும் அழகு செய்கிற ரங்கநாதனே ! தேவரீர் மனதுக்குப்பிடித்த ஆறு குணங்கள் நிறைந்த லக்ஷ்மியை தேவரீரைக் காட்டிலும் உயர்ந்தவளாக நாங்கள் சொல்லுகிறோம்.

481. [Grantha] (ஸாத்வதம்)

அறிவுள்ளதும் அறிவில்லாததுமான எல்லா உலகமும் லக்ஷ்மீக்குச் சேஷம்; அவளும் அந்த உலகமும் அவனுக்குச் சேஷியான எம்பெருமானுக்குச் சேஷம். இப்படியிருந்தபோதிலும், இருவருக்கும் உலகத்தை நியமநம்பண்ணுகிற அதிகாரம் பொது வாயிருக்கிறது. இரண்டு பேரும் சேர்ந்தே எப்போதும் உலகத்துக்கு ஒரே சேஷி

482. [Grantha]

சேஷியாயிருப்பது ஒன்று. அது எம்பெருமான் பிராட்டியாகிய இருவரிடத்திலிருக்கிறது.

[Grantha] (24-வது பக்கம் 120-நெ. பார்க்க)

[Grantha] (104-வது பக்கம் 464-நெ. பார்க்க)

483. [illegible] (பாரதம் கர்ணபர்வம்—72-54)

முதலில் கேட்டதை உறுதியாய்ப் பிடித்துக்கொண்டிருப்பவனும், மூடனும், தர்மங்களை அறியாதவனும், ஜ்ஞாநவிருத்தர்களிடம் ஸந்தேஹங்களைக் கேட்காதவனும் ஆகிய மனிதன் குருடன் பள்ளத்தில் விழுவதுபோல் கெடுதியையடைகிறான்.

484. 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 (இதிஹாஸஸமுச்சயம்—33-108)

மந்தபுத்தியையுடையவர்களாய் பெரியோர்களை நிந்திக்கிறவர்களாய் கெட்ட யுக்திகளாகிய பாம்பாலே கடிக்கப்பட்டவர்களாய் மயக்கமுள்ள இந்திரியங்களையுடையவர்களாயிருக்கிற வாதிகளுக்கு விஷயங்கள் உள்ளபடி தெரியாமல் வேறாகத் தோன்றும்.

𑌨𑌾𑌨𑌯𑍋𑌃 (36-வது பக்கம் 182-நெ. பார்க்க)

[illegible] (11-வது பக்கம் 39-நெ. பார்க்க)

485. 𑌅𑌸𑍍𑌯𑌾 𑌦𑍇𑌵𑍍𑌯𑌾𑌃 (ராமாயணம் ஸுந்தரகாண்டம்—15-52)

இந்த தேவியின் மனது அந்த ராமனிடத்திலும், அவன் மனது இவளிடத்திலும் நிலையாயிருக்கிறது. இந்தக் காரணத்தாலே இவளும் அந்த தர்மாத்மாவான ராமனும் ஒரு முஹூர்த்தமும் பிழைத்திருக்கிறார்கள். (முஹூர்த்தம் இரண்டு நாழிகை).

486. [illegible] (அஹிர்புத்ந்யஸம்ஹிதை—4-78)

இரண்டு பேரும் உலகத்தை வியாபித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒருபோதும் பிரிவில்லாமல் சேர்ந்திருப்பதால் ஓரே தத்துவம்போலிருப்பதாகச் சொல்லப்படுகிறார்கள்.

487. [illegible] (சதுச்லோகீ—4)

தேவரீருடைய ஸ்வரூபத்தாலும் ரூபங்களாலும் எம்பெருமானுடைய ஸ்வரூபமும் ரூபங்களும் நெருக்கமாய் ஆலிங்கனம் பண்ணப்பட்டிருக்கின்றன. இங்கே ரூபங்களென்பது பரரூபமும், லீலைக்காக எடுத்துக்கொள்ளுகிற ரூபங்களும்.

தமிழ் வசனங்கள்.

அளியநம் (82வது பக்கம் 86-நெ. பார்க்க)

102. இன்றென்னை (திருவாய்மொழி—10-8-9)

இப்போது என்னையொரு வஸ்துவாகச் செய்து என் மனதில் வந்திருக்கிறான். முன் காலத்தில் தன்னை விட்டு நான் விஷயங்களில் அலையும்படி செய்தது எதற்காக? வஸ்து என்பதற்கு எம்பெருமானுடைய ஜ்ஞாநமுள்ளவன் என்று அர்த்தம்.

103. சூழ்விசும்பணி (திருவாய்மொழி—10-9-1)
சூழ்ந்த ஆகாசத்தில் அழகான மேகம் வாத்யகோஷத்தை உண்டாக்கினது.

104. நடுவே (திருவாய்மொழி—1-7-5)
ஒரு காரணமில்லாமல் வந்து பிழைப்பிக்கும்படி செய்கிற ஸ்வாமி.

105. திருமாலிருஞ்சோலை (திருவாய்மொழி—10-8-1)
திருமாலிருஞ்சோலைமலையென்று சொன்னேன்; சொன்னவுடன் என் மனதில் லக்ஷ்மீபதி வந்து நிறையும்படி புகுந்தான்.

106. வேரிமாறாத (திருவாய்மொழி—4-5-11)
வாஸனை ஒருபோதும் விட்டுப்போகாத தாமரைப்பூவிலிருக்கிற லக்ஷ்மீயானவள் ஜீவன்களுடைய கர்மங்களைத் தீர்ப்பள். இங்கே இன்ன வினையென்று சொல்லாத்தாலே உபாயத்துக்கு விரோதியான கர்மங்களையும், அந்த உபாயத்தாலே எம்பெருமானை அடைவதற்கு விரோதியான கர்மங்களையும் அந்த சொல் சொல்லுகிறது என்று கொள்ளவேணும்.

நின் திருவருளும் (19-வது பக்கம் 8-ங. பார்க்க)

107. உன்திரு (பெரியாழ்வார் திருமொழி—10-10-2)
தேவரீருடைய லக்ஷ்மீ.

108. திருவுக்கும் (பெரிய திருமொழி—7-7-1)
லக்ஷ்மீக்கும் அழகு செய்கிறவனாகிய ஸம்பத்தையுடையவனே !

109. தாமரையாள் (முதல் திருவந்தாதி—67)
தாமரைப்பூவிலிருக்கும் லக்ஷ்மீயின் கணவனாகிய எம்பெருமானொருவனையே பக்தி பிரபத்தியாகிய உபாயமும், பரிபூர்ணப்ராப்யமாநுபவமும் ஆகிய ஜ்ஞாநமானது விஷயமாகக் கொள்ளும்.

அரும்பதவுரை.

ஈடுமாறுகை — போவது, போர — மிகவும்.
உடல் — காரணம். தூர் — குற்றம்.
கொத்தை — சொத்தை, அதாவது குறைவு.

24. ஸாத்யோபாயசோதநாதிகாரம்.

ஸம்ஸ்கிருத வசனங்கள்.

488. ஆரோக்ய

வியாதியில்லாமை இந்திரியங்களுக்கு வலிமையையும், ஐசுவரியம் சத்துருக்களையுண்டுபண்ணுவதையும், நீண்ட ஆயுஸ்ஸானது பந்துக்களுடன் பிரிவையும் உண்டுபண்ணுகின்றன. ஒருவன் இவைகளில் எதற்கு ஸந்தோஷப்படுகிறானோ அது எது?

வராரோதி (41-வது பக்கம் 194-நெ. பார்க்க)

489. உஹதா (வராஹபுராணம்)

மிகுந்த புண்ணியமாகிய விலையைக்கொடுத்து இந்த உடம்பாகிய ஓடமானது வாங்கப்பட்டிருக்கிறது. துக்கஸமுத்திரத்தின் கரையை அடைவதற்காக அது உடைந்துபோவதற்குமுன் அவஸரப்படு.

ஸவஜ்ஞாக (53-வது பக்கம் 253-நெ. பார்க்க)

490. ஸவஜ்ஞயோக

எல்லாருக்கும் தகுந்தவனையும் சிரமத்தைக் கொடுக்காதவனையும், தவறுதலுக்கு இடமில்லாதவனையும் ஒப்பில்லாதவனையும் பிரபந்நர்களுடைய வருத்தத்தைப் போக்குகிறவனுமிருக்கிற எம்பெருமானை உபாயமாக நீ அடையவேண்டியது. இங்கே முதல் நான்கு சொற்கள் விஷ்ணுவுக்கு விசேஷணமாயிருந்தபோதிலும் பிரபத்தியினுடைய குணங்களைச் சொல்லுகின்றன.

491. ஆயாணாம், வ்யூஹாநாம் (ஸாத்வதஸம்ஹிதை—2-9)

விதிப்படி பிரபத்தி செய்த க்ஷத்திரியர் முதலான மூன்று வர்ணங்களுக்கும் நாலு வியூஹங்களுடைய ஆராதநத்தில் மந்திரமில்லாமல் அதிகாரமிருக்கிறது.

492. கூயோநிஷ்வபி (ஸநத்குமாரஸம்ஹிதை)

தாழ்ந்த ஜாதிகளில் பிறந்த எவன் ஒரு தடவை எம்பெருமானிடத்தில் பிரபத்தி பண்ணுகிறானோ, அவன் தாய் தகப்பனைக் கொன்றவனாயிருந்தாலும் அவனை ஸம்ஸாரதுக்கத்தைப் போக்குகிற எம்பெருமான் ரக்ஷிக்கிறான்.

493. ஸ்ரீஹரிவாயஶூ (கீதை — 9-32)

பாபிகள் வயிற்றில் பிறந்த ஸ்திரீகளும் வைசியர்களும் சூத்திரர்களும் ஆகிய இவர்களில் எவர்கள் என்னையடைகிறார்களோ, அவர்களும் உயர்ந்த கதியை அடைகிறார்கள்.

யஶ்ஸ்வ்யாயாஞயஃ (96-வது பக்கம் 422-ெந. பார்க்க)

494. ஜநிக்ஷா (ஆளவந்தார் ஸ்தோத்திரம் — 61)

உலகத்தில் பிரஸித்தமான கீர்த்தியையுடையவர்களும் சுத்தமானவர்களும் யோகஞ்செய்கிறவர்களும் மூன்று குணமுள்ள பிரகிருதி,ஜீவன்கள் இவைகளின் உண்மையைத்தெரிந்தவர்களும் ஸ்வபாவத்தாலேயே தேவரீருடைய திருவடித்தாமரைகளில் நிலையுள்ள மனதையுடையவர்களுமானவர்களுடைய பெரிய வம்சத்தில் பிறந்து நான் பாபத்தில் மனதுடையவனாய் ஸம்ஸாரத்தில் மூழ்கி கீழே போகிறேன். ரக்ஷிக்கிறவனே!

495. நாராயணஶ்

லக்ஷ்மியோடு கூடிய நாராயணனையடைவதற்கு அவனுடைய இரண்டு திருவடிகளே உபாயம் என்கிற விச்வாஸமே த்வயத்தாலே சொல்லப்பட்ட சரணாகதி.

496. ஒூவஃத்ஃ (ஸ்ரீபாஷ்யகாரர் வாக்கியம்)

பிரபத்தியென்பது விச்வாஸம். அதாவது ஒரே தடவை பிரார்த்திப்பதிலேயே வேண்டியதை எம்பெருமான் கொடுப்பனென்கிற விச்வாஸத்துடன் பிரார்த்திப்பது.

497. சுநந்ர (பரதமுனி)

தனக்கு வேண்டியது வேறொருவனாலே முடித்துக்கொடுக்க முடியாதபோது மஹாவிச்வாஸத்தை முன்னிட்டுக்கொண்டு, ஸமர்த்தனை ஒருவனையே உபாயமாக இருக்கவேண்டுமென்று பிரார்த்திப்பதே பிரபத்தி, அதுவே சரணாகதி.

ந்ராஸஃவெஷாஜ் (51-வது பக்கம் 233-ெந. பார்க்க)

ரக்ஷாவெக்ஷாஶ் (54-வது பக்கம் 259-ெந. பார்க்க)

498. நஃஸ்ராராக்ஷூ (மந்திராஜபதஸ்தோத்திரம்)

நமஸ்காரமாகிய ஆத்மஸமர்ப்பணத்தை (ஆத்மாவைக் கொடுப்பதை) எவனிடத்தில் செய்து, துக்கம் போய் வேண்டியதையெல்லாம் அநுபவிக்கிறோமோ, அந்த எம்பெருமானை நமஸ்கரிக்கிறேன்.

கூ ெஉடெதவ (55-வது பக்கம் 260-ெந. பார்க்க)

ஆுகா_தீயஹர (55-வது பக்கம் 264-ெந. பார்க்க)

ஷவியாஶரணா (50-வது பக்கம் 232-ெந. பார்க்க)

499. ஸூவஞ்கிம் தாழ் (லக்ஷ்மீதந்திரம்—28-11)

தன்னுடைய ஐந்து அங்கங்களோடு சேர்ந்த அந்தப் பிரபத்தியைச் செய்யக்கடவன்.

கூவெஉவ (54-வது பக்கம் 257-ெந. பார்க்க)

500. ஜூாஜீவெஉஷா (விஷ்ணுதத்வம்)

உன்னுடைய உயர்ந்த ஜீவநத்திலும், உன்னுடைய இருப்பிலும் ஆசையிருந்தால் எம்பெருமான் ஸ்வாமியாயிருப்பதும் அவனுக்கு ஆத்மா வேலைக்காரனாயிருப்பதும் ஸ்வபாவமாய் எப்போதுமிருக்கிறதென்று எப்போதும் நினை. இங்கே ஜீவநமென்பது மிகவுமுயர்ந்த புருஷார்த்தம் அடைவது. ஸத்தையென்பது அதற்கு வேண்டிய உபாயம்.

501. ஊஜூாவாஙு (யாஜ்ஞவல்க்யஸ்மிருதி—1-8)

எம்பெருமானுடைய ஆராதநம், ஆசாரம், இந்திரியங்களை அடக்குவது, ஒருவனை ஹிம்ஸிக்காமலிருப்பது, தாநம், வேதத்தை எப்போதும் சொல்லிக்கொண்டிருப்பது, இவைதவிர மற்ற வைதிககர்மங்கள், இவைகளுக்குள்ளே கர்மயோக ஜ்ஞாநயோக பக்தியோகங்களாலே பரமாத்மாவைப் பார்ப்பது மிகவுமுயர்ந்த தர்மம்.

502. ஸவெஷாஉவ (பாரதம் ஆநுசாஸநிகபர்வம்—36-24)

எல்லா தர்மங்களுக்குள்ளே எம்பெருமானை ஆராதநம் செய்வதாகிய தர்மமானது மிகவுமுயர்ந்தது. அவன் தன் பக்தனைத் தன் சரீரம்போல ரக்ஷிக்கிறான்.

503. ந விஷாரா யநாக (வியாஸஸ்மிருதி)

எம்பெருமானை ஆராதிப்பதைக் காட்டிலும் பாபத்தைப் போக்கக்கூடியதாய் வேதத்தில் சொன்ன கர்மம் வேறு இல்லை.

கூஷும் யஉழ் (103-வது பக்கம் 457-ெந. பார்க்க.)

504. கதாஶாஸ்த்ராயு (பிரம்மஸூத்திரம்—2-3-33)

ஜீவன் பிரயத்நம் செய்வதாகிய கர்த்ருத்வமுள்ளவன், ஒன்றைச் செய் என்றும், ஒன்றைச் செய்யவேண்டாமென்றும்

சொல்லுகிற சாஸ்திரத்திற்குப் பிரயோஜநமிருக்கவேண்டிய தாகையால்.

505. வரா த்- (பிரம்மஸூத்திரம்—2-3-40)

கீழே சொன்ன ஜீவனுடைய கர்த்ருத்வம் எம்பெருமானுக்குட்பட்டது. இப்படியே வேதம் சொல்லுகிறபடியால்.

சுவெஷ ீாநழ (59-வது பக்கம் 283-ெந. பார்க்க)

ஸாக்ஷாதவ (57-வது பக்கம் 272-ெந. பார்க்க)

506. சுயஃவா தக (விஷ்ணுதர்மம்—66-72)

ஓ பாரதனே! நீ பாபங்களுக்குப் பயந்தால் வேறு வியாபாரங்களை ஆரம்பிக்காமல் எல்லா பிரகாரத்தாலும் நாராயணனையே அடையவேண்டியவனாக எண்ணிக்கொண்டிரு.

507. சுஸூம- (யாக்ஞவல்க்யஸ்மிருதி—1-156)

உடம்பின் வேலையாலும் மனதாலும் வாக்காலும் பிரயத்நம் செய்து ஒருவன் தர்மத்தைச் செய்யவேண்டியது. சாஸ்திரத்தில் ஒரு பலனுக்கு உபாயமாகச் சொல்லப்பட்டதையும் ஸ்வர்க்கத்தை அடைவதற்கு விரோதியாயும் உலகத்தார் வெறுக்கக்கூடியதாயுமிருந்தால் செய்யக்கூடாது.

தஸெஷ நீ: (6-வது பக்கம் 24-ெந. பார்க்க)

508. கூஒள ஸஂகீ த (விஷ்ணுபுராணம்—6-2-17)

கிருதயுகத்தில் தியானஞ்செய்து, த்ரேதாயுகத்தில் யஜ்ஞங்கள் செய்து, த்வாபரயுகத்தில் எம்பெருமானுக்கு அர்ச்சனை செய்து, எந்த பலனை ஒருவன் அடைகிறானோ, அந்த பலனை கலியுகத்தில் எம்பெருமானுடைய திருநாமங்களைச் சொல்லி அடைகிறான்.

509. கஷெதெ ாஷ (ஸ்ரீபாரதம்—11-3-51)

ஓ ராஜாவே! தோஷத்துக்கிருப்பிடமான கலியுகத்துக்கு ஒரு பெரிய குணமிருக்கிறது. அதாவது கிருஷ்ணனுடைய திருநாமங்களைச் சொல்லுவதாலே கர்மபந்தம் போய் எம்பெருமானை அடைகிறானென்பது.

510. கூஒள கூ தய மூ (விஷ்ணுதர்மம்—109-57)

எவனுடைய மனதில் கோவிந்தனிருக்கிறானோ அவனுக்கு கலியுகத்திலும் கிருதயுகமிருக்கிறது. எவனுடைய மனதில்

அச்யுதனில்லையோ அவனுக்குக் கிருதயுகத்திலும் கலியுகமிருக்கிறது.

511\. கிංந௱ தஸ்ய (பௌஷ்கரஸம்ஹிதை)

பிரம்மாவே! இந்த மந்திரத்துக்கும் அதைச் சொல்லிச் செய்யும் கர்மத்துக்கும் அதிகாரியும், இதைக் கேட்கிறவனும் கிடைக்கமாட்டாதவர்கள் என்பதில்லையே.

ஊகிஸுநஃ (50-வது பக்கம் 229-லெ. பார்க்க)

512\. நரஸ்ய (லக்ஷ்மீதந்திரம்-28-17)

ஒருவன் தன் அதிகாரத்தை அறியாமையாகிய புத்திக் குறைவாலே பக்தியாகிய உபாயத்தைச்செய்ய ஆசைப்படுகிறான்.

கூ௺தகூ௺தஃ (55-வது பக்கம் 260-லெ. பார்க்க)

513\. ஊநஂஷிதக௺த௱ (அஹிர்புத்ந்யஸம்ஹிதை—37-49)

இப்படிப்பட்ட அந்த எம்பெருமானை ஒருவன் அர்ச்சித்து, எல்லா பாபங்களிலிருந்து விலகினவனாய் நூறுயஜ்ஞங்களைச்செய்தவனாக ஆகிறான். இதில் ஸம்சயமில்லை.

514\. தவஸ்விஸ்ய ஃ (கீதை—6-46)

யோகியானவன் தபஸ்ஸு செய்கிறவர்கள், ஜ்ஞானமுடையவர்கள், கர்மஞ்செய்கிறவர்கள் இவர்களைக் காட்டிலுமுயர்ந்தவன். ஆகையால் அர்ஜுநனே! நீ யோகியாக ஆகு. இங்கே யோகி என்பவன் ஆத்மஸ்வரூபத்தைத் தியாகம் பண்ணுகிறவன். தபஸ்ஸு என்பது எம்பெருமானுக்கு ஆராதநமாகச் செய்யப்பட்ட தபஸ்ஸு. ஜ்ஞானமென்பது ஆத்மஜ்ஞானத்தைக் காட்டிலும் வேறான ஜ்ஞானம். கர்மம் என்பது அச்வமேதம் முதலான யாகங்கள்.

515\. யொமிநாஉஷி (கீதை—6-47)

எவன் என்னிடத்தில் மனதை வைத்துச் சிரத்தையுடன் என்னைப் பஜிக்கிறானோ அவன் எல்லா யோகிகளைக் காட்டிலும் உயர்ந்தவனாக எண்ணப்படுகிறான்.

516\. தெஷாං த௱ (அஹிர்புத்ந்யஸம்ஹிதை—37-36)

எந்த தபஸ்ஸுக்கள் ஒருவனுக்கு மோக்ஷத்துக்கு ஸாதநங்களாக விதிக்கப்பட்டிருக்கின்றனவோ, அவைகளில் பிரபத்தி என்கிற தபஸ்ஸானது உயர்ந்த தபஸ்ஸாகச் சொல்லப்படுகிறது.

ஸக்ருதேவ (46-வது பக்கம் 218-ெந. பார்க்க)

517. மாநஸம் (கார்க்யஸ்மிருதி)

வெய்யிலோடு கூடின மழையினால் ஸ்நாநஞ்செய்வதைத் திவ்யமென்றும், ஜலத்தில் மூழ்கி ஸ்நாநஞ்செய்வதை வாருணமென்றும், எம்பெருமானை நினைப்பதை மாநஸஸ்நாநமென்றும் சொல்

518. ஆர்த்தோவா (ராமாயணம் யுத்தகாண்டம்—18-28)

ஒருவன் ஆர்த்தனாகவோ, திருப்தனாகவோ மற்றவர்களிடத்தில் பிரபத்தி பண்ணினால் சாஸ்திரமறிந்த அவர்களால் அவன் விரோதியாயிருந்தாலும் தங்களுடைய பிராணனை விட்டாவது அவன் ரக்ஷிக்கத்தகுந்தவன். இங்கே ஆர்த்தனென்பது உடனே பலனை வேண்டுகிறவன். திருப்தனென்பவன் தாமதித்துப் பலனைப் பெறவேண்டுகிறவன்.

519. மித்ரபாவேந (ராமாயணம் யுத்தகாண்டம்—18-3)

வேண்டியவன்போல் வந்தவனை நான் எந்தவிதத்தாலும் விடமாட்டேன். அவனிடத்தில் தோஷமிருந்தாலுமிருக்கட்டும். இதைப் பெரியோர்கள் கொண்டாடுவார்கள்.

520. யதிவா (ராமாயணம் யுத்தகாண்டம்—18-34)

ஸுக்கிரீவ! அவன் விபீஷணனோ அல்லது ராவணனேயோ, அவனை அழைத்துக்கொண்டுவா. வாநரசிரேஷ்டனே! அவனுக்கு என்னால் அபயம் கொடுக்கப்பட்டது.

521. [illegible] (சரணாகதிகத்யம்)

தன்னையடைகிறவர்களிடத்தில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்கிற வித்தியாஸத்தைப் பார்க்காமல் உலகத்தார் எல்லாருக்கும் ரக்ஷகன்.

ஷட்விதா ஸரணா (50-வது பக்கம் 232-ெந. பார்க்க)

ந்யாஸ: பஞ்சா (51-வது பக்கம் 233-ெந. பார்க்க)

ஸாங்கேந: பஞ்சபி: (113வதுபக்கம்499-ெந.பார்க்க)

522. ஸுலபோத்ர: (ஸநத்குமாரஸம்ஹிதை)

இப்படி பிரபத்திக்கு வேறொன்றினுடைய அபேக்ஷை ஓரிடத்திலும் ஒருகாலத்திலுமில்லை. அது எல்லாவிடங்களிலும் எல்லாருக்கும் எவ்லா பலனையும் கொடுக்கும்.

523. ந விஶ்வஸேத் (பாரதம்—உத்யோகபர்வம்—38-9)

ஒருவன் தன்னிடத்தில் நம்பிக்கையில்லாதவனிடத்தில் நம்பிக்கை வைக்கக்கூடாது. நம்பப்பட்டவனிடத்திலும் அதிக நம்பிக்கை வைக்கக்கூடாது. நம்பிக்கை வைப்பதாலுண்டாகும் பயமானது வேருடன் ஒருவனைக் கெடுத்துவிடும்.

524. யஸ்ய யாவாம்ஶ்ச (நாரதீயகல்பம்—1-14)

எவனுக்கு மூலமந்திரத்தில் எவ்வளவு நம்பிக்கையிருக்கிறதோ அவனுக்கு அதற்குத் தகுந்தபடி பலம் கிடைக்கும். அதனுடைய பெருமையை இவ்வளவுதான் என்று அளக்கமுடியாது.

525. ஸக்ருதுச்சரிதம் (விஷ்ணுதர்மம்—70-84)

ஹரி: என்கிற இரண்டெழுத்துக்கள் எவனால் ஒருதரம் சொல்லப்பட்டனவோ, அவனால் மோக்ஷத்தைக் குறித்துப்போவதற்கு ஸாதனங்கள் ஸித்தம் பண்ணப்பட்டன.

526. த்வதங்க்ரி (ஆளவந்தார் ஸ்தோத்ரம்—28)

தேவரீருடைய திருவடியைக் குறித்து எவனாலேயாவது எப்போதாவது எப்படியாவது ஒரு தடவை அஞ்ஜலி செய்யப்பட்டால் அது அப்போதே எல்லா பாபங்களையும் போக்கடிக்கிறது, நல்லவைகளை வளர்க்கிறது. அது ஒருகாலத்திலும் பலனில்லாமல் போகாது. இங்கே நல்லவைகளென்பது—எம்பெருமானுடைய அநுபவமும், அதற்காகச் செய்யவேண்டிய உபாயமும், அதற்கு வேண்டிய அங்கங்களும், அதின் அதிகாரமும், உபாயஞ் செய்தவனுக்கு ஸ்வயம்பிரயோஜநமான கைங்கரியமும்.

527. உதீர்ண (ஆளவந்தார் ஸ்தோத்திரம்—29)

தேவரீருடைய திருவடிகளாகிய இரண்டு செந்தாமரைகளில் உண்டாகியிருக்கும் பக்தியாகிய அமிருதஸமுத்திரத்தின் ஒரு திவலையானது, விருத்தியாகிக் கொண்டிருக்கிற ஸம்ஸாரமாகிய காட்டுத்தீயை ஒரு க்ஷணத்தில் அணைத்து, மிகவும் உயர்ந்த ஸுகத்தைக் கொடுக்கிறது.

528. வ்ருதைவ (சாண்டில்யஸ்ம்ருதி)

உன்னுடைய அனேகமான ஜந்மபரம்பரைகள் வீணாகப் போய்விட்டன. இந்த ஜந்மமும் அப்படியே வீணாகப் போய்விட்டதென்று நினைத்து பிரபத்தியைப் பண்ணு.

ஶரணம் 13-வது பக்கம். 63-வதைப்பார்க்க

529. ஆலோட்ய (பாரதம்–அநுசாஸனிகபர்வம் 178—11)

எல்லா சாஸ்திரங்களையும் படித்து யுக்திகளைக் கொண்டு அடிக்கடி விசாரித்ததில் இது ஒன்று தான் நன்றாய் ஏற்படுகிறது. நாராயணனே எப்போதும் தியாநம் செய்யத் தகுந்தவன் என்று.

530. ஹரிரேக: (ஹரிவம்சம் 132—8)

ஸத்துவகுணமுள்ள உங்களாலே ஹரி ஒருவனே தியாநம் செய்யத் தகுந்தவன்.

531. ஸததம் (ஹரிவம்சம் 132—14)

விஷ்ணுவை எப்போதும் நினைக்கவேண்டியது; ஒருபோதும் அவனை மறக்கக்கூடாது. சாஸ்திரங்களில் சொல்லிய விதிநிஷேதங்களெல்லாம், கீழே சொன்ன இரண்டையே விரிவாய்ச் சொல்லுகின்றன.

532. மாமேவ (கீதை 7—14)

என்னிடத்திலேயே யார் பிரபத்தி பண்ணுகிறார்களோ, அவர்கள் தாண்டமுடியாத மாயையைத் தாண்டுகிறார்கள். இங்கே மாயை யென்பது ஸத்துவம் முதலான மூன்று குணங்களையுடைய பிரகிருதி.

533. ஶரணம் (ப்ராம்மபுராணம்)

எவர்கள் பக்தியோகம் பண்ணச் சக்தியில்லாதவர்களாய் தேவரீரை உபாயமாக அடைகிறார்களோ, அவர்களும் ஸம்ஸாரத்தைத் தாண்டி தேவரீருடைய இடமாகிய வைகுந்தத்தை அடைகிறார்கள்.

534. யதப்ராப்ய (அஹிர்புத்ந்யஸம்ஹிதை 37—25)

பலத்தில்ஆசையையுடைய எவனெவனால் எந்தெந்த பலன்கள் வேறு ஸாதநங்களாலே அடையமுடியாதனவோ, முமுக்ஷுவாலே எந்த மோக்ஷமென்கிற பலனானது கர்மயோகம், ஜ்ஞாநயோகம், பக்தியோகமாகிய இவைகளால் அடையமுடியாதோ, ஏ மஹர்ஷியே! அவனவனாலே பிரபத்தியாலேயே அந்தந்த பலன்கள் அடையப்படுகின்றன. புருஷோத்தமனான பரமாத்மாவும் அதனாலேயே அடையப்படுகிறான். முமுக்ஷு ஆசைப்படுகிற இடமானது எங்கே போய்த் திரும்பி வருவதில்லையோ, அந்த உயர்ந்த இடம்

535. தச்ச்ருத்வாஹம் (வைகுண்டகத்யம்)

மேலே ஒவ்வொருநாளும் தான் பிழைத்திருப்பதற்காக இப்படி தியாநம் செய்யவேண்டியது.

536. அத பரமைகாந்திந: (நித்தியம்)

பரமைகாந்திகள் எம்பெருமானுக்கு ஆராதநம்செய்யவேண்டிய க்ரமத்தைச் சொல்லுகிறேன். எம்பெருமானுடைய கைங்கரியமொன்றிலேயே ஆசையையுடைய பரமைகாந்தியாக ஆகி.

537. அத்ருப்த (நித்தியம்)

அளவில்லாத பிரீதியோடு கூடிய நடுவில் வேறு எண்ணம் கலக்காத கண்ணாலே பார்ப்பது போல் மிகவும் தெளிவான தியாநத்தைச் செய்துகொண்டிரு.

538. அபிகம்ய (வங்கிபுரத்துநம்பிகாரிகை 34—36)

காலைவேளையில் எம்பெருமானிடம் போய், பிறகு அவனுடைய ஆராதநத்துக்கு வேண்டிய வஸ்துக்களை ஸம்பாதித்து அதற்கு மேலே அவனை ஆராதநஞ் செய்து, அதற்கு மேலே மந்திரங்களை ஜபித்துக் கொண்டிருந்து, கடைசியில் மிகவுமுயர்ந்தவனை அவனைத் தியாநம் பண்ணிக்கொண்டு, இப்படி சொல்லப்பட்ட ஐந்து காலங்களில் அவனை ஆராதித்துக் கொண்டு நாட்களைப் போக்குவேன். 294-வதையும் பார்க்க. எம்பெருமானிடம் போய் என்பதற்கு— அவனிடம் போய் இன்றைக்குத் தேவரீருடைய கைங்கரியங்கள் அபராதமில்லாமல்நடக்க வேண்டுமென்று பிரார்த்திப்பது என்று பொருள். இதற்கு அபிகமநம் என்று பொருள். மற்ற நாலு காலங்களில் செய்கிற வேலைகளுக்கு, உபாதாநம், இஜ்யை, ஸ்வாத்யாயம், யோகம் என்று பெயர்.

539. ந தேவலோகா (ராமாயணம் அயோத்யா—31-5)

தேவரீரை விட்டு, வைகுந்தமென்கிற லோகத்துக்குப் போவதையும், சாவில்லாமல் ஆத்மாவை அநுபவித்துக்கொண்டிருப்பதையும், உலகங்களை ஆளுவதாகிய ஐசுவரியத்தையும் நான் ஆசைப்படவில்லை.

ஸவாஸ்து (11-வது பக்கம் 44-ெந. பார்க்க)

540. யத்ர க்வ ச (இரண்டாவது ஜிதந்தா—8)

எனக்கு எந்த குலத்தில் வாஸமிருந்தாலுமிருக்கலாம்; எவர்களிடத்திலாவது பிறப்பு இருக்கட்டும். தேவரீருடைய கைங்கரியமாகிய போகத்தில் எந்தவிடத்திலும் எந்தக்காலத்திலும் பிரீதியிருக்கவேண்டும். தேவரீரைத்தவிர வேறு எந்த தேவதையையும் உத்தேசித்து உடம்பின் வேலை, மனது, வாக்கு, தலை இவைகளாலே ஒருவிதமாயும் ஒன்றையும் செய்யமாட்டேன்.

541. விஷ்ணும் ப்ரஹ்மண்ய (பாரதம் ஆநுசாஸநிக-142_59-61)

எவன் தாமரைக்கிழங்கைத் திருடுகிறானோ, அவன் பிராம்மணர்களுக்கு ஹிதத்தைச் செய்கிறவனும் தேவர்களுக்கு நியமநஞ் செய்கிறவனும் எல்லா உலகத்தாராலும் நமஸ்காரம் செய்யப்பட்டவனும் மூன்று உலகங்களுடைய ஸிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் இவைகளுக்குக் காரணமும், தன்னை நியமநம் பண்ணுகிற வேறொருவனில்லாதவனும், உலகத்துக்கு ஆதாரமாயும் அதை உண்டுபண்ணி அழிக்கிறவனும், உலகங்களுக்கு குருவுமான விஷ்ணுவை விட்டு வேறு தேவதையை அவன் பஜிக்கட்டும். இங்கே ஸிருஷ்டியையும் ஸம்ஹாரத்தையுமிரண்டு தடவை சொன்னது—மஹத்தத்துவம்முதல் பிருதிவீ வரையிலுள்ளவைகளின் ஸிருஷ்டியாகிய ஸமஷ்டி ஸிருஷ்டியையும், பிறகு நான்கு விதமான பிராணிகளை ஸிருஷ்டிப்பதாகிய வியஷ்டி ஸிருஷ்டியையும் நினைத்து.

542. விஷ்ணுயஜ்ஞ (இதிஹாஸஸமுச்சயம்— 12-77)

எவன் தாமரைக்கிழங்கைத்திருடுகிறானோ அவன் எம்பெருமானை ஸந்தோஷப்படுத்துகிற தர்மங்களைச் செய்யாதவனாயும், அவைகளுக்கு முகங்கொடாதவனாயும், கெட்டதர்மங்களையும், கெட்ட விரதங்களையும் செய்யும் ஸ்வபாவமுள்ளவனாயும் ஆகக்கடவன்.

ஆராயநாநாமு (71-வது பக்கம் 322-நெ. பார்க்க)

543. யஜ்ஞ: ஶ்ருத: (பாரதம் ஆச்வமேதிக—96-31)

ஓ ராஜச்ரேஷ்டனே! ஒருவன் தர்மஞ்செய்ததைக்கேட்பதும், பார்ப்பதும், நினைப்பதும், சொல்லுவதும், அதைப் பார்த்து ஸந்தோஷப்படுவதும், இவைகளைச் செய்கிறவனை எப்போதும் பரிசுத்தம் செய்யும்.

544. தஸ்ஸா (பாரதம் ஆச்வமேதிகபர்வம்—118-14)

ஆகையாலே சூத்திரன் என்னுடைய திருநாமங்களைப் பிர ணவத்தோடு சேர்த்துச் சொல்லக்கூடாது.

545. அஷ்டாக்ஷர (நாரதீயகல்பம்)

எட்டெழுத்தாகிய மூலமந்திரத்தினுடைய ஜபமானது நான் காம் வேற்றுமையுருபில்லாமல் செய்யப்படவேண்டியதென்று விதிக்கப்பட்டிருக்கிறது. அப்படியே, ஸ்வரமும், பிரணவமும், அங்கந்யாஸமும், வேறு விதிகளும் இல்லை. ஸ்திரீகளுக்கும் சூத்ரஜாதிகளுக்கும் மந்திரம் மாத்திரத்தைச் சொல்லுவதுதான் ஜபமென்று சாஸ்திரத்தில் சொல்லப்படுகிறது.

546. நமோ நாராயண (வராஹபுராணம்—139.53)

பிறகு நன்றாய் பொழுது விடிந்தவுடன் விழித்துக்கொண்டு, எம்பெருமானைப் பாடுவது என்கிற விரதம் முடிந்தவுடன், நமோ நாராயண என்று சொல்லி நாய் மாம்ஸத்தைத் தின்கிற ஜாதியில் பிறந்த நம்பாடுவன் என்பவன் திரும்பிவந்தான்.

547. த்வயமர்த்தாநுஸந்தாநேந (சரணாகதிகத்யம்)

த்வயமென்கிற மந்திரத்தை அதின் அர்த்தத்தை நினைப்பது டன் கூட எப்போதும் இப்படியே சொல்லிக்கொண்டிருக்கிற நீ.

548. க்லேசாநாஞ்ச (விஷ்ணுபுராணம்—6.7-25)

அவித்யை முதலான க்லேசங்களை நாசம் செய்யத்தகுந்தது யோகத்தைக் காட்டிலும் வேறில்லை. க்லேசம் என்பதின் பொருளை 12-வது பாக்கம் 53-வதில் பார்க்க.

549. ந கர்மணாம் (விஷ்ணுதர்மம்—102.4)

கர்மங்களை நாசம் பண்ணுவது யோகமில்லாமல் பதினாயிரம் பிறப்புகளாலும் முடியாது. யோகமாகிய நெருப்பே கர்மமாகிய உலர்ந்த புல்லை நாசம் செய்கிறது.

தமிழ் வசனங்கள்.

குலங்களாய (69-வது பக்கம் 72-ரெ. பார்க்க)

110. செய்தவேள்வியர் (திருவாய்மொழி—5.7.5)

யஜ்ஞங்களைச்செய்தவர்கள். இங்கேவேள்வியென்பது பிரபத்தி.

111. மொய்த்த (திருமாலை—4)

நெய்க்குடத்தில் எறும்பு மொய்த்துக்கொண்டிருப்பது போல தன்னைச் சூழ்ந்துகொண்டிருக்கிற பலமான கர்மங்களுக்குள் நின்று, மூன்றெழுத்தையுடைய கோவிந்தா என்கிற பெயரால் க்ஷத்ரபந்துவென்பவனும் உயர்ந்த கதியையடைந்தான். இவ்வளவு தன்னுடைய தாஸர்கள் விஷயத்தில் இரக்கப்படும் பயித்தியக்காரனாகிய ரங்கநாதனை அடைந்தும் ஸம்ஸாரத்தில் கஷ்டப்படும் விதம் என்ன ?

நிரந்தரம் (68-வது பக்கம் 65-வதைப் பார்க்க)
பூசித்தும் (66-வது பக்கம் 50-வதைப் பார்க்க)
தனக்கே (67-வது பக்கம் 56-வதைப் பார்க்க)

112. இனிப்போய் (பெரியாழ்வார் திருமொழி—5-6-3)

தேவரீருக்குக் கைங்கரியம்செய்துகொண்டிருக்கும்படியான தபஸ்ஸையுடைய நான் இனிமேல் வேறொருவனிடம் போய் வணங்கி அவன் வீட்டு வாசலிலே தூரநிற்பது தேவரீருடைய தேஜஸ்ஸுக்குக்குறைவு. இதைத்தேவரீர் பார்த்தருளவேணும்.

113. கூறை சோறிவை (பெரியாழ்வார் திரு—5-1-4)

உடுத்திக்கொள்ளத் துணியையும் சாப்பிடச் சோற்றையும் தேவரீரிடத்தில் நான் கேட்பதில்லை.

உன்னித்து (36-வது பக்கம் 21-வதைப்பார்க்க)

114. தேவனெம்பெருமான் (திருவாய்மொழி—2-2-4)

தேவனான எம்பெருமானுக்கில்லாமல் வேறு எவனுக்கு புஷ்பமும் பூஜையும் தகும்.

115. ஈன்றோளிருக்க (திருவாசிரியம்—6)

பெற்ற தாயாரிருக்க, அவளை விட்டு மரப்பாச்சிக்கு ஸ்நாநம் செய்து. இதுபோல் உண்டுபண்ணின எம்பெருமானிருக்க வேறு தெய்வத்தை உலகத்தார் பூஜை செய்வதாகிய ஸ்வபாவம் என்னவென்று ஆழ்வார் ஆச்சரியப்படுகிறார்.

116. மற்றிங்கோர் (பெரிய திருமொழி—11-6-6)

இங்கே எம்பெருமானை விட்டு ஒரு ஜீவனை தைவமாக வைத்துக்கொண்டு அவனைக் கொண்டாடும்படியான உலகத்தார்களே ! பெற்றதாயிருக்க, அவளை விட்டு ஒரு மரப்பாச்சிக்கு

வெந்நீரால் ஸ்நாநம் செய்கிறீர்களா? எம்பெருமானுக்குக் கைங்கரியம் செய்யமுடியாதபடி அவனுடைய கருணையில்லாதவர்களா நீங்கள்?

வாயவனை (67-வது பக்கம் 62-வதைப் பார்க்க)

117. சொன்னால் (திருவாய்மொழி—3-9-1)

நான் எம்பெருமானைத் தவிர வேறொருவனையும் பாடமாட்டேன். இந்த விஷயத்தை நான் சொல்வதுகூட விரோதம். ஆனபோதிலும் சொல்லுகிறேன் கேளுங்கள்.

118. சிந்தை (திருவாய்மொழி—7·10-10)

என் நினைவானது வேறு தேவதை விஷயத்தில் இருக்கிற தில்லையென்கிற என் ஸ்வபாவத்தைத் தேவர்களுக்கு உபகாரம் செய்யும் எம்பெருமான் அறிவான்

119. வருதேவர் (பெரிய திருமொழி—8-10-2)

நான் அடையும்படியாக என்னிடம் வரும் தேவதை வேறொருவன் இருக்கிறானென்று நான் கொஞ்சமும் எண்ண மாட்டேன்.

120. குன்றமெடுத்த (திருவாய்மொழி—7-4-11)

கோவர்த்தநமலையைத் தூக்கி கோகுலத்தை இரக்ஷித்த எம்பெருமானுடைய தாஸர்களோடு சேர்ந்திருந்த சடகோபன்.

121. ஏத்தியிருப்பர் (நான்முகன் திருவந்தாதி—18)

எம்பெருமானை ஸ்தோத்திரம் பண்ணிக்கொண்டிருக்கிறவர்களை, அவர்களைக் காட்டிலும் வேறாய், அவர்களைச் சேர்ந்திருப்பவர்களுடைய தபஸ்ஸானது ஜயிக்கும்.

வாயினால் (69-வது பக்கம் 79-வதைப் பார்க்க)

122. நாமஞ்சொல்லில் (பெரிய திருமொழி—6-10-1)

எம்பெருமானுடைய திருநாமத்தைச் சொல்லும்போது நமோ நாராயண என்று சொல்லவேண்டியது.

அரும்பதவுரை.

செருக்கு — கர்வம்.

விழுக்காடு — தானாய்ப்போய் விழுவதாலே ஏற்பட்டது.

கடகம் — கத்தி முதலானவைகள் உடம்பில் படாதபடி ஒருவனால் தரித்துக்கொள்ளப்பட்ட ஆயுதம்.

25. ப்ரபாவவ்யவஸ்தாதிகாரம்.

ஸம்ஸ்கிருத வசனங்கள்.

550. ஆஸ்ஃபோடயந்தி (வராஹபுராணம்)

பிதிருக்களும் பிதாமஹன்களும், நம்முடைய குலத்திலே விஷ்ணுபக்தன் பிறந்திருக்கிறான். அவன் நம்மைக் கரையேற்று வனென்று தோளைத் தட்டிக்கொண்டு கூத்தாடுகிறார்கள்.

551. யோவேத்தி (பாரதம் ஆரண்யபர்வம்—191-29)

எவன் இந்த கிருஷ்ணனை உள்ளபடி அறிகிறானோ அவனு டைய பெருமையை நித்தியஸூரிகளும் இவ்வளவென்று அறி யார்கள்.

552. ந ஶூத்ரா: (பாரதம் ஆச்வமேதிகபர்வம்—118-32)

சூத்திரர்களான எவர்கள் எம்பெருமானிடத்தில் பக்தியுள் ளவர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் சூத்திரர்களன்று. அவர் கள் பாகவதர்களான பிராம்மணர்கள். எல்லா ஜாதிகளிலும் எவர்கள் ஜநார்த்தநனை எம்பெருமானிடத்தில் பக்தியில்லாத வர்களோ, அவர்களே சூத்திரர்கள்.

553. ஜாஜந்மப்ரப்ருதி (வராஹபுராணம்)

எவனுக்கு பிறந்ததுமுதல் சாகிறவரையில் வாஸுதேவன் தைவமன்றோ, அவன் நம்முடைய குலத்தில் பிறக்கவேண்டாம். பிறந்தாலும் சீக்கிரம் மரணமடையட்டும்.

554. ஸஶூத்ர: (பாரமேஷ்டிய ஸம்ஹிதை)

பிராமணன் நெற்றியில் புண்ட்ரத்தைக் குறுக்காகத் தரிக் கக்கூடாது. அப்படித் தரிக்கிறவன் அந்தக் காரணத்தாலே சூத்திரனென்று எண்ணத் தகுந்தவன்.

555. ஸ்வதர்மநிஷ்டோ (பாரதம் ஆச்வமேதிகபர்வம்—116-8)

ராஜாவே! கௌரவம் செய்யத்தகுந்த மங்களத்தைச் செய் கிற குணங்கள் ஜாதியினால் உண்டாகிறதில்லை. தன்னுடைய ஆசாரப்படி நடக்கிற சண்டாளனையும் பிராம்மணனென்று தேவர்கள் அறிகிறார்கள்.

556. ஸ்வதர்மஸ்தா:

ஸந்நியாஸிகளும் தபஸ்ஸு செய்கிறவர்களும் பிரஷ்டர்களானால் சண்டாளர்களாகிறார்கள். அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளைச் சண்டாளர்களுடன் வஸிக்கும்படி ராஜா செய்ய வேண்டியது.

557. ந தேந வ்ருத்த: (மநுஸ்ம்ருதி—2-156)

எவன் தலை நிறைத்திருக்கிறதோ, அதனாலே அவன் கிழவனாக விளங்குவதில்லை. சிறு பிள்ளையாயிருந்தாலும் எவனுக்கு நல்ல ஜ்ஞாநமிருக்கிறதோ, அவனைக் கிழவனென்று தேவர்கள் அறிகிறார்கள்.

558. ஸுக்தவந்தஸு (பாரதம் உத்யோகபர்வம்—93-43,45)

பிராமணசிரேஷ்டர்கள் சாப்பிட்டபிறகு, மிகவுமுயர்ந்த ஆஸநத்தில் உட்கார்ந்துகொண்டு ஸ்ரீ கிருஷ்ணன் சுத்தமாயும் குணமுடையதுமான விதுரருடைய அந்நத்தைச் சாப்பிட்டான்.

559. பீஷ்மத்ரோணௌ (பாரதஸாவித்ரீ)

தாமரைப்பூபோன்ற திருக்கண்களையுடையவனே ! பீஷ்மரையும், த்ரோணரையும், என்னையும் விட்டுவிட்டு, எதற்காக சூத்ரனுடைய போஜநத்தைச் சாப்பிட்டீர்.

560. த்விஷதந்நம் (பாரதம் உத்யோகபர்வம்—91-27)

த்வேஷமுள்ளவன் கொடுக்கும் அந்நத்தைச்சாப்பிடக்கூடாது. த்வேஷமுள்ளவனுக்கு அந்நத்தைக் கொடுத்துச்சாப்பிடச் சொல்லக்கூடாது. ராஜாவே! பாண்டவர்களிடத்தில் நீ த்வேஷம் பண்ணுகிறாய். அவர்கள் எனக்குப் பிராணனல்லவா ?

561. ஆர்யாதிஷ்டிதா: (ஆபஸ்தம்பஸூத்ரம்—2-2-4)

பிராம்மணர்களாலே நியமநம் பண்ணப்பட்ட சூத்திரர்கள் அவர்களுடைய அந்நத்தைப் பாகம் செய்யத் தகுந்தவர்கள்.

562. ஸுவிஸ்ரு (பாரதம் உத்யோகபர்வம்—91-43)

ஸ்வயம் பரிசுத்தனை விதுரன் பிராம்மணர்களுக்கு அந்நத்தைப் பாகஞ்செய்வதற்கு வேண்டிய குணமுள்ளவனாய் அந்நத்தைக் கொண்டுவந்தார்.

563. விஷ்ணுநிந்தகஸ்ய

ஓ குழந்தாய் ! எம்பெருமான் ஜ்ஞானத்தால் எபபோதும் ஸ்தோத்ரம் பண்ணத்தகுந்தவன். ஆகையால் நித்தியமான

அவன் விஷயமான உயர்ந்த ஜ்ஞாநத்தைப் பிராம்மணனிடத்தி லிருந்து ஸம்பாதித்துக்கொள்ளவேண்டியது.

564. ப்ராப்ய ஜ்ஞாநம் (பாரதம் சாந்திபர்வம்—323-88)

ஜ்ஞாநமானது பிராம்மணனிடமிருந்து, அல்லது க்ஷத்திரிய னிடமிருந்து, அல்லது வைசியனிடமிருந்து அல்லதுசூத்திரனிட மிருந்து அல்லது அதற்கும் தாழ்ந்த ஜாதியிலிருக்கிறவனிட மிருந்து அடிக்கடி ஸம்பாதிக்க வேண்டியது.

565. ஶூத்ரயோநாவஹம் (பாரதம்-உத்யோகபர்வம்-41-5)

சூத்திரஜாதியில் பிறந்த நான் வேறொன்றையும் சொல்லத் துணியவில்லை.

ஸக்ருத்ரஷ்டவ்யா 71-வது பக்கம் 324-ஙெ. பார்க்க.
யஶ்ஶூத்ரம் 80-வது பக்கம் 363-ஙெ. பார்க்க
ஶ்ரேயாந் ஸ்வதர்ம: 112-வது பக்கம் 493-ஙெ. பார்க்க

566. ஸ்வே ஸ்வே கர்மணி (கீதை—18-45,46)

தன் தன் கர்மத்தில் பிரீதியுள்ளவனுயிருந்து மனிதன் அடையவேண்டிய புருஷார்த்தத்தை அடைகிறான். இதை எப் படி அடைகிறுனென்பதைக் கேள். எம்பெருமானை தன்னு டைய கர்மத்தினுல் ஆராதித்து மனிதன் ஸித்தியையடைகிறான்.

தஸ்மாச்ச ஸர்வேஷு 120-வது பக்கம் 544-ஙெ. பார்க்க

567. வர்ணாஶ்ரமாசாரவதா (விஷ்ணுபுராணம்—3-8-9)

ஜாதிக்கும் ஆச்ரமத்துக்கும் ஏற்பட்ட ஆசாரத்தையுடைய மனிதனுலே மிகவுமுயர்ந்தவனுன எம்பெருமான் ஆராதிக்கப் படுகிறுன். இந்த ஆராதநத்தைக் காட்டிலும் அவனுடைய ஸந் தோஷத்தையுண்டுபண்ணுவது வேறொன்றில்லை.

568. ந சலதி (விஷ்ணுபுராணம்—3-7-20)

எவன் தன்னுடைய ஜாதிக்கு ஏற்பட்ட கர்மங்களினின்றும் கொஞ்சங்கூட விலகாமல், தனக்கு நல்லதை எண்ணுகிறவர்களி டத்திலும் தனக்கு விரோதம் பண்ணுகிறவர்களிடத்திலும் ஒரே விதமான எண்ணமுள்ளவனுய், ஒருவனிடமிருந்தும் ஒன்றையும் அபஹரிப்பதையும், ஹிம்ஸை பண்ணுவதையும் செய்கிறதில்லை யோ, மிகவும் ஆசை முதலான குற்றங்களில்லாத மனதையுடைய அவனை விஷ்ணுபக்தனுக அறி.

569. ஶூத்3ரஸ்ஸாது4: (விஷ்ணுபுராணம்—6-2-6)

கங்கையின் ஜலத்தில் மூழ்கி அதிலிருந்து, கிளம்பி "சூத்ரன் உயர்ந்தவன் கலியுகமுயர்ந்தது" என்று என் பிள்ளையான வியாஸர்சொன்னான்.

570. தமஶ்ஶூத்3ரே (பாரதம் ஆச்வமேதிகபர்வம்—40.11)

சூத்திரனிடத்தில் மிகுந்த தமோகுணமும், க்ஷத்திரியனிடத்தில் மிகுந்த ரஜோகுணமும், பிராம்மணனிடத்தில் மிகுந்த ஸத்துவகுணமும் இப்படி மூன்று ஜாதிகளில் மூன்று குணங்கள் இருக்கின்றன. இங்கே மிகுந்த என்கிற சொல்லாலே ஒவ்வொரு குணமும் மற்ற இரண்டு குணங்களையடக்கிக்கொண்டு தலையெடுத்திருக்கிறதென்று காட்டப்படுகிறது.

571. ஏதை: ப்ரபூ4தை: (யாக்ஞவல்க்யஸ்மிருதி—1-116)

வித்யா, (ஞ்ஞானம்) கர்மம், வயது, பந்து, பணம் இவைகளாலே கிரமப்படி பூஜிக்கத் தகுந்தவர்கள். இவைகளுடன் சேர்ந்த சூத்திரனும் கிழவயதில் கௌரவம் பண்ணத்தகுந்தவன்.

ஜிஜ்ஞாஸு 112-வது பக்கம் 494-நெ. பார்க்க.

572. ஐகாந்த்யம், ஜ்ஞாநீ து (கீதார்த்த ஸங்கிரஹம்28, + 32)

இந்த மூன்று அதிகாரிகளுக்கும் எம்பெருமானிடத்தில் ஐகாந்தியம் ஸமம். ஐகாந்தியமென்பது அவனைத்தவிர வேறு தேவதையைப் பார்க்காமல் அவனையே நம்பியிருப்பது. அவர்களில் எவன் எம்பெருமானை அடைகிறவரையில் வேறு பலனில் ஆசையில்லாமல் அவனையே வேண்டுகிறானோ, அவன் அந்த எம்பெருமானை முடிவில்லாமல் அநுபவிக்கிறான். அவர்களில் ஜ்ஞாநியென்பவன் பரமைகாந்தி யென்று சொல்லப்படுகிறான். அவன் பிழைத்திருப்பது எம்பெருமானுக்கு அதீநமாயிருக்கிறது. அவனுடன் சேர்ந்திருப்பதே அவனுக்கு ஸுகம். அவனை விட்டுப் பிரிவதே அவனுக்கு துக்கம்; எம்பெருமானொருவனிடத்திலேயே மனதிருக்கிறது. எம்பெருமானைத் தியாநம் பண்ணுவது, புண்ணியதீர்த்தங்களுக்குப் போவது, அவனைப்பற்றி கேட்பவர்களுக்குச் சொல்லுவது, அவனுக்கு நமஸ்காரம் செய்வது, அவனை ஸ்தோத்திரம் பண்ணுவது, அவனுடைய திருநாமங்களைச் சொல்லுவது, இவைகளாலே தன்னைத்தான் ஒரு வஸ்

துவாக இருப்பதாக எண்ணுவன். அவனிடத்தில் கொடுக்கப் பட்ட பிராணன் மனது, புத்தி, இந்திரியங்கள் இவைகளின் வேலை களைச் செய்கிறவன். இங்கே எம்பெருமானுடன் சேர்வதாவது- சாஸ்திரத்தினால் விதிக்கப்பட்டு மூன்று காரணங்களால் செய்யக் கூடிய ஆராதநத்தில் நோக்குள்ளவனாயிருப்பது. 342-வதையும் பார்க்க.

573. நாராயணைகநிஷ்ட (விஹகேந்திர ஸம்ஹிதை)

நாராயணன் ஒருவனையே எப்போதும் நினைத்துக்கொண்டி ருக்கிறவன் எந்தெந்த விருத்தியாலே பிழைக்கிறானோ, அது அவனுடைய அர்ச்சநம், அவன் எதைப் பேசுகிறானோ, அது எல்லாம் ஜபம்; அவன் எதைப் பார்க்கிறானோ, அது தியாநம்; அவன் காலில் பட்ட ஜலம் ஒப்பில்லாத தீர்த்தம்; அவன் சாப் பிட்ட மீதி மிகுந்த பரிசுத்தியைக் கொடுக்கிறது; அவனுடைய வெறுஞ் சொல்லானது உயர்ந்த மந்திரம்; அவன் தொட்டதெல் லாம் சுத்தமாக ஆகிறது.

574. ஆபத்தர்ம

ஒருவனுக்கு ஏற்பட்ட விருத்தியைச் செய்யமுடியாத ஆபத்காலங்களில் அதற்கு அடுத்த விருத்தியானது பிழைப்ப தற்கு ஸாதநமாக வைத்துக்கொள்ளலாம்.

575. மதர்த்தே

எனக்காகச் செய்யப்பட்ட பாபமும் தர்மமாக ஆகிறது.

576. யத்கரோஷி (கீதை—9-27)

உடம்பின் ஸம்ரக்ஷணைக்காக எத்தைச்செய்கிறாயோ எதைச் சாப்பிடுகிறாயோ, எந்த ஹோமதாந தபஸ்ஸுக்களைச் செய்கிறா யோ, குந்தியின் பிள்ளையே! அவைகள் என்னிடத்தில் எப்படி ஸமர்ப்பிக்கப்படுமோ அப்படிச் செய். அதாவது— அந்த கர் மங்கள் என்னுடையதென்றும், அவைகளின் பலன்கள் என்னு டையனவென்றும், நானே அவைகளைச் செய்கிறேனென்றும் எண்ணிக்கொண்டு அவைகளைச் செய்.

577. வாரூஷ்யாதிவாத: (மநுஸ்மிருதி—12-6)

(1) கடுமையாகப் பேசுவது, (2) அந்தந்த வஸ்துக்களுக்கு உள்ள பெருமைக்கு மேல்பட்டு அவைகளைச் சொல்வது. (3)

கோழ்ச் சொல்லுவது, (4) பொருத்தமில்லாமல் பேசுவது, இப்படி வாக்குவிஷயமான பாபங்கள் நான்கு விதங்கள்.

578. ந விக்ருஹ்ய (மநுஸ்ம்ருதி—4-72)

உண்மையான அர்த்தத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று ஆசையில்லாமல் சண்டை போடுவதற்காக மாத்திரம் ஒருவனிடம் விவாதம் செய்யக்கூடாது. மாலையை வெளியில் தரிக்கக்கூடாது. பசுமாட்டின்மேல் ஏறிப்போவது எல்லா விதத்தாலும் நிந்திக்கப்படுகிறது.

579. யஸ்யாஸக்த

தேவதையையும் அதாவது—எம்பெருமானையும், ஆசாரியனையும் நிந்திக்கிறவர்களைச் சக்திக்குத் தகுந்தபடி கண்டிக்க வேண்டியது.

580. அஹம் ஹரிः (விஷ்ணுபுராணம்—1-22-87)

நான் ஹரி; இதெல்லாம் ஜநார்த்தநன்; மஹத் முதலான காரண திரவியங்களும், அவைகளிலிருந்து உண்டானவைகளும் இவைகளெல்லாம் அவனைக் காட்டிலும் வேறன்று. எவனுக்கு இவ்விதமான எண்ணமிருக்கிறதோ, அவனுக்கு ஸம்ஸாரத்தில் உண்டாகிற ஸுகதுக்கங்களாகிய வியாதிகள் வாரா.

581. நிவேதிதாந்ந (ஸநத்குமாரஸம்ஹிதை)

வேறு தேவதைகளுக்கு நிவேதநம் பண்ணினதையும், குருவில்லாதவன் சாப்பிட்டு மீந்ததையும் சாப்பிடுகிற மனிதன் ஒரு மாதம் பயோவ்ரதத்தைச் செய்து, எட்டெழுத்துள்ள மூலமந்திரத்தை எப்போதும் ஜபித்துக்கொண்டு, பிரும்மகூர்ச்ச பஞ்சகவ்யத்தைச் சாப்பிட்டு சுத்தனாக ஆகிறான். பயோவிரதமென்பது பாலையே சாப்பிட்டுக்கொண்டு செய்யும் விரதம்.

582. பரித்யஜேத் (மநுஸ்ம்ருதி 4-176)

தர்மத்தை விட்டு விலகின அர்த்தத்தையும் காமத்தையும் ஒருவன் விட்டுவிடவேண்டியது. தர்மங்கூட மேலே துக்கத்தைக் கொடுப்பதானாலும், உலகத்தார் வெறுக்கக்கூடியதாயிருந்தாலும் அதை விட்டுவிடவேண்டியது.

583. உதும்பரம் (பாரதம் ஆநுசாஸநிகபர்வம்—161-97)

அத்திக்காயைச் சாப்பிடக்கூடாது.

584. ஙாமிஜெஹாஞ-ஹு

கொம்மட்டி, அத்திக்காய், சுரைக்காய், கோவைப்பழம் இவைகளைச் சாப்பிடக்கூடாது. இவைகளை எப்போதும் சாப்பிடுகிறவனுக்கு எம்பெருமான் எப்போதும் தூரத்திலிருப்பன். வெண்கத்திரி, தேத்தாங்கொட்டை, கொம்மட்டி, குவளை, அத்திக்காய், காந்தல், இவைகளை எவன் தெரியாமல் சாப்பிடுகிறானோ அவனுக்கு தூரத்தில் எம்பெருமானிருக்கிறான். கொம்மட்டி, சித்தவரை, காந்தல், நிலப்பனை, சுரைக்காய் இவைகளை எவன் சாப்பிடுகிறானோ, அவனுக்கு தூரத்தில் எம்பெருமானிருக்கிறான். வெண்கத்திரி, கொம்மட்டி, கன்றுபோட்டு பத்துநாளைக்குட்பட்ட பசுவின் பாலாலுண்டான ஆமிக்ஷை, தாமரைக்கிழங்கு இவைகளை எவன் சாப்பிடுகிறானோ, அவன் கடைசி காலத்தில் உகைத்துக்கு யஜமானனை கோவிந்தனை நினைக்கமாட்டான். காலிங்கமென்பதற்கு முள்ளங்கியென்றும் பொருள் கொள்ளலாம். ஆமிக்ஷா-கொதிக்கிற பாலில் தயிரை விட்டால் அது திரியும். அதில் கெட்டியாயிருக்கும் பாகத்துக்கு ஆமிக்ஷையென்று பெயர்.

585. தூஹு (பாரதம் ஆச்வமேதிகபர்வம்—112-44)

வேலங்காய், பீர்க்கு, ஈருள்ளி, வெள்ளுள்ளி, நாய்க்குடை, ஊர்ப்பன்றி கிழங்கு இவைகளைச் சாப்பிட்டவன் சாந்திராயணம் என்கிற விருதத்தைச் செய்யக்கடவன்.

586. ஙாஉவிகா

தேங்காய்பூளை, சணைப்புக்கீரை, நாய்க் குடை, குசும்பை, சுரைக்காய், விஷ்டையை எருவாகப்போட்டு அதனுலுண்டானவைகள், உப்போடு சேர்ந்த பால், எச்சிலில் குத்தின நெய், வண்ணான்துறை ஜலம் இவைகளைச் சாப்பிடுவது கள்ளைக் குடிப்பதற்கு ஸமமாகும்

587. ஞூஙாஉ (சாண்டில்யஸ்மிருதி—2-51)

எம்பெருமானை நினைத்துக்கொண்டிருக்கிறவன் ஙாடியை ஒரு காலத்திலும் சாப்பிடக்கூடாது. அது கள்ளுக்கு ஸமமாக அறியப்படுகிறது. ஆகையினால் பிரயத்நப்பட்டு அதை விலக்க வேண்டியது.

588. ஸூஶாஉாஉவி (வராஹபுராணம்)

ரக்தத்தைத் தெரியாமல் எந்த விஷ்ணுபக்தன் தொடுகிறானோ, அவன் குற்றத்தை நூறு உபசாரங்கள் செய்தாலும் ஓ பூமியே! நான் பொறுத்துக்கொள்ளுகிறதில்லை.

589. ஏகாதஶ்யாம் (ஸாத்வதஸம்ஹிதை)

பிராம்மணனாய் பிறந்து எவன் ஏகாதசியில் அந்நம் சாப்பிடுகிறானோ, அவன் ஒவ்வொரு கபளத்திலும் பாபத்தைச் சாப்பிடுகிறான். அந்த கபளமானது நாய் விஷ்டைக்கு ஸமம்.

590. ஏகாதஶ்யாம்

எவன் சக்தனாயும் உடம்பில் உபத்திரவமில்லாமலுமிருந்து ஏகாதசியில் அந்நத்தைச் சாப்பிடுகிறானோ, அவனுக்குக் கள்ளு குடிப்பதற்கு ஸமமான பாபம் உண்டாகிறது. இதில் ஸந்தேஹமில்லை. மத்யத்தைக் குடிக்கிறவன் தான்மாத்திரம் நரகத்திற்குப் போகிறான். ஏகாதசியில் சாப்பிடுகிறவன் அவன் பித்ருக்களுடன்கூட நரகத்தில் மூழ்குகிறான்.

591. ஆஹாரதோஷாத் (ஸ்ரீரங்கமாஹாத்மியம்—47-10)

தோஷமுள்ள ஆஹாரத்தைச் சாப்பிடுவதாலும், தனக்குக் கிடையாததில் ஆசையாலும், அதாவது வைராக்கியமில்லாமையாலும், பலவிதங்களான விஷயங்களைப் பார்ப்பதாலும், உடம்பின் சுத்தியில்லாமையாலும் மனதானது தோஷமுள்ளதாகிறது:

592. அநப்யாஸாத் (மநுஸ்மிருதி—5-3)

வேதங்களை அப்யாஸம் செய்யாமையாலும், ஆசாரமில்லாமையாலும், சோம்பலாலும், ஆஹாரதோஷத்தாலும் யமன் பிராமணர்களைக் கொல்ல எண்ணுகிறான்.

593. நியதஸ்ய து (கீதை—18-7)

ஜாதிகளுக்கும் ஆசிரமங்களுக்கும் ஏற்பட்ட கர்மத்தை விடுவது கூடாது. அஜ்ஞாநத்தால் அதை விடுவது தாமஸமான தியாகமென்று சொல்லப்படுகிறது.

594. து:கமித்யேவ (கீதை—18-8)

கர்மத்தைச் செய்வது துக்கமாயிருக்கிறதென்றும் உடம்புக்கு வருத்தமுண்டாகிறதென்றும் பயத்தால் எவன் கர்மத்தை விடுகிறானோ, அவன் ராஜஸமான தியாகத்தைச் செய்து தியாகத்தின் பலனையடைகிறதேயில்லை.

595. கார்யமித்யேவ (கீதை—18-9)

தன் அதிகாரத்துக்குத் தகுந்த எந்த கர்மமானது இதுவே எனக்குப் பிரயோஜநம் இதுவே நான் செய்யவேண்டியதென்றும், எந்த கர்மா தனதென்கிற எண்ணத்தையும் அதனாலுண்டாகும் பலனையும் விட்டுவிட்டுச் செய்யப்படுகிறதோ, அது ஸாத்துவிகத்தியாகமென்று எண்ணப்படுகிறது.

596. த்யஜ த⁴ர்மமத⁴ர்மஞ்ச (பாரதம் சாந்திபர்வம்—339-44)

ஒரு பலனுக்கு உபாயமாகச் சொல்லப்பட்ட தர்மத்தையும் செய்யக்கூடாதென்று நிஷித்தமான கர்மத்தையும் விடு. ஸத்யமென்று சொல்லப்பட்ட ஆத்மாவின் அநுபவத்தையும், அந்ருதமென்று சொல்லப்பட்ட விஷயங்களின் அநுபவத்தையும் விட்டுவிடு. எந்த எண்ணத்தால் இந்த இரண்டு அநுபவத்தையும் விடுகிறாயோ, அந்த எண்ணத்தை அதாவது— நானே இதைச் செய்தேன் என்கிற எண்ணத்தை விட்டுவிடு.

597. தஸ்மாத்த்வமுத்³த⁴வ (பாகவதம்—11-12-14,15)

ஏ உத்தவனே! ஆகையால் ஒரு பலனுக்கு ஸாதநமாக இதைச் செய் என்கிற விதியையும், இதைச் செய்ய வேண்டாமென்கிற நிஷேதத்தையும், இப்படி விதிக்கப்பட்ட ப்ரவிருத்திதர்மத்தையும் நிவ்ருத்திகர்மத்தையும், இவ்விதமான இரண்டு கர்மங்களுக்கு வேண்டியதாக உன்னால் இதுவரையில் கேட்கப்பட்டும், இனிமேல் கேட்கப்படுவதுமாகிய அங்கங்களையும் விட்டுவிட்டு, எல்லா பிராணிகளுக்கும் ஆத்மாவான என்னையொருவனையே எல்லா பிரகாரத்தாலும் சரணமாக அடை. அப்படிச் செய்தால் ஒருவரிடமும் பயமில்லாமலிருக்கிற இருப்பாகிய மோக்ஷத்தையடைவாய்.

598. ஸக்ஷுத்³ராத்த: (பாரதம் உத்யோகபர்வம்—34-13)

மீனானது உயர்ந்த சாப்பிடத்தகுந்த ஒரு வஸ்துவாலே மூடப்பட்ட இரும்பால் செய்யப்பட்ட முள்ளை அந்தச் சாப்பாட்டு வஸ்துவின் ஆசையாலே அதை விழுங்குகிறது. அதனாலுண்டாகும் கெடுதியைப் பார்க்கிறதில்லை.

599. ஸஹோஸாது (பாரதம் ஆரண்யபர்வம்—2-64)

ஸாதுவான எவன் எதைக்கண்டு வெறுக்கிறானோ, துர்ஜநன் அதையே கண்டு ஸந்தோஷப்படுகிறான். இதென்ன பெரிய கஷ்டம்! இவ்வுலகத்தின் செய்கை விபரீதமாயிருக்கிறது.

600. த்ரைவர்கிகாந் (விஷ்ணுபுராணமென்று முன்னோர்கள்)

தர்மம், அர்த்தம், காமம் ஆகிய இவைகளுக்கு ஸாதநங்களான தர்மங்களை ஒருவன் விட்டுவிடவேண்டியது.

அஜ்ஞாநாத் (77-வது பக்கம் 347-வெ. பார்க்க)

601. வித்யதே (ராமாயணம் யுத்தகாண்டம்—16-9)

பசுமாடுகளிடத்தில் ஸம்பத்துக்கு ஸாதநம் இருக்கிறது. பிராம்மணனிடத்தில் இந்திரியஜயமிருக்கிறது. ஸ்திரீகளிடத்தில் சபலத்தன்மையிருக்கிறது. தாயாதிகளிடமிருந்து பயமிருக்கிறது.

அபாயஸம்ப்லவே (77-வது பக்கம் 346-வெ. பார்க்க)

602. ந ஸ ஸங்குசித: (ராமாயணம்-கிஷ்கிந்தா—30-81)

எந்த வழியாலே வாலி கொல்லப்பட்டுப்போனானோ அந்த வழி குறுகிப்போகவில்லை. ஸுக்ரீவ ! நீ சொன்னதைச் செய். வாலி போனவழி போகாதே.

க்ருதாபராதஸ்ய (80-வது பக்கம் 367-வெ. பார்க்க)

யதிகிஞ்சித் (80-வது பக்கம் 368-வெ. பார்க்க)

பவ்யோராகாதி (81-வது பக்கம் 369-வெ. பார்க்க)

நயதீஷ்டிஷு: (63-வது பக்கம் 302-வெ. பார்க்க)

தமிழ் வசனங்கள்.

123. கேசவன் (திருவாய்மொழி—2-7-1)

என்னுடைய வம்சத்தில் பிறந்தவர்களில் மேலேழு தலைமுறையும், கீழேழு தலைமுறையும், நடுவில் எழு தலைமுறையும் எம்பெருமானுடைய தாஸர்களானார்கள். இவ்விதமான பெரிய ஸாமர்த்தியமாகிய வாழ்வு நமக்குக் கிடைத்திருக்கிறது.

124. பண்டைக்குலத்தை (திருப்பல்லாண்டு—5)

பழைய குலத்தைப் போக்கி பல்லாண்டு பாடுவோம்.

குலங்களாய (69-வது பக்கம் 72-வதைப் பார்க்க)

125. நிற்கின்றது (நான்முகன்திருவந்தாதி—54)

கண்ணுக்குத் தோன்றுமவையெல்லாம் ஸர்வேசுவரன்.

126. போனகஞ்செய்த (திருமாலை—42)

எம்பெருமானிடத்தில் பக்தியுள்ளவர்கள் தாங்கள் சாப்பிட்டு மீந்ததை எனக்குக்கொடுத்தால், அது உடனே சுத்தியைச் செய்யும்.

127. செய்யாதன (திருப்பாவை—2)

செய்யத்தகாத கர்மங்களைச் செய்யமாட்டோம். ஒரு ஆசாரியனிடம் போய் அஸத்தான சாஸ்திரங்களைப்படிக்கமாட்டோம்.

128. செய்யேல் (திருவாய்மொழி—2-9-3)

கெட்ட கர்மங்களைச் செய்யாதேயென்று கிருபை செய்யும்.

129. நாயினேன் (திருச்சந்தவிருத்தம்—111)

உலகத்துக்கு நாதனே ! அடியேன் செய்யும் குற்றத்தைத் தேவரீர் குணமாகக் கொள்ளவேணும்.

130. என்னடியார் (பெரியாழ்வார் திருமொழி—4-10-2)

என்னுடைய தாஸர்கள் அபராதத்தைச் செய்யமாட்டார். செய்தால் நல்லதைச் செய்தாரென்று எம்பெருமான் சொல்லுவன் போலும்.

குளித்து (68-வது பக்கம் 71-நெ. பார்க்க)

அரும்பதவுரை.

பொலிசைக்கிடுவர் — வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள்.
அவிடு — பரிஹாஸ வார்த்தை.
ஒட்டத்துக்கு — பந்தயத்துக்கு.

26. ப்ரபாவரக்ஷாதிகாரம்.

ஸம்ஸ்கிருத வசனங்கள்.

603. [illegible] (விஹகேந்திரஸம்ஹிதை)

மிகவும் பலமான புண்ணியங்களையும் பாபங்களையும் செய்தவன் இங்கேயே மூன்று நாட்களிலோ, மூன்று பக்ஷங்களிலோ மூன்று மாதங்களிலோ, மூன்று வர்ஷங்களிலோ அவைகளின் பலன்களை அனுபவிக்கிறான்.

உபாயபக்தி (78-வது பக்கம் 356-நெ. பார்க்க)
[illegible] (86-வது பக்கம் 393-நெ. பார்க்க)

604. ஆடவீஸம்ஸார (விஷ்ணுதர்மம்—1-18)

ஸம்ஸாரமாகிய செல்லமுடியாத கரையில்லாத காட்டில் ஓடித் திரிகிறவர்களுக்கு கிருஷ்ணன் விஷயத்தில் ஒரு நமஸ்காரமானது மோக்ஷமாகிய கரையைச் சேர்ப்பிவிக்கிறது.

605. ஏகோபி (பாரதம் - சாந்திபர்வம்—46-163)

கிருஷ்ணன் விஷயத்தில் செய்த ஒரு ஸக்ருதப்ரணாமமானது பத்து அச்வமேதங்களுக்கும் ஸமமாகுமா? ஆகாது. ஆனால் பத்துஅச்வமேதங்கள் பண்ணினவன் திரும்பிவருகிறான். கிருஷ்ணனிடத்தில் ப்ரணாமம் பண்ணினவனோ திரும்பி வருகிறதில்லை. ஸக்ருதப்ரணாமம் என்பது-இரண்டு கைகளால் மூன்று தரம் அஞ்சலிசெய்து முழங்கால் வரைக்கால்களை நீட்டி, நெற்றி, மூக்கு, கன்னம் இவைகளால் பூமியை மூன்று தரம் தொட்டு செய்யப்பட்டு இப்படிச் செய்யப்படும் அஷ்டாங்கமான நமஸ்காரத்தைப் பன்னிரண்டு தரம் செய்வது.

ஸக்ருதேவ (33-வது பக்கம் 165-நெ. பார்க்க)
அபயாதக (114-வது பக்கம் 506-நெ. பார்க்க)
ஆயோநிஷ்வி, தம்ஸாதா (111-பக் 492-நெ. பார்க்க)

606. சரணம் ச (விஷ்ணுதர்மம்—106-53)

சரணமடைந்தவர்களையும், உனக்காக நான் இருக்கிறேன் என்று பிரார்த்திப்பவர்களையும், அவர்கள் தகப்பனைக் கொன்றவர்களாயிருந்தாலும் ஸாதுக்கள் இரக்ஷிக்கிறார்கள்.

ப்ரதிஜ்ஞா மம தேவ (101-வது பக்கம் 443-நெ. பார்க்க)
யதாவஸாதோ (32-வது பக்கம் 162-நெ. பார்க்க)

607. ஜடாவஸா (விஷ்ணுபுராணம்—3-18-105)

ஜடையாகிய ஆபரணத்தையோ,குடுமியில்லாத மொட்டைத் தலையையோ உடையவர்களாய் தேவயஜ்ஞம் முதலானவைகளைச் செய்யாமல் சாப்பிடுகிறவர்களாய், ஒருவிதமான சௌசமில்லாதவர்களாய் பித்ருக்களுக்கு தர்ப்பணத்தையும் சிராத்தத்தையும் செய்யாதவர்களாயிருக்கிறவர்களுடன் பேசுவதாலும்கூட மனிதர்கள் நரகத்தை யடைகிறார்கள்.

நேஹாபிக்ரம (18-வது பக்கம் 99-நெ. பார்க்க)

608. [illegible]

பிருதையின் பிள்ளையே ! யோகம் செய்ய ஆரம்பித்து அது முடியாதவனுக்கு இங்கும் மேலுலகத்திலும் நாசம் கிடையாது. நல்ல விஷயத்தைச் செய்தவன் கெட்ட கதியையடையமாட்டானன்றோ ?

ஈவிவெஷ (79-வது பக்கம் 361-ஜெ. பார்க்க)

609. ஈவிவாவெஷ (பாரதம் ஆச்வமேதிக—96-46)

பாண்டுவின் பிள்ளையே ! என் பக்தர்கள் பாபங்களில் ருசியுள்ளவர்களாயிருந்தாலும், தாமரையிலையில் ஜலம் ஒட்டாதது போல் அவர்களிடத்தில் ஒரு பாபமும் ஒட்டாது. பாபங்களுக்குத் தகுந்த பரிஹாரம் ஏற்படும் என்று கருத்து.

610. வீரவாஸா: (இதிஹாஸஸமுச்சயம்—33-123, 124)

ஓ பிராம்மணச்ரேஷ்டனே ! எம்பெருமானை ஆச்ரயித்திருக்கிறவன் மரவுரியையுடுத்திக்கொண்டிருந்தாலும், ஜடையுள்ளவனாயிருந்தாலும், த்ரிதண்டமுள்ளவனாயும், தலையில் குடுமியில்லாதவனாயும், வேறு ஆச்ரமத்தின் அடையாளங்களுள்ளவனாயுமிருந்தாலும் இவைகளில்லாவிட்டாலும் இந்த அடையாளங்கள் மோக்ஷத்துக்குக் காரணமன்று. எவர்கள் இரக்கமில்லாதவர்களாயும், கெட்ட மனதையுடையவர்களாயும், எப்போதும் கெட்ட ஆசாரங்களில் ருசியையுடையவர்களாயுமிருக்கிறார்களோ, நாராயணனை அடைந்திருந்தால் அந்த மனிதர்களும் உயர்ந்த கதியை அடைகிறார்கள்.

611. விஷ்ணுதே (இதிஹாஸஸமுச்சயம்—27-25)

விஷ்ணுபக்தர்களுக்குப் பாபம் நேர்ந்தால் அதற்கு உடனே பிராயச்சித்தம் செய்வார்களாகையாலே அவர்களிடத்தில் பாபம் ஒட்டாது. உதயமான ஸூரியன்போல் உலகம் முழுவதையும் அவர்கள் பரிசுத்தம் செய்கிறார்கள்.

612. ஜந்மாந்தரஸஹ (இதிஹாஸஸமுச்சயம்—33-125-127)

அநேகமாயிரம் புண்ணியஜந்மங்களின் கடைசியில் எல்லா உலகங்களிலும் இவனொருவனே மஹாத்மாவென்று சொல்லும்படியிருக்கிற வாஸுதேவனுக்கு நான் தாஸன் என்கிற இவ்விதமான புத்தியானது எவனுக்கு உண்டாகிறதோ, அவன் எம்பெருமானிருக்கிற உலகத்துக்குப் போகிறான். இந்த விஷயத்தில்

ஸந்தேஹமில்லை. எவர்கள் இந்திரியங்களை அடக்கிக்கொண்டு எம்பெருமானிடத்தில் வைக்கப்பட்ட பிராணனையுடையவர்களோ அவர்களைப்பற்றிச் சொல்லவேண்டுமோ.

613. (இதிஹாஸ ஸமுச்சயம்—33-180)

எவர்கள் நாராயணனுக்கு முகங்கொடுக்கவில்லையோ, அவர்கள் அநேகம் நூறு அச்வமேதங்கள் செய்தாலும் அநேகம் நூறு வாஜபேயங்கள் செய்தாலும் நல்ல கதியை அடைகிறதில்லை.

(124-வது பக்கம் 551-லெ. பார்க்க)

614. (நாரதீயம்)

விஷ்ணுபக்தனல்லாதவர்களுக்கு நமஸ்காரம் செய்வதாலும், எம்பெருமான் விஷயத்தில் அவமானம் செய்வதாலும் விஷ்ணு பக்தனைத் தூஷிப்பதாலும் ஒருவன் உடனே பதிதனாகிறான். (கீழே விழுகிறான்; மேலுலகமில்லை) இதில் ஸந்தேஹமில்லை.

615. (இதிஹாஸ ஸமுச்சயம்—12-71-72)

தாமரைக்கிழங்கைத் திருடினவன் எப்போதும் ஸந்நியாஸிகளை நிந்திக்கிறவனையும், விஷ்ணுபக்தர்களை அவமானம் செய்கிறவனையும், வேதாந்தசாஸ்திரத்தில் நோக்கமில்லாதவனையும் ஆகட்டும். தாமரைக்கிழங்கைத் திருடினவன் உள்ளுக்குள்ளே துஷ்டனாய் மேலுக்கு நல்லவனையும், ப்ரும்மவித்துக்களிடத்தில் த்வேஷம் பண்ணுகிறவனையும், சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட நல்ல கர்மங்களைத் தூஷிக்கிறவனையும் ஆகட்டும். தாமரைக்கிழங்கைத் திருடினவன் கெட்ட புத்தியையுடையவனாய், எப்போதும் நல்ல அநுஷ்டானத்தையுடையவர்களாயும், ஆத்மபரமாத்ம விஷயமான சாஸ்திரத்தில் திருடமான ஜ்ஞானமில்லாமலுமிருக்கிறவர்களை மயங்கும்படி செய்யட்டும்.

616. (இதிஹாஸ ஸமுச்சயம்—2-10)

வியாகரணசாஸ்திரத்தில் மிகுந்த பிரீதியுள்ளவனுக்கும், சாப்பாட்டிலும் வஸ்திரத்திலும் அதிக கவனமுள்ளவனுக்கும் அழகான வீட்டிலிருப்பதில் பிரீதியுள்ளவனுக்கும் உலகத்தாருடைய மனதைத் தன் பேச்சால் இழுக்கும் சக்தியுள்ளவனுக்கும் மோக்ஷம் கிடையாது.

617. (பாரதம் ...)

எவர்கள் எப்போதும் ஸ்திரீஸங்கமத்திலும், சாப்பாட்டிலும் நோக்குள்ளவர்களோ, எவர்கள் திருட்டு, பொய் சொல்லுவது, கடுமையாகப்பேசுவது, இவைகளைச் செய்கிறார்களோ அவர்களைத் தர்மத்தை விட்டவர்களென்று தேவர்கள் அவர்கள் கிட்டப் போகாமல் அவர்களை விட்டுவிடுகிறார்கள்.

618. வாராஜூவாநாழு (விஷ்ணுதர்மம்—99-13)

எவர்கள் எம்பெருமானிடத்தில் முகங்கொடுக்காமல் விஷயங்களில் நன்றாய் படிந்திருக்கிற மனதையுடையவர்களாய் இருக்கிறார்களோ, அவர்களுக்கு வெகுதூரத்தில் அந்த பரம்பிரம்மம் (எம்பெருமான்) இருக்கிறது.

619. தநூயமெக்ஷ_ந (விஷ்ணுதர்மம்—99-15)

எவர்கள் கோவிந்தனையே எப்போதும் நினைத்துக்கொண்டு அவனிடத்தில் வைக்கப்பட்ட மனதையுடையவர்களாய், விஷயங்களை விட்டிருக்கிறார்களோ, அவர்களுடைய ஸமீபத்தில் அந்த எம்பெருமான் இருக்கிறானென்று அறியவேண்டியது.

நவிஜூஂயூ8ழு (136-வது பக்கம் 610-வெ. பார்க்க)

620. ஷலஂகதக (மநுஸ்மிருதி—6-67)

தேத்தாங்கொட்டை மரத்தினுடைய பழமானது ஜலத்தைத் தெளிவிக்கிறதாயிருந்தாலும், அதின் பெயரைச் சொல்லுவதால் மாத்திரம் ஜலம் தெளிகிறதில்லை.

621. ஆதழ்ா விஷண்ணாஃ (வியாஸஸஞ்சயஸம்வாதம்)

இந்த உலகத்து ஸுகங்கிடைக்காமல் வருத்தப்படுகிறவர்களும், மேல் உலகத்து ஸுகம் கிடைக்காமல் வருத்தப்படுகிறவர்களும், ஒன்றிலும் நிலையில்லாதவர்களும், ஸம்ஸாரதுக்கத்தைக் கண்டு பயப்படுகிறவர்களும், கோரமான வியாதிகளில் தபிக்கிறவர்களும் நாராயணன் என்கிற சொல்லைமாத்திரம் சொல்லித் துக்கங்களால் விடப்பட்டவர்களாய் ஸுகமுள்ளவர்களாக ஆகிறார்கள்.

622. சுவமெஶநாவஷி (விஷ்ணுபுராணம்—6-8-19)

தன் வசமில்லாமல் எந்த எம்பெருமானுடைய திருநாமமானது ஒருவனால் சொல்லப்படுகிறதோ, அவன் ஸிம்மத்தைக் கண்டு பயந்த மிருகங்களால் அந்த ஸிம்மமிருக்கும் காடு விடப்படுவதுபோல் அவன் எல்லாப் பாபங்களாலும் உடனே விடப்படுகிறான்.

623. ஸாங்கேத்யம் (பாகவதம்—6-2-14)

எம்பெருமானுடைய திருநாமத்தைச் சொல்லுவது, ஒருவனுக்கு நாராயணன் என்று பெயர் வைத்து, அந்தப் பெயரைக் கொண்டு அவனைக் கூப்பிட்டபோதிலும், பரிஹாஸம் பண்ணுவதற்காகச் சொன்னபோதிலும், ஸ்தோபமாலும், ஹேளநமாலும் எல்லாப் பாபங்களையும் போக்கும். இங்கே ஸ்தோபமென்பது— நாராயணன் என்று சொல்லுவதற்குப் பதிலாக நாநாநந என்று சொல்லுவது, ஹேளநமென்பது—ஒருவன் எப்போதும் நாராயண என்று சொல்லிக்கொண்டிருக்கையில் என்ன எப்போதும் நாராயணவென்று சொல்லிக்கொண்டிருக்கிறாயே யென்று பிரீதியில்லாமல் சொல்லுவது.

624. ஹரிர்ஹரதி (ஹர்யஷ்டகம்)

ஹரி:- எம்பெருமான் கெட்டமனதுள்ளவர்களாலும் நினைக்கப்பட்டால் பாபங்களைப் போக்குகிறான். இச்சையில்லாமல் அக்நியை ஒருவன் தொட்டால் அவனை அது பொசுக்கிவிடும்.

625. ஸங்கீர்த்தநம் (பாகவதம்—6-3-24)

எம்பெருமானுடைய குணங்களையும் சேஷ்டைகளையும் காட்டுகிற அநேகம் திருநாமங்களைச் சொல்லுவது மனிதர்களுடைய பாபங்களைப் போக்குவதற்கு மிகவும் அதிகமானது, ஒரு திருநாமத்தைச் சொல்வதே போதும்; எந்தக் காரணத்தால் அஜாமிளன் என்பவன் மிகுந்த பாபமுள்ளவனாயிருந்தபோதிலும், சாகிறகாலத்தில் பிள்ளையை நாராயண என்று கூப்பிட்டு முக்தியையடைந்தானே.

யெ விஷ்ணு (74-வது பக்கம் 337-நெ. பார்க்க)

626. ய: ஸாக்ஷாத் (பிரும்மாண்டபுராணம்)

எந்தப்பிள்ளை தகப்பனாரிடத்தில் த்வேஷம்பண்ணுகிறானோ அவன் வேறொருவனுக்குப் பிறந்தவனாக அறியவேண்டியது. எவன் எம்பெருமானிடத்தில் எப்போதும் த்வேஷம் பண்ணுகிறானோ, அவனைக் கடைசி ஜாதியில் பிறந்தவனாக அறியவேண்டியது.

627. கோப்ய: (பாகவதம்—7-1-32)

கோபிகைகள் காமத்தினாலும், கம்ஸன் பயத்தாலும் சி-

ஸம்பந்தத்தாலும், நீங்கள் ஸ்நேஹத்தாலும் நாங்கள் பக்தியாலும் பிரபுவே! நல்ல கதியையடைவோம். (இது தர்மபுத்திரரைப் பார்த்து நாரதர் வசநம்).

628. யயாகயா (ஸ்ரீரங்கமாஹாத்மியம்—8-12)

நினைத்த மாத்திரத்தில் பாபத்தைப் போக்குகிறவனும், ஸ்வயம் பரிசுத்தனுமான எம்பெருமானுடனே எப்படியாவது ஸம்பந்தமுண்டானால் அது பாபத்தைப் போக்கும்.

உபேக்ஷ்யா (84-வது பக்கம் 385-நெ. பார்க்க)
யம் யோகிநஃ (88-வது பக்கம் 404-நெ. பார்க்க)
கேவலம் (88-வது பக்கம் 402-நெ. பார்க்க)

629. ஏகஃ ஶாஸ்தா (பாரதம் ஆச்வமேதிகபர்வம்—27-1)

எம்பெருமான் ஒருவனே உத்திரவு பண்ணுகிறவன்; உத்திரவு பண்ணுமவர் இரண்டாமவரில்லை. அவன் ஹிருதயத்திலிருக்கிறான். அவனை நான் சொல்லுகிறேன். ஜலம் பள்ளத்தில் ஓடுவதுபோல் அவனொருவனோடே சேர்ந்தவனும், அவன் ஏவின வேலையைத் தலையாலே வஹிக்கிறேன்.

ஹ்ருதிஸ்தாம் (16-வது பக்கம் 78-நெ. பார்க்க)

630. ஶாஸ்தா விஷ்ணுஃ (விஷ்ணுபுராணம்—1-17-20)

எவன் ஹிருதயத்திலிருக்கிறானோ, அந்த விஷ்ணு உலகம் முழுவதையும் நியமநம் பண்ணுகிறான். அந்த பரமாத்மாவை விட்டு எவன் எவனால் நியமிக்கப்படுகிறான்.

631. ராகாதி தூஷிதே (விஷ்ணுதர்மம்—9-11)

ஆசைமுதலானவைகளாலே தூஷிக்கப்பட்ட ஒருவனுடைய மனதில் மதுவைக்கொன்ற எம்பெருமான் இருக்கிறதில்லை. ஹம்ஸமானது சேறு கலந்த ஜலத்தில் ஒருபோதும் ப்ரீதியைப் பண்ணுகிறதில்லை.

632. கர்மணா மநஸா (பாரதம் உத்யோகபர்வம்—39-56)

எதையொருவன் உடம்பின் வேலையாலும் மனதாலும் வாக்காலும் அடிக்கடி செய்கிறானோ, அதுவே அவனைத் தன் வசப்படுத்திக்கொள்ளுகிறது. ஆகையால் ஒருவன் நல்லதையே செய்யவேண்டியது.

633. ஸம்ஸாரவிஷவ்ருக்ஷஸ்ய

ஸம்ஸாரமாகிய விஷமரத்தில் அமிருதம்போல் இரண்டு பழங்கள் இருக்கின்றன. அவைகளாவன — ஒருகால் எம்பெருமானிடத்தில் பக்தியுண்டாவதும், அவனிடத்தில் பக்தியுள்ளவர்களுடன் சேருவதும்.

தமிழ் வசனங்கள்.

131. பாம்போடு (பெரிய திருமொழி—11-8-3)

கூரையில் பாம்பிருக்கிற ஒரு வீட்டிலிருப்பது எப்படி பயத்தையுண்டுபண்ணுமோ, அதுபோல ஸம்ஸாரத்திலிருப்பது. இதை என் மனது தாங்காது. அது தளும்புகிறது. என் தாமரைக்கண்ணனே!

மொய்த்தவல்வினை (122-வது பக்கம் 111-வதைப் பார்க்க)

132. பரமனை (திருவாய்மொழி—3-7-1)

பரமாத்மாவை அடையும்படியாகிய பாக்கியத்தையுடைய சிறுமாமனிசருடன் சேர்க்கை. இங்கே சிறுமாமனிசர் என்பதற்கு உலகத்தாருக்குச் சிறியவனாய்த்தோற்றி, ஜ்ஞாநம் வைராக்கியம் முதலான குணங்களால் மிகுந்த பெருமையையுடைய பாகவதர் என்று பொருள்.

133. திருமால்தலை (திருவிருத்தம்—88)

லக்ஷ்மீபதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நமக்குக் கெட்ட கர்மங்கள் எங்கே வரும்?

134. ஆள்கின்றான் (திருவாய்மொழி—10-4-3)

சக்கிராயுதத்தையுடைய எம்பெருமான் நம்மை ரக்ஷிக்கிறான். வேறு எவனால் நாம் அடையவேண்டியதற்கு குறைசெய்யமுடியும்.

அரும்பதவுரை.

நசை — ஆசை. கசை — சாட்டை.

பரிமாற்றம் — ஆதரம்.

பசை — எம்பெருமானிடத்தில் பிரீதி.

வாய்வெருவுதல் — தூக்கத்தில் நினைவில்லாமல் ஒன்றைச்சொல்வதுபோல் வாய் வெறுமனே இருக்கமுடியாமல் ஏதாவதொன்றைச் சொல்லுதல்.

27. மூலமந்திராதிகாரம்.

ஸம்ஸ்கிருத வசனங்கள்.

634. வூஜஂஹி நாரதீயம்—1_32)

ஆறு குணங்கள் நிறைந்த தேவனான நாராயணன் தானே எட்டெழுத்தான மூலமந்திரரூபமாய் அதை ஜபிக்கிறவர்களுடைய வாயில் இருக்கிறார். இது நிச்சயம்.

635. ஜநாணாஂ வாரஜஃ (நாரதீயம்—1-11)

எப்போதுமிருக்கிற மூலமந்திரமானது மந்திரங்களுக்குள்ளே மிகவுமுயர்ந்த மந்திரம். ரஹஸ்யமானவைகளுக்குள்ளே மிகவும் ரஹஸ்யமானது. சுத்தியைச் செய்யுமவைகளுக்குள் மிகவும் பரிசுத்தமானது.

636. ஸஹஸொவாஹி (நாரதீயம்—1-16)

ஸநகர் முதலான அநேக மஹாத்மாக்களான ருஷிகள் அஷ்டாக்ஷரத்தை ஜபித்து எம்பெருமானுடைய ஸ்தாநத்தை யடைந்தார்கள்.

637. யயாஸவெஷ (நாரதீயம்—1-42)

எப்படி எல்லா தேவர்களுக்குள்ளே நாராயணனைக் காட்டிலுமுயர்ந்தவனில்லையோ, அப்படியே எல்லா மந்திரங்களுக்குள் எட்டெழுத்து மந்திரத்தைக் காட்டிலும் மேற்பட்டதில்லை.

638. ஸத்ெயாய (நரஸிம்மபுராணம்—18-32)

கையைத் தூக்கிக்கொண்டு ஸத்யம் பண்ணி உங்களுக்கு இப்போது இங்கே சொல்லுகிறேன். பிள்ளைகளே! சிஷ்யர்களே கேளுங்கள். எட்டெழுத்து மந்திரத்தைக் காட்டிலும் உயர்ந்த மந்திரம் கிடையாது. அதைக்கொண்டு எம்பெருமானை எப்போதும் அர்ச்சனை செய்துகொண்டிரு; அதைக்கொண்டு அவனிடத்தில் பக்தியைச் செய். அதைக்கொண்டு அவனுக்கு நமஸ்காரம் பண்ணு. இப்படி அந்த மந்திரத்தை உயர்ந்த மந்திரமாக எண்ணிக்கொண்டு அவனிடத்தில் பக்தி பண்ணுகிறவர்கள் நாசத்தை அடைகிறதில்லை, அதாவது ஸம்ஸாரத்திலிருப்பதில்லை.

639. கூஸீநாவா (நாரதீயம்)

உட்கார்ந்துகொண்டிருந்தாலும் படுத்துக்கொண்டிருந்தாலும் எங்கேயாவது நின்றாலும், நமோநாராயண என்கிற மந்திரமொன்றையே உபாயமாகப் பற்றினவர்கள் நாங்கள்.

640. புண்டரீகோ(அ)பி (இதிஹாஸஸமுச்சயம்—33-130)

தர்மத்தில் மனதையுடைய புண்டரீகனும் நாராயணனையே அடையவேண்டியவைகளில் மிகவுயர்ந்தவனாக நினைத்து, நமோநாராயணாய என்கிற எட்டெழுத்து மந்திரத்தை ஜபித்துக்கொண்டு முக்தியையடைந்தான்.

நமோநாராயண (121-வது பக்கம் 546-நெ. பார்க்க)

641. வைதிக: (நாரதீயம்)

கர்மமானது வைதிகமென்றும், தாந்திரிகமென்றும், வைதிக தாந்திரிகமென்றும், இப்படி மூன்றுவிதமென்று பாஞ்சராத்ரமாகிற பாற்கடலில் சொல்லியிருக்கிறது. பிராம்மணர்களுக்கு வைதிகமான கர்மம், ராஜாக்களுக்கு வைதிகதாந்திரிகமான கர்மம், வைசியர்களுக்கும் சூத்திரர்களுக்கும் தாந்திரிக கர்மம், எல்லாருக்கும் கர்மமானது தாந்திரிகமாக இருக்கலாம். எட்டெழுத்து மந்திரமும், பன்னிரண்டெழுத்து மந்திரமும், ஆறு எழுத்துமந்திரமும் அளவில்லாததேஜஸ்ஸையுடைய விஷ்ணுவின் மந்திரங்கள். இந்த முக்கியமான மந்திரங்கள் பிரணவத்தோடு சேர்ந்து வைதிகமந்திரங்களாகின்றன. அத்துடன் சேராதபோது அவைகள் தாந்திரிகங்களென்று சொல்லப்படுகின்றன. (121-வது பக்கம் 545-வதையும் பார்க்க)

642. ததோ நாராயணஸ்யாதி: (நாரதீயம்—1-57)

மூலமந்திரத்தில் மேலேயிருக்கிற அயநம் என்கிற சொல்லில் முதல் எழுத்தான அகாரம் விஷ்ணுவைச் சொல்லுகிறது. அத்துடன் அநுஸ்வாரத்தைச் சேர்த்தால் இப்படிச் சேர்க்கப்பட்ட அகாரமானது மூலமந்திரத்திற்குப் பீஜமாகிறது. இப்படிச் சேர்ப்பதினால் மந்திரம் எட்டெழுத்துள்ள மந்திரமாக ஆகிறது.

643. கிம் தஸ்ய (நாரதீயம்—1.41)

ஒருவனுக்கு வேண்டிய பலன் விஷயத்தில் அனேக மந்திரங்களால் என்ன பிரயோஜநம்? அனேக விரதங்களாலே என்ன பிரயோஜநம்? நமோநாராயணாய என்கிற மந்திரமானது வேண்டிய பலன்களையெல்லாம் கொடுக்கும்.

644. ஓங்கார (Grantha) (மநுஸ்மிருதி—11-265)

மூன்று எழுத்தான வேதமானது (பிரணவமானது) முதலி லிருந்தது. அதில் மூன்று வேதமானது இருந்தது. இந்த மூன்று எழுத்து வேதமானது மற்ற வேதங்களைக் காட்டிலும் வேறு. ஸ்திரீகளும் சூத்திரர்களும் அறியாதபடி அதை ரக்ஷிக்க வேண்டியது. அதையறிந்தவன் மூன்று வேதங்களையறிந்தவன்.

645. ஹவிஷ்யா (Grantha)

ஆத்மாவாகிய ஹவிஸ்ஸை 'வஸுரண்ய' என்று ஆரம்பிக்கிற மந்திரத்தாலேயெடுத்துக்கொண்டு எப்போதுமிருக்கிற அச்யுத ஞகிற அக்கினியில் பிரணவம் என்கிற மந்திரத்தினுல் ஹோமம் செய்யவேண்டியது.

646. (Grantha) (யாஜ்ஞவல்க்யஸ்மிருதி — 3-34)

ஈசுவரனுடைய ஜ்ஞாநத்தால் பத்தஜீவனுக்கு மிகவும் உயர்ந்த சுத்தி வருகிறதென்று எண்ணப்படுகிறது.

647. (Grantha) (சாண்டில்யஸ்மிருதி—5-17)

பரமாத்மா இப்படியிருக்கிறுன், ஜீவன் இப்படியிருக்கிறுன் என்று அவர்களுடைய ஸம்பந்தத்தை நினைப்பது யோகமென்று சொல்லப்படுகிறது.

648. அகாரார்த்தோ விஷ்ணு: (அஷ்டச்லோகீ—1)

அகாரத்தின் அர்த்தம் உலகத்தை யுண்டுபண்ணி ரக்ஷித்து, அழிப்பவனுகிய விஷ்ணு. மகாரத்தின் அர்த்தம் ஜீவன், இந்த ஜீவன் அந்த விஷ்ணுவின் கைங்கரியத்துக்கு ஸாதநம். இருவ ருக்குமுள்ள ஸம்பந்தத்தை வேறொருவருக்கும் தகாததென்று உகாரம் காட்டுகிறது. மூன்று எழுத்துருபமாயும், வேதத்தின் ஸார மாயுமிருக்கிற பிரணவமானது இந்த அர்த்தத்தைச்சொல்லிற்று.

649. அஷ்டாக்ஷர (Grantha) (வாமநபுராணம்)

எட்டெழுத்து மந்திரத்தில் ஒரு உடம்பில் ஒரு அங்கமிருப் பதுபோல ஒரு பாகமாகிய பிரணவத்தின் முதலெழுத்தான அக ரத்தாலே எல்லாவற்றுக்கும் ஆதாரமான எம்பெருமான் சொல் லப்படுகிறுன், எல்லா சொற்களுக்கும் அகாரம் ஸ்வாபவத்தினு லே காரணமாயிருப்பதாலும், அந்த சொற்களாலே சொல்லப் படும் எல்லா வஸ்துக்களுக்கும் பிரம்மம் (எம்பெருமான்) காரண

மாயிருப்பதாலும், அகரம் அவனைச் சொல்லுகிறது. அவன் அதினால் சொல்லப்பட்டவன். இவ்விதமான ஸம்பந்தமானது அந்த அகாரத்துக்கும் எம்பெருமானுக்கும் உசிதமாயிருப்பதாலே தோன்றுகிறது.

650. [illegible]

அ என்கிற எழுத்து, இல்லையென்கிற அர்த்தத்தையும், விஷ்ணுவையும் சொல்லுகிறது. அது விஷ்ணுவைச் சொல்லும் போது அது பும்லிங்கம்.

651. [illegible]

அகாரம் விஷ்ணுவைச் சொல்லுகிறது.

652. [illegible] (ஹாரிகிரந்தம்)

பகவானை நாராயணனுடைய முதல் பெயரான அ என்பதைச் சொல்லுவதாலே எந்த [illegible] செய்யப்படவில்லை.

[illegible] (104-வது பக்கம் 463-ந. பார்க்க)
[illegible] (104-வது பக்கம் 464-ந. பார்க்க)
[illegible] (107-வது பக்கம் 476-ந. பார்க்க)

653. [illegible] (பட்டர்முக்தகம்)

எம்பெருமான் ஜீவனைப் பார்த்து நீ எனக்குச் சேஷன் என்று சொல்ல, ஜீவன் நான் எனக்கே சேஷன் என்ன; எம்பெருமான்- நீ சொன்னது எந்தக் காரணத்தாலே; ஜீவன்- தேவரீர் சொன்னது எந்தக் காரணத்தாலே; எம்பெருமான்- நான் சொன்னது வேதத்தை மூலமாகக்கொண்ட பிரமாணத்தாலே; ஜீவன்- நான் சொன்னதும் அநாதியாய் ஏற்பட்ட அநுபவத்தின் பெருமையால்; எம்பெருமான்- உன் அநுபவம் ஆக்ஷேபிக்கப்பட்டது; ஜீவன்- எங்கே எவனால் ஆக்ஷேபிக்கப்பட்டது; எம்பெருமான்- கீதைமுதலான புஸ்தகங்களில்ஆக்ஷேபிக்கப்பட்டிருக்கிறதென்று எனக்குத் தெரியும்; ஜீவன் - இந்த விஷயத்தில் எவன் ஸாக்ஷி; எம்பெருமான்- நல்ல அறிவுடைய பெரியவர் ஸாக்ஷி; ஜீவன்- அவன் தேவரீரிடத்தில் பக்ஷபாதமுள்ளவன்; இவ்விதமாய் ஜீவனுடன் கலகமுண்டானபோது தேவரீர் ஸத்யம் பண்ணத் தயாராயிருக்கிறவன்போல் விளங்குகிறீர். இது திருமஞ்சநகாலத்தில் ஸ்ரீரங்கநாதன் ஈரவஸ்திரத்தைச்சாத்திக்கொண்டு,ஒற்றை மாலை போட்டுக்கொண்டிருப்பதைஸேவித்து பட்டர்உத்ப்ரேக்ஷிக்கிறா-

654. சுவஷ்ரா ஜீவ (விஷ்வக்ஸேந ஸம்ஹிதை)

இரண்டு விதமான விபூதியானது அவளுக்கும் (பிராட்டிக்கும்) எனக்கும் சேஷம் என்று வேதாந்தங்களிலும் என்னுடைய சாஸ்திரங்களிலும் ஏற்பட்டிருக்கிறது.

உபயவிஷாநு (108-வது பக்கம் 482-ெந. பார்க்க)
வராஹ காஸ்யப (71-வது பக்கம் 318-ெந. பார்க்க)

655. ஜீகாரு

ஜீவனைச் சொல்லுகிற மகாரத்தைக் கொண்டு வியாபக நியாஸம் செய்யவேண்டியது. மந்திரத்தை ஜபிக்கும்போது செய்யவேண்டியவைகளில் இவையொன்று.

656. வஹாண-நாநா (தத்வஸாகரஸம்ஹிதை)

வடமொழியில் ககாரம் முதலாய் மகாரத்தோடு முடிகிற ஐந்து ஐந்து அக்ஷரங்கள் அடங்கிய ஐந்து வர்க்கங்களாலே சொல்லப்பட்ட தத்துவங்களுக்கு ஆத்மாவாக எல்லா ஈசுவரர்களுக்கும் மேற்பட்ட ஈசுவரன் இருக்கிறான்.

657. ஸூதாநி (பாத்மோத்தரம்—4-25, 26, 27)

கவர்க்கத்தாலே ஐந்து பூதங்களும், சவர்க்கத்தாலே ஐந்து கர்மேந்திரியங்களும், டவர்க்கத்தாலும் தவர்க்கத்தாலும் முறையே ஐந்து ஜ்ஞாநேந்திரியங்களும், ஐந்து தந்மாத்திரங்களும், பகாரத்தால் மனதும், ஃகாரத்தாலே அஹங்காரமும்; பகாரத்தாலும் ஸகாரத்தாலும் முறையே மஹத்தும், ப்ரகிருதியும் சொல்லப்படுகின்றன. மகாரத்தாலே சொல்லப்பட்ட ஜீவாத்மா பஞ்சவிம்சகன் என்று சொல்லப்படுகிறான்.

658. ஜ்ஞோ உ௭வ (ப்ரம்மஸூத்திரம்—2-3-19)

ஜீவாத்மா அறிகிறவன் அதாவது— ஜ்ஞாநமென்கிற குணமுள்ளவன். அதினாலேயே-அதாவது சுருதியினாலேயே.

659. வ்யதிரேகஃ (ப்ரம்மஸூத்திரம்—3-3-52)

ஜீவன் எம்பெருமானைத் தியானம் பண்ணும்போது அவனுடைய உடம்பாகத் தன்னையும் தியாநம் செய்யவேண்டியது. அப்போது இப்போதிருக்கிற ஆகாரத்தை விட்டுவிட்டு, அதற்கு வேறான தனக்கு ஸ்வபாவமாயுள்ள ஆகாரத்தையே தியாநம் செய்யவேண்டியது. அதுதான் முக்தியடையும்போது மறைந்

திருக்கத் தோன்றவேண்டியது. ஜீவன் எம்பெருமானை மாத்திரம் தியானம் செய்யக்கூடாது. தன்னையும்கூட தியானம் செய்ய வேண்டியது. எம்பெருமானுக்கு எந்த ஆகாரமிருக்கிறதோ அதைத் தியானம்பண்ணுவதுபோல் தனக்கும் இயற்கையாயுள்ள ஆகாரத்தைத் தியானம் செய்யவேண்டியது.

660. நாத்மா ச்ருதே: (ப்ரம்மஸூத்திரம்—2-3-18)

ஆத்மாவு(ஜீவனு)க்கு ஆகாசம் முதலானதுபோல் ஸ்வரூபத்தில் வேறுபாடில்லை. அப்படியே வேதம் சொல்லுகிறபடியால்.

ஓ: ஸம்ஹர்தா: (6-வது பக்கம் 23-நெ. பார்க்க)

ஜஜ நாம (56-வது பக்கம் 268-நெ. பார்க்க)

661. அகாரார்த்தாயைவ (அஷ்டச்லோகீ—3)

நான் அகாரத்தின் பொருளான எம்பெருமானுக்காகவே இருக்கிற சொத்து; நான் எனக்காக இருக்கவில்லை; நித்தியர்களான நரங்களு (ஜீவன்களு) டைய கூட்டமானது எவனுக்கு இருப்பிடமாயிருக்கிறதோ என்று நாராயணன் என்கிற சொல்லானது எவனைச் சொல்லுகிறதோ, எனக்குத் தானாகவுள்ள அவனுடைய கைங்கரியபிரகாரங்களும் எல்லாவிடங்களிலும் எல்லா காலங்களிலும் தோன்றவேண்டும்.

662. த்வ்யக்ஷரஸ்து (பாரதம் சாந்திபர்வம்—13-4)

ஸம்ஸாரத்துக்குக் காரணமான இரண்டெழுத்து மம என்பது. எப்போதுமிருக்கிற பிரும்மத்தையடைவதற்குக் காரணமான மூன்றெழுத்துச்சொல் நமம என்பது.

ஸர்வம் ஜிஹ்மம் (80-வது பக்கம் 366-நெ. பார்க்க)

ஏஷ நாராயண (114-வது பக்கம் 505-நெ. பார்க்க)

663. யஸ்ஸ தேவ: (பாரதம் ஆரண்யபர்வம்—192-51)

தாமரைப்பூவின் இதழ்போன்ற திருக்கண்களையுடைய எந்த தேவன் முன்பு என்னுலே பார்க்கப்பட்டானோ, ஓ புருஷச்ரேஷ்டனே! ஜநார்த்தநனை அந்தப் புருஷனை உனக்கு ஸம்பந்தியாக இருக்கிறான். (இது மார்க்கண்டேயர் பாண்டவர்களைக் குறித்துச் சொன்னது).

ஸர்வேஷாமேவ (100-வது பக்கம் 438-நெ. பார்க்க)

664. ஏவம் ஸங்க்ஷேப: (பாரதம் ஆரண்யபர்வம்—192-56)

இப்படிச் சொல்லப்பட்ட பிருதையின் பிள்ளைகளான மூன்று பேர்களும் இரட்டையர்களும் புருஷச்ரேஷ்டனே! த்ரௌபதியுடன் கூடச்சேர்ந்து எல்லாரும் ஜநார்த்தநனுக்கு நமஸ்காரம் செய்தார்கள்.

665. ஶரணம் ஞாதி (பாரதம் ஆரண்யபர்வம்—54-16)

தேவர்களைக் குறித்து சரணாகதி பண்ணவேண்டிய காலம் வந்ததாக அவள் (தமயந்தி) எண்ணினாள். அவள் வாக்காலும் மனதாலும் நமஸ்காரத்தைச் செய்து

666. ஸமித்ஸாதநகாதீநாம் (அஹிர்புத்ந்யஸம்ஹிதை-37-37)

ஸமித்தை ஸாதநமாகவுடைய யஜ்ஞம் முதலான யஜ்ஞங்களுக்குள்ளே எம்பெருமானிடத்தில் ஆத்மாவின் ஸமர்ப்பணத்தை எவன் செய்தானோ, அவன் நல்ல யஜ்ஞம் செய்யப்பட்டவனென்று சொல்லப்படுகிறான்.

நமோவாக்கைஷாம் (1 | 2-வது பக்கம் 498-ங. பார்க்க)

667. ஜ்யாயாந் (அஹிர்புத்ந்யஸம்ஹிதை—52-2 + 33)

புத்திமானொருவன் தன்னைக்காட்டிலும் வேறான உயர்ந்தவனைக்குறித்து, ஒரு பிரயோஜநத்தை வேண்டாமல் தானாய் வணங்குவதாகிய உடம்பின் வேலை நமஸ்ஸு என்று சொல்லப்படுகிறது (2). சாஸ்திரத்தில், அறிவுள்ளவர்கள் (சேதநர்கள்) உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்று இருவகைப்பட்டவர்களாகச்சொல்லப்படுகிறார்கள். இவர்களைக் காட்டிலும் வேறொருவனில்லை (3). அவர்களில் எவனிடத்தில் காலத்தாலும் குணங்களாலும் மேன்மை இருக்கிறதோ அவனே ஜ்யாந் (உயர்ந்தவன்) என்கிற சொல்லுக்கு முக்கியமான பொருள். (இங்கே காலத்தைச்சொன்னதாலே இடமும் சொல்லப்பட்டதாகிறது). எம்பெருமானே எல்லாக் காலங்களிலும் எல்லாவிடங்களிலுமிருப்பதாலேயும் அவனுடைய குணங்களுக்கு அளவில்லாமையாலும் அவனே உயர்ந்தவன் (ஜ்யாந்) (4). அவனைக் காட்டிலும் வேறான அறிவுள்ளவர்களெல்லாரும் தாழ்ந்தவர்கள் (அஜ்யாந்) என்று சொல்லப்படுகிறார்கள். உயர்ந்த அவனுக்கும், தாழ்ந்த இவர்களுக்கும் ஸம்பந்தமானது அவன் சேஷியாயும், இவர்கள் சேஷபூதராயுமிருப்பது (5). உயர்ந்தவன் ஒருவனே, மற்ற எல்லாரும் தாழ்ந்தவர்கள். அவன் வணங்கப்படுகிறவனாயும், இவர்கள் வணங்குகிறவர்களாயும் இருப்

பது அவனுடன் இவர்களுக்கு ஸம்பந்தம் (6). வணங்கப்படுகிறவன் உயர்ந்தவனென்றும் சேஷியென்றும் சொல்லப்பட்டவன்; சேஷர்களான மற்றவர்கள் வணங்குகிறவர்களென்று சொல்லப்படுகிறார்கள். இவர்களுக்கு அவனுடன் ஸம்பந்தமானது ஒரு பிரயோஜநத்தை முன்னிட்டு அன்று. தாழ்ந்தவர்களுக்கும் உயர்ந்தவர்களுக்கும் இருக்கிற இந்த ஸம்பந்தமானது தானாயிருக்கிறது (7½). இந்த சேதநன் உயர்ந்த அவனைக்குறித்து ஒரு பிரயோஜநத்தைத்தேடாமல் எந்தத்தன்மையோடு வணங்குகிறானோ, அதற்கு நமநம் என்று பெயர். அவனைச் சேஷியாகவும் தன்னைச் சேஷனாகவுமெண்ணுவதும் நமநம் (8½). இது எப்படியென்றால்— பகவான் எனக்கு எப்போதும் சேஷி; அவனுக்கு நான் எப்போதும் சேஷன் என்கிற இந்த எண்ணம் நமஸ் என்று சொல்லப்படுகிறது. ஏனென்றால் அது உடம்பின் வேலையாகிய நமஸ்காரத்துக்குக் காரணமாயிருக்கிறது (9½). இப்படி நமஸ் என்கிற சொல்லுக்கு இரண்டு அர்த்தங்கள் சொல்லி, சரணாகதியாகிய மூன்றாவது அர்த்தம் சொல்லப்படுகிறது. எம்பெருமானை இந்த வணக்கமானது வணங்கும்படி செய்கிறது. அதாவது வணங்குகிறவனுக்குக் கேட்டதைக் கொடுக்கும்படியாக எம்பெருமானைச் செய்கிறது. இது நிச்சயம். உயர்ந்தவனான எம்பெருமான் தாழ்ந்தவனாய் வணங்குகிறவனிடத்தில் அவன் வணக்கத்தைப் பார்த்து தானும் வணக்கமுள்ளவனாக ஆகிறான் (10½). ஆகையினாலே- அதாவது எம்பெருமானை வணங்கும்படி செய்வதாலே- இந்த வேலை நமஸ் என்று சொல்லப்பட்டது (11). வாக்காலே நம: என்று சொல்லி, மனதாலே இதை நினைத்துக்கொண்டு, உடம்பாலே வணங்குவது பூர்ணமான நமஸ்(சரணாகதி) என்றும், இதைக் காட்டிலும் வேறானது அதாவது சொன்ன அம்சங்களில் ஏதாவது குறைந்தது குறைந்த நமஸ் என்றும் சொல்லப்படுகிறது (12). இது பூர்ணமான பிரபத்தி. இதினுடைய அங்கங்களிருப்பதைச் சொல்லுகிறேன் கேள் (12½). ஶ்ரீ + விரோதி 234-வதைப் பார்க்க (14). அநாதியாகக் கெட்ட வாஸனைகள் ஏறியிருப்பதாலும், ஸ்வபாவத்தினால் ஒருவனுக்கு உட்பட்டிருப்பதாலும், ராகத்வேஷம் முதலான மலங்களினாலே மனது மூடப்பட்டிருப்பதாலுமுண்டான, பக்தியைச் செய்வதற்கு அறிவும், சக்தியுமில்லாமை ஆகிஞ்சந்யம் என்று சொல்லப்படுகிறது.

அதனாலுண்டான வருத்தம் வெளியில் தோன்றுவது கார்ப்பண்ய மென்கிற இரண்டாவது அங்கம். தான் ஸ்வதந்திரன் அதாவது தானாகவே வேலையைச் செய்யத்தகுந்தவன் என்கிற எண்ணம் அதற்கு விரோதியென்று சொல்லப்படுகிறது (15-16). எம்பெருமான் உயர்ந்தவனேயாகிலும் பிராணிகளிடத்தில் இரக்கமுள்ளவனும், எப்போதும் அநுக்கிரஹமொன்றையே செய்யவேண்டுமென்கிற நினைவுள்ளவனுமிருக்கிறானென்கிற எண்ணம் மூன்றாவது அங்கம் (17). அவன் கர்மத்துக்குத் தகுந்தபடி பலம் கொடுக்கிறவன், நம்மிடத்தில் உபேக்ஷை செய்வன் என்கிற எண்ணம் மஹாவிச்வாஸம் என்கிற மூன்றாவது அங்கத்தை எப்போதும் கெடுக்கிறது (18). இப்படி இரக்கமுள்ளவனாயிருந்தபோதிலும், அவனுக்குச் சக்தியில்லாமையால் நம்மை ரக்ஷிக்கத் தகுந்தவனல்லன் என்கிற புத்தியை விட்டு அவன் நம்மை ரக்ஷிக்கச் சக்தியுள்ளவன் என்று எம்பெருமானுடைய சக்தியை நினைத்து ரக்ஷிக்கவேண்டுமென்று அவனைக் கேட்பது நான்காவது அங்கம். இந்த அங்கத்திற்கு விரோதியானது, அவனுக்குக் குணமில்லாமையால் உதாஸீநனாயிருப்பன் இப்படி எண்ணுவதாலேயுண்டாகும் (19-20). ஒருவன் தன்னுடைய ஸ்வாமிக்கு விரோதமானதைச் செய்வதை விட்டிருப்பதாகிய இருப்பு, ப்ராதிகூல்யவர்ஜநமென்கிற ஐந்தாவது அங்கம். இதற்கு விரோதி— சாஸ்திரத்துக்கு விருத்தமானதைச் செய்வது ($21\frac{1}{2}$). ஜங்கமஸ்தாவரங்களான எல்லாப் பிராணிகளும் எம்பெருமானுடைய உடம்பு. ஆகையால் அவைகளுக்கு அநுகூலமானதைச் செய்யவேண்டியதென்கிற நிச்சயம் ஆறாவது அங்கம். அதற்கு விரோதி— அவைகளுக்குப் பிராதிகூல்யத்தைச் செய்வது (23). இப்படி அங்கங்களோடும், அவைகளுக்கு விரோதிகளைச் செய்யாதிருப்பதாகிய உபாயங்களோடும் கூடின நமநம் (சரணாகதி) உனக்குச் சொல்லப்பட்டது. இது நமஸ் என்கிற சொல்லுக்கு ஸ்தூலமான பொருள். இதற்கு வேறான ஸூக்ஷ்மமான பொருளைக் கேள் (24). சேதநன் எப்போது தன்னையும் தன்னைச் சேர்ந்த வஸ்துக்களையும் என்னதென்று எண்ணுகிறானோ, அப்போது மம என்கிற இரண்டெழுத்தும் மமகாரத்தைச் சொல்லும் (25). தன் விஷயத்திலும் தன்னுடைய பதார்த்தங்கள் விஷயத்திலும் நான் ஸ்வதந்திரன், இவைகள் என்னுடையவைகள் என்கிற எண்ணமானது, அநாதியான

கெட்ட வாஸனைகளாலே பலப்பட்டிருக்கிற தப்பெண்ணத்தினாலே உண்டாகியிருக்கிறது; அந்த எண்ணம் இவைகள் என்னுடையதன்று (மே-ந) என்கிற நல்ல எண்ணத்தாலே விலக்கப்படுகிறது (26½). நான் ஸ்வதந்திரனன்று, நான் எனக்குச் சேஷனன்று என்பது "மே-ந" என்பதற்குப் பொருள் (27). உடம்பு முதலானவைகள் என்னுடையவையன்று. அவைகள் பரமாத்மாவுக்குச் சேஷங்கள். இந்த புத்தியாலே என்னுடையது என்கிற அந்தந்த எண்ணங்கள் போக்கப்படுகின்றன (28). அநாதிகளான கெட்ட வாஸனைகளாலுண்டான வஸ்துக்களின் உண்மையான இருப்புக்கு விரோதமான அந்தந்த எண்ணங்களாலே பலமாய் ஏறியிருக்கிற நான் ஸ்வதந்திரன், இவைகள் என்னுடையவை என்கிற எண்ணமானது— எம்பெருமான் எல்லாவற்றிற்கும் ஆத்மாவாயிருக்கிறான் என்கிற நல்ல அறிவினாலுண்டான 'நம:' என்கிற சொல்லாலே பிரபத்தி பண்ணுகிறவனாலே தன்னிடத்திலிருந்து விலக்கப்படுகிறது (30). இப்படி ஸூக்ஷ்மம் என்கிற அர்த்தம் சொல்லப்பட்டது. இதற்கு வேறான பரம் என்கிற அர்த்தத்தைக் கேள் (30½). நகரமானது உபாயத்தையும், ம என்பது முக்கியமானதென்பதையும், விஸர்க்கமானது எம்பெருமானையும் சொல்லுகின்றன. அந்தச் சொல்லுக்கு இந்த அர்த்தம் கிடைக்கிறது. அதாவது— அநாதியாயும் மிகவும் உயர்ந்த ஈசுவரனாயும் சக்தியுள்ளவனாயும் புருஷோத்தமனென்றும் சொல்லப்பட்ட எம்பெருமானை அவனையடைவதற்கு முக்கியமான நமஸ்ஸு என்று சொல்லப்பட்ட உபாயம் (32½). இப்படி நமஸ்ஸின் மூன்று விதமான அர்த்தங்கள் உனக்குச் சொல்லப்பட்டன (33).

ஸங்கீதை (138-வது பக்கம் 621-ெந. பார்க்க)

668. நாராயண

நாராயண என்கிற மங்களமான திருநாமமானது எவனுடைய வாயில் இருக்கிறதோ, அவனை நாராயணன் பின்தொடருகிறான். கன்றை மாடு பின்தொடருவதுபோல.

669. நாராயணேதி ஶப்தோஸ்தி

நாராயண என்கிற சொல்லிருக்கிறது. நம்முடைய வாக்கு நமக்கு உட்பட்டிருக்கிறது. இப்படியிருந்தும் வாக்காலே நாரா

யணா என்று சொல்லாமல் கோரமான நரகத்தில் ஜீவன்கள் விழு கிறார்களே. இது ஆச்சரியமாயிருக்கிறது.

670. [illegible] (நாரதீயம்—1-38)

நாராயணன் என்கிற இந்தச் சொல்லை மாத்திரம் சொல்லு கிறவர்களும் வியாதி, ஆபத்து, பயம், துக்கம் இவைகளிலிருந்து விடப்படுகிறார்கள். இதில் ஸம்சயமில்லை.

671. [illegible] (வராஹபுராணம்)

நாரம் என்று சொல்லப்படுகிற ஜலத்தை உண்டுபண்ணி அதற்குள் நான் இருந்தேன். ஆகையால் எனக்கு நாராயணன் என்று பெயர் வந்திருக்கிறது.

672. [illegible] (மநுஸ்மிருதி—1-19)

ஜலம் நாரம் என்று சொல்லப்படுகிறது. ஏனென்றால் அது நரனிடமிருந்து உண்டானது. அது அவனுக்கு முன்னால் இருப் பிடமாயிருந்தது. ஆகையால் அவன் நாராயணன் என்று எண் ணப்படுகிறான்.

673. [illegible] (பாரதம் ஆநுசாஸநிகபர்வம்—186-7)

தத்துவங்கள் நரனிடமிருந்து உண்டானவைகள் ஆகையால் அவைகளை நாரங்களென்று அறிகிறார்கள். அவனுக்கு அவைகளே இருப்பிடம். அதனால் அவன் நாராயணனென்று எண்ணப் படுகிறான்.

674. [illegible] (பாரதம் உத்யோகபர்வம்-69-10)

நரங்களுக்கு ஆதாரமாயிருப்பதாலே நாராயணனென்று சொல்லப்படுகிறான்.

675. [illegible] (பாத்மோத்தரம்)

நார என்று எல்லா ஜீவன்களுடைய கூட்டம் சொல்லப்படு கிறது. அதற்கு அடையவேண்டியதாகவும், அடைவதற்கு உபாயமாகவும் எம்பெருமான் இருப்பதாலே அவன் நாராயண னென்று எண்ணப்படுகிறான்.

676. [illegible] (பாத்மோத்தரம்)

நாரம் என்பது நரனென்று சொல்லப்பட்ட ஜீவன்களுடைய கூட்டம். அதற்கு நான் அடையவேண்டியதாகவும். அடைவ

தற்கு உபாயமாகவுமிருக்கிறேன். ஆகையால் ருஷிகளால் நான் நாராயணன் என்று சொல்லப்படுகிறேன். நார என்கிற சொல்லாலே ஜீவன்களுடைய கூட்டம் அறிவுள்ளவர்களாலே சொல்லப்படுகிறது. அவைகளுக்கு அயநமாயிருப்பதாலே நாராயணன் என்று சொல்லப்படுகிறான். ஆகையாலே வேதங்கள் வேதாந்தங்கள் இவைகளின் கரையைக் கண்டவர்கள் நாராயணனை பந்துவென்றும், தாயென்றும், தகப்பனென்றும், குருவென்றும், ஆதாரமென்றும், உபாயமென்றும் சொல்லுகிறார்கள்.

677. விஷ்ணாயாஶ்ரு (விஷ்ணுபுராணம்—2-13-2)

எப்படி இந்த மூன்று உலகங்களும் விஷ்ணுவை ஆதாரமாக உடையவைகளாயிருக்கிறது என்பது சொல்லப்பட்டது.

யொஷொகஸ்துயபு (98-வது பக்கம் 432-ரெ. பார்க்க)

678. நாராயணஶணீயாவஸு (விஷ்ணுபுராணம்—1-9-41)

ஸூக்ஷ்மங்களான எல்லா வஸ்துக்களைக் காட்டிலும் ஸூக்ஷ்மமான நாராயணனை

679. ராமாநுஜு (ராமாயணம் ஸுந்தரகாண்டம்—28-10)

ராமன் தம்பியையும், லக்ஷ்மணன் தமையனையும்

680. வெதநாவெதநு

நாராயணனைக் காட்டிலும் வேறான அறிவுள்ளதும் அறிவில்லாததுமான எல்லாம் நாரம். அது எவனுக்கு இருப்பிடமாய் இருக்கிறதோ, அவன் நாராயணன்.

681. ஜஹநுநாராயணஃ (பாரதம் ஆநுசாஸநிக—231-29)

இந்த மூன்று சொற்களும் நாராயணனுடைய பெயர் (ஸஹஸ்ரநாமம்)

682. ஆபொ நாராயண (வியாஸஸ்ம்ருதி)

ஜலம் நாராயணனிடத்திலிருந்துண்டானது. அது எவனுக்கிருப்பிடமோ?

683. நரஸம்பவாநிநஃ (அஹிர்புத்ந்யஸம்ஹிதை-52-50 + 54)

நரனைச் சேர்ந்தவைகள் நாரங்கள். அந்த நரன் புருஷோத்தமன். அவன் தன் ஆச்ரிதர்களுக்கு எல்லா அறிவையும் கொடுக்கிறவன். அவர்களுடைய எல்லா அஜ்ஞானத்தையும் நாசம் பண்ணுகிறவன். எங்கேயிருந்தாலும் அவன்

வேறுபாட்டையடைகிறதில்லை. ஆகையால் எப்போதும் ஒரே விதமாயிருக்கிறபடியாலே நரனென்று சொல்லப்படுகிறான். அவனைச் சேர்ந்தவர்களான அறிவுள்ளவர்களும் அறிவில்லாதவைகளும் அவனுக்குச் சேஷமாயும் அவனால் தாங்கப்பட்டவைகளாயும் நியமநம் பண்ணப்பட்டவைகளாயும், உண்டுபண்ணப்பட்டவைகளாயும், அவன் அவைகளுக்குள்ளே நுழைந்து அவைகளைத் தாங்குகிறவனுமிருப்பதாலே நாரங்கள். எல்லா நாரங்களையும் அவன் நியமநம் பண்ணுகிறான். அதாவது- அவைகளுக்குள்ளே இருந்து அவைகளைப் போஷிப்பது முதலான வேலைகளாலே அவைகளில் வியாபித்திருக்கிறான். நாரங்கள் அவனை அறிவதற்கு ஸாதநம். எப்படியென்றால் அவைகளாலே அவனிருக்கிறனென்பது அறியப்படுகிறது. நாரங்களுக்கு அவன் அயநம், அதாவது இருப்பிடம். அவைகள் அவனுக்கு எப்போதும் இருப்பிடம். நாரங்களான அந்த ஆத்மாக்களுக்கு அவன் உயர்ந்த புருஷார்த்தமாகவும், அதற்கு உபாயமாகவுமிருக்கிறான்.

ஸூவெ (2_வது பக்கம் 4_வரி. பார்க்க)

வி ஶ்ராஸு (2 வது பக்கம் 5-வரி. பார்க்க)

684. யஸ்ய ப்ரஸாதெ (ராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம்-4-21)

எவனுடைய அநுக்கிரஹமிருக்கும்பொழுது இந்த எல்லாப் பிரஜைகளும் அநுக்கிரஹம் பண்ணுகிறவர்களாக ஆகுவார்களோ, அந்த ராமன் வாநரச்ரேஷ்டனை ஸுக்கிரீவனுடைய அநுக்கிரஹத்தை எதிர்பார்க்கிறான்.

685. ப்ரஸநெ... (இதிஹாஸஸமுச்சயம்—33-141)

பக்தர்களிடத்தில் ஆசையுள்ள தேவசிரேஷ்டனை கேசவன் பிரஸாதத்தை அடையும்போது; அந்தக் காரணத்தாலே தெளிந்த மனதையுடையவன் விஷயத்தில் ஜங்கமஸ்தாவரங்களான எல்லா பிராணிகளும் பிரஸாதத்தையடைந்தன.

686. ப்ரஸநெ... (நாரஸிம்மபுராணம்)

தேவதைகளுக்குத் தேவனை பிருமாவையும் நியமநம் பண்ணும் எம்பெருமான் பிரஸாதம் பண்ணும்போது மூன்று உலகங்களும் பிரஸாதமுள்ளவைகளாக ஆய்விட்டன.

ஸுஹ்ருதம் (76_வது பககம் 345-வரி. பார்க்க)

687. [illegible] (நாரதீயம்—1-59)

மூலமந்திரத்தில் நகரம் முதல் ஆறாவது எழுத்தாயும், வட மொழியில் ககரம் முதல் பதினைந்தாவது எழுத்தாயும் ஆன ணகாரத்தைவிட்டு மந்திரத்தில் பாக்கியிருக்கிற பாகமானது (ஆய) அந்த மந்திரத்துக்குச் சக்தியென்று சொல்லப்படுகிறது.

688. [illegible]

அர்த்தம், பிரகரணம், அடையாளம், கருதி, இடம், காலம் இவைகளால் சொற்களுக்கு அர்த்தங்கள் வெவ்வேறாக இருக்கின்றன. இவைகளைக்கவனிக்காமல் சப்தத்தை மாத்திரம் கொண்டு பொருள் கொள்ளக்கூடாது.

689. [illegible]

கொடுக்கப்படுகிற ஒரு வஸ்துவுக்குச் சேஷியாய் (அதாவது பெற்றுக்கொள்ளுகிறவனாய்) இருப்பதை ஸம்பிரதானமென்று சொல்லுகிறது.

690. [illegible] (அஹிர்புத்ந்யஸம்ஹிதை—52-35, 36)

ஆத்மாவைத் தாழ்ந்தவ(சேஷ)னாகக் காட்டிச் செய்யப்படுகிற அவனுடைய ஸமர்ப்பணமானது, விஷ்ணு முதலான சொற்களிலிருக்கிற நான்காம் வேற்றுமையில் காட்டப்படுகிற ஸம்பிரதானத்தைத் தெரிவிக்கிறது. தாழ்ந்தவ (சேஷ) னை இந்த ஆத்மா ரக்ஷிக்கப்படவேண்டியவனாகக் கொடுப்பதானது எவனிடத்தில் என்று கேள்வியுண்டாக, 'விஷ்ணவே' (விஷ்ணுவுக்கு) என்று அவன் சொல்லப்படுகிறான்.

691. [illegible] (பூர்வாசார்யகாரிகை)

எல்லாருக்கும் க்ஷேமத்தைக் கொடுக்கை, பரமபதத்தில் மனது விரும்பபடி செய்கை, அதற்கு விரோதியான ஆத்மாவுக்குத் தகாத குணங்களை நாசம் பண்ணுகை இவைகள் 'ந' என்பதின் பொருள்கள். தன்னையடைந்தவர்களுக்கு மங்களத்தைச் செய்கையும், அவர்களுடைய சூக்ஷமான ஜ்ஞானத்துக்கு விகாஸத்தையுண்டுபண்ணுகையும், அவர்களுக்கு மற்றவர்கள் பூஜை பண்ணும்படி செய்கையும் மகரம் செய்வதால், அதற்கு இவைகள் அர்த்தமென்று தெரிந்தவர்களால் சொல்லப்படுகிறது. நாஸ்திகனாயிருப்பதை விட்டுவிடுவது, எம்பெருமானுடைய கைங்கரியத்தை எப்போதும் செய்துகொண்டிருப்பது, பரமபதத்துக்கு

ஒருவனைக் கொண்டுபோய்ச் சேர்க்கும்படியான ஆசாரியனுடைய வேலை. இவைகள் 'ரா' என்கிற எழுத்தைத் தியானம் பண்ணுகிறவர்களுக்கு உண்டாகுமென்று மந்திரத்தைத் தெரிந்தவர்களால் சொல்லப்படுகிறது. எம்பெருமானிடத்தில் சீக்கிரத்தில் பிரீதியுண்டாவது, அவனைக் காட்டிலும் வேறானவைகளிடத்தில் இருக்கும் ஆசையை விடுவது, ராஜ்யத்தை ரக்ஷிப்பது முதலியவைகள் ரா என்பதைத் தியானம் பண்ணுகிறவர்களுக்கு வரும். எம்பெருமானை அடைவதற்குச்செய்யவேண்டிய யோகத்தில் பரபரப்பும், அதின் பலனும் யகரத்தால் அறிவுள்ளவர்களால் அடையப்படுகின்றன. எம்பெருமானை ஸ்தோத்ரம் பண்ணுவதும், அதற்குத் தகுந்த வாக்கின் ஸித்தியும் ணகரத்தாலுண்டாகும். யக்ஷன், ராக்ஷஸன், வேதாளம், பூதங்கள் இவைகளுக்குப் பயம் யகரத்தாலுண்டாகிறது. இப்படி மந்திரத்தின் எழுத்துக்கள் செய்யும் வேலைகள் மந்திரம் தெரிந்தவர்களால் சொல்லப்பட்டன.

ஸர்வாஷ்டாக்ஷர (8-வது பக்கம் 25-ெ. பார்க்க)

692. தஸ்ய வாசக: (பாதஞ்ஜலயோகஸூத்ரம்—1-1-27)

அந்த எம்பெருமானைச் சொல்லுகிற சொல்லானது பிரணவம்.

693. அவ்யக்தாயஶ்ருதயா (சாண்டில்யஸ்மிருதி—5-71)

பிரணவமானது அதினால் சொல்லப்பட்ட ரக்ஷகனென்று தெளிவாகத் தெரிவிக்காமையால் அதைத் தெளிவிக்கச் சக்தியில்லாதது.

694. பத்தாஞ்ஜலி (பாரதம் சாந்திபர்வம்—344-45)

கையைக் கூப்பிக்கொண்டு நம: என்ற சொல்லையே சொல்லிக்கொண்டு ஸந்தோஷப்பட்டவர்களாய்.

695. மூலமந்த்ரேண (நித்யம்)

மூலமந்திரத்தாலே ஒருவன் தன்னை எம்பெருமானுக்கு ஸமர்ப்பித்து,

696. ஶ்ரீமதா (வைகுண்டகத்யம்)

தேவரீருக்கே எப்போதும் கைங்கரியம் செய்வதற்காக அடியேனை ஏற்றுக்கொள்ளவேணுமென்று பிரார்த்தித்து நமஸ்காரம் செய்து, ஒருவன் தன்னை மிகுந்த பெருமையையுடைய திருமந்திரத்தாலே எம்பெருமானிடம் ஸமர்ப்பிக்கவேண்டியது

ஈகாராயுதூரசெல (147-வது பக்கம் 661-செ. பார்க்க)

ஸவாஂஸுா (11-வது பக்கம் 44-செ பார்க்க)

697. நித்யகிஂகரதாஂ (சிறியகத்யம்)

எப்போதும் தேவரீருக்கு வேலைக்காரனாயிருப்பதை வேண்டுகிறேன்.

698. நித்யகிஂகரோஸவாநி (சிறியகத்யம்)

எப்போதும் தேவரீருக்கு வேலைக்காரனாயிருக்கவேண்டும்.

699. செஷத்ரணஂ (லக்ஷ்மீதந்திரம்)

மூன்று குணங்களுமுள்ளதென்றும், ஆறு குணங்களுள்ளதென்றும், அந்நம் இருவகையாகச் சொல்லப்படுகிறது. மூன்று குணங்களுள்ளது கர்மத்தினால் கட்டுப்பட்டவர்களுக்கு. மற்றது மற்றவர்களுக்கு. இங்கே மூன்று குணங்களுள்ள அந்நம் பிரகிருதியிலிருந்து உண்டானவைகள்.

ஸொமஹோத்ர (96-வது பக்கம் 426-செ. பார்க்க)

செஷவமிதூகாநு (133-வது பக்கம் 600-செ. பார்க்க)

ஃஃஃஉக (71-வது பக்கம் 323-செ. பார்க்க)

தலா க (80-வது பக்கம் 364-செ. பார்க்க)

700. ஸவஂ வரவஶ (மநுஸ்மிருதி—4-160)

அயலாரைப் பொருத்த எல்லாம் துக்கத்திற்குக் காரணம். தன்னையே பொருத்தவெல்லாம் ஸுகத்திற்குக் காரணம். ஸுகத்திற்கும் துக்கத்திற்கும் இதுவே சுருக்கமான லக்ஷணமென்று அறி.

701. ஓணவொதித (பட்டர் நித்யம்)

நான் பிரணவத்தால் சொல்லப்பட்டபடி எம்பெருமானுக்குச் சேஷனாக இருக்கிறேன். அப்படியிருந்தும் என்னுடைய கர்மங்களாலே உண்டான அஹங்காரமமகாரங்களாலே ஜயிக்கப்பட்டிருந்தேன். இனிமேல் அவனுக்குச் சேஷமாயிருப்பதை நினைத்துக்கொண்டு, அவனுக்குக் கைங்கரியங்களைச் செய்கிறவனாயிருக்கவேண்டுமென்கிற இந்த அர்த்தத்தை நம: என்கிற சொல் சொல்லுகிறது. இங்கு அஹங்காரமென்பது தன் ஸ்வரூப விஷயமான தப்பான எல்லா எண்ணங்கள்.

702. அஸ்ய ஜீவாத்மந: (வேதார்த்தஸங்கிரஹம்)

அநாதியாக இருக்கிற அவித்யையினல் புண்ணியம் பாபம் என்று இருவகைப்பட்ட கர்மங்கள் ஆறுபோல் பெருகிவருகின்றன. அதினல் பிரும்மா முதலான தேவன், மனிதன், மிருகம், ஸ்தாவரம் ஆகிய இந்த நாலுவிதமான உடம்புகளில் ஜீவனுக்கு இருப்பு உண்டாகிறது. அதனல் ஜீவன் தான் எப்படியிருப்பதாக எண்ணுகிருனே, அதினலே ஸம்ஸாரம் பெருகிவருகிறது. இதினல் உண்டாய் விலக்கமுடியாமலிருக்கிற பயம்போவதற்காக.

703. ஸம்பத்ய (ப்ரம்மஸூத்திரம்—4-4-1)

ஜீவன் எம்பெருமானை அடையும்போது அவனுக்கு இயற்கையாயுள்ளதாய் இதுவரையில் மறைந்திருந்த குணங்கள் வெளிக்கு வந்திருக்கின்றன, இது வேதவாக்கியத்தில் 'ஸ்வேந' என்கிற சொல்லாலே ஏற்படுகிறது.

704. யதா ந க்ரியதே (விஷ்ணுதர்மம்—104-55-57)

எப்படி அழுக்கையலம்புவதாலே மாணிக்கத்துக்கு பிரகாசம் உண்டுபண்ணப்படுகிறதில்லையோ, அப்படியே ஆத்மாவுக்குத் தோஷங்களை விடும்போது ஜ்ஞாநம் உண்டுபண்ணப்படுகிறதில்லை. குளம் வெட்டும்போது ஜலமும், இடவெளியும் உண்டுபண்ணப்படவில்லை. எது இருக்கிறதோ அதுவே வெளிக்கு வருகிறது. முன்னுயில்லாதது எப்படி உண்டாகக்கூடும். அப்படியே கெட்ட குணங்களை விடுவதாலே ஆத்மாவுக்கு ஜ்ஞாநம் முதலான குணங்கள் பிரகாசிக்கின்றன, உண்டுபண்ணப்படவில்லை. ஏனென்ருல் ஆத்மாவுக்கு அவைகள் எப்போதுமிருப்பவைகளாகச் சொல்லப்படுகின்றன.

ஜ்ஞாத: (9-வது பக்கம் 31-நெ. பார்க்க)

705. அவித்யா (ஸ்ரீபாஷ்யம் லகுஸித்தாந்தம்)

அவித்யை போவதே மோக்ஷம். இங்கே அவித்யையென்பது முன் செய்த கர்மங்கள்.

நாநாவிதை: (49-வது பக்கம் 224-225-நெ. பார்க்க)

706. ஸஹகாரித்வேந ச (ப்ரம்மஸூத்திரம்—3-4-33)

பக்தி செய்கிறவன் தன் ஜாதிக்கும் ஆசிரமத்துக்கும் ஏற்பட்ட தர்மங்களை பக்திக்கு அங்கமாகவும் செய்யவேண்டியது.

707\. விஹிதத்வாச்ச (ப்ரம்மஸூத்திரம்—3-4-32)

செய்யவேண்டியதாக விதிக்கப்பட்டிருப்பதால் யஜ்ஞம் முத லானவைகள் ஆசிரமத்துக்குஏற்பட்ட கர்மங்களாகவுமாகின்றன.

708\. ஜ்ஞாநப்ராஸாத (பாரதம் சாந்திபர்வம்—150-11)

மூலமந்திரத்தினுடைய உயர்ந்த ஜ்ஞாநமாகிய மாடியில் ஏறி, தன்னைப்பற்றி வருத்தம் தீர்ந்தவன் இந்த அறிவில்லாமல் வருத் தப்படுகிற ஜநங்களை மலைமேலிருப்பவன் பூமியிலிருப்பவர்களைப் பார்ப்பதுபோல் பார்க்கிறான். மலைமேலிருக்கிறவனுக்குக் கீழி ருக்கும் ஜநங்கள் கொசுப்போல் தோன்றும். அப்படிப்போல இவன் அவர்களை மிகவும் தாழ்ந்தவர்களாக எண்ணுவன்.

709\. ஜ்ஞாநேந (நரஸிம்மபுராணம்—16-13)

சாப்பாடும், தூக்கமும், பயமும், ஸ்திரீஸங்கமமும், மனிதர் களுக்கும் மிருகங்களுக்கும் ஸமம், மனிதர்களுக்கு மிருகங் களைக்காட்டிலும் விசேஷம், ஜ்ஞாநமுள்ளவர்களாயிருப்பது. ஜ்ஞா நமில்லாதவர்கள் மிருகங்களுக்கு ஸமம்.

710\. ந ஹ்ருஷ்யதி (பாரதம் உத்யோகபர்வம்—33-33)

எவன் வெகுமாநம் பண்ணும்போது ஸந்தோஷப்படுகிறதில் லையோ, அவமாநம் செய்யும்போது வருத்தப்படுகிறதில்லையோ, கங்கையின் மடுவைப்போல கலங்கும்படி செய்யமுடியாதவனோ, அவன் பண்டிதன் என்று சொல்லப்படுகிறான்.

711\. யத்ராஷ்டாக்ஷர (நாரதீயம்—1-20)

எந்த தேசத்தில் மூலமந்திரத்தினுடைய ஸித்தியையடைந்த மஹாபாகவதன் பூஜிக்கப்படுகிறானோ, அந்த தேசத்தில் வியாதி யும், பஞ்சமும், திருடர்களுமிருக்கமாட்டார்கள். இந்த சொற் களுக்கு அர்த்தம் மூலத்திலேயே சொல்லியிருக்கிறது. இங்கே ஸித்தியென்பது மந்திரத்தின் அர்த்தத்தைத் தெரிந்து அதை தன் அநுஷ்டாநத்தில் தோன்றும்படி எப்போதும் நினைத்துக் கொண்டிருப்பது.

712\. ராகாதிரோகாந் (வாக்படம்)

எல்லா உடம்புகளில் பரவியும் எப்போதும் சேர்ந்தும், ஔத்ஸுக்யத்தையும், மோஹத்தையும், பிரீதியில்லாமையும் கொடுக்கிற ராகம் த்வேஷம் முதலான தோஷங்களை யெல்லாம் எந்த விலக்ஷணனான வைத்தியன் போக்கினானோ அவனுக்கு நம

ஸ்காரம். இங்கே ராகமென்பது ஆசை, அது முக்தி ஆசைப்பட்ட வஸ்துவை அநுபவிக்காமல் இருக்கக் கூடாத கடுமையான அதின் அவஸ்தையை ஔத்ஸுக்யமென்று சொல்லுகிறது.

713. வ்யாப்திகாந்தி (அஹிர்புத்ந்யஸம்ஹிதை—52-38)

அந்தந்த தாதுக்களில் சொல்லப்பட்ட வியாப்தி - எங்கும் நிறைந்திருப்பது, காந்தி, பிரவேசம்-உள்ளே நுழைவது, இச்சை ஸங்கல்பம் ஆகிய இவைகள். பரமாத்மாவாயும் தேவனுயுமிருக்கிற விஷ்ணுவினுடைய மேன்மையைச் சொல்லும்போது மிகவும் அதிகமாக இருக்கின்றன.

ஸர்வத்ரேஷ்டா (8-வது பக்கம் 25-நெ. பார்க்க)

714. ருசோ யஜூம்ஷி (நாரதீயம்—1-10)

ருக் முதலான மூன்று வேதங்களை, அநேகந்தடவை நன்ருய் ஜபிக்கிறவர்கள் எந்த பலனை அடைகிருர்களோ, அந்த பலனை எட்டெழுத்து மந்திரத்தை ஒரு தரம் ஜபிப்பதாலே ஒருவன் அடைகிருன்.

யஸ்யாவாம்ஸு (117-வது பக்கம் 524-நெ. பார்க்க)

715. ஶுஶ்ரூஷா

சொல்லும் விஷயத்தை வாங்கிக் கொள்ளுவது, அதை மறந்து போகாமல் வைத்துக் கொள்வது, அதை நினைவுக்குக் கொண்டு வருவது, பிறருக்குச் சொல்லுவது, சொல்லாத விஷயத்தைச் சேர்த்துக் கொள்வது, சொல்லாத விஷயத்தைச் சேர்த்து சொல்லியிருப்பதை விடவேண்டிய இடத்தில் விட்டு விடுவது, அர்த்தத்தை நன்ருய் அறிவது, உண்மையை அறிவது, ஆகிய இவைகள் புத்தியின் குணங்கள்.

716. அஹிம்ஸா

பிறருக்கு ஹிம்ஸை செய்யாதிருப்பது முதல் புஷ்பம், இந்திரியங்களை அடக்குவது இரண்டாவது, எல்லாரிடத்திலும் இரக்கமுள்ளவனு யிருப்பது மூன்ருவது. மனதை அடக்குவது நாலாவது. இது சிறந்தது. ஜ்ஞாநம் ஐந்தாவது, தபஸ்ஸு ஆருவது, தியாநம் ஏழாவது, ஸத்யம் எட்டாவது. இப்படி எட்டு விதங்களான புஷ்பங்கள் எம்பெருமானுக்குப் பிரீதியைச் செய்கிற வையாயிருக்கின்றன.

717. ஊஹஶ்ஶப்³த: (ஸாங்கியகாரிகை)

ஊஹம்—வேதத்துக்கு விரோதமில்லாத நியாயங்களைக் கொண்டு பிறமதங்களைக் கண்டித்து ஸித்தாந்தமான அர்த்தம் இன்னதென்று தீர்மானிப்பது; சப்தம்-சொற்களின் பொருளை யறிவது; அத்யயநம்- வேதத்தினுடைய அக்ஷராசியைத்தெரிந்து கொள்வது. மூன்று துக்கங்களில்லாமை; துக்கங்களாவன— ஆத்⁴யாத்மிகம்- உடம்பாலுண்டானது, ஆதி⁴தை³விகம்- மழை, காற்று முதலான தேவதைகளாலுண்டுபண்ணப்பட்டது, ஆதி⁴பௌ⁴திகம்-பிராணிகளால் உண்டாகுவது. ஸுஹ்ருத்ப்ராப்தி: தான் தெரிந்துகொண்ட விஷயங்கள் ஸரியாகத் தெரிந்துகொள்ளப்பட்டவைகள் என்று எண்ணுவதற்கு வேண்டிய ஒரு ஸ்நேஹிதனுடைய சேர்க்கை; தா³நம்- ஸந்தேஹமும், தப்பெண்ணமும் இடையிடாத நல்லறிவின் பிரவாஹம் ஒன்றின்பின் ஒன்றாகத் தொடர்ந்துவருவது. இது ஸாரப்பிரகாசிகையையொத்து எழுதப்பட்டது. ஸாராஸ்வாதிநியில் ஶப்³த³: என்பதற்குப் பதிலாக தாரம் என்று பாடம். அதற்கு யுக்தியைக்கொண்டு விசாரிப்பது என்று பொருள்.

இந்த எட்டு ஸித்திகளும் கிடைக்கும் வரிசை:— முதலில் அத்யயநம், பிறகு அங்கங்களைப் படிப்பதாலுண்டாகும் வேதத்தின் அர்த்தஜ்ஞாநம்; பிறகு நியாயங்களைக்கொண்டு விசாரித்து அர்த்தமின்னதென்று தீர்மானிப்பது. இந்த விசாரத்துக்கு மீமாம்ஸை என்று பெயர்; பிறகு பெரியோர்களுடன் சேருவது, இதனால் அவர்களுடன் கலந்து பேசி தான் தெரிந்துகொண்டது ஸரியாயிருக்கிறதென்று தேறுவது. இதன்மேல் ஸந்தேஹமும் தப்பெண்ணமுமில்லாமல் உண்மையான அர்த்தத்தை எப்போதும் நினைத்துக்கொண்டிருப்பது. இதின் பலம் மூன்று தாபங்கள் கழிவது.

8ஸித்³தி⁴ (71-வது பக்கம் 324-நெ. பார்க்க)

718. அணிமா (ஸாங்கியகாரிகை)

தன் உடம்பை ஸூக்ஷ்மமாகப் பண்ணுவது அணிமை; அதைப் பெரிதாகப் பண்ணுவது மஹிமை; அதைக் கனமில்லாமல் பண்ணுவது லகிமை; அதைக் கனமாகப்பண்ணுவது கரிமை

இதற்கு உடம்பை எல்லாரும் ஆசைப்படும்படியாகப் பண்ணுவ தென்றும் பொருள் கொள்ளலாம். எல்லாரையும் தன் வசப் படுத்திக்கொள்வது வசித்வம்; எல்லாரையும் நியமநம் பண்ணு வது ஐச்வரியம்; தனக்கு வேண்டியதையடைவது பிராப்தி; தான் நினைத்ததற்குத் தடையில்லாமை பிராகாமியம்.

719. அஷ்டௌ குணா: (பாரதம் உத்யோகபர்வம்—33-106)

எட்டு குணங்கள் ஒரு மனிதனைப் பிரகாசப்படுத்துகின்றன. அவைகளாவன— நல்லறிவு, உயர்ந்த குலத்தில் பிறப்பு, இந்திரி யங்களையடக்குவது, வேதத்தின் அர்த்தத்தை ஆசாரியனிடம் தெரிந்துகொள்வது, அயலாரை வெல்லும் ஸாமர்த்தியம், அதிக மாகப் பேசாமை, சக்திக்குத் தகுந்தபடி தானம் செய்வது, செய்த உபகாரத்தை நினைத்துக்கொண்டிருப்பது. இது பாரத ச்லோகத்தில் சொன்னபடி. எட்டு குணங்களை வேறாகவும் வியாக் கியாநம் பண்ணியிருக்கிறார்கள். அவைகளாவன— எல்லாரிடம் தயை, பொறுமை, அஸூயையில்லாமை, சௌசம், மனதில் வருத்தமில்லாமை, நல்லதை நினைப்பது, கார்ப்பண்யமில்லாமை, ஒன்றிலும் ஆசையில்லாமை. ஒருவன் மூக்தனாகப் போகும் போது வெளிக்கு வரும் எட்டு குணங்களென்றும் பொருள் கொள்ளலாம்.

நமோ நாராயணேதி (143-வது பக்கம் 643-நெ. பார்க்க)

தமிழ் வசனங்கள்.

135. நின்திருவெட்டு (பெரிய திருமொழி—8-10-3)
தேவரீருடைய எட்டெழுத்து மந்திரத்தைக் கற்று.

136. எட்டெழுத்தும் (திருச்சந்தவிருத்தம்—77)
எட்டெழுத்து மந்திரத்தை ஆசாரியனிடம் பெற்று ஜபிக் கிறவர்கள் வைகுந்தத்தை ஆளுவதற்கு சக்தியுள்ளவர்கள்.

137. எட்டெழுத்தும் (திருச்சந்தவிருத்தம்—78)
எட்டெழுத்து மந்திரத்தை எப்போதும் அதையே விரும்பி ஜபித்துக்கொண்டிருப்பவர்கள் வைகுந்தத்தை ஆள சக்தர்கள்.

138. நாடுநகரமும் (திருப்பல்லாண்டு—4)

தேசமும் பட்டணமும் நன்றாயறியும்படி நமோநாராயணாய என்று திருநாமத்தைப் பாடும் பக்தர்களாக நீங்கள் இருந்தீர். தேசம் (நாடு) என்பதற்கு நல்ல அறிவில்லாதவர்கள் என்றும், பட்டணம் (நகரம்) என்பதற்கு நல்ல அறிவுள்ளவர்கள் என்றும் கருத்து.

139. நல்வகையால் (திருப்பல்லாண்டு—4)

நல்லவிதமாய் அதாவது ஒரு பிரயோஜநத்தையும் தேடாமல் நமோநாராயணாய என்று திருநாமத்தைப் பலதடவை சொல்லி

நாமஞ்சொல்லில் (123-வது பக்கம் 122-நெ. பார்க்க)

140. நன்மாலைகொண்டு (முதல் திருவந்தாதி—57)

நமோநாராயணா என்கிற இந்த நல்ல மாலையை ஸம்பாதித்துக்கொண்டு.

141. நாவாயிலுண்டே (முதல் திருவந்தாதி—95)

வாயில் நாக்கு இருக்கிறதே, இடைவிடாமல் சொல்லும்படியான நமோ நாராயணாவென்கிற மந்திரமிருக்கிறதே.

142. கண்ணபுரம் (பெரிய திருமொழி—8-9-3)

திருக்கண்ணபுரத்துக்கு ஸ்வாமியான எம்பெருமானுக்கு நான் தாஸன்,வேறொருவனுக்கு தாஸனாகவிருக்கத்தகுந்தவனோ?

அடியார்க்கு (73-வது பக்கம் 84-நெ. பார்க்க)
மற்றுமோர் (38-வது பக்கம் 35-நெ. பார்க்க)

143. நாரணன்றம்மன்னை(பெரியாழ்வார் திருமொழி-4-6-1)

தன் பிள்ளைக்கு நாராயணனென்கிற பெயரை வைத்த தாயார் நரகத்துக்குப் போகமாட்டாள்.

144. எண்பெருக்கு (திருவாய்மொழி—1-2-10)

கணக்கில்லாதவர்களாயும், பிரஸித்தமான ஆநந்தம் ஜ்ஞாநம் என்கிற குணங்களையுடையவர்களாயும், ஸ்வயம்பிரகாசர்களாயுமிருக்கிற ஜீவன்களையும், மேன்மையான அளவில்லாத நல்ல குணங்களையும் சேஷமாகவுடைய நாராயணன்.

145. நாரணன் முழு (திருவாய்மொழி—2-7-2)

நாராயணன் ஏழு லோகம் முழுவதுக்கும் நாதன்.

நாணுன்னை (10-வது பக்கம் 5-நெ. பார்க்க)

146. எம்பிரான் (பெரிய திருமொழி—1-1-6)

எனக்கு உபகாரனுன என்னுடைய ஸ்வாமி, என் தகப்பன், என் பந்து, என் ராஜா.

இத்தனை (122-வது பக்கம் 111-நெ. பார்க்க)

147. அன்று நான் (திருச்சந்தவிருத்தம்— 64)

என்னுடைய ஸ்வரூபஜ்ஞானத்தை அடைவதற்கு முன்னுலே இருந்தும் நான் பிறக்காதவன் போலிருந்தேன். அந்த ஜ்ஞானமுண்டானபிறகு அதனுலே பிறந்த நான் அதை மறக்கவில்லை.

வழுவிலா (66-வது பக்கம் 52-நெ. பார்க்க)

148. அடியேனையாட்கொண்டருள் (பெரிய திருமொழி-1-9-2)

அடியேனைத் தேவரீருக்கு வேலை செய்யும்படி கிருபை செய்யவேணும்.

பொய்நின்ற (69-வது பக்கம் 73-நெ. பார்க்க)

149. நரநாரணனுய் (பெரியதிருமொழி 10-6-1)

நரனுகவும் நாராயணனுகவும் அவதரித்து அறநூலைக் கொஞ்சமும் கெட்டுப்போகாதபடி பரவச்செய்தான். இங்கே அறநூல் என்பது வேதத்துக்கு ஸமமான மந்திரம்.

150. அந்தணர் (திருநெடுந்தாண்டகம்—4)

பிராம்மணர்களுடைய தனமான வேதத்தின் கடைசியில் தோன்றுகிற எம்பெருமானை எட்டெழுத்து மந்திரத்தால் எப்போதும் அநுபவித்துக்கொண்டிருந்தால் நீ வாழலாம்.

அரும்பதவுரை.

மாசு அற — அழுக்குப்போக. பிணக்கு — விவாதம். விளாக்குலைகொண்டு — தனக்குள்ளே யிருக்கும்படி செய்து.

---

28. த்வயாதிகாரம்.

ஸம்ஸ்கிருத வசனங்கள்.

[illegible] (11-வது பக்கம் 40-நெ. பாரக்க)

[illegible] (11-வது பக்வம் 44-நெ. பார்க்க)

720. [illegible] (ஸாத்யகிதந்திரம்)

குருவை நமஸ்காரம் செய்து பிறகு இந்த உயர்ந்த மந்திரத்தை அறிந்துகொள்ளவேண்டியது: குருவே பரம்ப்ரம்மம்; குருவே உயர்ந்த உபாயம்; குருவே உயர்ந்த வித்யை; குருவே உயர்ந்த ஸித்தோபாயம்; குருவே மோக்ஷம்; குருவே ஜ்ஞாநம், பக்தி முதலான தனத்துக்குக் காரணம். மந்திரத்தை உபதேசம் செய்ததாலே அவர் ச்ரேஷ்டமான குரு. இந்த மந்திரத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்கு பொருத்தம், நல்ல நக்ஷத்திரம், தீர்த்த ஸ்நாநத்தாலுண்டாகும் சுத்தி, மந்திரஸித்தியடைவதற்கு வேண்டிய ஜபம் ஹோமம் முதலானவைகள், நித்தியம் ஜபம் செய்வது, இவைகளொன்றும் வேண்டுவதில்லை. முதலில் மூன்று தடவை குருவை ஸாஷ்டாங்கமாக பிரணமம் செய்து வணக்கத்துடன் அவருடைய திருவடிகளைப் பிடித்துத் தன் தலையில் வைத்துக் கொண்டு, புதையலையபேக்ஷிக்கிற தரித்திரனைப்போல் இந்த மந்திரத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டியது. இப்படி மந்திரத்தைப் பெற்றுக்கொண்டு ஒரு மனிதன் என்னைச் சரணமாக அடையவேண்டியது. (ஸநெநெஷ (55வது பக்கம் 260-செ. பார்க்க)

யெநகெநாவி (43-வது பக்கம் 202-செ. பார்க்க)
ஸவமெநாவி (138-வது பக்கம் 622-செ. பார்க்க)

721. நாமெஸ

ஓ ஹரியே! பாபத்தைப் போக்குவதில் தேவரீருடைய திருநாமத்துக்கு எவ்வளவு சக்தியிருக்கிறதோ, நாய் மாம்ஸம் தின்கிறவன்கூட அவ்வளவு பாபம் செய்யச் சக்தியில்லாதவன்.

722. தெவமஹெஷு (பாரதம் ஆநுசாஸநிகபர்—228-60)

ஓ தேவி! தேவரஹஸ்யங்களிலும், மற்ற ரஹஸ்யங்களிலும் யுக்தி விசாரம் பிரயோஜநமில்லாதது. தன்னுடைய க்ஷேமத்தை ஆசைப்படுகிறவன் அவைகள் விஷயத்தில் செவிடன் போலும் குருடன்போலும் பெரிய நம்பிக்கையுள்ளவனாய் இருக்கவேண்டியது.

723. ஸவொபாவாயி (தக்ஷஸ்மிருதி)

அவித்யை முதலான எல்லா உபாதிகளும் நீங்கின இயற்கையாயுள்ள தன் ஸ்வரூபத்தை ஒருவன் பிரம்மத்தினிடத்தில் (எம்பெருமானிடத்தில்) கொடுக்கவேண்டியது: இதுதான் பக்தி

யோகமும் அதற்கு வேண்டிய கர்மயோகமும். மற்றவையெல்லாம் வெரும் பேச்சுக்கள். பாடாந்தரத்தில், இதுதான் ஸம்பாதிக்க வேண்டிய ஞானமும், அவசியம் அறியத்தகுந்ததும்.

724. நிவேதயீத (வியாஸஸ்ம்ருதி)

தோஷமற்ற தேஜஸ்ஸையுடைய விஷ்ணுவினிடத்தில் அவனுக்குத் தான் உடம்பு என்று நினைத்துக்கொண்டு, ப்ராப்யனை அவனிடத்தில் ஆசையுள்ளவனாய், ஒரு பிரயோஜநத்திலுமாசை இல்லாமல் "தத்விஷ்ணோ:" என்கிற மந்திரத்தினால் தன்னை ஸமர்ப்பிக்கவேண்டியது.

725. ஆகாரிணः (அருளாளப்பெருமாள் எம்பெருமானார்)

ஆகாரமுடைய ஒருவனை அறிவதற்கு முன்னாலே அந்த ஆகாரத்தை யறியவேண்டுவது. ஆகையால் எம்பெருமானுடைய ஆகாரமான லக்ஷ்மியை அறிந்து பகவானான ஹரியை அறியவேண்டியது.

726. வீதேவ (ஸ்ரீகுணரத்நகோசம்—52)

தாயே! உனக்குப் பிரியனான கணவன் மிகுந்த அபராதம் பண்ணின மனிதனிடத்தில் ஒரு வேளை தகப்பனைப்போல அவனுக்கு க்ஷேமத்தைச் செய்யவேண்டியதற்காக மனக்கலக்கமுள்ளவனாக ஆகிறான். அப்போது இதென்ன! இந்த உலகத்தில் தோஷமில்லாதவன் யார்? என்று தகுந்த உபாயங்களாலே அவனுடைய தோஷங்களைக் கவனிக்காமல் அவனை எம்பெருமான் தன் மனிதனாக ஒப்புக்கொள்ளும்படி செய்கிறாய். ஆகையினால் நீர் எங்களுக்குத் தாயாராக இருக்கிறீர்.

நகஸ்ரீஸ (78-வது பக்கம் 353-ெந. பார்க்க)

727. கேஂதவேஷ (ராமாயணம் யுத்தகாண்டம்—116-38)

ஓ வாநரச்ரேஷ்டனே! ஒரு ராஜாவையடைந்து அவனுக்கு உட்பட்டு அவன் உத்திரவுப்படி வேலை செய்கிற வேலைக்காரிகளாகிய ராக்ஷஸிகள் விஷயத்தில் எவன் கோபித்துக்கொள்ளுவன்.

ஓஷ்டியாஸீஹ (78-வது பக்கம் 352-ெந. பார்க்க)

ஸீதாஓவாவ (11-வது பக்கம் 41-ெந. பார்க்க)

ஸீதாஸஓக்ஷ (11-வது பக்கம் 40-ெந. பார்க்க)

728. 8ா தமூ-ுக்ஷி (ஸ்ரீ குணரத்னகோசம்—51)

அம்ம! லக்ஷ்மீ! தேவரீருடைய கைங்கர்யம் ஒன்றிலேயே ப்ரீதியுள்ளவர்களாயும் அதிலேயே மனமுள்ளவர்களாயுமிருக்கிற நாங்கள், எப்படி மிதிலாபட்டணத்துஜநங்கள் சக்கிரவர்த்தித் திருமகனை மாப்பிள்ளையென்றும், ஸீதைக்குப் பிரியமான கணவனென்றும் பார்த்தார்களோ, அப்படியே எம்பெருமானைத் தேவரீருடைய புருஷனென்று பார்த்து அவனிடம் போகிறோம், அவனைப் பார்க்கிறோம், அவனுக்கு இங்குமிங்கும் கைங்கரியம் செய்து ஸந்தோஷப்படுகிறோம்.

வாவஃ வுஙஃ (105-வது பக்கம் 466-நெ. பார்க்க.)

ஸூஙெஙவு— (104-வது பக்கம் 464-நெ. பாாக்க).

ஸூதஃ ஸ்ரீஃ (107-வது பக்கம் 475-நெ. பார்க்க)

கா ஜெஸ (12-வது பக்கம் 46-நெ. பார்க்க)

729. ஸெஷிஸெ (ஸ்ரீ குணரத்நகோசம்—22)

ஸ்ரீரங்கத்துக்கு ஈசுவரியாயிருக்கிற தேவி! தேவரீருடைய விளையாட்டுக்காக இந்த ஜங்கமஸ்தாவரங்கள் ஏற்பட்டிருக்கின்றன, போகத்துக்கு உயர்ந்த விபூதி (ஸ்ரீவைகுந்தம்) வைகுந்தத்தை எப்போதும் எவர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்களென்று சொல்லப்படுகிறார்களோ, புண்ணியசாலிகளான அவர்கள் தேவரீருக்குக் கைங்கரியம் பண்ணுவதற்காக ஏற்பட்டவர்கள். தேவரீருடைய கருணையொன்றாலேயே ரக்ஷிக்கிறவர்களில் நாங்களிருக்கிறோம். தேவரீருக்குச் சேஷியாயிருக்கிற விஷயத்தில் பரமபுருஷன் இருக்கிறான். இந்த மற்றதெல்லாம் தேவரீர் கடாக்ஷத்துக்கு விஷயங்கள்.

ஜஙதவெஸ (106-வது பக்கம் 469-நெ. பார்க்க)

730. 8தஉஙஙு (வராஹபுராணம்)

ஓ தேவியே! என் திருவடிகளின் இரண்டையும் முக்கியமான உபாயமாக எவர்கள் அடைகிறார்களோ, அவர்களை நானே ஸம்ஸாரத்திலிருந்து வெளியே கொண்டுபோவேன்.

731. ஆநஷஙஸு (ராமாயணம் ஸுந்தரகாண்டம் 38-39)

இரக்கப்படுவது உயர்ந்த தர்மம் என்பது தேவரீரிடமிருந்தே என்னால் கேட்கப்பட்டது.

732. ஶ்ருணு (இதிஹாஸஸமுச்சயம். 10-51)

ஓ என் ப்ரீதிக்கு விஷயமான கணவனே! உனக்கு எந்த ஹிதத்தைச் சொல்லப்போகிறேனே, அதைக் கவனித்துக்கேள். சரணாகதி பண்ணினவன் எப்போதும் உன்னாலே பிராணனைக் கொடுத்தாவது ரக்ஷிக்கத் தகுந்தவன்.

733. கிந்த்வௌபயிகம் (ராமாயணம் ஸுந்தரகண்டம் 21-19)

உன்னுடைய இடத்தை ரக்ஷித்துக்கொள்ள ஆசைப்பட்டும் கோரமான வதத்தை விரும்பாமலும் இருக்கிற உன்னாலே புருஷச்ரேஷ்டனான ராமன் உனக்கு மித்திரனாகப்பண்ணிக்கொள்ளப்படுவது தகுந்தது.

ஐக்ஷ்வாகஸ (104-வது பக்கம் 463-வதைப் பார்க்க)

734. ஸ்ரீரிதி தேவ (சதுச்லோகி—1)

தேவரீருக்கும் ஸ்ரீயென்றே பெயர். தேவரீரை எப்படி ஸ்தோத்திரம் நாங்கள் பண்ணத்தகுந்தவர்கள்.

735. ஸ்ரீரவஸ்ய தஃ (ஸ்ரீகுணரத்நகோசம்—29)

ஓ லக்ஷ்மியே! தேவரீருடைய ஸம்பந்தத்தாலே எம்பெருமான் மங்களத்துக்கு இடமாயிருக்கிறான். தேவரீர் மங்களமாயிருப்பது ஒரு காரணத்தாலன்று. அது தானாகவேயிருக்கிறது. ஏனெனில் தேவரீர் ஸ்ரீயன்றோ.

736. ஸங்க்யாநிந்தா (வார்த்திகம் 5-2-14)

மதுப் (மத்) முதலான விகுதிகள் மேலேசொல்லப்போகிற அர்த்தங்களில் வருகின்றன. ஸங்க்யா-அதிகம் ஸங்கியையுள்ளது கோமாந் - அதிமான பசுக்களையுடையவன். நிந்தா - நிந்தை, குஷ்டீ - குஷ்டரோகத்தையுடையவன், ப்ரசம்ஸா - ஸ்தோத்திரம், ரூபவதீகந்யா - நல்ல ரூபத்தையுடைய பெண், நித்யயோகே - எப்போதும் சேர்ந்திருப்பது, க்ஷீரிணோ வ்ருக்ஷாஃ - எப்போதும் பாலையுடைய மரங்கள், அதிசாயநே - அதிக குணமுள்ளவனாயிருப்பது, பலவாந் - அதிக சக்தியை உடையவன், ஸம்ஸர்கே - சேர்க்கை, தண்டீ - தண்டத்தையுடையவன், அஸ்தி விவக்ஷாயாம் - இருக்கின்றதென்று சொல்லுகையில், பர்வதோ வஹ்நிமாந் - மலையில் நெருப்பு இருக்கிறது.

737. க்ருஷ்ணாஜிநேந

தன்னுடைய திருமார்பை இருப்பிடமாகவுடைய லக்ஷ்மியைக் கிருஷ்ணாஜினத்தினால் மறைத்துக்கொண்டு வாமநாவதாரம் பண்ணின எம்பெருமான்.

738. கீர்த்தி: ஸ்ரீர்வாக் (கீதை —10-34)

ஸ்திரீ விசேஷங்களுக்குள்ளே நான் கீர்த்தியபிமானி தேவதை; நான் ஸ்ரீ (லக்ஷ்மி). நான் ஸரஸ்வதி.

739. தத்குணஸாரத்வாத் (பிரம்மஸூத்ரம்—2-3-29)

அந்த ஜ்ஞானமென்கிற குணம் ஸாரமாயிருப்பதாலே ஜீவனை ஜ்ஞானமென்று சொல்லுகிறது. எப்படி ஸர்வஜ்ஞனை எம்பெருமானிடத்தில் ஆனந்தமென்கிற குணம் ஸாரமாயிருப்பதால் அவனை வேதம் ஆனந்தமென்று சொல்லுகிறதோ, அதுபோல.

ஸத்யகாமத்வாத் (11-வது பக்கம் 40-ந. பார்க்க)

ஸர்வம்ஸஹ (11-வது பக்கம் 44-ந. பார்க்க)

தோஷோயத்யபி (116-வது பக்கம் 519-ந. பார்க்க)

740. ஸர்வலோகநேத்ர (கீதாபாஷ்யம்)

எல்லா மனிதர்களுடைய கண்களாலே பார்க்கும்படியாய் இருந்த.

741. அஜ்ஞாதம் (ராமாயணம் யுத்தகாண்டம்—17-35)

ராகவனே! மூன்று உலகங்களிலும் தேவரீருக்குத் தெரியாததொன்றுமில்லை. ஆனபோதிலும், தேவரீரை கௌரவப்படுத்திக்கொள்கிறவராய் எங்களுக்கு ஸுஹ்ருத்தாயிருப்பதாலே கேட்கிறீர்.

யோ வேத்தி (22-வது பக்கம் 109-ந. பார்க்க)

நிந்திதாசாரேண (116-வது பக்கம் 519-ந. பார்க்க)

742. நஸ்மரதி (ராமாயணம் அயோத்யாகாண்டம்—1-13)

ராகவன் கம்பீரமான மனதையுடையவனாகையால் நூறு அபராதங்களை ஒருவன் செய்தாலும் அவைகளை நினைக்கிறதில்லை. எப்படியாவது செய்த ஒரு உபகாரத்தினாலும் ஸந்தோஷப்படுகிறான்.

743. ஜ்ஞானம் க்ருஷ்ணஸ்ய (பாரதம் உத்யோகபர்வம்—47-39)

எப்போது கிருஷ்ணை (த்ரௌபதி) தூர இருந்தபோதிலும், என்னை "கோவிந்தா" என்று கூப்பிட்டாளோ, அப்போது அந்த கூப்பீடு வட்டியுடன் சேர்த்து விருத்தியான கடன்போல் என் மனதைவிட்டுப் போகிறதில்லை.

ந த்³ருஶ்யதே (116-வது பக்கம் 519-நெ. பார்க்க)

744. அண்வப்யுபாஹ்ருதம் (பாகவதம்—10-81-3)

பக்தர்களாலே கொண்டுவரப்பட்டது அணுவாயிருந்தாலும் அவர்களின் பிரீதியினாலே அது எனக்குப் பெரிதாகத் தோன்றுகிறது. பக்தியில்லாதவர்களாலே கொண்டுவரப்பட்டது பெரிதாயிருந்தாலும் அது எனக்கு ஸந்தோஷத்தைக் கொடுக்கத்தகுந்ததன்று.

745. பத்ரம் புஷ்பம் (கீதை—9-26)

மிகவும் ஸுலபமான இலையையோ, புஷ்பத்தையோ, பழத்தையோ ஜலத்தையோ எவன் எனக்குப் பிரீதியுடன் கொடுக்கிறானோ, சுத்தமான மனதையுடையவனாய் பக்தியுடன் கொடுக்கப்பட்ட அதை நான் சாப்பிடுகிறேன்.

கதா³ புந: (78-வது பக்கம் 350-நெ. பார்க்க)

ஸக்ருதே³வ (50-வது பக்கம் 229-நெ. பார்க்க)

நித்யவிபூ⁴தி (15-வது பக்கம் 72-நெ. பார்க்க)

746. யத்³ரூபம் (சதுச்ச்லோகி—4)

எந்த திவ்யமங்களவிக்கிரஹமானது எம்பெருமானுக்குத் தன் ஸ்வரூபத்தைக் காட்டிலும் அதிகப் பிரீதிக்கு விஷயமாயும் மிகவும் ஆச்சரிய ரூபமானதாயும் இருக்கிறதோ, அதுவும்.

747. பாபம் ஹரதி (விஷ்ணுபுராணம் என்பர்)

எம்பெருமான் தன் ஸங்கல்பத்தாலே எடுத்துக்கொள்ளப்பட்ட எந்த திருமேனியிலிருக்கிற திருமுகமானது நினைப்பதாலே மனிதர்களுடைய பாபங்களைப் போக்குமோ, தாமரை போன்ற கண்களோடு கூடிய அந்த திருமுகமண்டலத்தை எப்போது பார்ப்பேன். ஸங்கல்பநாதியம் என்பதை பாபம் என்கிற சொல்லுக்கு விசேஷணமாகப் பண்ணி அர்த்தங்கொள்ளலாம். அப்போது ஜீவன் தன் ஸங்கல்பத்தாலே செய்த என்று அர்த்தம். அதாவது புத்திபூர்வகமான பாபம்.

748. ரூபௌதார்ய (ராமாயணம் அயோத்யாகாண்—3-28)

அழகால் மனிதர்களுடைய கண்களையும், ஔதார்யம் முதலான குணங்களாலே அவர்களுடைய மனதையும் அபகரிக்கிறவனான இராமனை.

749. [illegible]

ஒருவனுடைய காலைப் பிடித்துக்கொள்வது தள்ளமுடியாததன்றோ.

750. [illegible] (ஆளவந்தார் ஸ்தோத்ரம்—27)

தேவரீருடைய அமிருதத்தைப் பெருக்குகிற திருவடித் தாமரையில் மனதை வைத்தவன் எப்படி வேறொன்றை ஆசைப் படுவன்? தேன் நிறைந்திருக்கும் தாமரைப்பூ இருக்க நீர்முள்ளியை வண்டு தேடுமா என்ன ?

51. [illegible] (ஜிதந்தாஸ்தோத்ரம்—1-2)

தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் பொதுவாய் ரக்ஷகமாய் இருக்கிற தேவரீருடைய இரண்டு திருவடிகளையும் எப்போதும் உபாயமாக நான் அடைகிறேன்.

752. [illegible] (ஜிதந்தாஸ்தோத்ரம்— 1-10)

எந்த எம்பெருமானுடைய திருவடித்தாமரையினால் நான் நல்ல கதியை அடைவேனோ, அதைக் காட்டிலும் வேறான க்ஷேமத்துக்குக் காரணம் எந்த ஜந்மத்திலும் கிடையாது.

753. [illegible] (ஜிதந்தாஸ்தோத்திரம்—1-13)

எனக்கு உபாயமானது தேவரீருடைய இரண்டு திருவடிகளிலிருக்கிறது.

[illegible] (85-வது பக்கம் 389-நெ. பார்க்க)

[illegible] (11-வது பக்கம் 40-நெ. பார்க்க)

754. [illegible] (பாரதம் ஆரண்யபர்வம்—191-134)

குழந்தாய் ! சிவந்த உள்ளங்காலையுடையவைகளும், நன்றாயிருப்பவைகளும், அழகாய் மிருதுவாய் சிவப்பு வர்ணமுள்ளதாயிருக்கிற விரல்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறவைகளுமான திருவடிகளை சுத்தமான மனதுடன் பிடித்துக்கொண்டு என்னால்

755. ஷூவஷாவெள வஷியூஂவஷி

பிரபத்தி பண்ணினவர்களுடைய பாபங்களைப் போக்குகிற திருவடிகளை உபாயமாக அடைந்தவன்.

ஸ்வதாஷீஷூ (50-வது பக்கம் 229-ந. பார்க்க)

756. ஸெளமாஙு

எம்பெருமான், நல்ல வாஸனை, மிகவும் மிருதுவாயிருப்பது முதலான குணங்கள் நிறைந்த திருமேனியையுடையவன். அவன் தன்னை நமக்குக் கொடுப்பதற்கு ஸாதநம் அவனுடைய இரண்டு திருவடிகள்.

757. தமெவ (கீதை—18-62)

ஏ பாரதனே! எல்லா பிரகாரத்தாலும் அவனையே உபாயமாக அடை.

யாவஷா உள (24-வது பக்கம் 120-ந. பார்க்க)
உவாயெ (54-வது பக்கம் 258-ந. பார்க்க)
ரக்ஷிஷ்தீதி (50-வது பக்கம் 232-ந. பார்க்க)

758. ராக்ஷஸாநாஂ (ஸநத்குமாரஸம்ஹிதா)

எப்படி, ஹநுமான் பிரம்மாஸ்திரத்தாலே கட்டுப்பட்டிருப்பதில் ராக்ஷஸர்களுக்கு நம்பிக்கையில்லாமையால், நிஷ்பலமாக ஆகாத அஸ்திரமும் உடனே நழுவிப்போயிற்றோ, அப்படியே மனிதர்களுக்குப் பிரபத்தியில் நம்பிக்கையில்லாவிட்டால் அது செய்யாதது போலாகிறது. ஆகையால் நம்பிக்கையுள்ளவர்களுக்கு அது சீக்கிரத்தில் மோக்ஷத்தைக் கொடுக்கிறது.

759. வ்யவஸாயாத்ருதெ (பாரதம் சாந்திபர்வம்—334.47)

நம்பிக்கையில்லாவிட்டால் ஒருவன் அந்தப் பரம் பிரம்மத்தினிடத்தில் கிட்டப் போகமுடியாது.

நிஸஂஶயெஷு	(102-வது பக்கம்	449-ந.	பார்க்க)
ஶ்ரூஸாவெந	116	,, 519	,,
ந ஜாது ஸீயதெ	117	,, 526	,,
கநந்யஸாயெ	112	,, 497	,,
ஸெவோவாயஸ்த்வாதஃ	54	,, 257	,,
ஸவஶரணஂ	78	,, 350	,,

கடௌநகெளந	55	,,	260	,,
கஊமகேஷி	50	,,	228	,,
நயகேஹூஜிஜெணாஷி	63	,,	302	,,
தகஷுாவுயெ	50	,,	231	,,

760. ஷாஷிஷெ வுர

தனக்கு இஷ்டமான எம்பெருமானையடையும் விஷயத்தில் தன் சக்திக் குறைவாலே அதுக்கு வேண்டிய உபாயமில்லாதவன், விசுவாசத்துடன் அவன் திருவடிகளை அதை அடைவதற்கு உபாயமாக எண்ணி,

ரக்ஷிஷுதீதி	(50-வது பக்கம் 232-ரெ. பார்க்க)			
வுராவுராணி	150	,,	667-23	,,
ஷஷாஷாதிநி	150	,,	667-20	,,
அயகேயஹூாந	121	,,	547	,,
அாவஹாதிஃ	46	,,	217	,,

761. தஹநூஃ (இதிஹாஸ ஸமுச்சயம்—33-119)

ராஜச்ரேஷ்டனே! ஆகையாலே நீயும் நாராயணனையே நினைத்துக்கொண்டிரு, அவனைக் காட்டிலும் வேறான எந்த மஹோதாரன் கேட்டதைக் கொடுப்பதற்குச் சக்தன்.

ஜெவக வெணுத (4-வது பக்கம் 15-ரெ. பார்க்க)

தயாவஷ (11-வது பக்கம் 45-ரெ. பார்க்க)

762. ஆஜாநாராவெயா (வைகுண்டகத்யம்)

தனக்கு ஒத்திருக்கிற லக்ஷ்மியுடன் கூட எழுந்தருளியிருக்கிற.

763. ஶுணாதி (அஹிர்புத்ந்யஸம்ஹிதை)

எல்லா தோஷங்களையும் போக்குகிறாள். உலகத்திலிருக்கிறவர்களுக்கு நல்ல குணங்களை உண்டுபண்ணுகிறாள். எவராலும் எப்போதும் அடையப்படுகிறாள். தான் மிகவுமுயர்ந்தவனான எம்பெருமானை அடைந்திருக்கிறாள்.

764. ஶ்ரயஷீ (அஹிர்புத்ந்யஸம்ஹிதை)

தான் எம்பெருமானையடைகிறவளாயும், மற்றவர்களாலே அடையப்படுகிறவளாயும், தன்னையடைந்தவர்களின் தோஷங்க

ளைப் போக்குகிறவளாயும், அவர்களுடைய அழுகைக் குரலைக் கேட்கிறவளாயுமிருக்கிற பிராட்டி.

[illegible] (157-வது பக்கம் 701-ஶ்லோ. பார்க்க)
[illegible] (11-வது பக்கம் 44-ஶ்லோ. பார்க்க)

765. [illegible]

பரமாத்மாவினிடத்தில் ஜீவன்கள் தங்களுடைய எல்லாச் சுமையையும்கொடுப்பதாலே உண்டான நைரபேக்ஷ்யம்(அதாவது சுமையில்லாமை) நம: என்று அறிந்தவர்களாலே சொல்லப்படுகிறது.

[illegible]	(56-வது	பக்கம்	267-ஶ்லோ.	பார்க்க)
[illegible]	155	,,	690	,,
[illegible]	2	,,	5	,,
[illegible]	112	,,	495	,,

தமிழ் வசனங்கள்.

151. திருநாரண்தாள் (திருவாய்மொழி—4-1-1)

லக்ஷ்மியோடு கூடிய நாராயணன் திருவடிகளைச் சீக்கிரம் உபாயமாக நினைத்து உஜ்ஜீவியுங்கள்.

152. முகில்வண்ணன் (திருவாய்மொழி—7-2-11)

மேகம்போல் நீலவர்ணமுடைய எம்பெருமானுடைய திருவடியையடைந்து, அவன் கிருபைக்கு விஷயனாய் உஜ்ஜீவித்தவன்.

அகலகில்லேன் (19-வது பக்கம் 10-ஶ்லோ. பார்க்க)

153. அல்லிமலர் (திருவாய்மொழி—3-10-8)

தாமரைப்பூவிலிருக்கும் பிராட்டியினுடைய போகங்களாலே மயங்கினவன்.

வேரிமாறாத (110-வது பக்கம் 106-ஶ்லோ. பார்க்க)

நின்றிருவருளும் (19-வது பக்கம் 8-ஶ்லோ. பார்க்க)

154. பூவில் வாழ் (திருவாய்மொழி—6-3-6)

தாமரைப்பூவில் வஸிக்கும் பிராட்டியாய் எம்பெருமான் இருக்கிறான்.

அகலகில்லேன் (19-வது பக்கம் 10-செ. பார்க்க)
ஒண்டொடியாள் (6-வது பக்கம் 2-செ. பார்க்க)

155. இங்குமங்கும் (திருவாய்மொழி—7-9-11)

இங்கே உபாயம் பண்ணுகிற இடத்திலும், எம்பெருமானை அநுபவிக்கிற வைகுந்தத்திலும் லக்ஷ்மியுடன் சேர்ந்தேயிருக்கிற நாராயணனைத் தவிர வேறொருவனில்லாமையைப் பார்த்து.

தன்னடியார் (134-வது பக்கம் 130-செ. பார்க்க)

156. நிகரில் (திருவாய்மொழி—6-10-10)

ஒப்பில்லாத நல்ல வாத்ஸல்யமாகிய குணமுடையவனே! மூன்று உலகங்களையுடையவனே! என்னை ரக்ஷிக்கிறவனே! ஒப்பில்லாத தேவர்கள், ருஷிகள் இவர்கள் கூட்டங்கள் ஆசைப்படுகிற திருவேங்கடமலையிலிருப்பவனே! இதில் இரண்டாவது சொல்லாலே எம்பெருமான் ஸ்வாமியாயிருப்பதும், அடுத்த சொல்லாலே தாழ்ந்தவர்களுடன் இடைவிடாமல் சேர்ந்திருப்பதாகிய ஸௌசீல்யமென்கிற குணமும், அதற்கு அடுத்த சொல்லாலே எல்லாரும் பார்க்கும்படி திருப்பதி மலையிலிருப்பதாலே ஸௌலப்யமும் சொல்லப்பட்டன.

157. அம்மான் (திருவாய்மொழி—5-1-7)

எல்லாருக்கும் ஸ்வாமியாயும் சக்கிரத்தை ஆயுதமாகவுடையவனுமான அவன் எங்கே, நான் எங்கே.

அகலகில்லேன் (19-வது பக்கம் 10-செ. பார்க்க)

158. கழல்கள் (திருவாய்மொழி—5-8-11)

எம்பெருமானுடைய அந்த திருவடிகளையே உபாயமாகவும் அடையவேண்டியதாகவும் அடைந்த ஆழ்வார்.

159. நாகணை மிசை (5-10-11)

ஆதிசேஷனாகிய படுக்கையில் கண்வளருகிற நம்முடைய பிரானுடைய திருவடிகளே உபாயம்.

புகலொன்றில்லா (50-வது பக்கம் 48-செ. பார்க்க)
கொள்ளக்குறைவிலன் (46-வது பக்கம் 40-செ. பார்க்க)
தனக்கேயாக (67-வது பக்கம் 56-செ. பார்க்க)
ஒண்டொடியாள் (6-வது பக்கம் 2-செ. பார்க்க)
கோலத்திருமா (19-வது பக்கம் 7-செ. பார்க்க)

அரும்பதவுரை.

சீற்றம் — கோபம். அணியிடாத — ஸந்தேஹப்படாத.
தேற்றம் — நம்பிக்கை. தண்ணியர் — மிகவும் தாழ்ந்தவர்.
வல்லக்குறி — செய்யமுடிந்த ஒரு வியாஜம்.
பச்சை — இலை முதலான கொடுக்கப்பட்ட வஸ்துக்கள்.
வரிசை — கௌரவம். வல்ல — செய்யமுடிந்த.

---

29. சரமச்லோகாதிகாரம்.

ஸம்ஸ்கிருத வசனங்கள்.

ஸஷ நாராயண: (10-வது பக்கம் 36-நெ. பார்க்க)

ஶூளவஷூா (147-வது பக்கம் 664-நெ. பார்க்க)

766. யச்ச்ரேய: (கீதை — 2-7)

ஏது உயர்ந்த க்ஷேமம் என்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறதோ, அதை எனக்குச் சொல்ல வேணும். அடியேன் தேவரீருக்குச் சிஷ்யன்; தேவரீரிடத்தில் பிரபத்தி செய்திருக்கிற என்னை, இதைச் செய் என்று நியமிக்க வேண்டும்.

767. ஸத்த்வ பரமயா

உயர்ந்த புத்தியையுடையவனே! உயர்ந்த பக்தியாலோ, பிரபத்தியாலோ, என் கைங்கரியத்தில் ஆசையுள்ளவர்களாலே நான் அடையத் தகுந்தவன். வேறு வழியாய் அடையத்தகாதவன்.

தாவஷாதி: (46-வது பக்கம் 217-நெ. பார்க்க)

768. ஸந்த்யஜ்ய (ஸ்ரீ விஷ்ணுதத்வம்)

எல்லா காமங்களையும், அவைகளுக்கு ஸாதனமான எல்லா கர்மங்களையும் விட்டு விட்டு, எப்போதும் ஐந்து அங்கங்களோடு கூடிய சரணாகதியை ஆசாரியனுடைய அநுக்ஞையைப் பெற்றுக் கொண்டு ஸாத்விகத்தியாகத்துடன் சாஸ்திரத்தில் சொன்ன வழியின்படி செய்யப்பட வேண்டியது.

நாநாஶாஸ்வோதி (49-வது பக்கம் 224-நெ. பார்க்க)

769. அநயாவ

இந்த பிரபத்தியாலே தனக்கு வேறு உபாயமில்லாமையை முன்னிட்டுக் கொண்டு

சுநாமஹாநகு	(50-வது பக்கம் 230-ரெ. பார்க்க)			
ஸாத்யாதிகாரஃ	171	,,	752	,,
சுபித்ரூ	39	,,	185	,,
சுஹ்ருதஃ	50	,,	228	,,
நயநிஷ்டஃ	63	,,	302	,,

770. உக்தம் ஶரணம் (லக்ஷ்மீதந்திரம்—17-100)

பிரபத்தி மந்திரத்தின் அர்த்தத்தைப் பூர்ணமாய் அறியாதவர்களுக்கு இது உபாயம், இதை நன்றாய் தெரிந்தவர்களுக்கும் இதுதான். ஸம்ஸாரத்தின் கரையைச் சீக்கிரம் ஏறவேணுமென்கிறவர்களுக்குமிது தான். எம்பெருமானுக்கு உடனே ஓய்வில்லாமல் கைங்கரியம் செய்ய வேணுமென்கிறவர்களுக்குமிதுதான்.

771. அவிஜ்ஞாதஃ (பட்டர் முக்தகம்)

பிரபத்தி மந்திரத்தின் அர்த்தத்தைப் பூர்ணமாக அறியாமலோ, எம்பெருமான் ஸ்வாமியென்பது முதலான குணங்களை அறிவதினாலோ, சீக்கிரம் பலன் கிடைக்க வேணுமென்கிற கடுமையான ஆசையாலோ, வேறு உபாயத்தை அறியாதவர்களுக்கு ஹரியே உபாயம். அவனே அடைய வேண்டியவன் என்ற இந்த ரஹஸ்ய அர்த்தத்தைத்தான் ஜிதந்தை என்கிற மந்திரம் சொல்லுகிறது என்று சௌநகர் என்கிற ரிஷி சொன்னார்.

ஶரீரேஷ (59-வது பக்கம் 281-ரெ. பார்க்க)

772. ஸகலாங்கஸம்ஹார

எல்லா அங்கங்களுடன் செய்யும்போதுதான் ஒரு பலனுக்காகச் செய்யப்பட்ட கர்மமானது பலனைக் கொடுக்கும்.

ஸஹகாரிநைரபேக்ஷ (158-வது பக்கம் 706-ரெ. பார்க்க)

விஹிதஸ்ய (159-வது பக்கம் 707-ரெ. பார்க்க)

773. ஶாஸ்த்ராவிருத்தாநி (நித்யம்)

எம்பெருமானுடைய ஆராதனத்துக்கு சாஸ்திரத்துக்கு விரோதமில்லாத பதார்த்தங்களைச் சேகரித்து,

தஸ்யாவாஸ்ரூ	(8-வது பக்கம் 27-ரெ. பார்க்க)			
ஜிதந்தே	127	,,	572	,,
ஶ்ருதிவேத்யாஃ	32	,,	159	,,
அநந்யதேவதா	72	,,	325	,,

774. நாந்யம் தேவம் (பாதராயணனென்று பாஞ்சராத்ரரக்ஷை)

விஷ்ணுவின் திருவடித்தாமரைகளை அடைந்தவன் வேறு தேவனை நமஸ்கரிக்கக் கூடாது.

ஸாக்ஷாதேவ (57-வது பக்கம் 272-நெ. பார்க்க)

775. தேவாந்ருஷீந் (நித்யம்)

தேவர்களையும், ருஷிகளையும், பித்ருக்களையும், எம்பெருமானை ஆத்மாவாக உடையவர்களென்று நினைத்துக்கொண்டு தர்ப்பணஞ் செய்து.

776. உபாஸநத்ரைவித்யாத் (ப்ரம்மஸூத்ரம்—1-1-32)

உபாஸநம் மூன்றுவிதமாயிருக்கிறபடியால்

777. அஹம் ஹி (கீதை—9-24)

நான் எல்லா யஜ்ஞங்களாலும் ஆராதிக்கப்படுகிறவன். அவைகளுக்குப் பலன் கொடுக்கிறவனும் நான் தான்.

778. த்வாம் யஜந்தி யோகேசா (விஷ்ணுபுராணம்—1 19-73)

தேவரீரையே யோகிகள் தியாநம் செய்கிறார்கள். யாகஞ் செய்கிறவர்கள் தேவரீரைக் குறித்து யாகம் செய்கிறார்கள். பித்ருக்களுடையவும், தேவர்களுடையவும் ஸ்வரூபத்தைத் தரித்துக் கொண்டு தேவரீரொருவரே ஹவிஸ்ஸூக்களையும், சிராத்தத்தில் கொடுக்கிற கவ்வியங்களையும் பெற்றுக் கொள்ளுகிறீர்.

யே யஜந்தி (57-வது பக்கம் 271-நெ, பார்க்க)

779. நாராயணம் பரித்யஜ்ய [ப்ராஜாபத்யஸ்மிருதி]

எவன் தன்னுடைய ஹ்ருதயத்தில் இருக்கிறவனையும், தன்னை நியமநம் செய்கிறவனையும் தனக்கு யஜமாநனுமிருக்கிற நாராயணனை விட்டுவிட்டு வேறு தேவதையைப் பரதேவதை என்கிற எண்ணத்தாலே அர்ச்சிக்கிறானோ அவன் பாபி.

780. யஸ்து நாராயணம் [பாரதம் என்பர்கள்]

எவன் தேவனான நாராயணனை வேறு தேவதைகளுக்கு ஸமமென்று எண்ணுகிறானோ,அவன் சந்திரனும் ஸூரியனும் இருக்கிற வரையில் கோரமான நரகத்திலிருப்பை அடைகிறான்.

781. புத்தருத்ராலயே (சாண்டில்யஸ்மிருதி—4-191)

புத்தனுக்கும் ருத்ரனுக்கும் பூஜை செய்யப்படுமிடங்கள் சுடுகாடு, பிணம், காடு, ராஜதானி இவைகளின் கிட்டப் போகக் கூடாது.

782. [illegible] (வங்கிபுரத்துநம்பி நித்யம்—77-84)

மந்திராசமனத்தை முன்னிட்டு ஸந்தியாகாலத்தில் செய்ய வேண்டிய எல்லாக் கர்மங்களையும் செய்யவேண்டிய முறைப்படி நன்றாய் செய்து, ஸமித், நெய் முதலான திரவியங்களைக்கொண்டு அதற்குத் தகுந்த மந்திரங்களாலே அக்னிஹோத்ரம் முதலான கர்மங்களில் அக்னியில் ஹோமம் செய்து, சாஸ்திரத்தில் இன்ன காலத்தில் இன்ன வேலை செய்ய வேண்டியதென்று சொல்லப் பட்ட காலத்தைப் போக்கி.

783. [illegible] (வங்கீபுரத்துநம்பி நித்யம்—90)

பிறகு மத்தியாந்நகாலத்தில் செய்யவேண்டியதாய் தன் ஆச் ரமத்துக்குத் தகுந்ததாய், வேதத்தில் சொல்லப்பட்ட எல்லா கர்மங்களை ஸ்நானம் முதல் பிரம்மயஜ்ஞம் வரையில் சோம்பலில் லாமல் செய்து.

784. [illegible] (வங்கிபுரத்துநம்பி நித்யம்-496)

பிறகு தேவயஜ்ஞத்தையும், பித்ருயஜ்ஞம் முதலானவைகளையும் பிறகு எம்பெருமானுக்கு அமுது செய்ததைச் சாப்பிடுவதா கிய அநுயாகம் முதலியவைகளையும் செய்ய வேண்டியது.

785. [illegible] (பட்டர்நித்யம்)

சுருதியிலும் ஸ்மிருதிகளிலும் சொல்லப்பட்ட கர்மங்களைத் தன் சக்திக்குத் தகுந்தபடி ஊர்த்வபுண்ட்ரத்தைத் தரித்துக் கொண்டு, பரமாத்மாவினுடைய ஆராதநமாக எண்ணிச் செய்து தர்ப்பணத்தையும் செய்யவேண்டியது.

786. ஸ்ரீ[illegible], [illegible] (நஞ்ஜீயர்நித்யம்)

ஸ்ரீபராசரபட்டருடைய திருவடிகளை அடைகிறேன். தினந் தோறும் ஏகாந்திகளால் செய்யவேண்டிய எம்பெருமானுடைய திருவடித்தாமரைகளின் கைங்கரியத்தின் கிரமத்தைச் சொல்லு கிறோம். எம்பெருமானைச் சொல்லுகிற "ஆபோஹி" என்று ஆரம்பிக்கப்படும் மந்திரங்களாலே ப்ரோக்ஷித்துக்கொண்டு, அவ னைச் சொல்லுகிற மந்திரங்களாலே மந்திராசமநம் செய்து, (அவ னைச் சொல்லுகிற ஸாவித்திரி மந்திரத்தாலே) ஸூரியமண்டலத் திலிருக்கிற பரமாத்மாவான அவனுக்கு அர்க்கியம் கொடுத்து, அந்த மந்திரத்தைக் கொண்டு அந்த எம்பெருமானைத் தியாநம் செய்துகொண்டு ஜபிக்கவேண்டும். ஜபம் செய்தபிறகு [illegible]

ஷோத்தமனான அவனையே உபஸ்தாநம் (ஸ்தோத்திரம்) செய்ய வேண்டியது. நாராயணனை ஆத்மாவாகவுடைய தேவர்கள், ருஷிகள், பித்ருக்கள் இவர்களுக்குத் தர்ப்பணம் செய்யவேண்டியது.

787. ஸந்த்⁴யாஹீநஃ (தக்ஷஸ்மிருதி)

ஸந்தியாகாலத்தில் செய்யவேண்டியதைச் செய்யாதவன் எப்போதும் அசுத்தன்; ஒரு கர்மத்துக்கும் தகுந்தவனன்று. இதைத்தவிர வேறு எந்த கர்மத்தைச் செய்தபோதிலும் அவன் அதின் பலனையடைகிறதில்லை.

788. தை³வதாநி (மநுஸ்மிருதி—4-153)

தேவதைகளையும், தர்மங்களையநுஷ்டிக்கிற பிராம்மணோத்தமர்களையும், எல்லாரையும் நியமநம் பண்ணுகிற எம்பெருமானையும் குருக்களையும் பர்வகாலங்களில் தன் ரக்ஷணத்துக்காக பிரார்த்திக்கவேண்டும்.

789. தை³வதா³நி (ஆநுசாஸநிகம் என்று பூர்வர்கள்)

ஜ்ஞாநவிருத்தர்கள் வந்தால் எழுந்திருப்பது, தேவதைகளுக்குப் பூஜைசெய்கிற இடங்களுக்கு நமஸ்காரம் செய்வது. அதிதிகளை முகங்கொடுத்து பூஜிப்பது.

790. தஸ்மாத³ஷ்டாக்ஷரம் (பாரதம் ஆச்வமேதிகபர்வம்—98-69)

ஆகையால் ஸந்தியாகாலங்களில் தெளிந்த மனதையுடைய என்னுடைய பக்தர்களால் எட்டெழுத்து மந்திரமானது தனக்கு சுத்தியுண்டாவதற்காக அதாவது கர்மஸம்பந்தம் போவதற்காக எப்போதும் ஜபிக்கத்தகுந்தது.

அமேத்⁴யா—ஸந்த்⁴யா (121-வது பக்கம் 547-நெ. பார்க்க)

791. ச்ரௌதஸ்மார்த்த (அஷ்டாக்ஷரப்ரம்மவித்தையென்பர்கள்)

வேதத்திலும் ஸ்மிருதிகளிலும் சொல்லப்பட்ட கர்மங்களைச் செய்வதற்கு விரோதமில்லாத காலங்களில் ஜபத்தை (எட்டெழுத்து மந்திரத்தின் ஜபத்தை) செய்யவேண்டியது.

ஸஹஸ்ராம்ஸு (179-வது பக்கம் 782-நெ. பார்க்க)

792. தத்³த³த்தம், யாஃக்ரியாஃ (பாரதம்-சாந்திபர்—358-63, 64)

தேவதைகளுக்கோ, பித்ருக்களுக்கோ, விதிப்படி எது கொடுக்கப்படுகிறதோ, அதெல்லாம் தேவதேவனான எம்பெருமான் திருவடிகளிலிருக்கிறது. பரமைகாந்தியாயிருப்பதில் நிலை

நின்ற புத்தியுள்ளவர்களாலே எந்த கர்மங்கள் செய்யப்படுகின்றனவோ, அவைகளெல்லாவற்றையும் எம்பெருமான்தானே தன் திருமுடியால் பெற்றுக்கொள்ளுகிறான்.

793. உபாயாபாய (லக்ஷ்மீதந்திரம்)

உபாயத்தையும் அபாயத்தையும் நன்றாய் விட்டுவிட்டு நடுத்தரமான இருப்பையடையவேண்டியது. இங்கு அபாயமென்பது— செய்யாதே என்று நிஷித்தமான கர்மம். அத்தோடு சேர்த்துச் சொல்லப்படுவதாலே உபாயமாவது தன்னாலே செய்யமுடியாத மோக்ஷஸாதநமான பக்தி;

ரக்ஷாபேக்ஷாம் (54-வது பக்கம் 259-ஙெ. பார்க்க)
ஸஷநாராயணஃ (10-வது பக்கம் 36-ஙெ. பார்க்க)

794. மத்தஃபரதரம் (கீதை—7-7)

என்னைக் காட்டிலும் வேறொன்றுமிகவுமுயர்ந்ததாக இல்லை. அர்ஜுநனே!

795. ஸஹ க்ருஷ்ண (கீதை—11-41)

தேவரீரைத் தோழனென்று எண்ணி, மரியாதையில்லாமல் அடே கிருஷ்ணா! அடே யாதவா! அடே தோழனே! என்று எது சொல்லப்பட்டதோ.

796. ரதம் ஸ்தாபய (கீதை—1-21)

இரண்டு ஸேனைகளுக்கும் நடுவில் என்னுடைய ரதத்தை இருக்கும்படி செய். அச்யுதனே.

ஸவ்யஜ்ஞாநவிஹீ(54-வது பக்கம் 259-ஙெ. பார்க்க)
கவஜ்ஞாந (43-வது பக்கம் 203-ஙெ. பார்க்க)

797. ஸோஹம் (விஷ்ணுபுராணம்—5-7-70)

தேவர்களுக்கும் தேவனான பிரம்மாவுக்குமீச்வரனே! அந்த நான் தேவரீருக்கு அர்ச்சனை முதலானவைகள் செய்வதிலாவது ஸ்தோத்திரம் பண்ணுவதிலாவது ஸாமர்த்தியமில்லாதவன். கருணையொன்றையே மனதிலுடையவனாய் என் விஷயத்தில் பிரஸாதத்தைச் செய்யவேண்டும்.

798. க்ருபயா (ஆளவந்தார் ஸ்தோத்ரம்—48)

தேவரீருக்கு வேலைக்காரனான என்னை, தேவரீரைத் தவிர எனக்கு அடையவேண்டிய வேறு வஸ்துவும், அதற்கு வேறு

உபாயமும் இல்லையென்று நான் எண்ணி தேவரீருடைய கைங்கரியத்திலேயே பிரீதியுள்ளவனாய் இருக்கும்படி தேவரீர் கருணையினால் மாத்திரம் செய்யவேண்டும்.

799. கூஹ ஶ்ரீ ஶைலெதஷாஉெவி (வரதராஜஸ்தவம்—94)

ஹஸ்திகிரிக்கு நாயகனே ! எவர்கள் தங்களுடைய குணங்களாலும், செய்கைகளாலும், தங்களைத் தெரிந்துகொண்டு தேவரீரைப் பக்தியுடன் பஜிக்கிறார்களோ, அவர்களைத் தேவரீரிடத்தில் பக்தியுள்ளவராகப்பண்ணுவதும் தேவரீருடைய கருணையே. அந்த உபாயமில்லாத எனக்கும் அந்த கருணையே பலமென்று என்னாலே எண்ணப்படுகிறது.

800. வயாஹ ஊவி (ராமாயணம் ஸுந்தரகாண்டம்—38-33)

தன் குற்றத்தாலே கொல்லத்தகுந்தரான காகாஸுரனையும் சக்கிரவர்த்தி திருமகன் கருணையாலே ரக்ஷித்தான்.

உதீயவெயவ (88-வது பக்கம் 402-நெ. பார்க்க)

801. உாஶெகஶெவ (பாகவதம்—11.12.14)

எல்லா பிராணிகளுக்கும் ஆத்மாவான என்னையொருவனையே எல்லாப் பிரகாரமாகவும் சரணமடை. அப்போது ஒருவிதத்தாலும் பயமில்லாதவனாய் ஆகிவிடுவாய்.

802. உ-வஸ்ரா ந)

ஏகம் என்கிற சொல்லுக்கு முக்கியம் என்றும் வேறு என்றும், கேவலம் (அதைத் தவிர வேறொன்றில்லை.) என்றும் பொருள்.

உாஶெவ (118-வது பக்கம் 532-நெ. பார்க்க)

தஶெவ ஶரணஂ (172-வது பக்கம் 757-நெ. பார்க்க)

கஃ (113-வது பக்கம் 504-நெ. பார்க்க)

803. வரஉதவவமு (வரதராஜஸ்தவம்—88)

ஏ வரதனே ! தேவரீருடைய கருணையில்லாமல் தேவரீர் எனக்கு உபாயமாக இருக்கவேணுமென்கிற வார்த்தையும் எனக்கு உண்டாகாது.

கூவெஉவ (54-வது பக்கம் 257-நெ. பார்க்க)

ஶரணஂ 118 „ 533 „

யெநகெஷநாவி 43 ,, 202 ,,

ஊ்வதி 43 ,, 205 ,,

804. தத்ஸாமர (ராமாயணம் யுத்தகாண்டம்—21-1, 2)

பிறகு சத்துருக்களைக் கொல்லுகிற ராமன், ஸமுத்திரக்கரையில் தர்ப்பங்களைப் பரப்பி, பாம்பின் உடலைப்போல் விளங்கும் தன்னுடைய புஜத்தைத் தலையணையாகக்கொண்டு அஞ்ஜலிசெய்து கிழக்குமுகமாக ஸமுத்திரராஜன் வரவை எதிர்பார்த்துக்கொண்டு படுத்துக்கொண்டான்.

805. ஸராஜா (ஹரிவம்சம்—27-11+13)

அந்த ராஜா மிகுந்த ஆபத்தையடைந்து, தேவர்களுக்கு ச்ரேஷ்டனையும், ரக்ஷகனையும், எல்லாரையும் நியமனம் பண்ணுகிறவனையுமிருக்கிற நாராயணனைப்பக்தியோடு உபாயமாக அடைந்தான், மனதை ஒரே இடத்தில் வைத்துக்கொண்டு ஆறுராத்ரி ஆஹாரம் சாப்பிடாமலிருந்து மிகுந்த யசஸ்ஸையுடைய அந்த ராஜா பிரபுவான அந்த நாராயணனை தியாநத்தில் பார்த்தான். இங்கே 'சுஷஸா-தெந' என்கிற சொல்லுக்கு கண்ணாலே பார்ப்பதைக்காட்டிலும் வேறானதென்று பொருள். அதாவது தியாநம்.

யதெ்ரநகாக (118-வது பக்கம் 534-நெ. பார்க்க)

806. கவியாவி, ஸஹஸவு (விஷ்ணுதர்மம்—2-14, 8-28)

இந்திரனே! எவனிடமிருந்து உன்னுடைய ஐசுவரியம் அடையப்பட்டதோ, அவனை நான் ஸந்தோஷப்படுத்துகிறேன். உன்னை நான் ஆராதிக்கமாட்டேன்; உனக்கு அஞ்சலி செய்கிறேன்; வஜ்ரத்தால் என்னை அடித்தாலும் அடி, விட்டாலும் விடு. ஓய்! நான் கோவிந்தனைவிட்டுவிட்டு வேறொருவனையும் ஆராதிக்கமாட்டேன்.

ஸக்ஷ்ராவரமேயா (176-வது பக்கம் 767-நெ. பார்க்க)

807. ஸக்ஷ்ஜ்ஞாநெந

ஒருவன், நல்ல ஜ்ஞாநத்தாலாவது, கங்கையில் விழுந்து சாவதாலாவது ஸக்ருதப்ரணமத்தாலாவது, பக்தியாலாவது மோக்ஷத்தையடைகிறான்.

808. கநாஜெராவிதாஜெஷ (சரணாகதிகத்யம்)

தன்னை அடைகிறவர்களிடத்திலிருக்கும் வித்தியாஸத்தைப் பார்க்காமல் உலகத்திலிருக்கும் எல்லாருக்கும் ரக்ஷகனயிருக்கிறவனே !

[illegible] (103-வது பக்கம் 457-ரெ. பார்க்க)
[illegible] 13 ,, 63 ,,

809. [illegible] (விஷ்ணுதர்மம்—72-4)

எந்த எம்பெருமானை அறிவுள்ளவர்கள் எப்போதுமிருக்கிற ஸாதநமாயும், ஸாத்யமாயும் அறிகிறார்களோ.

[illegible] (176-வது பக்கம் 766-ரெ. பார்க்க)

810. [illegible]

ஒன்றைச்செய் என்கிற விதியினல் சொல்லப்பட்ட வேலையானது, ஒரே தடவை செய்வதாலே செய்யப்பட்டதாக ஆகிறது.

[illegible] (33-வது பக்கம் 165-ரெ. பார்க்க)
[illegible] (113-வது பக்கம் 504-ரெ. பார்க்க)
[illegible] (114-வது பக்கம் 505-ரெ. பார்க்க)

811. [illegible] (கீதை—4-13)

ஜீவன்களிடத்தில் இருந்த ஸத்வம் முதலான குணங்களின் பேதங்களையும், கர்மங்களின் பேதங்களையும் பார்த்து நாலு ஜாதிகளும் என்னால் ஸிருஷ்டிக்கப்பட்டன. இப்படி ஸிருஷ்டிப்பதை நான் செய்தபோதிலும், அந்த பேதங்களுக்கு நான் காரணமன்று என்றும், அவைகளால் எனக்கு ஒரு தோஷமுமுண்டாகாதென்றும் அறி.

812. [illegible] (ஆளவந்தார் ஸ்தோத்ரம்—65)

என்னுடைய பாட்டனாரான நாதமுனியைப் பார்த்து என் நடவடிக்கையைக் கவனிக்காமல் கிருபை செய்யவேணும்.

813. [illegible] (ப்ரம்மஸூத்ரம்—3-3-49)

பாலியத்தோடே இரு என்கிற வாக்கியத்துக்கு உன் பெருமையை வெளியிடாதே என்று பொருள். இதுதான் பக்தி யோகம் செய்கிறவனுக்குப் பொருந்தினது. ஒரு குழந்தையைப் போல மனதுக்குத் தோன்றினபடி செய்வது பொருந்தாது.

814. ஐநிஷ்டமிஷ்டம் (கீதை—18-12)

இஷ்டமில்லாதது இஷ்டப்பட்டது இவை இரண்டும் சேர்ந்தது ஆகிய மூன்று விதமான கர்மங்களுடைய பலன்கள் ஸாத்துவிகத்தியாகத்தைச் செய்யாதவர்களுக்கு மேலே வரும். அதைச் செய்கிறவர்களுக்கு ஒரு வேளையிலும் வராது.

815. யஸ்யநாஹம் (கீதை—18-17)

எவனுக்கு ஒரு வேலை செய்யும்போது இது என்னால் செய்யப்படுகிறது என்கிற எண்ணமில்லையோ, எவனுடைய புத்தியானது அதின் பலனில் ஒட்டுகிறதில்லையோ, அவன் இந்த மூன்று உலகத்தார்களைக் கொன்றாலும், அவன் கொல்லவில்லை. அந்த வேலையினால் அவன் கட்டுப்படவில்லை.

816. ஜீவிதாத்யயம் (மநுஸ்மிருதி—5-104)

ஆஹாரமில்லாமலிருந்து உயிர் போய்விடுமோவென்று ஸந்தேஹமுண்டாகும் காலத்தில் எங்கேயிருந்தாவது ஆஹாரத்தை எவன் சாப்பிடுகிறானோ, அவனிடத்தில் பாபம் ஒட்டாது. ஆகாசத்தில் சேறு ஒட்டாததுபோல்.

817. ப்ராணஸம்சயம்

ஆஹாரமில்லாமலிருந்து உயிர் போய்விடுமோவென்று ஸந்தேஹமுண்டாகும் ஸமயத்தில் எங்கேயிருந்தாவது அந்நத்தை எவன் சாப்பிடுகிறானோ, அவனிடத்தில் பாபம் ஒட்டுவதில்லை. தாமரையில் ஜலம் ஒட்டாததுபோல்.

818. ஸர்வாந்நாநுமதிஶ்ச (ப்ரம்மஸூத்ரம்—3-4-27)

பிராணன் போய்விடுமோவென்று ஸந்தேஹமுண்டாகும் காலத்தில் எந்த அந்நத்தையும் சாப்பிடலாம் என்று சாஸ்திரத்தில் உத்திரவு கொடுக்கப்படுகிறது. இப்படியே பிரம்மவித்யை செய்துகொண்டிருந்த ஒருருஷி பிராணஸம்சயமுண்டானபோது யானைப்பாகன் சாப்பிட்டுக்கொண்டிருந்த கொள்ளின் கொஞ்சபாகத்தை வாங்கிச் சாப்பிட்டார்.

819. யோऽந்யதா (பாரதம் உத்யோகபர்வம்—42-35)

எம்பெருமானுடைய ஸொத்தாகஇருக்கிற தன் ஆத்மாவை எவன் தன்னுடையதென்று எண்ணுகிறானோ, அந்த ஆத்மாவை அபஹாரம்பண்ணுகிற திருடனாலே என்ன பாபம்தான் செய்யப்

820. யமோ வைவஸ்வதோ ராஜா (மநுஸ்ம்ருதி—8-92)

ஸூர்யமண்டலத்திலிருந்து எல்லாரையும் நியமநஞ்செய்து கொண்டு எல்லாருக்கும் ராஜாவாயிருக்கிற எந்த எம்பெருமான் உன்னுடைய ஹ்ருதயத்திலிருக்கிறானோ, அவனுடன் உனக்குச் சண்டையில்லாவிட்டால் நீ கங்கைக்குப் போகவேண்டாம். குரு க்ஷேத்திரத்துக்கும் போகவேண்டாம்.

க்ஷேத்ராஜ்ஞ (113-வது பக்கம் 500-நெ. பார்க்க)

யஜ்ஞஸம்ரக்ஷயா (155-வது பக்கம் 690-நெ. பார்க்க)

821. மோக்ஷத:

பகவானாகிய விஷ்ணுவே மோக்ஷத்தைக் கொடுப்பவர்.

822. பத்தா: பாசிதா: (ஸ்ரீவிஷ்ணு தத்துவம்—1-2-10)

ஜீவன்கள் எம்பெருமானாலே தன் விளையாட்டுக்காக கர்ம மாகிய கயிற்றால் கட்டப்பட்டிருக்கிறார்கள். அவனாலேயே அவர் கள் கட்டிலிருந்து விடுவிக்கப்படவேண்டியவர்கள்; வேறொருவ னும் அவர்களை விடுவிக்கச் சக்தியில்லாதவன்.

ஸதேவ (41-வது பக்கம் 193-நெ. பார்க்க)

தேவ ஸ்ருஷ்டிகாலு (133-வது பக்கம் 600-நெ. பார்க்க)

823. க்ஷயிண (லக்ஷ்மீதந்த்ரம்—17-18)

தங்கள் தங்கள் அதிகாரங்களை நீண்ட காலம் செலுத்தி, அதிகாரத்துக்குக் காரணமான கர்மம் போய் முக்தியையடைந்து, எந்த பரமபதத்தில் அதற்கு முன்னால் பிரும்மாக்களாகவும், ருத் திரர்களாகவும் இந்திரன்களாகவுமிருந்த ஜீவன்கள் ஆநந்தத்தை யடைகிறார்களோ. இங்கே ஸக்ருத் என்பதற்கு அடிக்கடி என்று பொருள். ஒரு தடவை அதிகாரம் செலுத்தி இறந்தபின்பும் மறுபடியும் அந்த அதிகாரம் வேண்டுமென்று ஆசைப்பட்டு தபஸ்ஸு செய்து அதிகாரத்தை மறுபடியும் பெறுகிறார்கள். இந்த விஷயம் அந்த சொல்லாலே சொல்லப்படுகிறது.

824. யாவத்அதிகாரம் (ப்ரம்மஸூத்ரம்—3-3 31)

அதிகாரம் செலுத்தும்படி எம்பெருமானாலே நியமிக்கப் பட்டவர்களுக்கு அதிகாரமுள்ளவரையில் இங்கே இருக்கவேண் டியது.

825. ஃநாரஙெ (ப்ரம்மஸூத்ரம்—4-1.15)

பலன் கொடுக்க ஆரம்பிக்காத முன்செய்த கர்மங்களை (புண்ணியத்தையும் பாபத்தையும்) பக்தி செய்கிறவன் அநுபவிக்க வேண்டியது. இந்த அநுபவம் முடிகிறவரையில் காலதாமதம் சொல்லப்படுகிறபடியால்.

826. ஷூாரஙெஷாவஙி

இருக்கிறதென்றால் முன்பு ஆரம்பித்து மேலே முடிவை அடைவது.

ஷூாயஶிதிரியழ (77-வது பக்கம் 346-ரெ. பார்க்க)
தெஷஂஶாஜுயாஙூ 78 ,, 351 ,,
யஷிநுகஷிநுக௯ெ 78 ,, 354 ,,

827. வஷவஆ (வராஹபுராணம்)

ஓ பூமியே! நூறு தாமரைப்பூக்களைக் கொண்டு என்னை அர்ச்சித்தாலும் நான் மன்னிக்கமாட்டேன்.

உவவாஙஶெகநாவி (130-வது பக்கம் 588-ரெ. பார்க்க)
யஜிவா (116-வது பக்கம் 520-ரெ. பார்க்க)

828. கைஷூவாதாக (கீதை—18-56)

எல்லா வேலைகளையும் என்னாலே எனக்காகவே செய்யப்படுகிறதென்று எண்ணிக்கொண்டு எப்போதும் செய்கிறவன் என் அநுக்கிரஹத்தினால் எப்போதுமிருக்கிற இடத்தை ஒரு குறையில்லாமல் அடைகிறான்.

829. உதரஷாவெஷவழ (ப்ரம்மஸூத்ரம்—4-1-14)

பாபத்தைக் காட்டிலும் வேறான புண்ணியமும் அப்படியே ஒட்டுகிறதில்லை. ஆனால் அவைகள் தனியாய் பிரித்துவைக்கப் பட்டு உடம்புக்கு நாசம் வரும்போது அழியும்.

830. தாநெவ (பாரதம் ஆதிபர்வம்—1-301)

தபஸ்ஸு பாபமன்று, வேதத்தைப் படிப்பதும் பாபமன்று, அவனவனுக்குச் சொல்லப்பட்ட கர்மங்களும் பாபமன்று, சிரமப்பட்டு அவைகளுக்காகப் பணம் ஸம்பாதிப்பதும் பாபமன்று. இவைகளை தப்பு எண்ணத்துடன் செய்யப்பட்டால் பாபங்களாகும். இங்கே சொல்லப்பட்ட 'கல்க' என்ப

தற்கு பாபமென்று பொருள். தப்புஎண்ணமாவது— மோக்ஷத்துக்கு விரோதியான கர்மம். இந்த கர்மத்தை நான் செய்கிறேன், எனக்காகச் செய்கிறேன். இது என் கர்மம்—என்கிற எண்ணம்.

ஊநாவ்ருத்திஃ (99-வது பக்கம் 437-ரெ. பார்க்க)
யயாநக்ரியதெ (158-வது பக்கம் 704-ரெ. பார்க்க)
ஞுவிஷ்வ்ராஃ (147-வது பக்கம் 661-ரெ. பார்க்க)

831. ஸௌஹஸௌகிகஂ (நாரதீயகல்பம்)

இந்த லோகத்தில் அநுபவிக்கக்கூடிய ஐசுவரியத்தையும், மேல்உலகத்தில் அநுபவிக்கக்கூடிய ஸ்வர்க்கம் முதலானவைகளையும், கைவல்யத்தையும் (தன் ஆத்மாவொன்றையே அநுபவிப்பதையும்) பகவானுடைய அநுபவத்தையும் இந்த மந்திரம் அடையும்படி செய்கிறது.

832. ஸௌஶ்வயஂ (கீதார்த்தஸங்கிரஹம்—12)

ஐசுவரியத்தையும், உடம்பை விட்டுப் பிரிந்த ஆத்மாவை உள்ளபடி அநுபவிப்பதையும், எம்பெருமான் திருவடிகளில் கைங்கரியங்கள் செய்வதையும் ஆசைப்படுகிறவர்களுக்கு.

ஸஂஸாத்ருக்ஷர (106-வது பக்கம் 470-ரெ. பார்க்க)
ஸவஂகாரோஂஶு (85-வது பக்கம் 389-ரெ. பார்க்க)

833. யஂ லவ்வா (கீதை—6-22)

எந்த ஆத்மாநுபவத்தையடைந்தபிறகு யோகம் செய்யாத காலத்திலும் வேறு லாபத்தை அதைக்காட்டிலும் அதிகமாக எண்ணுகிறதில்லையோ,

834. ஞூத்ராயீஂஸௌஜ (கீதார்த்தஸங்க்ரஹம்—27)

ஒருவன் ஆத்மாவின் அநுபவத்தை ஆசைப்பட்டால் இந்த மூன்றும் (கர்மயோகம், ஜ்ஞாநயோகம், பக்தியோகம்) கைவல்லியமென்று சொல்லப்பட்ட அந்த அநுபவத்தை அவன் அடையும்படி செய்யும். ச்லோகத்தில் 'அபி' என்கிற சொல்லால் பிரபத்தியும் சேர்த்துக்கொள்ளவேண்டியது.

835. ஹஸ்திநாத ஹ்ருதி (வரதராஜஸ்தவம்—81)

ஹஸ்திகிரி நாதனே ! இந்த லோகத்தில் அநுபவிக்கக்கூடிய போகங்கள், பிரம்மபட்டம், ருத்திரனுடைய பதவி, எந்த

ஆத்மாவின் அநுபவமானது முக்தியென்று சொல்லப்படுகிறதோ- அது, இவைகளையெல்லாம் தேவரீருடைய கைங்கரியமாகிய உயர்ந்த ரஸத்தையறிந்த நான் ஊஷரபூமியிலிருக்கும் ஜலம்போல் எண்ணுகிறேன்.

836. விமுக்த ஏவ ஸ: (கீதை—5.28)

ஆசையும், பயமும், கோபமும் எவனை விட்டுவிட்டனவோ, அவன் எப்போதும், அதாவது—இங்கேயிருந்து உபாயம் செய்யும்போதும், மோக்ஷமடைந்தவனே.

837. ஜராமரண (கீதை—7-29)

என்னையடைந்து கிழத்தனம், மரணம் இவைகளிலிருந்து விடுபடுவதற்காக எவர்கள் ப்ரயத்நம் பண்ணுகிறார்களோ.

ஜ்யோதிஷா (96-வது பக்கம் 423-நெ. பார்க்க)

வ்யாவிர்ப்பூய (48-வது பக்கம் 222-நெ. பார்க்க)

838. ஸோऽவாப்யதாத் (பாரதம் சாந்திபர்வம்—348-81)

இந்த கதையை ஆதிமுதல் கேட்டு, ஐசுவரியமிழந்தவன் அதனாலுண்டான வருத்தத்திலிருந்து விடுபடுவான். ஆத்மாவை அநுபவிக்க ஆசைப்படுகிறவன் பக்தியையடைவன்; பக்தன் பக்தர்கள் அடையவேண்டிய மோக்ஷத்தையடைகிறான்.

839. யோகிநாமம்ருதம் (விஷ்ணுபுராணம்—1-6-38)

ஸநகர் முதலான யோகிகளுக்கு அமிருதமென்று சொல்லப்பட்ட எந்த இடமோ, அதுவே தன்னுடைய ஆத்மாவின் அநுபவத்தை ஆசைப்பட்டு அதற்கு வேண்டிய உபாயத்தை செய்கிறவர்களுக்குமிடம்.

ஸநகாதிபி: (22-வது பக்கம் 107-நெ. பார்க்க)

840. அப்ரதீகாலம்பநாந் (ப்ரம்மஸூத்திரம்—4-3-14)

ப்ரதீகத்தைத் தியாநம் பண்ணுகிறவர்கள் தவிர மற்றவர்களை ஆதிவாஹிகர்கள் அழைத்துக்கொண்டு போகிறார்கள் என்பது பாதராயணருடைய அபிப்பிராயம். முன்சொன்ன இரண்டு பக்ஷத்திலும் தோஷமிருப்பதால், தத்க்ரதுந்யாயமும் பாதராயண மதத்துக்கு அநுகூலமாயிருக்கிறது.

841. ஸ்ருதோபநிஷத்க (ப்ரம்மஸூத்திரம்—1-2-17)

வேதாந்தத்தைக் கேட்டு அதில் சொன்ன தியாநத்தைச் செய்கிறவன் போகவேண்டிய மார்க்கத்தைச் சொல்லுவதாலும்.

க்ரியாகதி: (61-வது பக்கம் 294-ந. பார்க்க)

842. தைவீ ஸம்பத் விமோக்ஷாய (கீதை—16-5)

தேவப்பிரகிருதிக்குள்ள குணங்களாகிய ஸம்பத்து மோக்ஷத்துக்கு ஸாதநம். அஸுரப்பிரகிருதிகளுக்குள்ள குணங்கள் கர்மத்தினால் கட்டுப்படுவதற்கு ஸாதநங்கள். நீ துக்கப்படாதே. தேவப்பிரகிருதிகளின் ஸம்பத்தை அடைவதற்காக நீ பிறந்திருக்கிறாய். பாண்டவனே !

843. இதி தே குஹ்யாத் (கீதை—18-63)

இப்படி ரஹஸியங்களைக் காட்டிலும் அதிக ரஹஸ்யமான ஜ்ஞாநம் உனக்குச் சொல்லப்பட்டது. இவையெல்லாவற்றையும் ஆலோசித்து எதைச் செய்ய ஆசைப்படுகிறாயோ, அதைச்செய்.

844. பரீக்ஷார்த்தம் (விஷ்ணுதர்மம்—74-89)

உலகத்துக்கு யஜமாநனான எம்பெருமான் இளநெஞ்சர்களை, அவர்களுடைய ஸொத்தை நாசம் பண்ணுவதாகிய உரை கல்லைக் கொண்டு பரீக்ஷை செய்கிறான். தம்முடைய ஸொத்துக்கு நாசம் வந்த காலத்திலும் தன்னை அவர்கள் விட்டுவிடுகிறார்களா இல்லையா என்று பார்க்கிறான் என்று கருத்து.

845. ஏஷ பந்தா: (பாரதம் ஆரண்யபர்வம்—50-48)

இது விதர்ப்பதேசத்துக்குப் போகும் வழி. இது கோஸலதேசத்துக்குப் போவது. (இது தமயந்தியைப் பார்த்து நளன் சொல்லுவது)

846. பீதோஹம் தேவ (ஜிதந்தாஸ்தோத்திரம்—1-8)

தேவச்ரேஷ்டனே ! பயத்தைக் கொடுக்கும் இந்த ஸம்ஸாரத்தைக் கண்டு நான் நடுங்குகிறேன், ஏ தாமரைக்கண்ணனே ! என்னை ரக்ஷிக்கவேணும். தேவரீரைக் காட்டிலும் வேறு உபாயத்தை நான் பார்க்கவில்லை.

847. யதக்ருத்வா க்ரியாவச (லக்ஷ்மீதந்திரம்—17)

எந்த கர்மமானது செய்யப்பட்டு ஒரு பலனையும் கொடுக்கிறதில்லையோ, செய்யப்படாவிட்டால் தோஷத்தையுண்டுபண்ணுமோ, அந்தக்கர்மத்தைச் செய்.

ஜ்ஞாதத்வ: (35-வது பக்கம் 177-செ. பார்க்க)

ஜ்ஞாதஸ்வரூபா (116-வது பக்கம் 518-செ. பார்க்க)

848. ப்ராரப்தாந்த

தத்துவத்தையறிந்து பிரபத்தி பண்ணினவன் அந்த சரீரத்துடன் இருக்கும் காலத்தில் பிராரப்த கர்மத்தை மாத்திரம் அநுபவித்துக்கொண்டு பிறகு மோக்ஷஸுகத்தையடைகிறான்.

ஜந்தவ: (57-வது பக்கம் 273-செ. பார்க்க)

849. ந மாயா (பாரதம் ஸபாபர்வம்—42-21)

சாஸ்திரம் சாஸ்திரத்தைப் படித்தவனை அதை எத்தனை தடவை படித்தபோதிலும் திருத்துகிறதில்லை. பிராணிகள் தங்களுடைய வாஸனையையநுஸரித்து நடக்கிறார்கள். குலிங்க பக்ஷியைப்போல.

ந த்யஜேயம் (116-வது பக்கம் 519-செ. பார்க்க)

850. தேஹேஸ்மிந் (விஷ்ணுபுராணம்—1-17-63)

மாம்ஸம், ரத்தம், சீ, மலம், மூத்திரம், ஸ்நாயு, மஜ்ஜா, எலும்பு இவைகளின் சேர்க்கையாகிய உடம்பிலும் ஒரு மூடன் பிரீதியுள்ளவனாயிருந்தால் அவன் நரகத்திலும் பிரீதியுள்ளவனாயிருப்பன்.

நேஹாபி ஸந்தி (18-வது பக்கம் 99-செ. பார்க்க)

851. யஜ்ஞோऽந்ருதேந (மநுஸ்மிருதி—4.237)

யஜ்ஞமானது பொய் சொல்லுவதாலும், தபஸ்ஸு கர்வத்தினாலும், ஆயுஸ் பிராம்மணர்களைத் தூஷிப்பதாலும், தாநம் அதை வெளியிடுவதாலும் நாசத்தையடைகிறது.

தமிழ் வசனங்கள்.

புகலொன்றில் (50-வது பக்கம் 48-செ. பார்க்க)

குலங்களாய (69-வது பக்கம் 72-செ. பார்க்க)

குளித்து (68-வது பக்கம் 71-செ. பார்க்க)

நீகரில் (175-வது பக்கம் 156-செ. பார்க்க)

160. நின்னருளே (பெரியாழ்வார் திருமொழி—5-4-1)

தேவரீருடைய கருணையே என்னை ரக்ஷிப்பதாக நம்பியிருந்தேன்.

161. துணியேன் (பெரிய திருமொழி—11-8-8)
தேவரீருடைய கருணையில்லாமல் வேறொன்று எனக்கு ரக்ஷகமென்று நான் நம்பமாட்டேன்.

162. உனதருளே (பெருமாள் திருமொழி—5-4)
தேவரீருடைய கிருபையையே எனக்கு ரக்ஷகமென்று நான் பார்ப்பேன்.

163. திருமாமகளை (பெரிய திருமொழி—9-5-10)
மிகவும் மேன்மையான லக்ஷ்மியையடைந்திருந்தும், லீலைக்காக என் நெஞ்சில் வந்து ஸ்திரமாயிருக்கும்படியான மிகுந்த கருணையையுடையவனே.

164. நின்திருவருளால் (திருவிருத்தம்—62)
தேவரீருடைய கிருபையில்லாமல் என்னை ரக்ஷிப்பது முடியாத வேலை.

நின்திருவருளும் (19-வது பக்கம் 8-நெ. பார்க்க)

165. ஆவாவென்றருள் (திருவாய்மொழி—5-1-5)
ஹா ஹா என்று கிருபை செய்து.

166. தன்னைத்தந்த (திருவாய்மொழி—2-7-11)
கேட்டதைக் கொடுக்கும் கல்பகவிருக்ஷம் போல் தேவரீரை வேண்டுமென்கிற எனக்குத் தேவரீரைக் கொடுத்தவர்.

167. என் உணர்வின் (திருவாய்மொழி—8-8-3)
எம்பெருமானே எனக்கு உபாயமென்கிற எண்ணத்துக்கு அவனை விஷயமாகப் பண்ணினேன், இதுவும் அவனுடைய இனிமையான கருணையினாலே தான்.

168. இசைவித்து (திருவாய்மொழி—5-8-9)
என்னை ஒப்புக்கொள்ளும்படி செய்து தேவரீர் திருவடியின் கீழே என்னையிருக்கும்படி செய்த ஸ்வாமியே!

169. ஆறெனக்கு (திருவாய்மொழி—5-7-10)
தேவரீரே தேவரீருடைய திருவடிகளையே எனக்கு அடைய வேண்டிய வஸ்துவாகவும், அதற்கு உபாயமாகவும் கொடுத்துவிட்டீர். இங்கே சரண் என்கிற சொல் உபாயத்தாலே கிடைக்கக்

170. இருவல்வினைகளும் (திருவாய்மொழி—1-5-10)

புண்ணியம் பாபம் என்று சொல்லப்படுகிற இரண்டுவிதமான பலமான கர்மங்களைப் போக்கி.

171. மன்னுறில் (திருவாய்மொழி—1-2-5)

விஷயங்களில் பற்றுவிட்டபோது, உடம்பைக் காட்டிலும் வேறாய் ஸுகமான ஆத்மா தோன்றும். அதில் அகப்படாமல் எம்பெருமானுக்குச்சேஷமாயிருக்கிற உன் ஸ்வரூபத்தையறிந்து ஸ்திரமாய் இருக்க ஆசைப்பட்டால், எம்பெருமானைப் பிடித்துக் கொண்டு விஷயத்தை விடு.

172. இறுதிகூடா (திருவாய்மொழி—6-9-10)

குறைவதும், அதிகமாவதுமில்லாமல், இறுதிகூடா - நாசமில்லாத-காலத்தினால் உண்டான குறைவும் பெருகுவதுமில்லாத அளவில்லாத ஆத்மாவின் அநுபவம் கிடைத்தாலும்.

173. பாவீ தழுவென (திருமொழி—1-6-4)

ஓ பாவியே! இந்தப் பழுக்கக் காய்ச்சப்பட்ட கம்பத்தைக் கட்டிக்கொள் என்று சொல்லுவதற்குப்பயப்பட்டு நம்பத்தகுந்த உன்னிடம் வந்து உன் திருவடிகளையடைந்தேன்.

174. அஞ்சின நீ (திருச்சின்னமாலை—8)

ஸம்ஸாரத்தைக் கண்டு பயப்பட்ட நீ என்னை வந்து அடையென்று சொன்ன எம்பெருமான் வந்தார்.

மரணமானால் (89-வது பக்கம் 92-ந. பார்க்க)

175. உடலுமுயிரும் (திருவாய்மொழி—10-7-9)

உடம்பும் அதிலிருக்கும் பிராணனும் நசிக்கவேணும்.

அரும்பதவுரை.

கவடுகள் — கிளைகள்.

தஞ்சம் — ரக்ஷகம்.

சொல்லிற்றுச் செய்வார் — சொன்னதைக் கேட்டு செய்யும் பரதந்திரர்கள்.

அலமரவாதே — இது நம்மால் செய்யமுடியவில்லையென்று துக்கப்படாதே.

இளந்தலை — மெலிதான நுனி.

பெருந்தலை — பருத்திருக்கிற அடி.

பேரணி — ஒரு ராஜாவின் மூலபலம் (மூலகாரணம்)
இளவணி — நடுவிலிருக்கும் பலம்.
வளும்பு — புதிதாய் போட்ட கன்றின்மேலிருக்கும் அழுக்கு.
அசல்பிளந்து ஏறிடுகிற — முன்னிடத்திலிருந்து ஒன்றைப் பிளந்து வேறுஇடத்தில் வைப்பது.
உருவுதல் — தைந்யம். அதாவது—வருத்தப்பட்டு அது முகத்தில் தெரியும்படி இருப்பது.
சுணை — அபிமாநம்.

30. ஆசார்யக்ருத்யாதிகாரம்.

ஸம்ஸ்கிருத வசனங்கள்.

852. குருர்கரீயாந் (கீதை—11-43)

தேவரீர் ஸ்தாவர ஜங்கமமான இந்த உலகத்திற்குத் தகப்பனாயிருக்கிறீர். இதற்குக் குருவாயுமிருக்கிறீர். ஆகையால் பூஜை செய்யத் தகுந்தவர்களில் தேவரீர் மிகவும் உயர்ந்தவராயிருக்கிறீர்.

தத்வித்தி (1-வது பக்கம் 2-ந. பார்க்க)

853. யோ கோபாயதி (ஸாத்யகிஸம்ஹிதை—25-375)

எவன் இந்த அர்த்தத்தை அயோக்கியர்களிடமிருந்து ரக்ஷித்து யோக்கியர்களுக்குக் கொடுக்கிறானோ, அவன் என்னால் பஹுமானம் செய்யத்தகுந்தவன், உங்களுக்கு க்ஷேமமுண்டாகட்டும். நான் போகிறேன்.

854. இதம் தே நாதபஸ்காய (கீதை—18-67,68)

இந்த கீதை தபஸ்ஸு செய்யாதவர்களுக்குச் சொல்லத் தகுந்ததன்று; அப்படியே பக்தியில்லாதவனுக்கும், இதைக் கேட்கவேணுமென்கிற ஆசையில்லாதவனுக்கும் ஒருபோதும் சொல்லத்தகுந்ததன்று; என்னிடத்தில் அஸூயை செய்கிறவனுக்கு ஒருபோதும் சொல்லத்தகுந்ததன்று. இந்த மிகவும் உயர்ந்த ரஹஸ்யத்தை என்னுடைய பக்தர்களிடத்தில் எவன் சொல்லுவனோ, அவன் என்னிடத்தில் பரபக்தியைச் செய்து என்னையடைவன்; ஸந்தேஹமில்லை.

855. நாவேதவிதுஷேவாச்ய (பாரதம் சாந்திபர்வம்—313.32+38)

